


அ. இ. மெதவோய்





# இந்தியப் பொருளாதாரம்

முன்னேற்றப் பதிப்பகம்

அ. இ. மெதவோய்

# இந்தியப் பொருளாதாரம்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்:
பேராசிரியர் நா. தர்மராஜன், எம். ஏ.

**А. И. Медовой**

ЭКОНОМИКА ИНДИИ

*На тамильском языке*

**Medovoy A.**

THE INDIAN ECONOMY

***in Tamil***

முதலாவது பதிப்பு 1986

இரண்டாவது பதிப்பு 1987

© முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$М \frac{0803000000-435}{014(01)-87}$ без объявления

## பொருளடக்கம்


அத்தியாயம் ஒன்று. காலனிப் பொருளாதார அமைப்பின் உருவாக்கம் . . . 6

1. காலனியாதிக்கத்துக்கு அடிமைப் படுவதற்கு முன்பு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய பொதுச் சித்திரம் . . . . . . 6

2. மூலதனத்தின் தொடக்க நிலைக் குவிப்புக் காலகட்டத்தில் இந்தியாவில் காலனியாதிக்கச் சுரண்டலின் வடிவங்களும் முறைகளும் . . . . . 27

3. பிரிட்டிஷ் தொழில்துறை மூலதனம் இந்தியாவைச் சுரண்டுதல் . . . . 36

4. பிரிட்டிஷ் நிதி மூலதனத்தின் இந்தியச் சுரண்டலின் தொடக்கம் . . 59

அத்தியாயம் இரண்டு. இரண்டு உலக யுத்தங்களுக்கு இடையில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி . . . 87

1. தொழில்துறை வளர்ச்சியின் பிரத்யேகமான கூறுகள் . . . . . . 87

அத்தியாயம் மூன்று. இரண்டாவது உலக யுத்தத்தின் போது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி . . . . . . 133
1. யுத்த காலத்தில் இந்திய கிராமங்கள் . . . . . . . . . . 133
2. தொழில்துறை உற்பத்தியின் கட்டமைப்பு . . . . . . . . . 141

அத்தியாயம் நான்கு. விவசாய உறவுகளும் விவசாய சீர்திருத்தங்களும் . 157
1. விவசாய உறவுகள் . . . . 158
2. விவசாயச் சீர்திருத்தங்கள் . . 170

அத்தியாயம் ஐந்து. தொழில்துறையின் சமூக-பொருளாதாரக் கட்டமைப்பு . 197
1. தொழில்துறையில் அரசுத் துறை 201
2. தொழிற் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் . . . . 227
3. சிறு அளவு உற்பத்தியின் கட்டமைப்பு . . . . . . . . . . 242
4. தனியார் தொழில்துறை மூலதனத்தின் வளர்ச்சியடைந்த வடிவங்கள் வலுப்படுதல் . . . . . . 277

அத்தியாயம் ஆறு. உலகப் பொருளாதார உறவுகளின் அமைப்பில் இந்தியாவின் இடம் . . . . . . . . 290

*1*. இந்தியப் பொருளாதாரத்தில் அந்நிய மூலதனம் . . . . . . . . *294*

2. சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளுடனும் பொருளாதார ஒத்துழைப்பு . . . . . . *323*

# அத்தியாயம் ஒன்று

# காலனிப் பொருளாதார அமைப்பின் உருவாக்கம்

## 1. காலனியாதிக்கத்துக்கு அடிமைப்படுவதற்கு முன்பு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய பொதுச் சித்திரம்

17ம் நூற்றுண்டின் இறுதியில் இந்திய நாட்டின் பெரும் பகுதி (தெற்கில் சில பிரதேசங்களைத் தவிர) மாபெரும் முகலாயப் பேரரசில் அடங்கியிருந்தது. பிரதேச ரீதியில் அநேகமாக ஐரோப்பா முழுமைக்கும் சமமாக இருந்த இந்தப் பரந்த பேரரசின் வளர்ச்சியில் சில பொதுக் கூறுகள் இருந்தன. அந்த வளர்ச்சியின் வடிவங்கள் எவ்வளவு அதிகமாக வேறுபட்டிருந்தாலும் இந்தியாவின் பொருளாதாரக் கட்டமைப்பைப் பற்றி மொத்தமாக முடிவு செய்வதற்கு உதவுகின்றன.

இந்தியாவின் பொருளாதாரத்தில் விவசாயம் முக்கியமான துறையாக இருந்தது. பண்டைக் காலத்திலிருந்தே இந்தியாவில் இருந்திருக்கும் அரசு நிலவுடைமை, விவசாய உறவுகள், அந்த சமயத்திலிருந்த மொத்த பொருளாதாரக் கட்டமைப்பு ஆகிய இரண்டின் மீதும் தீர்மானகரமான காரணியாகத் தாக்கம் செலுத்தியது.

எல்லா நிலமும் பெரிய நீர்ப்பாசன அமைப்புகளும் அரசின் உடைமையாக இருந்தன. நிதித்துறை அதிகாரிகள் எல்லா நிலங்களைப் பற்றியும் அடங்கல் என்ற பதிவேடு வைத்திருந்தார்கள், அவற்றுக்காக வசூலிக்கப்பட வேண்டிய வரியை

நிர்ணயித்தார்கள். அரசின் பங்கு வழக்கமாக விளைச்சலில் ஆறில் ஒரு பங்குக்கு அதிகமாக இருப்பதில்லை. வரி வசூல் நிலப்பிரபுத்துவ ஜமீன்தார்களிடம் விடப்பட்டது. நாட்டில் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒரு ஜமீன்தார் பொறுப்பாக இருந்தார். வசூலிக்கப்பட்ட வரிகளில் குறிப்பிட்ட சதவிகிதத்தை அவர் தனக்கு வைத்துக் கொண்டார். இந்த அமைப்பின் மூலம் நிலப்பிரபுத்துவ ஜமீன்தாருக்கு வருமானத்துக்குத் தோற்றுவாய் ஏற்பட்டது. நிலம் அரசின் உடைமையாக இருந்தபடியால் வாரம், வரி ஆகியவை பெரும்பாலும் ஒன்றுகவே இருந்தன. உடைமை என்ற முறையில் நிலத்தின் பொருளாதார ஈடேற்றத்தை அரசு நேரடியாக வாரம் அல்லது வரிகளின் வடிவத்தில் அடைந்தது, விவசாயிகளின் கூலி கொடுக்கப்படாத உபரி உழைப்பின் முக்கியமான வடிவமாக அது இருந்தது.

உபரி உழைப்பை ஒதுக்கீடு செய்கின்ற பிரத்யேகமான பொருளாதார வடிவம் உற்பத்திச் சாதனத்தின் உடைமையாளருக்கும் உற்பத்தியாளருக்கும் இடையில் உள்ள உறவைப் பிரதிபலிக்கிறது; அது ''மொத்த சமூகக் கட்டமைப்பின், அதனுடன் அரசுரிமைக்கும் சார்புநிலைக்குமுள்ள உறவின் அரசியல் வடிவத்தின், சுருக்கமாகக் கூறுவதென்றுல், அதற்குப் பொருந்துகின்ற அரசின் பிரத்யேக வடிவத்தின் மறைக்கப்பட்டுள்ள அடிப்படையை''* வெளிப்படுத்திக்

---

* Karl Marx, *Capital*, V. III, Progress Publishers, Moscow, 1974, p. 791.

காட்டுவதை சாத்தியமாக்குகிறது. இந்தியாவில் நிலத்தின் மீது அரசின் உடைமை ஆகவே, உபரிப் பொருளின் ஒதுக்கீடு மற்றும் வினியோகத்தின் பிரத்யேக வடிவம் நாட்டில் உற்பத்தி உறவு களின் பிரத்யேகக் கூறுகளில் சிலவற்றை முற் கூட்டி நிர்ணயம் செய்தது. இந்தியாவில்—தொலை வில் ஒதுங்கியிருந்த சில பிரதேசங்களைத் தவிர— தனியார் நிலப்பிரபுத்துவ உடைமை இருக்க வில்லை. ஜாகிர் என்பது தனியார் நில உடைமை யின் முக்கியமான வடிவமாகும், நாட்டில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை பரம்பரை உரிமை இல்லாமல் ஒருவருக்குக் கொடுப்பதை அது குறிக்கும். ஜாகிர்தார் எனப்படுபவர் நிலத்தில் சொந்த விவசாயம் செய்யவில்லை. அவருடைய முக்கியமான வேலை விவசாயிகளிடம் வாரம் வசூலிப்பதாகும். அரசர் ஜாகிர்தாரை நீர்ப்பாசன வசதிகள், சாலைகள், இராணுவக் கோட்டைகள் இதரவற்றையும் கவனித்துக் கொள்ளும்படி பணித்திருந்தார். ஆகவே நிலப்பிரபுக்கள் மத்திய அதிகாரத்தின் பிரதிநிதிகள் என்ற முறையில் மட்டுமே இயங்கி வந்தார்கள். எனவே அவர் களுடைய அரசியல், பொருளாதார அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆட்சி புரிந்த நபர்களின் வருமானத்தின் முக்கியமான தோற்றுவாயாக உபரி உற்பத்திப் பொருள் இருந்தது; அது தலைமையான அரச ருடைய கரங்களில் குவிக்கப்பட்டிருந்தது, அவர் தனக்குக் கீழ்நிலையில் இருந்தவர்களிடம் அவரவர் தகுதிகளுக்கேற்ப அதை வினியோகம் செய் தார். அதே சமயத்தில் நிலத்தில் தனியுடைமை

இல்லாதிருந்ததும் விவசாயி தனியான நிலவுடைமையாளரை எவ்விதமான தனிப்பட்ட முறையிலும் சார்ந்திராமலிருந்ததும் ஒப்பீட்டளவில் சுதந்திரமான, சுய நிர்வாக முறையைக் கொண்ட கிராம சமூகங்கள் இருப்பதற்குரிய நிலைமைகளைத் தோற்றுவித்தன. அத்தகைய கிராம சமூகங்கள் நிலத்தில் அல்லது கைத்தொழில்களில் உழைப்பை அமைப்பு ரீதியாக்குகின்ற சிறப்பான வடிவம் என்ற முறையில் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பரவலாக இருந்தன.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்த கிராம சமூகங்களின் ரகங்கள் பிரதானமாக ஏதாவதொரு பிரதேசத்தில் பொருளாதார வளர்ச்சியின் மட்டத்தையும் அதன் மக்கள் தொகையின் வரலாற்று ரீதியான வளர்ச்சியின் சில கூறுகளையும் பிரதிபலிக்கின்ற முறையில் வேறுபட்டிருந்தன. எனினும் ஐரோப்பாவிலிருந்த கிராம சமூகத்திலிருந்து இந்திய கிராம சமூகத்தைப் பிரித்துக் காட்டிய சில பொதுவான, குறியடையாளமான கூறுகளைச் சுட்டிக் காட்ட முடியும். 17ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிலிருந்த பொருளாதார அமைப்பைப் பற்றிய கருத்தை அவை தருகின்றன. இந்தியாவின் மொத்த விவசாய மக்கள் தொகையுமே விவசாய உழைப்பிற்கும் கைத்தொழில் உழைப்பிற்கும் இடையில் பழமையான உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருந்த கிராம சமூகங்களில் இருந்தன. இந்த சமூகங்கள் அல்லது மார்க்ஸ் அவற்றைப் பற்றிக் குறிப்பிட்டதைப் போல ''சிறு கூட்டணிகள்'' ஒவ்வொன்றும் சுதந்திரமான வாழ்க்கையை நடத்தின.

கிராம சமூகத்தின் உச்சியிலிருந்த கிராமத்தலைவர் போலீஸ் மற்றும் நிதித்துறைப் பணிகளை நிறைவேற்றினர். அந்த சமூகத்துக்கென்று தனியாக எழுத்தர், புரோகிதர், ஆசிரியர், காவலாளி, சோதிடர் மற்றும் இதரர்கள் இருந்தனர். இந்தக் கடமைகள் பெரும்பாலும் பரம்பரையாக வந்தன, அவற்றை நிறைவேற்றியவர்கள் அந்த சமூகத்தை ஆட்சி புரிந்த குழுவாக இருந்தனர். அவர்கள் செய்த வேலைக்கு ஊதியம் உணவு தானியங்களாகவோ அல்லது பணமாகவோ வழங்கப்பட்டது. சில இடங்களில் இந்த அலுவலர்களுக்கு வரி இல்லாத நிலங்கள் அல்லது குறைவான வரி விகிதத்தைக் கொண்ட நிலங்கள் தரப்பட்டன.* சமூகத்தின் உறுப்பினர்களில் இரண்டு பிரிவுகள் இருந்தன: முழு உரிமைகளைக் கொண்ட உறுப்பினர்கள், குறைக்கப்பட்ட உரிமைகளைக் கொண்ட உறுப்பினர்கள் (வழக்கமாக அந்நியர்கள்). பண்டைக் கால இந்தியாவில் உபயோகிக்கப்படாத நிலம் அதிகமாக இருந்தபடியால் கிராம சமூகங்கள் அந்நியர்களை வரவேற்றன; கிராம மக்கள் தொகையினர் அனுபவித்துக் கொண்டிருந்த எல்லா உரிமைகளும் சிறிது காலத்துக்குப் பிறகு அந்நியர்களுக்குக் கிடைக்கும்.

நிலத்தில் கூட்டாக விவசாயம் செய்யப்பட்டது. சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அறுவடை செய்யப்பட்ட தானியத்தில் ஒரு பங்கு கொடுக்கப்பட்டது. இந்தியா அடிமைப்படு

---

* Sachin Sen, *The Tenure of Agricultural Land*, The Politics Club, Calcutta, 1937, p. 9.

வதற்குச் சற்று முன்னர் விளைநிலங்கள் கிராம சமூகத்தின் முழு உறுப்பினர்களுக்கிடையில்—எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி—பிரித்துக் கொடுக்கப்பட்டன. ஆனால் அப்பொழுதும் கூட கிராம சமூகத்தின் உடைமையாகவே நிலம் இருந்தது. அந்த சமூகத்தின் முழு உறுப்பினர் அந்த சமூகத்துக்குச் சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியை மட்டுமே உடைமையாகக் கொண்டிருந்தார். அந்த சமூகத்தின் உறுப்பினர் என்ற முறையில்தான் அது அவருக்குச் சொந்தமாக இருந்தது.

கிராம சமூகத்தின் முழு உறுப்பினர்கள் தங்களுடைய நிலத்தைத் தங்களுடைய வாரிசுகளிடம் கொடுத்தார்கள். தரிசு நிலம், மேய்ச்சல் நிலம், பசும்புல் நிலம் ஆகியவை கூட்டுடைமையாக இருந்தன; அவற்றுக்கு வரி கிடையாது. விவசாயிகளின் பொருளாதார நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்தவில்லை. நிலத்தை உழுது பயிரிட வேண்டும், நிலத்துக்கு வாரம் கட்ட வேண்டும் என்ற கடமைகளை மட்டுமே அரசு வற்புறுத்தியது. விவசாயம் செய்வது அரசுப் பணியாக இருந்தது. மத்திய அதிகாரிகள் பிரதானமாக வருமான அலகுகள் என்ற முறையில்தான் கிராம சமூகங்களின் மேல் அக்கறை கொண்டிருந்தனர். எனவே அவற்றைத் தக்கவைப்பதில் அவர்கள் அக்கறை காட்டினார்கள். ஏனென்றால் தன்னுடைய எல்லா உறுப்பினர்களுக்கும் பொறுப்பாக இருந்த கிராம சமூகம் வரிகள் (வாரம்) வசூல் செய்யப்படுவதை உறுதிப்படுத்தியது.

இந்திய கிராம சமூகம் சுய பூர்த்தியடைந்த உற்பத்தி அலகாக இருந்தது. ஐரோப்பாவின்

கிராம சமூகத்துக்கும் இதற்குமுள்ள வேறுபாடு இது. அங்கே அநேகமாக ஒவ்வொரு குடும்பமும் கைத்தொழிலிலும் விவசாய உழைப்பிலும் ஈடுபட்டிருந்தது, எனவே ஒவ்வொரு குடும்பமும் சுய பூர்த்தியடைந்த அலகாக இருந்தது. ஒவ்வொரு குடும்பமும் பெரும்பாலும் மற்றவர்களிடமிருந்து சுதந்திரமாக இருந்த படியால் அது கிராம சமூகத்துக்கு இடையில் பரஸ்பர உறவுகளைப் பெருமளவில் பலவீனப்படுத்த முற்பட்டது.

இந்தியாவில் கைத்தொழில்களுக்கும் விவசாய வேலைக்கும் இடையில் உழைப்புப் பிரிவினை குடும்ப உறுப்பினர்களுக்கு இடையில் செய்யப்படவில்லை, சமூகத்தின் உறுப்பினர்களுக்கு இடையில் செய்யப்பட்டிருந்தது. சமூகத்தின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் முற்றிலும் விவசாய வேலைகளில் ஈடுபட்டிருந்தனர், மற்றவர்கள் கைவினைஞர்களாக இருந்தார்கள். கைவினைஞர்களுக்கு அறுவடையில் குறிப்பிட்ட ஒரு பகுதி கொடுக்கப்பட்டது. அவர்கள் சமூகத்தின் உறுப்பினர்களுக்குத் தங்களுடைய கைத்தொழில்களின் உற்பத்திப் பொருள்களைக் கொடுத்தனர். உழைப்பின் இத்தகைய அமைப்பு முறை கிராம சமூகத்தில் பலமான அக உறவுகளைப் பேணி வளர்த்தது, வெளியுலகத்திலிருந்து அதன் நிலையான தன்மையையும் சுதந்திரத்தையும் உருவாக்கியது, நாட்டின் பொருளாதாரப் பிரிவினையை நிரந்தரப்படுத்தியது, நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையில் உழைப்புப் பிரிவினையைத் தடை செய்தது, உள்நாட்டுச் சந்தையின் உருவாக்கத்தையும் பண்ட-பண உறவுகளின் வளர்ச்சியையும்

தாமதப்படுத்தியது. இன்னென்றையும் குறிப்பிட வேண்டும். இந்தியாவில் கிராம சமூகம் ஐரோப்பிய கிராம சமூகத்தைப் போலன்றி, அரசின் நிலவுடைமையிலிருந்து வளர்ச்சியடைந்தது. நிலம் வாங்கப்படுவதை அல்லது விற்பனை செய்யப்படுவதை அது தடுத்தது; அதன் மூலம் விவசாய சமூகத்தினரின் மத்தியில் உடைமை மற்றும் வர்க்க வேறுபாடு ஏற்படுவதை நிறுத்தி வைத்தது.

இந்தியாவில் நிலவிய சாதி முறை சமூகங்களுக்கு உள்ளே குறுகிய, ஆனல் நிலையான அக உறவுகளை வளர்ப்பதற்கு முற்பட்டது. ஏனென்ருல் இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்த விவசாயி அதில் நிரந்தர உறுப்பினனுக இருப்பதையும் அவன் செய்ய வேண்டிய வேலையையும் முற்கூட்டி விதித்தது. மதத்தை ஆதரவாகக் கொண்ட சாதி முறை இந்தியாவில் கிராம சமூகங்களைச் சேர்ந்த ஒவ்வொரு நபரும் பொது உழைப்பில் பங்கெடுக்கும் ஸ்தூலமான வடிவங்களை வகுத்துக் கொடுத்து கிராம சமூகங்களில் உழைப்புப் பிரிவினையைச் சட்டமாக்கியது.

மார்க்ஸ் மேற்கோள் காட்டிய ஒரு பிரிட்டிஷ் நாடாளுமன்ற அறிக்கை பின்வரும் தகவலைத் தெரிவித்தது: ''இராஜ்யங்கள் சிதறுவதையும் பிரிவதையும் பற்றி மக்கள் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. கிராமம் முழுமையாக இருக்கின்ற பொழுது அது எந்த அரசிடம் மாற்றப்படுகிறது, எந்த மன்னரின் ஆட்சிக்கு உட்படுகிறது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. ஏனென்ருல் அதன் உட்பொருளாதாரம்

மாற்றமில்லாமல் இருக்கிறது.'' மார்க்ஸ் பின் வரும் கருத்தைத் தெரிவித்தார்: ''ஆசியாவின் எதேச்சாதிகாரத்துக்கும் தேக்க நிலைமைக்கும் இதைக் காட்டிலும் உறுதியான அடிப்படையை ஒருவர் கற்பனை செய்ய முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.''*

நிலத்தின் உடைமையாளர்கள் என்ற முறையில் மத்திய அதிகாரிகள் தங்கள் உடைமையின் ஈடேற்றத்துக்கு மிகவும் வசதியான வடிவம் என்ற முறையில் மட்டுமே கிராம சமூகத்தில் அக்கறை காட்டினார்கள், அதன் பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றி அலட்சியமாக இருந்தார்கள் என்றால் அந்த சமூகமும் அரசுக்கு ஏற்படுகின்ற ஆபத்துக்களைப் பற்றி அலட்சியமாக இருந்தது. மத்திய அதிகாரத்துக்கும் கிராம சமூகத்துக்கும் இருந்த ஒரே இணைப்பு வாரம், வரியே. மத்திய அதிகாரத்தின் உடைமையையும் கிராம சமூகம் தானாகச் செய்து கொள்ள முடியாத நீர்ப்பாசன வசதிகள் மற்றும் பொதுப் பணிகளையும் உபயோகித்துக் கொள்வதற்குத் தருகின்ற கட்டணத்தின் வடிவமாக வாரம், வரியை கிராம சமூகம் பார்த்தது. வரிகளை வசூலித்த நிலப்பிரபுத்துவ ஜமீன்தாரை விவசாயிகள் சுரண்டல்காரனாகப் பார்க்கவில்லை, வருமானத் துறையின் அதிகாரியாக, தங்களைப் போல மத்திய அதிகாரத்தின் ஊழியனாகப் பார்த்தார்கள். இது ஓரளவுக்கு வர்க்க முரணியலை மட்டுப்படுத்தியது, சமூக முன்

* "Marx to Engels in Manchester, June 14, 1853", in: Marx, Engels, *Selected Correspondence*, Progress Publishers, Moscow, 1975, p. 80.

னேற்றத்தை நிறுத்தி வைத்தது, இந்தியாவின் நிலப்பிரபுத்துவத்தை உறுதியாக்க முற்பட்டது.

இந்தியக் கிராம சமூகம் நிலையாக இருந்த போதிலும் 17ம் நூற்றுண்டில் படிநிலை நிகழ்வுப் போக்கு கிராமங்களில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்ற வகையில் மேலும் பலமடையத் தொடங்கியது.

பண்டப் பரிவர்த்தனை முதலில் பக்கத்திலிருக்கும் சமூகங்களுக்கு இடையிலும் அதற்குப் பிறகு சமூகத்துக்கு உள்ளேயும் தொடங்கி சமூகத்தின் உறுப்பினர்களின் உடைமை மற்றும் வர்க்க ரீதியான வகைப்படுத்தலை வளர்த்தது. சமூகத்தின் தலைமையிலிருந்த சிலர் (கிராமத் தலைவர், அவருடைய உதவியாளர், எழுத்தர் மற்றும் இதர அலுவலர்கள்) பொது நிலத்தை எடுத்துக் கொண்டு அதைத் தங்களுடைய தனியுடைமையாக மாற்றுவதற்குத் தொடங்கினுர்கள். மக்கள் மத்தியில் இந்தக் குழுவினரிடமிருந்தே நிலப்பிரபுத்துவ வர்க்கம் தோன்றியது. கிராம சமூகத்தில் ஏற்பட்ட படிநிலை நிகழ்வுப் போக்கு பெரும்பான்மையான உறுப்பினர்களின் நிலைமையை பாதித்தது. சமூகத்தின் முழு உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் (தெற்கு மற்றும் மத்திய இந்தியாவில் மிராசுதார்கள் என்றும் வங்காளத்தில் குட்காஷ்த் என்றும் அழைக்கப்பட்டவர்கள்) நிலத்தின் மீது தங்களுடைய பரம்பரை உரிமைகளை வலுப்படுத்திக் கொண்டார்கள். அத்தகைய உரிமைகளைப் பெறுவதின் மூலமாக அல்லது நிலங்கள் மறுவினியோகம் செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மிகச் சிறந்த நிலங்களை—பெரும்பாலும்

வரியில்லாத நிலங்களை—கைப்பற்றுவதன் மூலம் இதைச் செய்தார்கள். முழு உறுப்பினர்களில் சிலர் கிராம சமூகத்தில் கூலிகள் என்று சொல்லப் பட்டவர்களுடைய—இவர்கள் மிகவும் கஷ்ட மான, மோசமான வேலைகளைச் செய்து நடைமுறை யில் அடிமைகளாக இருந்தவர்கள்—இலவச மான உழைப்பைப் பயன்படுத்துவதற்கு முதல் உரிமைகளைப் பெற்றுக் கொண்டார்கள்; சமூகத் தின் மேய்ச்சல் நிலங்கள், பசும் புல் நிலங்கள், இதரவையான பொது நிலங்களை உபயோகித்துக் கொள்கின்ற முதல் உரிமைகளையும் அடைந்தார் கள். நிலத்தை அடமானம் வைப்பதும் நிலத்தைப் பறித்துக் கொள்வதும் முன்னைக் காட்டிலும் அதிக மாக நடைபெற்றன. நிலத்தின் மேல் எவ்வித மான உரிமையும் இல்லாமல் அதைக் குத்தகைக்கு எடுத்துப் பாடுபடுகின்ற ஒரு புதிய சமூகப் பிரிவு கிராம சமூகத்தில் தோன்றியது. இத்தகைய குத்தகைக்கு அவர்கள் அறுவடையில் பாதிக்கு மேல் கொடுக்க வேண்டியிருந்தது.

கிராம சமூகத்தில் பண்ட-பண உறவுகள் ஊடுருவிய பொழுது விவசாய உழைப்பிற்கும் கைத்தொழில் உழைப்பிற்கும் இடையில் ஒரு புதிய உறவு தோன்றியது. கைத்தொழில் உற் பத்திகளுக்கு விவசாய உற்பத்தியை நேரடியான பரிவர்த்தனை, பணத்தை உபயோகித்து நடை பெறுகின்ற விற்பனை மற்றும் வாங்குதலின் வடி வத்தை மென்மேலும் அடைந்தது. சமூகத்தின் கைத்தொழில் துறையில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் பண்டப் பரிவர்த்தனையின் வளர்ச்சி யும் கைத்தொழில் உற்பத்திப் பொருளை அதன்

உற்பத்தியாளனிடம் பண்டமாக மாற்றின. அது பண்டம் என்ற முறையில் விரிவான சந்தைக்கு —நகரங்களுக்கு—அனுப்பப்பட்டுக் கொண்டிருந் தது. இதன் எதிர்ச்செயலாக நகரக் கைவினைஞர் களின் உற்பத்திப் பொருட்கள் கிராம சமூகங் களுக்கு வந்து கொண்டிருந்தன. அதன் மூலம் உழைப்புப் பிரிவினை இன்னும் அதிகரித்தது.

இந்த நிகழ்வுப் போக்குடன் இணைந்து மற்றொன்றும் நடைபெற்றது: நிலப்பிரபுக்கள் தங்கள் மேற்பார்வையிலிருந்த நிலங்களைப் பரம் பரைச் சொத்தாக மாற்ற முயன்றார்கள். இந்தி யாவில் மத்திய அதிகாரத்துக்கு பதிலாக சிறு ராஜ்யங்கள் படிப்படியாக ஏற்பட்டுக் கொண் டிருந்தன (வங்காளம், அயோத்தி, ஹைதராபாத், இதரவை). இந்த நிகழ்வுப் போக்கும் கூடப் பண்டப் பரிவர்த்தனையின் வளர்ச்சி, புதிய ஸ்தல சந்தைகள் மற்றும் பொருளாதார மையங்களின் உருவாக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

நிலம் அரசின் உடைமையாக இருந்தது படிப் படியாக மறைந்து தனிப்பட்ட நிலப்பிரபுத்துவ உடைமை ஏற்பட்டது. கிராம சமூகம் தன்னுடைய சுய பூர்த்தியையும் தந்தை வழி முறையையும் இழந்தது. பலமான வெகுஜன இயக்கங்கள் முகலாயப் பேரரசு சிதறிப் போ வதைத் துரிதப்படுத்தின. ஆனால் இந்த நிகழ்வுப் போக்குகள் பூர்த்தியடையவில்லை. ஐரோப்பிய நாடுகள் இந்தியாவில் நடத்திய காலனியாதிக்கப் போர்கள் அவற்றில் குறுக்கிட்டு நிறுத்தி வைத் தன.

கிராம சமூகத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு இடையில், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையில் குண ரீதியில் புதிய உறவுகள் தோன்றின. இதன் தொடர்பாக, இந்தியாவில் நகரங்களின் பொருளாதார வளர்ச்சி மிகவும் அக்கறையைத் தூண்டுவதாகும்.

19ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கூட இந்தியாவிலிருந்த நகரங்களில் வசித்தவர்களின் எண்ணிக்கை மக்கள் தொகையில் 10 சதவிகிதத்துக்கு மேல் இருக்காது. கிராம சமூகம் விவசாய உழைப்பின் கேந்திரமாக இருந்தது மட்டுமல்லாமல் கைத்தொழில்களுக்கும் கேந்திரமாக இருந்தது. நிலம் அரசுக்குச் சொந்தமாக இருந்தபடியால் அரசருடைய பரிவாரங்களுக்குத் தனியாக நிலங்கள் இல்லை. எனவே பிரபுக்களும் அவர்களுடைய பணியாட்களும் இராணுவத்தினரும் இந்தியாவின் நகரங்களில் நிரந்தரமாக வசித்தார்கள். இது நகரங்களின் பொருளாதார அமைப்பின் மீதும் நாட்டின் வளர்ச்சியில் அவற்றின் பாத்திரத்தின் மீதும் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

நிலப்பிரபுக்கள் கைவினைஞர்கள் மீது ஏராளமான அதிகாரத்தைக் கொண்டிருந்தார்கள். அவர்களை அநேகமாகப் பண்ணையாட்களைப் போலவே நடத்தினர்கள். கைத்தொழிற் பொருட்கள் பிரதானமாக அரசர் மற்றும் நிலப்பிரபுக்களின் தேவைகளுக்காகவே தயாரிக்கப்பட்டன. அவர்கள் இப்பொருள்களின் உற்பத்திச் செலவைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், பெரும்பாலும் விலையைக் கொடுக்காமலேயே எடுத்துக் கொண்டார்கள்.

இந்தியப் பிரபுக்களுக்கு சக்கரவர்த்தி தரு கின்ற சம்பளத்தைத் தவிர வேறு வருமானம் இல்லாதபடியால் அவர்கள் கைவினைஞர்களிடம் மட்டுமல்லாமல் பெரிய வர்த்தகர்களிடமும் கொள்ளையடித்தார்கள்.

இத்தகைய நிலைமை நகரக் கைத்தொழில் களில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தாமதப்படுத்தியது இயற்கையே. ஏனென்றால் நகரக் கைவினைஞர்கள் தமது உற்பத்தியைப் பெருக்குவதில் அக்கறை காட்டவில்லை. இது வெவ் வேறு பிரதேசங்களுக்கும் இடையில் வர்த்தக மற்றும் பொருளாதாரப் பிணைப்புகளின் வளர்ச் சியை பாதித்தது. இந்தியாவில் எல்லா நகரங் களுமே பிரபுக்குலத்தின் அதிகாரத்தை உணர்ந் தன; எனினும் நகர மக்கள் தொகையினர் ஆட்சி புரிகின்ற சிறு குழுவை நம்பியிருக்கின்ற நிலை ஸ்தல மற்றும் மத்திய அரசாங்கங்களின் தலை நகரங்களிலும், இராணுவக் கோட்டைகளிலும், வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பிரபுக் களும் இராணுவமும் குவிந்திருந்த நகரங்களில் மிக வன்மையாக உணரப்பட்டது. அத்தகைய நகரங்களின் எண்ணிக்கை அதிகமல்ல. ஆனால் அவற்றின் வாழ்க்கை நாட்டின் அரசியல் வாழ்க்கை யில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் முழுமை யாக நிர்ணயிக்கப்பட்டு வந்தது. அரச பரம்பரை மாற்றங்கள், அரசர் பரிவாரங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சில சமயங்களில் நகரங்களின் மொத்த அழிவுக்கு வழிவகுத்தன. அத்தகைய நகரங்களின் சந்தை பிரபுக்கள் மற்றும் அரச பரிவாரங்களின் தேவைகள் மற்றும் கலைநய

உணர்வுகளுக்குக் கீழ்ப்பட்டிருந்தது; கைவினைஞர்களின் தயாரிப்புகள் நகரத்தின் எல்லைகளுக்கு வெளியே செல்லவில்லை. இதன் விளைவாகக் கைத்தொழில்களும் அமைப்பு ரீதியான உழைப்பின் புதிய வடிவங்களும் மிகவும் மெதுவாகவே வளர்ச்சி அடைந்தன.

இந்து மற்றும் முஸ்லிம் மத குருக்களையும் யாத்ரிகர்களையும் ஈர்த்த புனிதமான நகரங்கள் இதே நிலைமையில்தான் இருந்தன. இந்த நகரங்களில் கைத்தொழில் உற்பத்தி பிரதானமாக ஒரு சில துறைகளில் மட்டுமே நடைபெற்றது. கோயில் பாத்திரங்கள் மற்றும் செம்பு உலோகப் பொருள்களே தயாரிக்கப்பட்டன. இவை பாரம்பரியக் கலைப் பொருட்கள், பல நூற்றுண்டுகளாக ஒரே மாதிரியான வடிவத்தில் வருடந்தோறும் தயாரிக்கப்பட்டன.

17 மற்றும் 18ம் நூற்ருண்டுகளில் வர்த்தகப் பாதைகளில் பொருளாதாரக் கேந்திரங்களாகவும் துறைமுகங்களாகவும் தோன்றிய நகரங்கள் கைத்தொழில் உற்பத்தி மையங்கள் என்ற முறையில் மென்மேலும் அதிகரிக்கின்ற பாத்திரத்தை வகிக்கத் தொடங்கின. அத்தகைய நகரங்களில் கைவினைஞர்கள் பிரபுக்களுக்காக மட்டுமல்லாமல் இந்தியாவிற்கு உள்ளும் அதன் எல்லைகளுக்கு வெளியிலுமுள்ள பரந்த சந்தைக்காக உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். இத்தகைய நகரங்களின் வளர்ச்சி பண்ட-பண உறவுகளின் செயல் எல்லையை விரிவுபடுத்தியது, பக்கத்து கிராமங்களிலிருந்த கைவினைஞர்களையும் விவசாயிகளையும் பண்டப் பரிவர்த்தனையில்

ஈடுபடுத்தியது, முதலில் ஸ்தலச் சந்தைகளின் உருவாக்கத்தையும் பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு இடையில் நெருக்கமான பொருளாதார உறவுகளையும் ஊக்குவித்தது. இது அவற்றுக்கிடையில் உழைப்புப் பிரிவினைக்கு இட்டுச் சென்றதுடன் வர்த்தகப் பிணைப்புகளையும் பலப்படுத்தியது. இத்தகைய நகரங்களில் நிலப்பிரபுத்துவ மேன் மக்களின் அதிகாரம் குறைவாகவே உணரப்பட்டது, வர்த்தக மூலதனம் மற்றும் கடன் மூலதனம் அதிகமான பாத்திரத்தை வகித்தது. அங்கும் கைத்தொழில் உற்பத்தியின் பழைய வடிவங்கள் அதிக வேகமாகச் சீர்குலைந்தன. பண்டப் பரிவர்த்தனை விரிவடைந்ததும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையில் உறவுகளின் புதிய வடிவங்கள் தோன்றியதும் பெரிய வர்த்தக நகரங்களின்(டாக்கா,பாட்னு,இதரவை) வளர்ச்சியும் கைத்தொழில் உற்பத்தியில் ஆழமான அகமாற்றங்கள் நடைபெறுமல் ஏற்பட்டிருக்க முடியாது. பெரிய சந்தைகளும், மொத்த வர்த்தகமும் வெவ்வேறு பிரதேசங்களுக்கு இடையில் அநேகமாக நிரந்தரமான உறவுகளும் கைவினைஞர்களின் சுதந்திரத்தை ஒழித்த வர்த்தக மற்றும் கடன் மூலதனம் பங்கெடுக்காமல் வளர்ச்சி அடைந்திருக்க முடியாது. சிதறிக் கிடந்த சிறு அளவு உற்பத்தி பெரிய அளவு விற்பனையின் தேவைகளுடன் சமரசப்படுத்த முடியாத முரண்பாட்டுக்கு ஆளாயிற்று. ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளைப் பொறுத்து இந்த முரண்பாடு இரண்டு வழிகளில் தீர்க்கப்பட்டிருக்க முடியும். பணக்காரக் கைவினைஞர்களில் ஒருவர் பெரிய

அளவு விற்பனைக்கு அமைப்பை ஏற்படுத்துவது ஒரு வழி. அவர் சிறு கைவினைஞர்களின் உற்பத்தியை விலைக்கு வாங்கிக் கொண்டு, அவர்களது உற்பத்திகளின் மூலப்பொருட்களின் தோற்றுவாய்களிலிருந்தும் சந்தைகளிலிருந்தும் அவர்களைப் படிப்படியாக வெட்டி விட்டு அவர்களைத் தனக்காக உழைக்குமாறு நிர்ப்பந்தித்து அவர் கருவடிவ முதலாளியாக வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தார். கைவினைஞர்களுக்கிடையிலிருந்து மொத்தமாக வாங்குபவர் தோன்றுவது, உற்பத்தியாளர் ஒரே சமயத்தில் வர்த்தகராகவும் முதலாளியாகவும் மாறுகின்ற பொழுது அது பழைய உற்பத்தி முறை சீர்குலைவதையும் மதிப்பு விதியின்—அதிகமான அல்லது குறைவான அளவுக்கு—தாக்கத்தையும் பிரதிபலிக்கிறது. ஆகவே உற்பத்தியில் தலைமையான ஆதிக்கம் செலுத்துகின்ற பணக்காரக் கைவினைஞர்கள் தோன்றுவதற்கு முன்னால் உற்பத்தியில் ஆழமான அக மாற்றங்கள் ஏற்பட வேண்டும். பழைய உற்பத்தி முறை இப்படித் தகர்கின்ற பொழுது உழைப்பை அமைப்பு ரீதியாக்குவதன் புதிய வடிவங்களுக்கு வழிவகுக்கிறது, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது, உற்பத்தியின் தொழில் நுட்ப அடிப்படையை மாற்றியமைக்கிறது. இந்த உதாரணத்தில் வர்த்தக மூலதனத்திலிருந்து தொழில்துறை மூலதனத்துக்கு மாற்றம் இடைநிலைக் கட்டங்களை வேகமாகத் தாண்டி நடைபெறுகிறது. ஏனென்றால் உற்பத்தியாளர் உடைமை பறிக்கப்பட்டு நேரடியாகக் கூலித் தொழிலாளியாக மாற்றப்படுகிறார். ஆனால் பழைய

உற்பத்தி முறையைத் தீவிரமாக மாற்றியமைப் பதற்கு நீண்ட தயாரிப்புக் காலம் தேவைப்படு கிறது. ஒரு புதிய குணும்சத்தை நோக்கி தீவிர மான மாற்றத்துக்குரிய நிலைமைகள் முதிர்ச்சி பெறுவது பெரும்பாலும் வளர்ச்சியடைகின்ற சந்தையின் தேவைகளுடன் பொருந்துவதில்லை. கைத்தொழில் துறையில் இந்தியா முழுவதிலும் இப்படிப்பட்ட முதலாளித்துவ வளர்ச்சி ஏற் பட்டதாகக் கூற முடியாது. நாட்டில் ஒப்பீட்டள வில் வளர்ச்சி அடைந்த பகுதிகளான வங்காளம், குஜராத் மற்றும் சில பகுதிகளில் இவ்விதமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கலாம்.

இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் துணி, இரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் முதலாளித் துவக் கூட்டுறவின் எளிமையான வடிவங்கள் மற்றும் பட்டறைத் தயாரிப்பின் கருவடிவங்கள் இருந்தன என்பதற்கு ஆதாரங்கள் கிடைத் திருக்கின்றன. ஏராளமான உதாரணங்களில், பணக்காரக் கைவினைஞர் சுதந்திரமான கைவினை ஞர்களைக் கூலிக்கு வைத்துக் கொண்டு அத்தகைய உற்பத்தியை அமைத்தார். இந்தியாவில் கைத் தொழில் உற்பத்தி அமைப்புகளின் பிரத்யேகமான கூறுகளை ஆராய்ந்த சோவியத் கீழை நாட்டிய லாளர்கள் அது கைவினைஞர்கள் படிநிலைப்படுத் தப்பட்ட காலகட்டம் என்ற முடிவுக்கு வந்திருக் கிறார்கள். அது "ஒரு முனையில் கூலியுழைப்பைச் சுரண்டிய செல்வம் படைத்த மேல்தட்டினர் குவிந்திருப்பதற்கும் எதிர்முனையில் உற்பத்திச் சாதனங்களைப் பறிகொடுத்து விட்டுக் கூலிக்காகத் தங்களுடைய உழைப்பை விற்பனை செய்த

கைவினைஞர்கள் குவிந்திருப்பதற்கும்''* வழிவகுத்தது. இந்தியாவில் கைத்தொழில் உற்பத்தியின் பரிணமத்தின் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளினுல் கைத்தொழில் உற்பத்தி முதலாளித்துவ உற்பத்தியாக மாற்றமடைவதைப் பெருமளவில் ஊக்குவிக்க முடியவில்லை. இந்தியாவில் நகரங்களில் நிலப்பிரபுத்துவ அதிகாரம் ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் பலமானதாக இருந்தபடியால் இந்தியாவில் முதலாளித்துவத் தொழில் துறை நிறுவப்படுவது தாமதமடைந்தது; ஆகவே மூலதனத்தின் கீழ் நிலையான, மோசமான வடிவங்கள், அதாவது வர்த்தக மூலதனம் மற்றும் கடன் மூலதனம், வளர்ச்சிக்கு அதிகமான வாய்ப்புப் பெற்றன, அவை கைத்தொழில் உற்பத்தியை தமக்குக் கீழ்ப்படுத்த ஆரம்பித்தன.

வர்த்தக மற்றும் கடன் மூலதனத்துக்குக் கைத்தொழில் உற்பத்தி கீழ்ப்படுவது நான்கு கட்டங்களில் நடைபெறுகிறது. முதலில் இன்னும் சுதந்திரமாக இருக்கின்ற கைவினைஞர்களிடமிருந்து உற்பத்திப் பொருட்கள் மொத்தமாக வாங்கப்படுகின்றன. பிறகு வாங்குபவர் வர்த்தகத்தையும் வட்டித் தொழிலையும் இணைத்துக்

---

* ஏ. என். கொமரோவ், வி. யா. கிராஷெ, ''18ம் நூற்ருண்டின் கடைசியிலும் 19ம் நூற்ருண்டின் ஆரம்பத்திலும் இந்தியாவில் சமூக உழைப்புப் பிரிவினை மற்றும் கைத்தொழில்களின் பொருளாதார அமைப்பைப் பற்றி சில விவரங்கள்'', **கீழையியல் ஆராய்ச்சிக் கழகத்தின் சுருக்கமான அறிக்கைகள்**, மாஸ்கோ, தொகுதி XV, பக்கம் 16 (ருஷ்ய மொழியில்).

கொண்டு கடன்கொடுப்பவராக செயல்படத் தொடங்குகிறார். கைவினைஞன் பெரும்பாலும் தான் வாங்கிய கடனுக்கு வட்டியை உற்பத்திப் பொருளாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. வர்த்தகருக்கும் கைவினைஞனுக்கும் இடையில் தனிப்பட்ட சார்புநிலையின் கூறுகள் பெரும்பாலும் தோன்றுகின்றன. பணத்தை அடிப்படையாகக் கொண்ட விற்பனை மற்றும் வாங்கும் நடவடிக்கைகள் படிப்படியாகக் குறைந்து விடுகின்றன; அவற்றிற்குப் பதிலாகக் கைத்தொழிற் பொருட்கள் உபயோகிக்கப்படுகின்றன; முடிவில் வர்த்தகர் கைவினைஞனுடைய தொழிலுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்துக் கணக்கு வைத்துக் கொள்கிறார். மூலப் பொருள்களை வினியோகிப்பதையும் குறிப்பிட்ட பண வழங்கீட்டுக்காக உற்பத்தி நடைபெறுவதையும் இந்த வடிவத்தையும் சிறு இடைவெளியே பிரிக்கிறது. கைவினைஞன் முதலாளிக்காக உழைக்கின்ற கூலித் தொழிலாளியாக மாறுகிறான்; வர்த்தக மூலதனம் தொழில் துறை மூலதனமாக மாற்றமடைகிறது.

வர்த்தக மூலதனம் கைத்தொழில் துறையில் ஊடுருவும் இந்த எல்லா வடிவங்களும் இந்தியாவில் காணப்பட்டன. எனினும் 17ம் நூற்றாண்டில் இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் கைவினைஞர்களுக்கு முன்பணம் கொடுப்பது, அதாவது வர்த்தக மூலதனம் வட்டித் தொழிலை இணைத்துக் கொண்டு ஊடுருவுதல் மிகவும் பரவலாக இருந்த வடிவமாகும். கைவினைஞர்கள் தங்களுடைய சுதந்திரத்தை இழந்து கொண்டிருந்தனர், கடன் கொடுக்கின்ற வர்த்தகர்களைச் சார்ந்தவர்களாக

மாறிக் கொண்டிருந்தனர்.

இந்தியாவில் சிதறிக் கிடந்த சுதந்திரமான கைவினைஞர்கள் படிப்படியாக வர்த்தகர்களின் கீழ் வந்தனர். கைத்தொழிற் பரிணமத்தின் இந்த வடிவத்தில் உற்பத்தி முறை மிகவும் மெதுவாகவே மாற்றமடைந்தது. வர்த்தகர் வியாபாரியாகச் செயல்பட்டாரே தவிர தொழில் முனைவராகச் செயலாற்றவில்லை. பழைய உற்பத்தி முறையைத் தீவிரமாக மாற்றியமைப்பதில் அவருக்கு அக்கறை கிடையாது. ஆனல் அவர் அதை ஈவிரக்க மில்லாமற் சுரண்டினர். தொழில்துறையில் முதலாளித்துவ வளர்ச்சியின் இந்த வடிவம் உற்பத்தியாளருக்கு மிகவும் துன்பத்தைத் தரக் கூடியது. ஏனென்றல் அது கைவினைஞர்களை நீண்ட இழுபறியான, துன்பம் தருகின்ற உடைமை பறித்தலுக்கு உட்படுத்துகிறது.

வளர்ச்சியில் இந்தப் பாதை இந்தியாவுக்கு மட்டுமே உரித்தானதல்ல. ஆனுல் வர்த்தக மற்றும் கடன் மூலதனம் தொழில்துறை மூலதனமாக மாற்றமடைவது ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் மிகவும் மெதுவாக நடைபெற்றது. நகரங்களிலும் கிராமங்களிலும் பொருளாதார அமைப்பை நிர்ணயம் செய்த அரசு நிலவுடைமை நாட்டின் சமூக வளர்ச்சியைத் தடை செய்தது.

ஐரோப்பாவில் தொழில்துறை மூலதனத்தின் பிறப்பு தொடக்கநிலைக் குவிப்பின் விசேஷமான தோற்றுவாய்களான காலனியாதிக்கக் கொள்ளை, அரசுக் கடன்கள், காப்புவாதம் மற்றும் அரசு அதிகாரச் செயல்பாட்டின் இதர வடிவங்கள்

இருந்ததனுல் துரிதப்படுத்தப்பட்டது; புதிதாகத் தோன்றிக் கொண்டிருந்த இந்திய முதலாளி வர்க்கத்துக்கு இவை கிடைக்கவில்லை. ஆகவே நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையை முதலாளித்துவ உற்பத்தி முறையாக மாற்றி, சில இடைநிலைக் கட்டங்களை அகற்றுவதைத் துரிதப்படுத்துகின்ற நிலைமைகள் இந்தியாவில் இருக்கவில்லை.

இந்தியாவில் பட்டறை உற்பத்தியின் வளர்ச்சி தொடங்கிய பொழுது ஐரோப்பிய அரசுகளின் காலனியாதிக்கப் போர்களால் அது நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தியாவை ஈவிரக்கமின்றிக் கொள்ளையடித்தல் தொடங்கியது. காலனியாதிக்க வெற்றிகளினுல் நாட்டிற்குள்ளே நிலவிய பாரம்பரியமான பொருளாதாரப் பிணைப்புகள் அறுக்கப்பட்டன; வரிக் கொடுமை தீவிரமாக அதிகரித்தது. இவை அனைத்தும் மக்களுக்குச் சொல்ல முடியாத துன்பத்தை ஏற்படுத்தின; நாட்டில் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியை நெடுங்காலத்துக்குத் தாமதப்படுத்தி வைத்தன. இந்தியாவின் வரலாற்றில் ஒரு புதிய கட்டம், காலனியாதிக்கத்துக்கு மக்கள் அடிமைப்பட்ட நீண்ட காலகட்டம் தொடங்கியது.

## 2. மூலதனத்தின் தொடக்கநிலைக் குவிப்புக் காலகட்டத்தில் இந்தியாவில் காலனியாதிக்கச் சுரண்டலின் வடிவங்களும் முறைகளும்

இந்தியா உள்ளிட்ட காலனிகளில் நடைபெற்ற கொள்ளை மூலதனத்தின் தொடக்கநிலைக் குவிப்பில் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்

தது. இந்தியாவிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட திரண்ட செல்வம் ஐரோப்பிய முதலாளித்துவத்தின், குறிப்பாக பிரிட்டிஷ் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை வேகப்படுத்தியது.

இந்தியாவின் கடற்பகுதியில் முதன் முதலில் நுழைந்த ஐரோப்பியர்கள் போர்த்துகீசியர்களே. அவர்கள் 1498ல் வாஸ்கோ ட காமாவின் தலைமையில் வந்தார்கள். இந்தியாவில் காலனியாதிக்கத்தின் ஆக்கிரமிப்பையும் கொள்ளையையும் தொடங்கியது அவர்களே. 1510இல் போர்த்துகீசியர்கள் மேற்குக் கடற்கரைப் பகுதியில் இருந்த பழமையான கோவா நகரத்தைக் கைப்பற்றினார்கள். அந்த நகரம் கொள்ளையடிக்கப்பட்டது; அநேகமாக மொத்த மக்கள் தொகையுமே அழிந்தது. எனினும் போர்த்துகீசியர்களால் இந்தியாவில் பெரிய பிரதேசங்களைக் கைப்பற்ற முடியவில்லை. அவர்கள் பிடித்துக் கொண்ட பிரதேசங்கள் (கோவா, டையூ, டாமன்) 1961இல் விடுவிக்கப்படுகின்ற வரையிலும் மாற்றமடையாத எல்லைகளுக்குள்ளாகவே இருந்தன. போர்த்துகீசியர்கள் இந்தியாவின் அந்நிய வர்த்தகத் துறையில் மட்டுமே கணிசமான தாக்கம் செலுத்தினார்கள். 17ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை அவர்கள் இந்தியப் பொருட்களின் வர்த்தகத்தில் ஏகபோகத்தைக் கொண்டிருந்தார்கள். பிரதானமாகப் போர்த்துகீசிய வர்த்தகர்கள் மூலமே இந்தியப் பொருட்கள் பரந்த உலகச் சந்தையில் தோன்றின, ஐரோப்பியப் பொருட்கள் இந்தியாவுக்குள் நுழைந்தன. எனினும் மொத்தத்தில் இந்தியப் பொருளாதார அமைப்பின் மீது போர்த்துகீசியர்களின் தாக்கம்

மிகவும் குறைவே. இந்தியாவில் அவர்கள் வசம் இருந்த பிரதேசங்கள் நாட்டில் மற்ற பகுதிகளி லிருந்து துண்டிக்கப்பட்டிருந்தன. அவர்களுடைய அரசியல் செல்வாக்கு இந்தப் பிரதேசங்களின் எல்லைகளுக்கு வெளியே செல்லவில்லை.

டச்சு மற்றும் பிரிட்டிஷ், மற்றும் 17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரெஞ்சு வர்த்தக பலத்தின் வளர்ச்சியும் அதே சமயத்தில் நிலப்பிரபுத்துவ ஸ்பெயின் மற்றும் போர்த்துகல் படிப்படியாக பலவீனமடைந்து ஐரோப்பாவில் இரண்டாந் தரத்தைச் சேர்ந்த அரசுகளின் நிலைக்குத் தள்ளப் பட்டதும் இந்தியாவில் போர்த்துகீசிய வர்த்தக ஏகபோகத்தை ஒழிப்பதற்குச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவித்தன. 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் மற்றும் டச்சு வர்த்தகர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தார்கள். 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குள்ளாகவே டச்சுக்காரர்கள் கொழும்பு நகரத்தையும் இந்தியாவின் மலையாளக் கடற்கரையில் பல பிரதேசங்களையும் கைப்பற்றி விட்டார்கள்; 18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கை முழுவதுமே அவர்களிடம் இருந்தது. இந்தியாவில் போர்த்துகலின் வர்த்தக ஏகபோகம் முடிவடைந்தது; இந்தியாவின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான சண்டையில் பிரிட்டனும் பிரான்சும் முக்கியமான எதிரிகளாக இருந்தன. 1757இல் பிரெஞ்சுக்காரர்களும் அவர்களுடைய கூட்டாளியான வங்காள நவாபும் பிளாசி சண்டையில் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கை முற்றிலும் அகற்றுவதற்கு பிரிட்டிஷ்

காரர்களுக்கு இன்னும் சில வருடங்கள் பிடித்தன. இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த போட்டி யின் எதிர்கால விளைவை ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரியாவின் வாரிசுரிமைப் போரின் (1756—1763) முடிவுகள் பெருமளவுக்கு நிர்ணயித்தன. ஏழு வருடப் போரில் பிரான்ஸ் தோல்வி அடைந்ததன் விளைவாக வட அமெரிக்கா விலும் இந்தியாவிலும் தன்னுடைய காலனி களை இழந்தது; இந்தியாவில் ஆறு நகரங்கள் மட்டுமே அதற்கு மிஞ்சின. 19ம் நூற்றுண்டின் நடுப்பகுதி வரை இந்தியாவில் காலனிப் போர்கள் நீடித்தன. 1848இல் பிரிட்டன் பஞ்சாபைக் கைப் பற்றிய பிறகுதான் இமயத்திலிருந்து கன்யாகுமரி வரை இந்தியா முழுவதிலும் பிரிட்டன் தன் னுடைய காலனி ஆட்சியை நிறுவ முடிந்தது. இந்தியாவைக் காலனியாக அடிமைப்படுத்தியதில் 1599இல் பிரிட்டிஷ் வர்த்தகர்களால் நிறுவப் பட்ட கிழக்கிந்தியக் கம்பெனி முக்கியமான பாத் திரத்தை வகித்தது.

இக்கம்பெனி தொடக்கத்தில் இந்தியாவின் வர்த்தக ஏகபோகம், அதிலிருந்து கிடைக்கும் லாபம் ஆகியவற்றில் மட்டுமே அக்கறை கொண் டிருந்தது. இக்கம்பெனி இந்தியப் பொருள்களை வாங்கி இந்தியாவுக்கு வெளியில் விற்பனை செய் தது. அந்த சமயத்தில் இந்தியாவுக்கு ஐரோப் பியப் பொருள்கள் அவசியமில்லை என்பதால் கம் பெனி தங்கத்தையும் வெள்ளியையும் கொடுத்து இந்தியப் பொருள்களை வாங்கியது. ஆனல் இந்த நிலைமை அதிக காலத்துக்கு நீடிக்கவில்லை. கம்பெனி

இந்தியப் பொருள்களை விற்பனை செய்வதிலிருந்து படிப்படியாக இந்தியப் பிரதேசங்களைப் பிடிப்பதற்கும் நாட்டை நேரடியாகக் கொள்ளையடிப்பதற்கும் முன்னேறியது. இந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் ஆங்கிலேயர்களுடைய சுரண்டலின் முக்கியமான கூறுக இராணுவ மற்றும் வர்த்தகக் கொள்ளை இருந்தது. வெற்றியடைந்தவர்கள் அரண்மனைகளையும் ஆலயங்களையும் மொத்த நகரங்களையுமே கொள்ளையடித்தார்கள். பல நூற்றுண்டுகளாகத் திரட்டப்பட்டிருந்த செல்வம் அவர்களுக்கு மாறியது. தங்கம் பிரிட்டனுக்கு, வர்த்தகர்கள், மோசடிக்காரர்கள், துர்ச்சாகசக்காரர்கள் மற்றும் பிரபுக்களின் பைகளுக்குப் பாய்ந்தது.

பிளாசிச் சண்டைக்குப் பிறகு வங்காளத்தில் சிவிலியன் நிர்வாகத்தைக் கம்பெனி அநேகமாக முற்றிலும் எடுத்துக் கொண்டு, நவாபைத் தன்னுடைய கைப்பாவையாக மாற்றியது. இந்திய வரலாற்ருசிரியரான கே. எம். பணிக்கர் பின்வருமாறு கூறினர்: கவுன்சில் (கம்பெனியின் நிர்வாக அமைப்பு—அ.மெ.) விரும்பியபடி நவாபின் கருவூலத்திலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ளலாம். கம்பெனியின் ஊழியர்கள் மற்றும் அதன் பாதுகாப்பு இருப்பதாகச் சொல்லிக் கொண்ட ஒவ்வொருவருமே நாட்டில் விருப்பம் போல அலைந்து கொண்டிருந்தார்கள், இவர்கள் சுங்க வரி கட்டாமலேயே வர்த்தகம் செய்தார்கள். இந்த வர்த்தகம் எந்த அளவுக்கு நடைபெற்றது என்பதை வங்காளத்தின் நவாபு 1762இல் ஆங்கில அரசாங்கத்துக்கு எழுதிய கடிதத்திலிருந்து முடிவு

செய்து கொள்ளலாம்: ''அவர்கள் (கம்பெனி குமாஸ்தாக்கள்—அ. மெ.) விவசாயிகள், வியாபாரிகள், இதரர்களிடமிருந்து அவர்களுடைய பொருள்களையும் பண்டங்களையும் அவற்றின் மதிப்பில் நான்கில் ஒரு பங்குக்கு பலவந்தமாக எடுத்துக் கொள்கிறார்கள்; ஒரு ரூபாய் மதிப்புள்ள பொருளுக்கு விவசாயிகள் ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வன்முறை, ஒடுக்குமுறை மூலமாக அவர்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள்.''*

கம்பெனி ஸ்தல மக்களைச் சுரண்டுவதற்கு வர்த்தக மற்றும் கடன் முறைகளை விரிவாக உபயோகித்தது; இதற்கு இந்திய வர்த்தகர்கள் மற்றும் லேவாதேவிக்காரர்களையும் அது தனக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டது. அவர்கள் இந்தியாவின் கைத்தொழில் உற்பத்தியில் மிகவும் ஆழமாக ஊடுருவியிருந்தார்கள் என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். ஏராளமான கைவினைஞர்கள் கம்பெனியின் கொத்தடிமைகளாக மாற்றப்பட்டார்கள். அவர்களுடைய தயாரிப்புகள் அவற்றின் சந்தை விலையில் அநேகமாகப் பாதிவிலைக்கு ஸ்தல வர்த்தகர்கள் மற்றும் லேவாதேவிக்காரர்கள் மூலம் கம்பெனிக்குக் கிடைத்தன. கம்பெனிக்காக மட்டுமே வேலை செய்வோம் என்று கூறும் உறுதிமொழிப் பத்திரங்களில் கைவினைஞர்கள் கையெழுத்திட்டார்கள். அவர்கள் பகிரங்கச் சந்தையில் தங்களுடைய பொருள்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட

---

* Romesh Dutt, *The Economic History of India*, V. I, Delhi, 1960, p. 16.

வில்லை. இந்தக் கட்டாய உழைப்பு அவர்களுக்குப் பெருஞ்சுமையாக இருந்தது. எனவே தங்கள் வெறுப்பைத் தூண்டிய வேலையைச் செய்யாமலிருக்க வேண்டும் என்பதற்காக நெசவாளர்கள் தமது கட்டைவிரல்களை வெட்டிக் கொண்ட சம்பவங்கள் நடைபெற்றன.*

வங்காளத்தில் கம்பெனி ஏற்படுத்திய வருமான அமைப்பு முழுவதுமே கொள்ளையடிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. வரிகள் கம்பெனி வருமானத்தின் முக்கியமான தோற்றுவாயாக இருந்தன. கிழக்கிந்தியக் கம்பெனி பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குச் சமர்ப்பித்த அறிக்கையின்படி வங்காளத்தில் ஆறு வருட கால ஆட்சியின் போது (1775 முதல் 1781 முடிய) வரிகளின் மூலம் அதன் வருமானம் 200 மில்லியன் பவுண்டுக்கு மேல் இருந்தது. அவசியமான எல்லாச் செலவுகளையும் செய்த பிறகு நிகர லாபமாக 4 மில்லியன் பவுண்டு லண்டனுக்கு அனுப்பப்பட்டது. இந்தச் செலவுகளில் நவாபுக்கு ஜீவனப் படி, வரி வசூலிப்பதற்குச் செய்யப்பட்ட செலவுகள், விற்பனைக்குரிய பங்குக் கழிவுகள், சிவில் மற்றும் இராணுவச் செலவுகள், கம்பெனி ஊழியர்களுக்கு வீடுகள், கோட்டைகள் முதலியன கட்டிய செலவுகள், இதரவை அடங்கியிருந்தன. ஆனால் உண்மையில் லாபம் இதைக் காட்டிலும் அதிகமாகவே இருந்தது. ஏனென்றால் சிவில் மற்றும் இராணுவச் செலவுகளின் பெரும்பகுதியும் (இது கம்பெனி ஊழியர்களின் வருமானக் கணக்கே) இங்கிலாந்

---

* *Ibid.*, p. 19.



3–775

துக்கு மாற்றப்பட்டிருந்தது.* கம்பெனிக்கு மிகவும் அதிகமான லாபம் கிடைத்தபடியால் அதன் பங்குதாரர்களுக்கு அவர்கள் முதலீடு செய்த மூலதனத்தில் 100—250% லாப ஈவுகள் கொடுக்கப்பட்டன. இந்தியாவின் அந்நிய வர்த்தகத்தின் தன்மையும் மாற்றமடைந்தது, இந்தியா சுதந்திரமாக இருந்த காலத்தில் வர்த்தக உபரியைக் கொண்டிருந்தது; தன்னுடைய சரக்குகளுக்காக அதிகமான தங்கத்தையும் வெள்ளியையும் பெற்று வந்தது. 18ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் வங்காளம் மட்டுமே தன்னுடைய இறக்குமதியைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாக ஏற்றுமதி செய்தது—எந்த நட்ட ஈடும் இல்லாமல்.** இத்தகைய சந்தர்ப்பங்களில் வர்த்தக உபரி, நாடும் மக்களுடைய செல்வமும் கொள்ளையடிக்கப்பட்டதற்குச் சான்றுக இருந்தது.

பிடிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்த நிலமும் கொள்ளைக்கு இலக்காயிற்று. தங்களுடைய வருமானத்தை அதிகப்படுத்திக் கொள்ள விரும்பிய கம்பெனி ஏஜண்டுகள் நிலங்களை எடுத்துக் கொண்டு அவற்றை பகிரங்க ஏலங்களில் விற்பனை செய்தார்கள், அல்லது குறுகிய காலக் குத்தகைக்குக் கொடுத்தார்கள். பெரும்பாலும் சூதாட்டக்காரர்கள், வர்த்தகர்கள் அல்லது லேவாதேவிக்காரர்கள் இந்த நிலங்களை வாங்கினர்கள்; அவர்கள் விவசாயிகளை ஈவிரக்கமில்லாமல் சுரண்

---

* *Ibid.*, p. 33.

** Romesh Dutt, *The Economic History of India*, V. I, p. 33.

டினர்கள்: கொடுங் கொள்ளைக்காரர்கள் பலர் பரிதாபகரமான மக்களைக் கொள்ளையடிக்கின்ற நிலைமை இதனால் ஏற்பட்டது என்று வங்காள கவர்னரே ஒத்துக் கொண்டிருந்தார்.* காலனியாட்சியில் எதிர்காலத்தில் நடைபெறப் போகின்ற விவசாயச் சீர்திருத்தங்களுக்கு இது முன்னோடியாக இருந்தது. இந்த பயங்கரமான கொள்ளையினால் கோடிக்கணக்கான மக்கள் பசியினால் வாடினார்கள், மரணமடைந்தார்கள். வங்காளத்தில் கம்பெனியின் கவுன்சில் தயாரித்த மதிப்பீட்டின் படி பத்து மில்லியன் மக்கள் அல்லது மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி 1770க்களின் ஆரம்பத்தில் பட்டினியால் மரணமடைந்தார்கள். கம்பெனியின் ஏஜண்டுகள் தங்கள் வருமானத்தைப் பெருக்குவதற்குப் பஞ்சத்தையும் பயன்படுத்திக் கொண்டார்கள். ஏனென்றால் உணவுப் பொருள்கள் எல்லாவற்றின் வர்த்தகத்திலும் அவர்களுக்கு ஏகபோகம் இருந்தது. இந்தியாவின் பெரும் பகுதியில் உற்பத்திச் சக்திகள் அழிக்கப்பட்டு வந்தன, விவசாயமும் தொழிலும் தேய்ந்து கொண்டிருந்தன, மரபுவழிப்பட்ட பொருளாதார உறவுகள் நொறுக்கப்பட்டு வந்தன, பண்ட-பண உறவுகளின் வளர்ச்சி வேகம் குறைந்து மெதுவாயிற்று, சற்றுத் தொலைவான எதிர்காலத்தில்கூட உற்பத்தி முறையில் புதிய வடிவங்கள் தோன்றக் கூடிய வாய்ப்பு மிகவும் குறைந்தது. கலாச்சார நகரங்கள் நலிவடைந்து கலைகளில் தேக்கம் ஏற்பட்டு இந்திய மக்களின் பண்டைய கலாச்சாரம் படிப்படியாக அழிந்து கொண்டிருந்தது.

---

* *Ibid.*, p. 31.

## 3. பிரிட்டிஷ் தொழில்துறை மூலதனம் இந்தியாவைச் சுரண்டுதல்

18ம் நூற்றூண்டின் முடிவில் பிரிட்டனில் ஏற்பட்ட வேகமான தொழில்துறை வளர்ச்சி தொழில்துறை முதலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் நிலைகளை பலப்படுத்தியது. 1832இல் நடைபெற்ற பார்லிமெண்டரிச் சீர் திருத்தம் தொழில்துறை முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் பார்லிமெண்டில் நுழைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியது. பிரிட்டிஷ் வெளி நாட்டுக் கொள்கையும் உள்நாட்டுக் கொள்கையும் பிரதானமாக அவர்களுடைய நலன்களைப் பிரதி பலிக்கத் தொடங்கின. பிரிட்டிஷ் முதலாளித்துவ வரலாற்றில் இப்புதிய காலகட்டம் தொழில் துறை முதலாளி வர்க்கத்தின் நலன்களை முன் னணிக்குத் தள்ளி இந்தியாவில் காலனியாதிக்கச் சுரண்டல் முறையை மாற்றியது. கிழக்கிந்தியக் கம்பெனி ஆங்கிலப் பிரபுக்கள், லேவாதேவிக்காரர் கள் மற்றும் வர்த்தகர்களின் நலன்களைப் பிரதி நிதித்துவம் செய்தது. பிரதானமாக மலிவான பொருட்கள் மற்றும் செல்வங்கள்—இவற்றைக் கொள்ளையின் மூலம் பெறுவதே வழக்கம்— கிடைக்கின்ற நாடு என்ற முறையில்தான் அவர் களுக்கு இந்தியா அவசியமாக இருந்தது. இதைக் காட்டிலும் கடினமான பிரச்சினை தொழில்துறை முதலாளி வர்க்கத்தை எதிரிட்டது: முதலா வதாகவும் முதன்மையாகவும் பிரிட்டனுடைய தொழில்துறை உற்பத்திக்குச் சந்தையாகவும் பிரிட்டிஷ் தொழில்களுக்கு அவசியமான மூலப்

பொருள்கள் பெறுமிடமாகவும் இந்தியாவை மாற்ற வேண்டும். தொழில்துறை முதலாளி வர்க்கம் வர்த்தகர்களுடன் நெடிய, கசப்பான போராட்டத்தை நடத்தி (பிரபலமான கிளைவ் மற்றும் வாரன் ஹேஸ்டிங்ஸ் விசாரணைகள் இந்தப் போராட்டத்தைப் பிரதிபலித்தன) இந்தியாவின் காலனியாதிக்கச் சுரண்டலில் தன்னுடைய நிலைகளை பலப்படுத்திக் கொண்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் வர்த்தக ஏகபோகத்தை ஒழிப்பதற்குத் தன்னுடைய முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தியாவில் கம்பெனியின் நடவடிக்கைகளைப் பற்றிப் புண்படுத்துகின்ற அறிக்கைகளைத் தொழில்துறை முதலாளி வர்க்கம் வெளியிட்டது.

இந்தியாவின் மக்களினங்களைச் சுரண்டிய காலனியாதிக்க அமைப்பில் தொழில்துறை மூலதனம் புகுத்திய புதிய கூறுகள் எவை? வர்த்தகக் கொள்ளை என்ற கொள்கையுடன் பிரிட்டிஷ் தொழில்துறையின் மலிவான சரக்குகளை ஏற்றுமதி செய்வதும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது இந்தியப் பொருளாதாரத்துக்குப் பேராபத்தான விளைவை ஏற்படுத்தியது. 1794இல் இந்தியா பிரிட்டனிலிருந்து 156 பவுண்டுகள் மதிப்புள்ள பருத்தித் துணிகளை மட்டுமே இறக்குமதி செய்தது. இருபது வருடங்களுக்குப் பிறகு, 1813இல் இறக்குமதிகளின் மொத்த மதிப்பு சுமார் 1,09,000 பவுண்டுகளாக அதிகரித்திருந்தது. கார்ல் மார்க்ஸ் கொடுத்த புள்ளிவிவரங்களின் படி பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முறுக்கு நூல் 1818 மற்றும் 1836ம் வருடங்களுக்கிடையில் 5,200 மடங்கு அதிகரித்

தது. பிரிட்டன் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்த மஸ்லின் துணி 1824இல் சுமார் ஒரு மில்லியன் கஜம் கூட இல்லை; ஆனால் 1837இல் அது 64 மில்லியன் கஜங்களுக்கும் அதிகமாக இருந்தது.* பல நூற்றாண்டுகளாக உலக முழுமைக்கும் பருத்தித் துணிகளையும், கண்ணாடி மற்றும் உலோகப் பொருள்களையும் ஏற்றுமதி செய்து வந்த இந்தியா 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குள் பிரிட்டனிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளில் கணிசமான பகுதியை இறக்குமதி செய்கின்ற நாடாக மாறியது. கார்ல் மார்க்ஸ் சுட்டிக்காட்டிய படி பருத்தித் துணியின் அசல்தாயகமான இந்தியாவில் பிரிட்டிஷ் பருத்தித் துணிகள் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. இதன் விளைவாக நகரங்களிலும் கிராமங்களிலும் கைத்தறி நெசவாளர்கள் அழிந்தனர். பழைய கைத்தொழில் உற்பத்தி முறை அழிக்கப்பட்டது; ஆனால் அதற்கு பதிலாக எந்தப் புதிய உற்பத்தி முறையும் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் தொழில்துறையில் தயாரிக்கப்பட்ட மலிவான பொருள்களுக்கு இந்தியா சந்தையாக மாறிக் கொண்டிருந்தது.

கம்பளித் துணிகள், இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோகங்கள், கண்ணாடி மற்றும் பீங்கான் பொருள்கள் பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பிரிட்டிஷ் தொழில்துறைச் சரக்குகள் இந்தியாவின் உள்நாட்டுச் சந்தையை

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 3, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கம் 198.

ஒப்பீட்டளவில் மிகவும் குறுகிய காலத்தில் கைப் பற்றின. இந்திய அந்நிய வர்த்தகத்தை ஏக போகமாக வைத்துக் கொண்டிருந்த காலனி யாதிக்கவாதிகள் ஸ்தலத் தொழில்களுக்கு மரபு வழிப்பட்ட அந்நியச் சந்தைகள் இல்லாமற் செய்தனர்.

பிரிட்டிஷ் சந்தையைப் பொறுத்த வரை அது சுங்க வரிகளால் பாதுகாக்கப்பட்டிருந்தது. 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் பருத்தி மற்றும் பட்டுத் துணிகள் இங்கிலாந்தில் தயாரிக் கப்பட்ட அதே சரக்குகளைக் காட்டிலும் 50—60 சதவிகிதம் கூடக் குறைந்த விலைக்கு பிரிட்டிஷ் சந்தையில் லாபகரமாக விற்பனையாகிக் கொண் டிருந்தன என்று பிரிட்டிஷ் வரலாற்றாசிரியரான வில்சன் குறிப்பிட்டார்.* தங்கள் நாட்டுத் தொழிலைப் பாதுகாப்பதற்காக இந்தியச் சரக்கு களின் மீது அவற்றின் மதிப்பில் 70—80 சதவி கித வரிகளை பிரிட்டிஷ்காரர்கள் விதித்தனர். சில இந்தியச் சரக்குகள் மீது அவற்றின் மதிப்பில் 400 சதவிகித வரியும் விதிக்கப்பட்டது.** அதே சமயத்தில் பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட பொருள் கள் இந்தியாவுக்குள் அநேகமாக சுங்க வரி இல் லாமல் வர முடிந்தது. 1820க்களில் பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட பொருள்களுக்குக் கல்கத்தாவில் அவற்றின் விலையில் 2.5 சதவிகித வரி மட்டுமே விதிக்கப்பட்டது. இப்படிப்பட்ட காப்பு நடவடிக்

---

* Romesh Dutt, *The Economic History of India*, V. I, p. 187.

** *Ibid.*, p. 209.

கைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுகின்ற பொழுது, இவை இல்லையென்றால் மான்செஸ்டரி லிருந்த துணி ஆலைகளை நீராவிச் சக்தியினால் கூட இயக்கியிருக்க முடியாது என்ற நியாயமான முடிவுக்கு வில்சன் வருகிறார்.* 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் பிரிட்டன் வர்த்தகத்தில் இன்னும் அதிகமான சுதந்திரத்தை நோக்கிச் சென்று காப்புவாதத்தை இனிமேல் பயனில்லை என்று கைவிட்டுத் தன்னுடைய வர்த்தகக் கொள்கையை மாற்றிக் கொண்டது. 1820க்களில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது சுங்க வரிகள் 10—20 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டன— இதற்கு ஒரே விதிவிலக்கு இந்தியச் சரக்குகளே. அவற்றின் மீது விதிக்கப்பட்ட சுங்க வரிகள் மிகவும் அதிகமாகவே இருந்தன. பிற்காலத்தில், அதாவது 1830க்களில் தான் இந்தியப் பொருள்கள் மீது சுங்க வரிகள் குறைக்கப்பட்டன. அப்பொழுது இந்தியாவின் ஏற்றுமதிகள் மிகவும் குறைந்த மட்டத்தை அடைந்திருந்தன, அவை இனிமேல் பிரிட்டிஷ் தொழில்துறைக்கு ஆபத்தாக இருக்கவில்லை. 1802இல் பிரிட்டன் இந்தியாவிலிருந்து 15,000 பேல்கள் பருத்தித் துணிகளை இறக்குமதி செய்தது; 1829இல் 433 பேல்களை மட்டுமே இறக்குமதி செய்தது.** சுங்க வரிக் குறைப்பு (சிலவற்றில் அவை முற்றிலும் நீக்கப்படுதல்) முதலில் மூலப்பொருட்களுக்கு—சுத்தம் செய்யப்படாத பருத்தி, பட்டு, அவுரி மற்றும்

* *Ibid.*, p. 188.

** *Ibid.*, p. 211.

சில—அமுல் நடத்தப்பட்டது என்பதை இங்கே வலியுறுத்த வேண்டும். 1820க்களின் முடிவில் இந்தியாவிலிருந்து மூலப்பொருள்களின் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்தது. 1800இல் இந்தியா பிரிட்டனுக்கு 500 பேல்கள் பருத்தியை மட்டுமே ஏற்றுமதி செய்தது; 1826இல் 15,000 பேல்கள் பருத்தியை ஏற்றுமதி செய்தது. 1800இல் 213 பேல்கள் கச்சாப் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டன; 1828இல் 10,000 பேல்களுக்கு மேல் அதிகரித்து விட்டது. அதே சமயத்தில் உலகச் சந்தைக்கு அவுரி, தேயிலே, கஞ்சா மிக அதிகமாக ஏற்றுமதி செய்கின்ற நாடாக இந்தியா மாறியது. காலனியாதிக்கவாதிகள் சுங்க வரிகளேக் குறைத்தனர்; ஏனென்ருல் இனிமேல் அவற்றுக்குப் பெரிய முக்கியத்துவம் கிடையாது. ஆனுல் இந்தியாவில் ஸ்தலப் பொருள்களின் உற்பத்தி, வேறு இடங்களுக்கு அனுப்புதல் மற்றும் விற்பனே யில் உள்நாட்டு சுங்க வரிகளே விதித்ததோடு நெடுங்காலம் வரையிலும் அவற்றை அமுலில் வைத்திருந்தனர். உள்நாட்டுச் சுங்க வரிகள் பருத்திப் பொருள்களுக்கு 17.5 சதவிகிதமாகவும் தோலினுல் செய்யப்பட்ட காலணிகளுக்கு 15 சதவிகிதமாகவும் சர்க்கரைக்கு 15 சதவிகித மாகவும் இருந்தன. சுமார் 235 சரக்குகள் மீது இத்தகைய வரிகள் விதிக்கப்பட்டன.*

இந்தியா தன்னே அடிமைப்படுத்திய தலைமை நாட்டுக்கு மூலப்பொருள்களே ஏற்றுமதி செய் கின்ற நாடாகப் படிப்படியாக மாறியது. இந்த

---

* *Ibid.*, pp. 219-220.

நிகழ்வுப் போக்கு தொழில்துறை மூலதனத்தின் அதிகாரத்துக்கு நாடு முடிவாக அடிமைப்படு வதைப் பூர்த்தி செய்தது.

காலனியாதிக்கவாதிகள் இந்தியாவைத் தங்களுடைய தொழில் சரக்குகளுக்குச் சந்தையாக மாற்றியதன் மூலம் நெடுங்காலமாக கிராம சமூகங்களில் கைத்தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையில் நிலவிய ஜீவனுள்ள பிணைப்புக்களைத் தகர்த்தனர். இதற்கு முன்னரும், கிழக்கிந்தியக் கம்பெனியின் காலனியாதிக்க வெற்றிகளின் காலகட்டத்தின் போது நகரங்களின் கைத்தொழில்கள் அவற்றின் பாரம்பரியமான சந்தைகளை இழந்தன; மலிவான சரக்குகள் இறக்குமதி செய்யப்பட்ட படியால் அவற்றின் நிலை அரித்தழிக்கப்பட்டது. நகரத்திலும் கிராமத்திலும் கைத்தொழில்கள் அழிக்கப்பட்டன; பட்டறைத் தயாரிப்பில் அதற்கு ஏற்ற முறையில் உற்பத்தி அதிகரிக்கவில்லை. இது கிராமத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு அடிப்படையை ஏற்படுத்தியது; நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான தடைகளில் ஒன்றாயிற்று. இந்தியாவின் பொருளாதாரக் கட்டமைப்பில் மிகவும் ஆழமான அக மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன; இந்தியா தன்னை அடிமைப்படுத்திய தலைமை நாட்டின் சரக்குகளுக்குச் சந்தையாகவும் அதன் தொழில்துறைக்கு மூலப்பொருள்களைக் கொடுக்கின்ற நாடாகவும் பலவந்தமாக மாற்றப்பட்டு வந்தது.

18ம் நூற்றாண்டின் கடைசியில் இந்தியாவில் நிறைவேற்றப்பட்ட நில மற்றும் வரிச் சீர்திருத்

தங்களும் இந்த நிகழ்வுப் போக்கில் முக்கியமான பாத்திரத்தை வகித்தன. இச்சீர்திருத்தங்கள் பொதுவாக, நாட்டில் இருந்து வந்த பொருளாதாரப் பிணைப்புகளை அரித்தழிப்பதை விரைவு படுத்தின; கிராம சமூகங்கள் தகர்ந்து போவதற்கு உதவின, பிரிட்டனுடைய தொழில்துறைச் சரக்குகளுக்குச் சந்தையாகவும் அந்த நாட்டின் தொழில்துறைக்கு மூலப்பொருள்களைக் கொடுக்கின்ற நாடாகவும் இந்தியாவை மாற்றுவதற்குச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவித்தன. ஆகவே இச்சீர்திருத்தங்கள் அவற்றின் வரி அல்லது விவசாய அர்த்தத்தைக் காட்டிலும் மிக அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன.

*1793*இல் வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா மாகாணங்களுக்கு நிரந்தர ஜமீன்தாரி முறைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நிலத்துக்கு உரிமை முன்னர் வரி வசூலித்தவர்களுக்கு, ஜமீன்தார்களுக்கு மாற்றப்பட்டது, ஆனல் நிலத்தின் மீது விவசாயிகள் வைத்திருந்த பரம்பரையான உரிமை ரத்துச் செய்யப்பட்டது. இது தான் இந்த ஜமீன்தாரி முறையின் நடைமுறை விளைவாகும். விவசாயிகள் நடைமுறையில் குத்தகைக்காரர்களாக மாற்றப்பட்டனர். நிலங்களில் ஒரு பகுதி நிலப்பிரபுக்களின் தனியுடைமையாக மாற்றப்பட்டது. இந்த நிலங்கள் ''சிர்'' அல்லது ''குட்காஷ்த்'' என்று சொல்லப்பட்டன. ஜமீன்தார் கட்ட வேண்டிய நில வரி நிரந்தர ஜமீன்தாரிப் பிரதேசங்களில் நிரந்தரமாக நிர்ணயிக்கப் பட்டது; தற்காலிக ஜமீன்தாரிப் பிரதேசங்களில் *30—40* வருடங்களுக்கு ஒரு முறை நில வரி

மறுபரிசீலனை செய்யப்படும். முந்திய அரசர் களிடமிருந்து பிரிட்டிஷ்காரர்கள் நிலத்தின் மீது தலைமையான சொத்துரிமையைப் பெற்றனர்; அதே சமயத்தில் தனிப்பட்ட நிலப்பிரபுத்துவ நிலவுடைமையின் ஒரு வடிவத்தையும் ஏற்படுத் தினர்.

ஜமீன்தார் நிலப்பிரபுத்துவ நிலவுடைமை யாளரின் நிலைக்கு உயர்த்தப்பட்டார். அவர் நிலத் துக்காக விவசாயியிடமிருந்து நில வாரம் வசூலித் தார். இந்தப் பணத்தில் ஒரு பகுதி நில வரி என்ற வடிவத்தில் அரசுக்குக் கிடைத்தது; ஆனால் காலனியாதிக்க நிர்வாகத்துடன் அவருடைய உறவு பிரதானமாக வரி வசூலிப்பவன் என்பதாக இருந்தது. அதாவது ஜமீன்தார் நில வரியைக் கட்டத் தவறினால் அவரிடமிருந்து நிலம் பறிக்கப்படும். இச்சீர்திருத்தம் அமுலான ஆரம்ப வருடங்களில் இந்த நிலைமையே இருந்தது. காலனி யாதிக்கவாதிகள் இந்தியாவில் ஏற்படுத்திய நிலப்பிரபுத்துவத் தனிப்பட்ட நிலவுடைமையின் பிரத்யேகமான கூறுகளைப் பிரதிபலிக்கின்ற ஜமீன் தாரின் இந்த இரட்டை அந்தஸ்தைப் பார்த்த மார்க்ஸ் இந்தியாவில் ஜமீன்தாரி முறை பிரிட் டிஷ் பெரும் நிலவுடைமையின் கேலிச் சித்திரம் என்று வர்ணித்தார்.

காலனியாதிக்கவாதிகள் ஜமீன்தாரி முறையை அமுலாக்கியதனால் வரி வருமானத்தை அதிகப் படுத்த முடிந்தது (விவசாயிகளிடமிருந்து வசூலிக் கப்பட்ட வாரத்தில் 90 சதவிகிதத்தை ஜமீன் தார்கள் அரசிடம் கட்ட வேண்டியிருந்தது); பிரிட்டிஷ் நிர்வாகத்திடமிருந்து நிலத்தைப்

பெற்றுக் கொண்ட ஜமீன்தார்கள் மத்தியில் தங்களுக்குச் சமூக ஆதரவை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. நிரந்தரமான வருமானத்தைக் கொண்ட ஜமீன்தாரி நில வரி முறையை அமுலாக்கியதனுல் இந்தியாவில் எஞ்சியிருந்த பிரதேசங்களை பிரிட்டிஷ்காரர்கள் ஒரு காசு செலவழிக்காமல் கைப்பற்ற முடிந்தது.

ஜமீன்தாரி முறை அமுலாக்கப்பட்டதனுல் ஏற்பட்ட மூன்று முக்கியமான விளைவுகளை இங்கே குறிப்பிடலாம்: (1) விவசாயிகள் நிலத்தின் மீது தங்களுக்கிருந்த பரம்பரையான உரிமைகளை இழந்து குத்தகை விவசாயிகளாக மாற்றப்பட்ட படியால் அவர்கள் மொத்தமாக உடைமை பறிக்கப்பட்டனர்; (2) வாரம் உயர்த்தப்பட்டபடியால் சுரண்டல் முறை தீவிரப்படுத்தப்பட்டது; (3) ஜமீன்தார்கள் வசூலிக்கப்படும் தொகையில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டு வரிவசூலிக்கின்ற உரிமையைத் தங்களுக்குக் கீழே இருந்தவர்களிடம் தந்தனர். இதன் பலனுக வரி வசூலிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

பல பரிசோதனைகளுக்குப் பிறகு 1820க்களில் தென்னிந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் ரயத்துவாரி முறை அமுலாக்கப்பட்டது.

இந்த முறையின் கீழ் விளை நிலம் தரத்தைப் பொறுத்து ஒன்பது ரகங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு ரகமும் தனி வரி அளவைக் கொண்டிருந்தது. நிலம் கிராம சமூகத்தின் முழு உறுப்பினர்களுக்கு, சமூகத்தின் நிலப்பிரபுத்துவ மேல்தட்டினராகிய மிராசுதார்களுக்கு நிரந்தரமாகக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. வேறு

வார்த்தைகளில் சொல்வதென்றால், நிலத்தில் பெரும் பகுதி சிறு மற்றும் நடுத்தர நிலக்கிழார்களுக்குக் கிடைத்தது; சமூகத்தின் முழு உறுப்பினர்களுக்குச் சிறு பகுதி கிடைத்தது. சமூகத்தில் முழு உறுப்பினர்களாக இல்லாதவர்கள் மற்றும் அதன் ஊழியர்களுக்கு நில உரிமை கொடுக்கப் படவில்லை. நிலச் சொந்தக்காரர்களாக இருந்த நிலப்பிரபுக்களும் விவசாயிகளும் ரயத்துகள் என்று அழைக்கப்பட்டார்கள்.

நிலத்தை விற்பனை செய்ய, அடமானம் வைக்க, குத்தகைக்கு விட, என்ன வேண்டுமானாலும் செய்ய ரயத்துகளுக்கு உரிமை தரப்பட்டது. அவர்கள் நிலத்துக்கு வரி கட்டிக் கொண்டிருக்கும் வரை அவர்களிடமிருந்து அதைப் பறிக்க முடியாது. வரியின் அளவு விளைச்சலில் $^1/_3$ அல்லது $^1/_2$ பங்காக இருந்தது. சிறு பண்ணைகளில் கிடைத்த உபரி முழுவதுமே வரியாகக் கட்டப்பட்டது என்று ரொமேஷ் தத் மதிப்பிட்டிருக்கிறார். அவர் தந்திருக்கும் புள்ளிவிவரங்களின்படி ஒரு சிறு பண்ணையில் ஒரு வருட உபரியின் மதிப்பு 12 பவுண்டுக்கு அதிகமாக இருக்காது. விவசாயச் செலவு 7—8 பவுண்டு, நில வரி 4 பவுண்டாக, அதாவது உபரி முழுவதுமாக இருக்கும்.* சில சமயங்களில் விளைச்சலில் கணிசமான பகுதி வரியாகக் கட்டப்பட்டது. வரிகள் முப்பது வருடங்களுக்கு ஒரு முறை மறுபரிசீலனை செய்யப்பட்டன. அரசுக்கும் ரயத்துக்கும் இடைநிலையாக எவரும் இல்லை.

---

* R. Dutt, *The Economic History of India*, V. I, pp. 121-122.

ரயத்துவாரி முறையின் மூலம் இரண்டு காரியங்களை நிறைவேற்றுவதற்கு பிரிட்டிஷ்காரர்கள் முயற்சி செய்தார்கள்: முதலாவதாக, வரி வருமானங்களைப் பெருக்குதல்; இரண்டாவதாக, கிராம சமூகத்தின் மேல்தட்டினரை நிலப்பிரபுக்களாக உயர்த்துவதன் மூலம் தங்களுக்கு சமூக ஆதரவை அமைத்துக் கொள்ளுதல்.

இச்சீர்திருத்தத்தின் மூலம் ஏராளமான நிலம் (மேய்ச்சல் நிலம், பசும்புல் நிலம், மற்ற சமூகத்தின் பொது நிலங்கள்) அரசின் உடைமையாக்கப்பட்டது. கிராம மக்கள் தொகையில் கணிசமான பகுதியினர் (சமூகத்தின் முழு உறுப்பினர்களாக இல்லாதவர்கள், ஊழியர்கள், இதரர்கள்) நிலவுடைமையை இழந்து குத்தகை விவசாயிகளாக மாற்றப்பட்டனர். ரயத்துவாரி சீர்திருத்தம் செய்யப்பட்ட பிரதேசங்களில் ஏராளமான விவசாயிகள் உடைமை பறிக்கப்பட்டதை இது குறிக்கிறது. சொந்தத்தில் நிலம் உள்ள விவசாயிகளைப் பொறுத்த வரை அவர்கள் நடைமுறையில் காலனி அரசாங்கத்தில் குத்தகை விவசாயிகளாக மாறினார்கள். ஏனென்றால் அவர்கள் அதிகமான நிலவரிகளைக் கட்டி நிலத்தில் விவசாயம் செய்தாக வேண்டியிருந்தது. அவர்கள் அரசுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ற முறையில் மட்டும் விவசாயம் செய்யவில்லை, மொத்தப் பொருளாதார நிலைமைகளினால் (கைத்தொழில்களின் அழிவு, பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட தாமதம்) அவர்கள் தம்முடைய துண்டு நிலங்களைப் பிடித்துக் கொண்டு தொங்கினார்கள். ரயத்துவாரி முறையின் இந்த அம்சங்கள் ''அதை பிரெஞ்சு விவசாய

நிலவுடைமையின் கேலிச் சித்திரமாகச் செய்தன'', ஏனென்றால் சொந்தத்தில் நிலம் உள்ள விவசாயி ''ஒரே சமயத்தில் பண்ணையாளாகவும் அரசின் குத்தகைக்காரராகவும் இருக்கிறார்''* என்று கார்ல் மார்க்ஸ் கூறினார்.

1820க்களில் வட இந்தியாவில் செய்யப்பட்ட நில வரிச் சீர்திருத்தம் மஹல்வாரி முறை என்று சொல்லப்பட்டது. ஆரம்பத்தில் கூட்டுப் பொறுப்பைக் கொண்ட கிராம சமூகங்களுக்கு நிலவுடைமைக்கு உரிமை கொடுக்கப்பட்டது. அவை தங்களுடைய கிராமத் தலைவர் மூலமாக வரி களைக் கட்டின. வரி அந்த சமூகம் முழுமைக்கும் மொத்தமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் வரி உரிய காலத்தில் முழுமையாகக் கட்டப்படு வதற்கு விவசாயி தனிப் பொறுப்பை வகித்தான். அவனுடைய உடைமை அதற்குப் பிணையமாக வைக்கப்பட்டிருந்தது.

கொள்கையளவில் கிராம சமூகத்தின் நிகர லாபத்தை அடிப்படையாகக் கொண்டு நில வரி நிர்ணயிக்கப்பட்டது. ஸ்தல நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களுக்கு விவசாயிகள் கட்டிய நிலப் பிரபுத்துவ வாரத் தொகையிலிருந்து இந்த லாபம் மதிப்பிடப்பட்டது. இது அநேகமாக உபரி விளைச்சலுடன் பொருந்தியிருந்தது. 1840க்களில் வரி இந்தத் தொகையில் 50 சதவிகிதமாக இருந் தது. ஆகவே உபரி விளைச்சலில் அரைப் பங்கு

* Karl Marx, *The War Question.—Doings of Parliament. — India*, in: Karl Marx, Frederick Engels, *Collected Works*, V. 12, Progress Publishers, Moscow, 1979, pp. 214-15.

வரியாகக் கட்டப்பட்டதென்று கருதப்பட்டது. ஆனல் நடைமுறையில் அது இன்னும் அதிகமாக இருந்தது. ஏனென்ருல் நிகர லாபத் தொகையை வரி வசூலிப்பவர் தன்னுடைய விருப்பம் போல நிர்ணயித்தார். இந்த முறை அமுலாக்கப்பட்ட ஆரம்ப வருடங்களில் சில சமயங்களில் வரி விவசாயியின் வருமானத்தில் 95 சதவிகிதமாகவும் இருந்தது.* பிற்பாடு 19ம் நூற்ருண்டின் இரண்டாம் பாதியில் நிலவுடைமையாளர் மற்றும் வரி கொடுப்பவருடைய உரிமைகள் கிராம சமூகத்தின் முழு உறுப்பினர்களிடம் கொடுக்கப்பட்டிருந்தது, கிராம சமூகத்திடம் கொடுக்கப்படவில்லை. எனவே நடைமுறையில் மஹல்வாரி முறை ரயத்துவாரி முறையிலிருந்து அநேகமாக வேறுபடவில்லை.

காலனியாதிக்க அதிகாரிகளின் விவசாய சீர்திருத்தங்கள் விவசாயிகள் மொத்தமாக ஓட்டாண்டிகளாகும் நிலையை ஏற்படுத்தின. நில வரிச் சீர்திருத்தங்கள் இந்தியாவின் கிராம சமூக அமைப்புக்குத் தீவிரமான அடி கொடுத்தன. விவசாயிகளின் மிகப் பெரிய பகுதியினர் நடைமுறையில் ஜமீன் அல்லது அரசு நிலத்தில் எத்தகைய உரிமையும் இல்லாமற் பாடுபடுகின்ற குத்தகை விவசாயிகளாக மாற்றப்பட்டனர்; அவர்கள் பொருளாதார சுதந்திரத்தை இழந்து நிலக்கிழார்கள்,லேவாதேவிக்காரர்கள் மற்றும் காலனி நிர்வாகிகள் எதை உற்பத்தி செய்யும்படி உத்தர விடுகிருர்களோ, அதைச் செய்ய வேண்டியவர்

* Romesh Dutt, *The Economic History of India*, V. I, p. 139.

களானுர்கள் அந்தச் சுதந்திரமான கிராம சமூகம் சிறு விவசாய நிலவுடைமையாளர்களாகச் சித றியது, காலனியாதிக்க அதிகாரிகளின் உத்தரவுப் படி தலைமை நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற் காக அவுரி, கஞ்சா, பருத்தி மற்றும் இதர மூலப் பொருள்களை உற்பத்தி செய்தது. நிலத்தில் பயிர் செய்பவர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் பன் னெடுங்காலமாக இருந்து வந்திருக்கும் பிணைப்பு நொறுக்கப்பட்டது; கிராம சமூகம் தன்னுடைய சுய பூர்த்தியை இழந்தது. அது இப்பொழுது தனக்கு வெளியே உற்பத்தி செய்யப்பட்ட சரக்கு களை நம்பியிருந்தது.

இந்தியாவை பிரிட்டனுடைய சந்தையாகவும் பிரிட்டனுக்காக மூலப்பொருள்களை உற்பத்தி செய்கின்ற நாடாகவும் மாற்றுவது நில வரிச் சீர்திருத்தங்களால் உறுதி செய்யப்பட்டது. இந் தியாவின் காலனிப் பொருளாதார உருவாக்கத் தில் ஒரு முக்கியமான கட்டத்தை இவை குறித் தன. விவசாயச் சீர்திருத்தங்கள் தீவிரமானவை யாக இருந்த போதிலும் விவசாயிகளின் மீது நிலப்பிரபுத்துவச் சுரண்டல் முறையின் அடிப்படை களை அது தொடவில்லை. காலனியாதிக்கவாதிகள் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார் வர்க்கத்தின் நிலைகளை பலப்படுத்திஞர்கள். அந்த வர்க்கம் அவர்களுக்கு சமூக ஆதரவைத் திரட்டிக் கொடுத்து நாட்டில் காலனியாதிக்கச் சுரண்டலை பலப்படுத்தியது. மேலும், பிரிட்டிஷ் நிர்வாகத் தின் நேரடியான ஆட்சியிலிருந்த பிரிட்டிஷ் இந் தியா என்று சொல்லப்பட்ட பிரதேசத்தில் இம் மாற்றங்களைச் செய்த பொழுது அவர்கள் நாட்

டில் மூன்றிலொரு பிரதேசத்தைக் கொண்டிருந்த 600 நிலப்பிரபுத்துவ சமஸ்தானங்களை அப்படியே வைத்துக் கொண்டதுடன் எல்லா ஆதரவும் கொடுத்தார்கள்.

பிரிட்டிஷ் விவசாயக் கொள்கையைத் தொகுத்துரைக்கும் பொழுது மார்க்ஸ் பின்வருமாறு எழுதினர்: ''ஜமீன்தாரி முறை, ரயத்துவாரி முறை, உப்பு வரி மற்றும் இந்தியப் பருவநிலை ஆகியவற்றுடன் சேர்ந்து காலரா நோயின் சேமக்கலங்கள் — மேற்கத்திய உலகத்தின் மீது இந்தியா ஏவிய அழிவுகள்—மனிதனுடைய துன்பங்கள் மற்றும் அநீதிகளின் ஒற்றுமைக்குக் குறிப்பிடத்தக்க மற்றும் கடுமையான உதாரணம்.''* ஜமீன்தாரி மற்றும் ரயத்துவாரி முறைகள் அமுலாக்கப்பட்டதுடன் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் விவசாயச் சட்டத்தின் முதல் கட்டம் முடிவடைந்தது.

அது இந்திய விவசாயத்தில் நிலப்பிரபுத்துவ அமைப்பின் மிகவும் பிற்போக்கான கூறுகளைப் பாதுகாத்தது. காலனியாதிக்கவாதிகள் நிலத்தில் நிலப்பிரபுத்துவ நிலவுடைமையையும் நிலப்பிரபுத்துவச் சுரண்டலின் மிகவும் அருவருப்பான வடிவங்களையும் பலப்படுத்த உதவினர்கள். விவசாயத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் நாடு முழுமையின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் அது முக்கியமான தடையாக இருந்தது.

தொழில்துறை மூலதனம் ஆதிக்கம் செலுத்

* Karl Marx, *The War Question.—Doings of Parliament.—India*, in: Karl Marx, Frederick Engels, *Collected Works*, V. 12, p. 216.

திய காலகட்டத்தில் இந்தியப் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் ஏற்பட்ட ஆழமான அமைப்பு மாற்றங்களுக்குத் துணையாகப் பரிவர்த்தனை முறையிலும் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டன. கிழக்கிந்தியக் கம்பெனியின் வர்த்தக ஏகபோகம் ரத்துச் செய்யப்பட்டதும் பிரிட்டிஷ் சரக்குகளின் இறக்குமதிகள் அதிகரித்ததும் இந்தியாவின் பணவியல் மற்றும் கடன் முறையைப் பற்றித் தீவிரமாக அக்கறை செலுத்தும்படி காலனியாதிக்கவாதிகளை நிர்ப்பந்தித்தன. காலனியாட்சிக்கு முந்திய காலகட்டத்திலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் காலத்திலும் இந்தியாவில் ஒரே மாதிரியான பணவியல் முறை கிடையாது. வெவ்வேறு மதிப்புகளைக் கொண்ட வெள்ளி மற்றும் தங்க நாணயங்கள் செலாவணி செய்யப்பட்டு வந்தன. வெள்ளி ரூபாயின் மதிப்பு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. உதாரணமாக, கல்கத்தா ரூபாயின் மதிப்பு சென்னை ரூபாயைக் காட்டிலும் மூன்றில் இரண்டு பங்கு அதிகமாக இருந்தது. வர்த்தகக் கொள்ளைக் காலகட்டத்தின் போது பணவியல் முறையில் இந்தக் குழப்பம் இந்தியாவிலிருந்து அதிகமான சரக்குகளை ஏற்றுமதி செய்யப் பயன்பட்டது; வர்த்தகர்களும் வியாபாரிகளும் கள்ளச் சந்தைக்காரர்களும் கொள்ளை லாபம் அடைவதற்குப் பயன்பட்டது. ஆனால் தொழில்துறை முதலாளி வர்க்கத்துக்கு ஒரே மாதிரியான ஒற்றைப் பணவியல் முறை வேண்டும். அந்த வர்க்கத்துக்குப் பரிவர்த்தனை விகிதம் மிகவும் முக்கியமாக இருந்தது; ஏனென்றால்

இந்தியாவில் சரக்குகளை விற்பனை செய்து பெற்ற ரூபாய்களைப் பவுண்டு ஸ்டர்லிங்காக மாற்ற வேண்டியிருந்தது.

1818 மற்றும் 1835ம் வருடங்களில் நிறை வேற்றப்பட்ட இரண்டு சட்டங்களின் மூலம் வெள்ளி ஆதார அளவுகோல் இந்தியாவில் பின் பற்றப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட எடையும் வெள்ளி உள்ளடக்கமும் கொண்ட வெள்ளி ரூபாய் நாடு முழுமைக்கும் அடிப்படைப் பணவியல் அலகு என்று அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் காலனி யாதிக்க நிர்வாகத்தின் நிதி வருமானம் நிலைப்படு வதற்கு ஏதுவாயிற்று; பணத்தைக் கொண்டு வரியைக் கட்டுகின்ற முறையை அமுலாக்க முடிந்தது. ஆனால் வரிக்குப் பணத்தைக் கட்டுகின்ற முறை குறிப்பாக, விவசாயத் துறையில் விவசாயி யின் இயற்கையான பொருளாதாரத்தை அரித் தழித்தது; பிரதானமாகப் பண்ட மாற்றை அடிப் படையாகக் கொண்டிருந்த பாரம்பரியப் பொரு ளாதாரப் பிணைப்புகளை அழித்தது. பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட சரக்குகளுக்கு சந்தையை ஏற் படுத்துவதற்கு அது உதவியாக இருந்தது; சந்தை யில் தேவைப்படும் பொருள்களை, பணத்துக்கு விற்பனை செய்யப்படக் கூடிய சரக்குகளை உற்பத்தி செய்யும்படி விவசாயிகளை நிர்ப்பந்தித்தது. 1820க்கள் மற்றும் 1830க்களில் நிறைவேற்றப் பட்ட சட்டங்கள் இந்தியாவின் காலனியாதிக்கச் சுரண்டலில் பணவியல் முறையின் உபயோகத்தின் ஆரம்பத்தைக் குறிக்கின்றன.

இந்தக் காலகட்டத்தில்தான் பிரிட்டிஷ் வங்கிகள் கடன்வசதித் துறையில் தங்களுடைய

ஏகபோகத்தை நிறுவிக் கொண்டன. 18ம் நூற்றூண்டின் கடைசியில் நிறுவப்பட்ட முதல் பிரிட்டிஷ் வங்கிகள் பலவீனமான அமைப்புகளாக இருந்தன; அவை இரண்டு அல்லது மூன்று பத்தாண்டுகள் இயங்கிய பிறகு வழக்கமாக முறிந்தன. 19ம் நூற்றூண்டின் கடைசியில் கூட இந்தியாவில் மூன்று பெரிய கூட்டுப் பங்கு வங்கிகள் மட்டுமே இருந்தன. கடன் நடவடிக்கைகளில் பெரும் பகுதி பிரிட்டிஷ்காரர்கள் கல்கத்தா (1806), பம்பாய் (1839), சென்னே (1843) ஆகிய மூன்று நகரங்களில் நிறுவிய மாகாண வங்கிகளால் நிறைவேற்றப் பட்டது. இவை பாதி அரசாங்க நிறுவனங்களாக இருந்தன; நிர்வாகத்தின் காலனியாதிக்கக் கொள்கையை அமுல் நடத்தின; அரசாங்கத்துக்கும் பெரிய வர்த்தகர்களுக்கும் கடன்கள் கொடுத்தன.

1830க்களின் கடைசியிலும் 1840க்களின் தொடக்கத்திலும் பெரிய பிரிட்டிஷ் வங்கிகள் இந்தியாவில் தம்முடைய நடவடிக்கைகளைத் தொடங்கின. 19ம் நூற்றூண்டின் நடுப்பகுதியில் ''ஓரியண்டல் பாங்கிங் கார்ப்பொரேஷன்'', ''சார்டர்டு பாங்க் ஆப் இந்தியா, ஆஸ்திரேலியா அண்ட் சைஞ'', ''சார்டர்டு பாங்க் ஆப் கிரேட் பிரிட்டன்'' என்ற மூன்று வங்கிகள் இந்தியாவில் இயங்கின. அந்நிய வர்த்தகம் மற்றும் எல்லா விதமான கரன்சி நடவடிக்கைகளுக்கும் கடன் கொடுப்பதில் இந்த வங்கிகள் ஏகபோகம் வகித்தன. அவை உள்நாட்டு வர்த்தகத்தில் ஊடுருவிக் கொண்டிருந்தன; உலகச் சந்தையுடன் இந்தியாவுக்கு நேரடியான உறவுகள்

இல்லாமற் செய்ததுடன் பிரிட்டனுடைய விவசாய மற்றும் மூலப்பொருள் ஒட்டுப் பகுதியாக இந்தியாவை மாற்றின. இந்தியாவில் அந்நிய வங்கிகள் இயங்கியதனுல் காலனியாதிக்கவாதிகள் உள்நாட்டின் வர்த்தக மற்றும் கடன் மூலதனத்தைத் தங்களுடைய சொந்த நலன்களுக்கு மிக விரிவாக உபயோகப்படுத்த முடிந்தது. இந்த வங்கிகள் கடன் வசதி வழங்கும் துறையிலிருந்து வட்டிக்கடைகளை அகற்ருதது மட்டுமல்லாமல் அவற்றுக்குக் கூடுதலாகக் கடன் கொடுத்து பலப்படுத்தின. வர்த்தகர்களும் லேவாதேவிக்காரர்களும் வங்கிகளின் உதவியுடன் பிரிட்டிஷ் சரக்குகளை விற்பனை செய்தார்கள், சந்தைக்குக் கொண்டு வரப்பட்ட மூலப்பொருள்களையும் உணவையும் மொத்தமாக வாங்கினுர்கள். வர்த்தக மற்றும் கடன் மூலதனத்துக்கும் அந்நிய வங்கிகளுக்கும் ஏற்பட்ட நெருக்கமான பிணைப்புகள் இந்தியாவின் காலனிச் சுரண்டல் பொறியமைவில் ஒரு முக்கியமான கண்ணியாகப் பின்னர் பலப்படுத்தப்பட்டன.

எனவே தொழில்துறை மூலதனம் ஆதிக்கம் வகித்த காலகட்டத்தில் நாட்டின் பொருளாதார அடிமை நிலை பிரதானமாகப் பூர்த்தி செய்யப்பட்டது; அந்நியப் பொருளாதாரத்தின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இந்தியப் பொருளாதாரம் தகவமைக்கப்பட்டது. இந்தியா தன்னுடைய பொருளாதார சுதந்திரத்தை இழந்தது, அதற்கென்று சொந்தத் தொழில்துறை இல்லாமற் போயிற்று. ஒவ்வொரு வருடமும் ஏராளமான பணம், சுமார் 3—4 மில்லியன் பவுண்டு

கள் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டன. இந்திய மக்களுடைய துன்பத்திலும் வேதனையிலும் தங்களுடைய செல்வத்தை நிர்மாணித்த தொழில்துறை மற்றும் இதர முதலாளிகளுக்குக் கிடைத்த நிகர லாபம் இது; காலனி என்ற முறையில் இந்தியா பிரிட்டனுக்குக் கொடுத்த பங்கு இது. காலனியாதிக்கவாதிகள் புதிதாக எந்த நடவடிக்கையிலும் அநேகமாக ஈடுபடாதது இந்தக் காலகட்டத்தின் குறியடையாளமாகும். இந்தியாவுக்கு மிகவும் அவசியமான நீர்ப்பாசன வேலை கூடக் கைவிடப்பட்டது. விவசாயம் அழிக்கப்பட்டு நிலங்கள் தரிசாக விடப்பட்டன. இந்தியா பட்டினியில் அழிந்து கொண்டிருக்கும் நாடாக மாறியது. 19ம் நூற்றுண்டின் முதற்பாதியில் இந்தியாவில் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை பஞ்சங்கள் ஏற்பட்டன. 1800 மற்றும் 1878க்கு இடையில் பஞ்சங்களில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 6.5 மில்லியன் என்று அரசாங்கப் புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.* ஆனல் ரொமேஷ் தத் கூறியதைப் போல ''மரணங்கள் மிகவும் எண்ணற்றவை என்பதால் ஒருபோதும் கணக்கிடப்படவில்லை'' என்பதுதான் உண்மை. கான்பூர், ஆக்ரா, பத்தேபூர் போன்ற பெரிய நகரங்களில் தெருக்களிலிருந்தும் ஆற்றுக் கரைகளிலிருந்தும் பிரேதங்களை அகற்றுவதற்கு விசேஷமான இலாகாக்கள் அமைக்கப்பட்டன.**

---

* R. Palme Dutt, *India Today*, London, 1940, pp. 131-132.

** Romesh Dutt, *The Economic History of India*, V. I, p. 308.

தொழில்துறை முதலாளி வர்க்கம் ஐம்பது வருடங்கள் ஆதிக்கம் செலுத்தியதன் பயங்கர மான விளைவு இது.

இந்தக் காலகட்டத்தில் காலனியாதிக்கவாதி களின் பொருளாதார மற்றும் அரசியல் நட வடிக்கைகளைத் தொகுத்துரைத்த கார்ல் மார்க்ஸ் பின்வருமாறு எழுதினர்: ''இவ்வாறு புதிய உலகத்தைப் பெருது பழைய உலகத்தை இழந்து நிற்கும் நிலையானது இந்தியரது இன்றைய துயரத் துக்கு ஒரு பிரத்தியேகமான வாட்டத்தைக் கொடுக்கிறது. மேலும் பிரிட்டனால் ஆளப்படும் இந்துஸ்தானத்தை அதன் தொன்மையான மரபுகள் அனைத்திலிருந்தும் அதன் கடந்த கால வரலாறு முழுவதிலுமிருந்தும் பிரித்து வைத் திருக்கிறது.''*

இந்தியாவைச் சுரண்டிய இரண்டாவது கட் டத்தின் முக்கியமான கூறுகளும் விளைவுகளும் இப்படி இருந்தன. இந்தக் காலகட்டத்தில்தான் இந்தியாவின் வெகுஜன எழுச்சிகளில் மிகவும் பெரிய ஒரு எழுச்சி, 1857-59ம் வருடங்களில் நடைபெற்ற எழுச்சி வெடித்தது. நாட்டில் மறு படியும் தேசிய சுதந்திரத்தை ஏற்படுத்துவது தன்னுடைய முக்கியமான லட்சியம் என்று அது அறிவித்தது. இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தனர். காலனியாதிக்கவாதிகள் அந்த எழுச்சியை நசுக்குவதற்கு மாபெரும் முயற்சிகளைச்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 3, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கங்கள் 194—195.

செய்ய வேண்டியிருந்தது; அவர்கள் அதை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தனர்.

19ம் நூற்றுண்டின் கடைசிக் காற்பகுதியில் பிரிட்டனில் ஏகாதிபத்தியத்தின் முதற்கூறுகள் தோன்றின. காலனிகளின் முக்கியத்துவம் மாபெரும் அளவுக்கு அதிகரித்தது. அவை மூலதனக் குவிப்புக்கு இலக்காயின. ஆகவே காலனிகளின் சார்புநிலையை அதிகப்படுத்துவதும் காலனியாதிக்கவாதிகளின் நிலையை பலப்படுத்துவதும் மிகவும் தீவிரமான பிரச்சினைகளாயின.

1858இல் இந்தியாவை ஆட்சி செய்கின்ற அதிகாரம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திடம் அதிகார பூர்வமாக மாற்றப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட்டது.

இந்தியாவில் நடைபெற்ற தேசிய எழுச்சி காலனியாதிக்கவாதிகளின் கொள்கையின் மீது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளும்படி அவர்களை நிர்ப்பந்தித்தது. இந்த எழுச்சிக்குப் பிறகு காலனியாதிக்கவாதிகளின் கொள்கை அதிக நெகிழ்ச்சியானதாக மாறியது. காலனியாதிக்க நிர்வாகம் நிலப்பிரபுத்துவப் பிற்போக்காளர்களுடன் நெருங்கிய முறையில் ஒத்துழைத்தது; காலனி ஆட்சியுடன் சம்பந்தப் பட்ட நிலப்பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள், சிற்றரசர்கள், வர்த்தகர்கள் ஆகிய மேல்மட்ட கோஷ்டிகளுக்கு அதிகமான பொருளாயத, அரசியல் ஆதரவைக் கொடுத்தது. பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கக் கூடிய சக்தி தோன்றி விட்டதைக்

காலனியாதிக்கவாதிகள் உணர்ந்து இப்படி எதிர் நடவடிக்கைகளைச் செய்தார்கள்.

## 4. பிரிட்டிஷ் நிதி மூலதனத்தின் இந்தியச் சுரண்டலின் தொடக்கம்

19ம் நூற்றுண்டின் நடுப் பகுதியில் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளுடைய இந்தியச் சுரண்டலில் புதிய கூறுகள் தோன்றின.

புதிய நிலைமைகளில் காலனியைச் சுரண்டுவதற்கு அடிப்படை பிரிட்டிஷ் மூலதன முதலீடுகளுக்குப் படிப்படியாக மாறியது. எனினும் பழைய காலகட்டங்களில் நடைபெற்ற கொள்ளையடிக்கின்ற பழைய வடிவங்கள் இன்னும் அப்படியே நீடித்தன. இந்தியா ஏற்கெனவே உலக முதலாளித்துவப் பொருளாதாரத்துக்குள் இழுக்கப் பட்டிருந்த படியால், தொழில்துறை வளர்ச்சிக்கு அவசியமான ஆரம்ப நிலைமைகள் தோன்றி விட்ட படியால் இந்தியாவைப் புதிய முறைகளில் சுரண்டுதல் சாத்தியமாக இருந்தது.

1850க்களில் நாட்டின் நிர்வாகம் மத்தியப் படுத்தப்பட்டிருந்தது, தந்தி அமைப்பு ஏற்பட்டிருந்தது, ரயில்வேக்களை அமைக்கின்ற பணி தொடங்கியிருந்தது, துறைமுகங்கள் கட்டப் பட்டன, பணவியல் முறை மேலும் ஒரேபடித் தாக்கப்பட்டது, வெளிநாட்டு வங்கிகள் தங்கள் நிலைகளை பலப்படுத்திக் கொண்டன. பிரிட்டிஷ் நிதி மூலதனம் நாட்டைச் சுரண்டுவதற்கு இவை அனைத்தும் அவசியமான முன்நிபந்தனைகளாக இருந்தன.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் காலனியாதிக்கச் சுரண்டலில் மூலதனத்தை ஏற்றுமதி செய்வது ஒரு முக்கியமான கூறாகும். நிதி மூலதனம் லாபங்களை அடைவதற்கு அந்நிய முதலீடுகள் அடிப்படையாக அமைந்தன. ஆனால் இந்தியாவைப் பொறுத்த மட்டில் தலைமை நாட்டிலிருந்து செய்யப்பட்ட மூலதன ஏற்றுமதி பிரிட்டிஷ் முதலீடுகளின் முக்கிய வடிவமாக இருக்கவில்லை. இந்தியாவில் காலனியாதிக்கவாதிகள் கொள்ளையடித்த பணத்தைக் கொண்டுதான் பெரும் பகுதி பிரிட்டிஷ் முதலீடுகள் செய்யப்பட்டன. பிரிட்டனிலிருந்து கொண்டுவரப்பட்ட பணம் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே இருந்தது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ரயில்வேக்களை அமைப்பதற்கும் குறைந்த எண்ணிக்கையில் சணல் மற்றும் பஞ்சாலைகளை நிர்மாணிப்பதற்கும் மட்டுமே பிரிட்டிஷ் முதலீடுகள் பயன்பட்டன. இந்தியாவில் பிரிட்டிஷ் முதலீடுகள் ஆரம்பத்திலிருந்தே தேசியக் கடன் என்று சொல்லப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு நாட்டைச் சுரண்டின.

தேசியக் கடனுக்கும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. இந்தியாவைப் பிடிக்கின்ற பொழுது பிரிட்டனுக்கு ஏற்பட்ட செலவுகள், காலனியாதிக்க நிர்வாகத்தின் செலவுகள் மற்றும் இந்தியாவுக்குச் சம்பந்தமில்லாத இதர செலவுகள் (உதாரணமாக, துருக்கி சுல்தானுக்கு லண்டனில் வரவேற்பளித்த செலவுகள், சீனா, சோபியா, அராபியாவில் பிரிட்டிஷ் தூதரகச் செலவுகள் மற்றும்

இதரவை) ஆகியவை இதில் சேர்க்கப்பட்டன. இத்தகைய செலவுகள் உற்பத்தித் திறன் உள்ளவையல்ல, இவை முற்றிலும் காலனியாதிக்கக் கொள்ளேயே என்பவை விவாதத்துக்கு அப்பாற்பட்டவையாகும். இத்தகைய மூலதன ''ஏற்றுமதி'' இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த உதவவில்லை, அத்தகைய வளர்ச்சிக்கு மாபெரும் தடையாக மட்டுமே இருந்தது. இதற்குப் பிந்திய காலத்தில்தான் தேசியக் கடனில் உற்பத்தித் திறனுள்ள கூறுகள் தோன்றத் தொடங்கின, உதாரணமாக, ரயில் பாதைகளை அமைப்பதற்கு ஏற்பட்ட செலவுகள். இந்தச் செலவுகள் முழுவதும் இந்தியாவின் மீது சுமத்தப்பட்டன. 1792இல் தேசியக் கடன் 7 மில்லியன் பவுண்டுக்கும் அதிகமாக இருந்தது. இது 1829ம் வருடத்துக்குள் 30 மில்லியன் பவுண்டுகளாகப் பெருகிவிட்டது; 1890—1891ம் வருடங்களில் 104 மில்லியன் பவுண்டுகளுக்கும் அதிகமாகவும், 20ம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் 133 மில்லியன் பவுண்டுகளாகவும் அதிகரித்தது.* அதற்குப் பிறகு அது மிக வேகமாக அதிகரித்தது. உத்தேசமான மதிப்பீடுகளின்படி இந்தியாவில் மொத்த பிரிட்டிஷ் முதலீடுகள் 1909—1910ம் வருடங்களில் 365 மில்லியன் பவுண்டுகளாக இருந்தன. முதலாவது உலக யுத்தத்தின் முற்பொழுதில் 450—475 மில்லியன் பவுண்டுகளை எட்டின.**

---

* Romesh Dutt, *The Economic History of India*, V. I, pp. 292-293; V. II, p. 452.

** என். டி. குரோட்கோ, ''இந்தியாவின்

ஆகவே இந்தியாவின் அந்நியக் கடன் முக்கியமாக அந்நிய முதலீடுகளே. எனவே அது மூலதன ஏற்றுமதியில் ஒரு வடிவமாகும். மூலதனம் மிகவும் அதிகமான சுரண்டல் முறையில் ஏற்றுமதி செய்யப்பட்டது. நாட்டில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியைத் தூண்டக் கூடிய முறையில் அது இருக்கவில்லை. அதே சமயத்தில் ஒப்பீட்டளவில் ஆரம்ப காலத்தில் தேசியக் கடன் வடிவத்தில் பிரிட்டனுடைய மூலதன முதலீடுகளது பிரத்யேகமான கூறுகள் அந்நிய முதலீடுகளை 19ம் நூற்றுண்டின் முதற்பாதியிலேயே காலனிமுறைச் சுரண்டலின் முக்கியமான அம்சமாக ஆக்கியிருந்தன. இந்தியாவைச் சுரண்டியதனுல் கிடைத்த மொத்த லாபத்தில் பிரிட்டிஷ் தொழில்துறை முதலாளிகளின் பங்கு படிப்படியாகக் குறையத் தொடங்கியது. 1890இல் பிரிட்டனுடைய ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளின் மதிப்பு (அரிய உலோகங்களின் இறக்குமதியைச் சேர்க்காமல்) 104 மில்லியன் பவுண்டுகளாக அல்லது இந்தியாவின் அந்நியக் கடனுக்குச் சமமாக இருந்தது. ஆனுல் இது இந்தியாவில் பிரிட்டனுடைய மொத்த முதலீட்டுத் தொகைக்குக் குறைவானதே.

தொழில்துறை முதலாளி வர்க்கத்தின் லாபம் 10 மில்லியன் பவுண்டுக்கும் அதிகமாக இருந்

---

தேசியக் கடனைப் பற்றிய வரலாற்றிலிருந்து'', **கீழையியல் ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானப் பதிவேடுகளிலிருந்து,** மாஸ்கோ, தொகுதி XII, பக்கம் 271 (ருஷ்ய மொழியில்).

தது. இதே காலகட்டத்தில் தேசியக் கடனுக்கு வட்டி *33.5* மில்லியன் பவுண்டுகளாக இருந்தது.* *1913—1914*ம் வருடங்களில் பிரிட்டிஷ் தொழில்துறை மற்றும் வர்த்தக முதலாளி வர்க்கத்துக்குக் கிடைத்த மொத்த லாபம் *28* மில்லியன் பவுண்டுகளாக அதிகரித்தது; அதே நேரத்தில் வட்டியில் கிடைத்த வருமானம் *50* மில்லியன் பவுண்டுகளாகும்.**

*19*ம் நூற்றுண்டின் கடைசியில் பிரிட்டனுடைய மொத்த அந்நிய வர்த்தகத்தின் மதிப்பை முதலீடு செய்த மூலதனத்திலிருந்து கிடைத்த வட்டியுடன் ஒப்பிட்டுப் பார்த்த லெனின், **ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம்** என்ற புத்தகத்தில் பின்வருமாறு எழுதினுர்: ''பண மூலதன சுகஜீவிகளுடைய வருமானம், உலகின் மிகப் பெரிய 'வாணிப' நாட்டுக்கு அயல்நாட்டு வாணிபத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகமாகும்! இதுவேதான் ஏகாதிபத்தியத்தின்,

---

* பின்வரும் புத்தகங்களில் தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடப்பட்டது: Romesh Dutt, *The Economic History of India*, V. II, p. 397; N. D. Grodko, India's Credit and Monetary System, Moscow, 1956, p. 114 (ருஷ்ய மொழியில்).

** R. Palme Dutt, *India Today*, London, 1940, pp. 144-145. *10* ரூபாய்கள்=*12* ஷில்லிங்குகள் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்தியப் புல்லுருவித்தனத்தின் சாராம்சம்.''*

19ம் நூற்றுண்டின் இரண்டாம் பாதியில் பிரதானமாக பிரிட்டிஷ் நிதி மூலதனத்தின் சுரண்டலுக்கு இந்தியா ஏற்கெனவே இலக்காகியிருந்தது. அளவு ரீதியாக தலைமை நாட்டுக்குச் சாதகமாக இந்தியாவின் தேசிய வருமானத்திலிருந்து நேரடியாக எடுக்கப்படுகின்ற — எந்த வடிவத்திலும் திருப்பிக் கொடுக்கப்படாத — தொகையை அதிகப்படுத்துவதில் இது வெளிப்பட்டது. 19ம் நூற்றுண்டின் பிற்பாதியிலிருந்து இந்தத் தொகையில் பெரும்பகுதியை நிதி மூலதனம் ஒதுக்கீடு செய்து கொண்டது. இந்தத் தொகையில் கண்டிப்பாகக் கொடுக்கப்பட வேண்டிய என்று சொல்லப்பட்ட இலாகா செலவுகள் (Home charges)— இவற்றில் கடன்களுக்குத் தரப்பட வேண்டிய வட்டியும் பிரிட்டிஷ் நிர்வாகத்துறை அதிகாரிகளுக்குத் தரப்பட்ட ஊதியங்களும் ஓய்வூதியங்களும் இங்கிலாந்திலிருக்கும் இந்தியச் செயலாளரது அலுவலகத்தின் மொத்தச் செலவும் அடங்கும்—சேர்க்கப்பட்டிருந்தன. 20ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இந்தச் செலவுகள் 16 மில்லியன் பவுண்டுக்குக் குறையாமலிருந்தன. இத்தொகையின் மற்ெருரு பகுதி மூலதன ஏற்றுமதியின் வளர்ச்சியுடன் சேர்ந்து அதிகரித்தது; பிரிட்டிஷ் மூலதன முதலீடுகளுக்கு லாப ஈவுகள், அந்நிய வர்த்தகம், கப்பல் தொழில், காடுகள், நிலம், இதர

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 190.

வற்றிலிருந்து கிடைத்த லாபங்கள் ஆகியவை இதில் அடங்கியிருந்தன. மிகவும் உத்தேச மான — ஒருவேளை குறைவான— மதிப்பீடுகளின் படி முதல் உலக யுத்தத்தின் முற்பொழுதில் இந்தியாவின் மொத்த வெளி வழங்கீடுகள் 50 மில்லியன் பவுண்டுகளுக்குச் சமமாக இருந்தன; இவை 1920 மற்றும் 1930க்களில் 150 மில்லியன் களாக அதிகரித்தன; இரண்டாம் உலக யுத்தத் தின் முற்பொழுதில் இவை 200 மில்லியன்களை எட்டின என்று சோவியத் பொருளியலாளர்கள் மதிப்பிட்டிருக்கின்றனர்.*

அந்நிய வர்த்தகம் இந்தியாவின் தேசியச் செல்வத்தைக் கொள்ளையடிக்கின்ற முக்கிய கருவியாயிற்று. தொழில்துறை முதலாளி வர்க்கம் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் கூட, பிரிட்டிஷ் சரக்குகள் பெரிய அளவில் இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் பிரிட்டனேடு நடை பெற்ற வர்த்தகத்தில் இந்தியாவுக்கு உபரி இருந் தது. 1830க்களில் அது 2 மில்லியன் பவுண்டு களாக இருந்தது. இந்த வர்த்தக உபரி நாட்டின் தேசியச் செல்வம் வெளியே போவதைப் பிரதி பலித்தது.

நிதி மூலதனம் இந்தியாவில் ஆதிக்கத்துக்கு வந்த பொழுது வர்த்தக உபரி அந்நிய நாணயத் தின் முக்கியமான தோற்றுவாயாக இருந்தது. அது முழுவதுமே காலனியாதிக்கத்தின் வரிகளைக்

---

* எஸ். எம். மேல்மன், **இந்தியப் பொருளா தாரத்தில் அந்நிய ஏகபோக மூலதனம்**, மாஸ்கோ, 1959, பக்கம் 43 (ருஷ்ய மொழியில்).

கட்ட உபயோகிக்கப்பட்டது. 19ம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலிருந்து வர்த்தக உபரி தீவிரமாக அதிகரித்தது. 1855இல் அது 5.4 மில்லியன் பவுண்டுகளாக இருந்தது; முதலாவது உலக யுத்தத்தின் முற்பொழுதில் 22.5 மில்லியன் பவுண்டுகளை எட்டியது.* இதற்குப் பின்வந்த வருடங்களில் சுரண்டலின் அளவும் இந்தியாவிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்ட செல்வத்தின் அளவும் கணிசமாக அதிகரித்தன.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் இந்தியாவைச் சுரண்டியதின்இரத்தத்தை உறிஞ்சுகின்ற,கொள்ளையடிக்கின்ற தன்மை நேரடியான கொள்ளையின் பல வடிவங்களை வைத்துக் கொண்டிருந்தாலும், சில புதிய கூறுகளையும் அடைந்தது. வர்த்தகக் கொள்ளை நாட்டின் ஏழ்மைக்கும் அழிவுக்கும் வழி வகுத்தது, சரக்குகளின் ஏற்றுமதி இந்தியாவின் பொருளாதார அமைப்பின் அடிப்படைகளை அரித்தழித்தது, மூலதனத்தின் ஏற்றுமதி — அதன் கடுஞ்சுரண்டல் தன்மை ஒரு புறம் இருந்தாலும் —நாட்டின் உள்நாட்டுச் செல்வாதாரங்களை ஏதாவதொரு வடிவத்தில் சுரண்டுவதைக் குறித்தது. ஆகவே மூலதனத்தின் ஏற்றுமதி உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுடன் ஏதாவதொரு அளவுக்கு இணைக்கப்பட்டிருந்தது. இந்த அம்சத்தை கணக்கி

* Romesh Dutt, *The Economic History of India*, V. II, p. 119; Vera Anstey, *The Economic Development of India*, London, 1929, p. 330. 15 ரூபாய்கள் = 1 பவுண்டு ஸ்டர்லிங் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டிருக்கிறது.

லெடுத்துக் கொள்ளும் பொழுது மூலதன ஏற்றுமதியின் தாக்கத்தில் உற்பத்திச் சக்திகள் மெதுவாக அல்லது விரைவாக வளர்ச்சி அடைந்தனவா என்பதை நிர்ணயிப்பது அவ்வளவு முக்கியமல்ல, அவை எந்தத் திசையில் வளர்ந்தன என்பதை நிர்ணயிப்பதே முக்கியமாகும்.

பிரிட்டிஷ் மூலதன ஏற்றுமதி ஏகாதிபத்தியத் தலைமை நாட்டின் தேவைகளுக்கு ஏற்றபடி தன்னுடைய பொருளாதாரத்தைத் தகவமைத்துக் கொள்கின்ற பாதையில் இந்தியாவை உந்தித் தள்ளியது. அப்பொழுதுதான் இந்தியாவின் பொருளாதாரம் அதன் காலனிமுறைக் கட்டமைப்பையும் பிரத்யேகமான கூறுகளையும்—பிரிட்டனுடைய விவசாய மற்றும் மூலப்பொருள் ஒட்டுப் பகுதி—நிர்ணயித்த ஒரு பக்க, மோசமாக வடிவமைக்கப்பட்ட பாணியை அடைந்தது. இந்தியாவின் இயற்கைச் செல்வாதாரங்களை வளர்த்து அவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டிய அவசியம் மூலதன ஏற்றுமதியின் துறையை முன் நிர்ணயம் செய்தது. முதலாவதாகவும் முதன்மையாகவும் அது ரயில் பாதைகள் அமைப்பதற்குப் பயன்பட்டது.

தங்களுடைய பாக்டரிகளுக்கு மூலப்பொருள்களைக் கொடுப்பதற்கு அவை காலனியாதிக்கவாதிகளுக்கு அவசியமாக இருந்தன. 1840க்களிலேயே காலனியாதிக்க அதிகாரிகள் இந்தியாவில் ரயில் பாதைகளை அமைப்பதற்காகத் தனியார் பிரிட்டிஷ் கம்பெனிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினர்கள். இந்தியாவின் முதல் ரயில் பாதை, பம்பாயிலிருந்து தாணுவுக்குச் செல்லும்

20 மைல் ரயில் பாதை 1853இல் செயற்படுத்தப் பட்டது. 20ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் 24,000 மைல்கள் ரயில் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன; முதல் உலக யுத்தத்தின் முற்பொழுதில் 34,600 மைல்கள் ரயில் பாதை கள் அமைக்கப்பட்டிருந்தன.*

இந்திய ரயில் பாதைகள் காலனியாதிக்க முறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்டன; அதாவது நாட்டு நலன்கள் புறக்கணிக்கப்பட்டன; ஆனுல் மக்களுடைய செலவில் அவை அமைக்கப்பட்டன. ரயில் பாதைகளை அமைத்த தனியார் பிரிட்டிஷ் கம்பெனிகளுடைய மூலதனத்தில் — அல்லது இன்னும் துல்லியமாகக் கூற வேண்டுமென்ருல் செலவழிக்கப்பட்ட மொத்த மூலதனத்தில்—4-5 சதவிகித லாப ஈவு கொடுக்கப்படும் என்று காலனியாதிக்க நிர்வாகம் உத்தரவாதமளித்தது. இப்படிப்பட்ட முறையின் கீழ் ஒரு கம்பெனி எவ்வளவு அதிகமாகச் செலவிடுகிறதோ அந்த அளவுக்கு அதன் மூலதனத்துக்கு அதிகமான லாபம் கிடைக்கும். எனவே பணம் எதற்காகச் செலவிடப்படுகிறது என்பதைப் பற்றி கம்பெனிகள் கவலைப்படவில்லை. நிர்மாண வேலைக்கு எவ்வளவு அதிகமாகச் செலவிடப்படுகிறதோ அந்த அளவுக்கு அதிகமான லாப ஈவுகள் இந்திய மக்களின் வரிப் பணத்திலிருந்து கொடுக்கப்படும். ரயில் பாதை நிர்மாணச் செலவுகள் இந்தியாவின் மீது பெருஞ்சுமையாக விழுந்தன; இந்தியா பிரிட்டனுக்குக் கட்டிய வரியில் இது கணிசமான பங்

* Vera Anstey, *The Economic Development of India*, p. 524.

காக இருந்தது. ரயில்வேக் கடனுக்காக இந்தியா வருடந்தோறும் சுமார் 10 மில்லியன் பவுண்டு களை பிரிட்டனுக்கு அனுப்பியது.

எனினும் காலனியாதிக்கவாதிகளின் விருப் பங்கள் எப்படியிருந்தாலும், ரயில் பாதைகள் போடப்பட்டது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் மீது பெரிய தாக்கத்தைச் செலுத்தி யது. அது நாட்டில் புதிய பொருளாதாரப் பிணைப்புகளை நிறுவ உதவியது, பண்ட-பண உறவு கள் அதிகமாக வளர்ச்சியடைவதைத் தூண்டியது, மேலும் இந்தியாவின் நவீன தொழில்துறைக்கு முன்னோடியாக இருந்தது.

''ரயில்வே இயக்கத்தின் நேரடியான மற்றும் நடப்புத் தேவைகளை நிறைவு செய்ய அவசிய மான அந்தத் தொழில்துறை நடைமுறைகளை எல்லாம் கொண்டுவராமல், ஒரு பரந்து விரிந்த நாட்டில் ரயில்வேக்களின் ஒரு வலைப்பின்னல் அமைப்பினைப் பராமரிக்க முடியாது. இவற்றில் இருந்து ரயில்வேக்களுடன் நேரடியான தொடர்பு இல்லாத தொழில்துறைப் பிரிவுகளுக்கு இயந்திர சாதனங்களின் பயன்பாடு அதிகரிக்க வேண்டும்''* என்று கார்ல் மார்க்ஸ் இந்தியாவில் ரயில் பாதை களை அமைப்பதைப் பற்றி எழுதினர்.

ரயில் பாதைகள் அமைக்கப்பட்டதும் ரயில் கள் முறையாக இயங்குவதற்கு அவசியமான ஏராளமான தொழில்கள் வளர்ச்சி அடைந்தன.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல் **கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 3, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக் கம் 211.

1870க்களில் பிரிட்டிஷ் கம்பெனிகள் வங்காளத்திலும் பீகாரிலும் நிலக்கரியை வெட்டியெடுக்கத் தொடங்கின. நிலக்கரி உற்பத்தி வருடத்துக்கு 5,00,000 டன்களுக்கு மேல் போகவில்லை. 19ம் நூற்றுண்டின் கடைசியில் உலோகத் தொழில் உருவாகத் தொடங்கியது. ''பெங்கால் அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி'' என்ற பெயரில் ஒரு பிரிட்டிஷ் கம்பெனி நிறுவப்பட்டது. அது வருடந்தோறும் 35,000 டன்களையே உற்பத்தி செய்தது. 20ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சென்னை மற்றும் மத்திய மாகாணத்தில் மாங்கனிஸ் தாது வெட்டியெடுக்கப்பட்டது (உற்பத்தி முழுவதுமே ஏற்றுமதி செய்யப்பட்டது).

ஆனுல் கனரகத் தொழில்துறையின் தனிப்பிரிவுகளின் வளர்ச்சி இந்தியப் பொருளாதாரத்தின் போக்கை நிர்ணயிக்கவில்லை. நிலக்கரி மற்றும் எஃகு உற்பத்தி நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. காலனியாதிக்கவாதிகள் இந்தியாவைச் சுரண்டும் செலவைக் குறைக்க விரும்பியபடியால் அது ஏற்பட்டது. நிலக்கரி மற்றும் எஃகு உற்பத்தியின் அளவு அது நாட்டுப் பொருளாதாரத்தில் வகித்த மிகக் குறைவான பாத்திரத்தைப் பிரதிபலித்தது. இந்தக் காலகட்டத்திலும் அதன் பின்னரும் மென்னயத் தொழில்துறையின் தனிப்பிரிவுகளின் வளர்ச்சி இதைக் காட்டிலும் அதிக முக்கியமானதாகும்; தேவையான மூலப்பொருள்களையும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களையும் கொண்டிருந்த நெசவுத் தொழில் வளர்ச்சி இன்னும் விசேஷமானதாகும்.

இந்தியாவின் நெசவுத் தொழில் பிரதான மாக பருத்தித்துணி மற்றும் சணல் பொருள் களைத் தயாரித்தது.

ஆரம்பத்திலிருந்து நெசவுத் தொழில் மரபு வழிப்பட்ட இந்தியத் தொழிலாக வளர்ச்சி யடைந்தது. ''பம்பாய் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கம்பெனி'' என்ற முதல் இந்தியக் கம்பெனி 1851இல் நிறுவப்பட்டது. பம்பாய்க்குப் பக்கத் தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் மில்கள் 1854இல் செயல்படத் தொடங்கின. அடுத்த இரண்டு பத்தாண்டுகளும் பருத்தி மில்களின் வளர்ச்சிக்கு பாதகமாக இருந்தன. அமெரிக்காவில் உள் நாட்டுப் போர் நடைபெற்ற காரணத்தால் ஸ்தலச் சந்தையிலும் உலகச் சந்தைகளிலும் கச்சாப்பருத்தியின் விலை அதிகரித்தது.

1870க்களுக்குப் பிறகு பருத்தி மில்களின் வேகமான வளர்ச்சி தொடங்கியது. 1870இல் இந்தியாவில் இருபது மில்கள் மட்டுமே இருந் தன; பத்து வருடங்களுக்குப் பிறகு அவற்றின் எண்ணிக்கை சுமார் மூன்று மடங்காகப் பெருகியது. 1890க்களில் 150க்கும் அதிகமான மில்கள் ஏற்பட்டிருந்தன. இந்தியா தன்னுடைய உற்பத்தியில் ஒரு பகுதியை (பெரும்பாலும் நூல்) சீனவுக்கும் ஜப்பானுக்கும் ஏற்றுமதி செய்யத் தொடங்கியது.

இதன் பிறகு, 1890க்களின் நடுப்பகுதி யிலிருந்து முதலாவது உலக யுத்தத்தின் முற் பொழுது வரை இந்தியத் தொழில்துறையின் வளர்ச்சி வேகம் குறைந்தது. காலனியாதிக்க நிலைமைகளின் வரையறைகள் தொழில் வளர்ச்

சியைத் தடுத்தன; குறுகிய உள்நாட்டுச் சந்தை முக்கியமான தடையாக இருந்தது.

இந்தியாவின் நெசவுத் தொழிலின் ஆரம்பக் கட்டத்தில் பெரும் பகுதி மில்கள் நூற்புத் தொழிலேயே செய்தது அத்தொழிலின் தனித்தன்மையான கூறுகும்; இது காலனியாதிக்க நிலைமைகளில் ஏற்படுகின்ற வளர்ச்சியின் குறியடையாளமாகும். இந்திய மில்கள் கட்டை ரக நூல்களைத் தயாரித்தன. இவற்றில் ஒரு பகுதி சீனுவுக்கும் கிழக்கேயுள்ள மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் தேவைகளுக்கு இன்னொரு பகுதி உபயோகமாயிற்று. இவர்கள் நகரத்திலும் கிராமத்திலும் வசித்த மிகவும் ஏழ்மையான மக்கள் வாங்கக் கூடிய முரட்டுத் துணிகளைத் தயாரித்தார்கள்; அதாவது உள்நாட்டுச் சந்தையில் மிகக் குறைவான வாங்கும் சக்தியைக் கொண்டவர்களுக்காகத் தயாரித்தார்கள். உயர்ந்த ரகத் துணி லங்காஷயரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

கட்டை ரக நூலை அல்லது முரட்டு ரகத் துணியைத் தயாரித்த இந்திய நெசவுத் தொழில் பிரிட்டிஷ் துணிகளுடன் எவ்விதத்திலும் போட்டி போட முடியாது.

நெசவுத் தொழிலில் மற்றெரு முக்கியமான பிரிவாகிய சணல் தொழில் பிரிட்டிஷ் மூலதனத்தினுல் நிறுவப்பட்டது. 19ம் நூற்ருண்டின் நடுப் பகுதி வரை சணல் பொருள்கள் உற்பத்தி வங்காள நெசவாளியின் ஏகபோகமாக இருந்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் நிறுவப்பட்டவுடன் கச்சாச் சணலின் பெரும்பகுதி பிரிட்டனிலுள்ள

டண்டீ என்ற நகரத்துக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது. இது ஸ்தலச் சணல் நெசவுக் கைத் தொழிலை பாதித்தது. ஆனால் 19ம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலிருந்து உலகச் சந்தையில் சணல் தயாரிப்புகளின் தேவை தீவிரமாக அதிகரித்தது. ஏனென்றால் கிரீமியப் போர் நடைபெற்ற தால் சணலுக்கு முக்கியமான போட்டியாக இருந்த ருஷ்ய ஹெம்ப்பின் ஏற்றுமதி நிறுத்தப் பட்டிருந்தது. இது இந்தியாவில் சணல் மில்களைக் கட்டுவதற்கு ஊக்கமளித்தது. 1854இல் முதல் சணல் மில் கட்டப்பட்டது; 19ம் நூற்றுண்டின் கடைசிக்குள் இந்தியாவில் — குறிப்பாக கல்கத் தாவை ஒட்டிய பகுதிகளில்—29 மில்கள் ஏற்பட் டிருந்தன. 1913—1914ம் வருடங்களில் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காகப் பெருகியது; அவற்றில் 2,00,000க்கும் அதிகமான தொழிலாளர் கள் வேலை செய்தார்கள். இந்தத் தொழிலில் தொடக்கத்திலிருந்தே மூலதனம் மற்றும் தொழி லாளர்களின் மிகவும் அதிகமான குவிப்பு குறியடையாளமாக இருந்தது.

1911ம் வருடத்திய மக்கள் தொகைக் கணக் கின்படி பாக்டரிகள் அல்லது மில்கள் என்று இந் தியப் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்ற 7,000க்கும் அதிகமான நிறுவனங்கள் இந்தியாவில் இருந்தன. ஆனால் பெரும்பாலும் அவற்றைப் பட்டறைகள் என்றுதான் கூற வேண்டும். ஏனென்றால் பிரிட் டிஷ்-இந்தியப் புள்ளிவிவர இலாகா 20க்கும் அதிக மான தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருக் கின்ற நிறுவனத்தை—அங்கே இயந்திரங்கள் உபயோகிக்கப்படா விட்டாலும் கூட—பாக்டரி என்று வகை பிரித்தது.

அந்த சமயத்தில் இந்தியாவில் முதலாளித்துவத் தொழில்துறை வளர்ச்சியின் மிக முக்கியமான விளைவு தொழிலாளி வர்க்கத்தின் தோற்றமே. இப்புதிய சமூக, அரசியல் சக்தி 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இந்திய வரலாற்றில் மென்மேலும் அதிகரிக்கின்ற பாத்திரத்தை வகிப்பதற்குத் தொடங்கியது.

1911இல் தோட்டத் தொழில்களின் கூலிகள் உட்பட நாட்டிலுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 மில்லியனுக்கு அதிகமாக இருந்தது. ஆனால் இவர்களில் பெரும்பகுதியினர் பாக்டரிகளில் வேலை செய்யவில்லை, சிறிய அளவான பட்டறைகளில்தான் வேலை செய்தார்கள்.

இந்திய மக்கள் தொகையின் கட்டமைப்பும் முதலாளித்துவத் தொழில்துறை வளர்ச்சியின் குறியடையாளமாக இருந்தது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நகரங்களிலிருந்த மக்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் சுமார் 10 சதவிகிதமாக இருந்தது. அதே சமயத்தில் அமெரிக்காவில் இது 4 சதவிகிதத்துக்கும் குறைவாகவும், பிரான்சில் அதே அளவிலும் இருந்தது என்பதைக் கருத்தில் கொண்டால் இது ஓரளவுக்கு அதிகமே. எனினும் அடுத்த 40 வருடங்களில் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் நகர மக்களின் சதவிகிதம் அநேகமாக மாறவில்லை.* நகர மக்கள் தொகையின் தனிமுதலான அதிகரிப்பு அதற்கே உரிய தனியான அம்

* D. R. Gadgil, *The Industrial Evolution of India in Recent Times*, Madras, 1924, p. 159.

சத்தைக் கொண்டிருந்தது. நாட்டிலிருந்து மூலப் பொருள்களும் உணவும் ஏற்றுமதி செய்யப்பட்ட துறைமுக நகரங்களில்தான் இந்த அதிகரிப்பின் பெரும்பகுதி ஏற்பட்டிருந்தது. ஆகவே மக்கள் தொகையின் இந்த அதிகரிப்பு தொழில்துறையின் வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டதல்ல. நாட்டைச் சுரண்டுவது தீவிரமாக்கப்பட்டதிலிருந்து அது தோன்றியது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை ஆராய்ந்திருக்கின்ற சிறப்பு மிக்க பொருளியலாளரான டி.ஆர்.காட்கில்,இந்தியாவின் நகர வளர்ச்சியில் ''தொழில்துறைக் காரணியைக் காட்டிலும் வர்த்தகக் காரணி மிகவும் அதிகமாக இருந்தது''* என்று குறிப்பிட்டுள்ளார். 20ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தொழில்துறைக் கேந்திரங்கள் என்று சொல்லப்படக் கூடியவை இல்லை என்பது உண்மையே. இந்தியத் தொழில்துறை குணும்சத்தில் பிரத்யேகமான காலனித் தன்மையைக் கொண்டிருந்தது. மென்னயத் தொழிலின், முக்கியமாக பருத்தி மற்றும் சணல் தொழிலின் மேலாதிக்கம், மிகவும் கீழான தொழில்நுட்ப மட்டம், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களையே முற்றிலும் சார்ந்திருத்தல் ஆகியன இக் காலனித் தன்மையின் சில கூறுகளாகும். முதலாவது உலக யுத்தத்தின் முற்பொழுதில்தான் உலோகத் தொழில் தோன்றிக்கொண்டிருந்தது, என்ஜினியரிங் அல்லது வேறு கனரகத் தொழில் கிடையாது.

19ம் நூற்றுண்டின் பிற்பாதியிலிருந்து இந்

* *Ibid.*, p. 150.

தியாவில் வளர்ச்சியடையத் தொடங்கிய முதலாளித்துவ உறவுகள் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளேயும் மற்றும் பூகோள ரீதியில் எல்லாப் பிரதேசங்களேயும் ஒரே விதமாக பாதிக்கவில்லே. பொது வர்த்தகப் புழக்கத்தில் தொலேவாக இருந்த பிரதேசங்கள் மிகக் குறைவான அளவில் மட்டுமே சம்பந்தப்பட்டிருந்தன; புதிய நிலேமைகள் அப்பிரதேசங்களே மறைமுகமாக மட்டுமே பாதித்தன. இந்தக் காலகட்டத்தில் தான் இந்தியப் பொருளாதாரத்தின் முக்கியமான துறையாகிய விவசாயத்தின் மிக மோசமான பின்தங்கிய நிலேக்கு அடிப்படை அமைக்கப்பட்டது.

தொழில்துறை மெதுவாகவும் ஏற்றத்தாழ்வாகவும் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த காலத்தில் விவசாயத்தில் முதலாளித்துவ உறவுகள் வளர்ச்சி அடைந்தன; இது தவிர்க்க முடியாத விதத்தில் முதலாளித்துவத்துக்கு முந்திய காலக் கூறுகளேப் பாதுகாப்பதற்கு வழி வகுத்தது. நிலத்தில் நிலப்பிரபுத்துவ நிலவுடைமை மேலாதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த பொழுது, ஓரளவு பிழைப்பிற்கான சிறு பண்ணேகளேக் கொண்ட விவசாயிகள் நிலப்பிரபுத்துவ வாரம் மற்றும் வரிகளால் நசுக்கப்பட்டு வந்த சமயத்தில் கிராமப்புறங்களில் பண்ட-பண உறவுகளும் முதலாளித்துவமும் வளர்ச்சியடைய நேர்ந்தது. சுதந்திரமான நாடுகளில் மூலதனம் தொழில்துறை வளர்ச்சியில் முதலீடு செய்யப்பட்டு வந்த நேரத்தில் இந்தியாவில் மூலதனத்தில் பெரும் பகுதி நிலங்களே வாங்குவதற்கு உபயோகிக்கப்பட்டது; ஏனென்றல் நிலப்பிரபுத்துவ

வாரத்தின் வடிவத்தில் நிலங்கள் அதிக வருமானத்தைக் கொடுத்தன. இத்தகைய சூழ்நிலையில் விவசாயிகள் சொந்தமாக வைத்திருந்த நிலம் தொடர்ச்சியாகக் குறைந்து கொண்டிருந்தது, ஆனால் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்கள் சொந்தமாக வைத்திருந்த நிலம் அதிகரித்துக் கொண்டிருந்தது. துண்டு நிலத்தை வைத்திருக்கின்ற அல்லது நிலமே இல்லாத விவசாயிகள் இருப்பது இந்திய கிராமங்களின் குணம்சமாயிற்று.

18ம் நூற்றுண்டின் கடைசியில் மற்றும் 19ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் காலனியாதிக்க வெற்றிகள் மற்றும் பிரிட்டிஷ் நிலச் சீர்திருத்தங்களின் காலகட்டத்தில் இந்திய விவசாயிகள் சிறிதும் இரக்கமில்லாத வகையில் கொள்ளையடிக்கப்பட்டார்கள்; அவர்கள் தமது ''பழைய உலகத்தை'' இழந்தார்கள். 19ம் நூற்றுண்டின் பிற்பாதியில் அவர்கள் உலகச் சந்தையின் தாக்கத்தையும் மற்றும் மூலப்பொருள்கள், உணவுப் பொருள்களைப் பொறுத்த மட்டில் அதன் பிரம்மாண்டமான தேவைகளையும் உணரத் தொடங்கினர்கள். கிராமங்களில் நிலப்பிரபுத்துவ வாரத்தின் தன்மை மாற்றமடைவதிலும் வர்த்தக மற்றும் கடன் மூலதன நடவடிக்கைகளின் அளவு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிப்பதிலும் ஏகாதிபத்தியச் சுரண்டலின் முதல்விளைவுகள் உணரப்பட்டன. பிரிட்டிஷ் ஏகபோகக் கம்பெனிகள் மலிவான மூலப்பொருள்களில் அக்கறை கொண்டிருந்தன. கோடிக்கணக்கான விவசாயிகளைச் சுரண்டிய நிலக்கிழார்களும் லேவாதேவிக்காரர்களும் இவற்றை அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இதன்

விளைவாக வாரம் நிலப்பிரபுத்துவச் சுரண்டலின் வடிவமாக மட்டுமல்லாமல் ஏகாதிபத்தியச் சுரண் டலின் வடிவமாகவும் மாறியது. வாரத்துக்காகக் கொடுக்கப்பட்ட விளைபொருளில் நிலப்பிரபுவுக்கு அக்கறை இல்லை, அதன் பரிவர்த்தனை மதிப்பில் மட்டுமே அவர் அக்கறை கொண்டிருந்தார். அதன் விளைவாக கிராமங்களில் உபரி உழைப்புத் தேவை எல்லையற்ற அளவுக்கு அதிகரித்தது, வாரம் மிகவும் அதிகப்படுத்தப்பட்டது.

நிலப்பிரபுத்துவ நிலக்கிழாரின் சுரண்டல் வர்த்தக,லேவாதேவிக்காரருடைய சுரண்டலுடன் மென்மேலும் அதிகமாகப் பிணைந்துவிட்டது. 19ம் நூற்றுண்டின் கடைசியில் லேவாதேவிக்காரர் களிடம் விவசாயிகளின் கடன் 3,000 மில்லியன் ரூபாய்கள் அளவுக்கு உயர்ந்தது. லேவாதேவிக் காரர்களும் வர்த்தகர்களும் ஏகாதிபத்திய ஏக போகங்களுடன் (குறிப்பாக வங்கிகளுடன்) நெருக் கமாகத் தொடர்பு வைத்திருந்தார்கள். அவர் கள் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலைகளுக்கு வாங்கினர்கள் அல்லது கடன் பாக்கிகளுக்காக அவற்றைப் பறிமுதல் செய்தார்கள்; நாட்டிலிருந்து மூலப்பொருள்களை யும் உணவுப் பொருள்களையும் ஏற்றுமதி செய் தார்கள்.

விவசாயிகளைச் சுரண்டுவதிலும் இந்தியாவை பிரிட்டனுடைய மூலப்பொருள் ஒட்டுப் பகுதி யாக மாற்றுவதிலும் நில வரியும் முக்கியமான பங்கு வகித்தது. இந்தியாவை மூலப்பொருள் களை அளித்துக் கொண்டிருக்கும் நாடாக மாற்று வதில் வரி முறையையும் காலனியாதிக்கவாதிகள்

உபயோகித்துக் கொண்டார்கள். ஏகாதிபத்திய வாதிகள் பல்வேறு வருமான நடவடிக்கைகளை உபயோகித்து விவசாயிகளை மூலப்பொருள்களையும் உணவுப் பொருள்களையும் (சணல், பருத்தி, அவுரி, கோதுமை இதரவை) பிரிட்டனின் தொழில் துறைக்கும் அதன் நகரங்களுக்கும் அவசியமான அளவுகளில் உற்பத்தி செய்யும்படி நிர்ப்பந்தம் செய்தார்கள்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பணப்பயிர் விவசாயம் மற்றும் விற்பனைக்காகவே நடைபெற்ற வேளாண்மை வளர்ச்சியடைந்தது. அதற்கு விவசாய மூலப்பொருள் ஒட்டுப் பகுதியாக இந்தியா சுரண்டப்பட்டதன் விளைவு முக்கியமான காரணமே தவிர கிராமங்களில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி காரணமல்ல. இந்தியாவில் 1880க்களிலும் 1890க்களிலும் குறிப்பிட்ட பயிர்களை சிறப்பாக விவசாயம் செய்கின்ற பகுதிகள் தோன்றத் தொடங்கின. குஜராத், பேரார், சூரத் மற்றும் சில பிரதேசங்கள் பருத்தியை சிறப்பாக விவசாயம் செய்தன; வட மேற்குப் பகுதி (பஞ்சாப்) படிப்படியாக கோதுமை ஏற்றுமதி செய்கின்ற பிரதேசமாயிற்று. ஆனால் இந்தச் சிறப்பு விவசாயமும் கூட மிகவும் வரையறைக்குட்பட்டிருந்தது. ஏனென்றால் சணல், பருத்தி விவசாயத்துடன் சம்பந்தப்பட்டிருந்த பணப்பயிர் விவசாயம் உணவுப் பற்றுக்குறைகளினாலும் பிரதேசங்களுக்கு இடையில் தொடர்பு இல்லாமையினாலும் முன்னேற்றம் அடையவில்லை.

பணப்பயிர் விவசாயம் பிரதானமாக உலக முதலாளித்துவச் சந்தையை முன்னிட்டு நடை

பெற்றது. அது உள்நாட்டுச் சந்தையின் வளர்ச்சியைத் தாமதப்படுத்த முற்பட்டது. விவசாயிக்கு உலகச் சந்தையுடன் நேரடியான தொடர்புகள் இல்லை, அவனுடைய தொடர்புகள் அனைத்தும் லேவாதேவிக்காரர்கள் மற்றும் நிலக்கிழார்கள் மூலமாக நடைபெற்றபடியால் அவன் நடைமுறையில் சந்தையிலிருந்து தனித்து நின்றான்; அவனுடைய உற்பத்திப் பொருளில் பெரும் பகுதி—பண்டம் என்ற முறையில் இல்லா விட்டாலும்—வாரம் அல்லது கடன்களுக்கு வட்டி என்ற முறையில் அவனிடமிருந்து பறிக்கப்பட்டது. நிலக்கிழார் மற்றும் லேவாதேவிக்காரரிடம்தான் விவசாயிகளின் உற்பத்திப் பொருள் பண்டமாக மாறியது.

இப்படிப்பட்ட பணப்பயிர் விவசாயம் ஏகாதிபத்தியம் நாட்டைச் சுரண்டுவதற்கு உதவி செய்தது, மக்களை வறுமையில் வாடும்படி விதித்துவிட்டு நாட்டின் செல்வாதாரங்களைச் சூறையாடுவதற்கு முற்பட்டது.

ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் பஞ்சத்தில் வாடுகின்ற இந்தியாவிலிருந்து உணவுப் பொருள்களின் (குறிப்பாக, கோதுமை) ஏற்றுமதி மிகப் பெரிய அளவை எட்டியது. அரை நூற்றாண்டுக்குக் குறைவான காலப்பகுதியில் கோதுமை ஏற்றுமதி சுமார் 43 மடங்கு அதிகரித்தது.* விவசாயம் செய்யப்பட்ட பரப்பின் அளவு மாறாம

* பின்வரும் புத்தகத்தில் தரப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்களிலிருந்து கணக்கிடப்பட்டது: Brij Narain, *Indian Economic Life. Past and Present*, Lahore, 1929, p. 436.

லிருந்த காலத்தில், 1841 முதல் 1872—1891 வரை அறுவடையின் அளவு 64 சதவிகிதம் குறைந்த காலத்தில் இந்த ஏற்றுமதி நடை பெற்றது.* காலனியாதிக்க அதிகாரிகள் உணவுத் தானியங்களை இப்படி ஏற்றுமதி செய்தது கோடிக் கணக்கான இந்தியர்களைக் கொலை செய்ததற்குச் சமமாகும்.

இந்தியா நீண்ட வேளாண்மை வரலாற்றைக் கொண்ட நாடு; வருடத்துக்கு இரண்டு முறை அறுவடை செய்கின்ற நாடு; ஆனால் 19ம் நூற்றாண் டின் பிற்பாதியில் தீவிரமான உணவு நெருக்கடி ஏற்பட்டது. இன்றளவிலும் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. விவசாய உற்பத்தி படிப் படியாக நாசமடைந்தது. விவசாயம் செய்யப் பட்ட பரப்பின் அதிகரிப்பு, அதே சமயத்தில் நீர்ப்பாசன வசதிகள் மற்றும் உரங்களுக்கு (உர மும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது) அவசியமான செலவுகளைச் செய்யாமை ஆகிய நிலைமைகளில் உணவுத் தானிய ஏற்றுமதி அதி கரிக்கப்பட்டது நில வளம் அழிக்கப்படுவதற்கு இட்டுச் சென்றது. இந்தியாவில் பஞ்சம் நீடித்த பிரச்சினையாயிற்று.

ஆனால் 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில், பிரிட்டிஷ் தொழில்துறை மூலதனம் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் இருந்த மாதிரியில்லாமல் பஞ்சம் வேறொரு வடிவத்தைப் பெற்றது. அது இனியும் விவசாயத்தின் அழிவு மற்றும் தரம் குறைந்த நிலையின் விளைவாக மட்டுமே இருக்க வில்லை; விவசாயிகளின் நிலங்களின் பெரும் பகுதி

* *Ibid.*, p. 366.

யில் புனருற்பத்தியின் புதிய நிலைமைகளின் விளைவாகவும் இருந்தது. வாரம், நில வரி மற்றும் கடன்களுக்கு வட்டி ஆகியவற்றைக் கட்டுவதற்காக விவசாயி தன்னுடைய உற்பத்திப் பொருளில் பெரும் பகுதியை இழக்க வேண்டியிருந்தது. எஞ்சிய உற்பத்திப் பொருள் அவன் உயிர் வாழ்வதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது (பெரும்பாலும் அதற்குக் கூடப் போதுமானதாக இல்லை). வெறும் பிழைப்பிற்கான பொருளாதாரம் அதன் மூலச்சிறப்பான வடிவத்தில் முடிவடைந்ததை இந்தக் காலகட்டம் குறித்தது. இத்தகைய சூழ்நிலையில் சாதாரண அளவில் விளைச்சல் குறைந்தாலும் பேராபத்து ஏற்பட்டது. ஏற்கெனவே கணிசமான எண்ணிக்கையைக் கொண்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய கூலியைக் கொண்டு பகுதியளவுக்கு மட்டுமே வாழ்ந்து கொண்டிருந்தார்கள்; அவர்களுடைய பாரம்பரியமான பிழைப்புச் சாதனங்களை இழந்து விட்டார்கள். அவர்களது உணவு தானியத் தேவை அதிகரித்திருந்த காலத்தில் உணவு தானியங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆகவே ஏகாதிபத்தியக் கட்டத்தில் இந்தியாவில் பஞ்சம் காலனியாதிக்கச் சுரண்டலின் ஒன்றுகுவிக்கப்பட்ட வடிவமாயிற்று.

நிலப்பிரபுத்துவ நிலவுடைமையாளர் மற்றும் ஏகாதிபத்தியச் சுரண்டல் தீவிரமடைந்தது, விவசாயிகள் தம் நிலங்களை இழந்தது, வறுமையின் அதிகரிப்பு ஆகியவை கிராமப் பகுதிகளில் வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைய வழி வகுத்தன. 1870க்களிலும் 1880க்களிலும் தேசிய விடுதலை

இயக்கத்தில் புதிய எழுச்சி ஏற்பட்டது; அது விவசாயிகள் கலகங்கள் என்ற வடிவத்தைக் கொண்டிருந்தது. அவை நிலக் குத்தகை முறையை மாற்றியமைக்கும்படி காலனியாதிக்கவாதிகளைத் தூண்டின. 19ம் நூற்றுண்டின் பிற்பாதியில் காலனியாதிக்க நிர்வாகம் கிராமங்களில் நிலக் குத்தகை முறையை ஒழுங்குபடுத்துகின்ற பல சட்டங்களை வரிசையாகப் பிரகடனம் செய்தது. ரயத்துவாரி மற்றும் ஜமீன்தாரி முறைகள் அமுலாக்கப்பட்ட பிறகு இரண்டாவது கட்டத்தில் செய்யப்பட்ட விவசாயச் சட்டங்கள் இவை. 1857-59ம் வருடங்களில் ஏற்பட்ட இந்தியாவின் தேசிய எழுச்சிக்குப் பிறகு உடனடியாக, 1859இல் ''வங்காள நில வாரச் சட்டம்'' நிறைவேற்றப்பட்டது.* இது இந்தப் புதிய கட்டத்தில் செய்யப்பட்ட முதல் சட்டம். இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஆதரித்த முதலாளி வர்க்கப் பொருளியலாளர்கள் அதை ''வங்காள விவசாயிகளின் மகா சாசனம்'' என்று வர்ணித்தார்கள். ஆனால் இந்தச் ''சாசனம்'' உண்மையில் விவசாயிகளுக்குக் கொடுத்தது என்ன?

1859ம் வருடச் சட்டம் வங்காளத்தில் ''நிரந்தரமான'' நிலக் குத்தகை என்று சொல்லப்படுகின்ற உரிமையை நிலைநாட்டியது; நிலக்கிழார்களின் தன்னிச்சையான நடவடிக்கைகளிலிருந்து, நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து, நில வாரம் அதிகரிக்கப்படுவதிலிருந்து மற்றும்

---

* *Agricultural Legislation in India*, V. VI, Delhi, 1955, p. VI.

இதரவற்றிலிருந்து இச்சட்டம் விவசாயிகளைக் காப்பாற்றும் என்று கருதப்பட்டது. இதற்குப் பின்னர் பிரிட்டிஷ் இந்தியாவின் இதர மாகாணங்களில் நிறைவேற்றப்பட்ட விவசாயச் சட்டங்களுக்கு இச்சட்டம் முன்மாதிரியாக இருந்தது.

1859ம் வருடச் சட்டம் குத்தகை விவசாயிகளில் மிகவும் சிறிய குழுவினருக்கு — மிகவும் பணக்காரக் குழுவினருக்கு—சில உரிமைகளையும் சலுகைகளையும் கொடுத்தது; விவசாயிகளை வெவ்வேறு உரிமைகளைக் கொண்ட குழுக்களாக மேலும் பிரித்தது. 1859ம் வருடச் சட்டம் விவசாயிகளில் மிகப் பெரும்பான்மையினருடைய நிலைமையில் கணிசமான எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை, அதற்கு மாறுக, பல உதாரணங்களில் அவர்களுடைய நிலைமை மோசமடைந்தது. ஏனென்றல் ஜமீன்தார்கள் தங்களுடைய குத்தகை விவசாயிகளை அவ்வப்பொழுது மாற்றத் தொடங்கினுர்கள். ஆகவே ஒரு குத்தகையின் காலம் 12 வருடங்களுக்கு மேல் போகவில்லை.

1880க்களில் இந்தியாவில் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் ஒரு புதிய திருப்பத்தை அடைந்தது. ஏகாதிபத்தியவாதிகள் புதிய விவசாயச் சட்டங்களை வெளியிடுவதன் மூலம் அதன் தாக்கத்தைக் குறைப்பதற்கு முயற்சி செய்தார்கள். 1859ம் வருடச் சட்டத்தில் திருத்தங்களையும் சேர்த்தல்களையும் கொண்டுவந்த நிலச் சட்டம் 1885இல் வங்காளத்தில் அமுலாக்கப்பட்டது.*

---

* *Ibid.*, p. VII.

இந்தச் சட்டம் முதலாளித்துவத்துக்கு முந்திய சுரண்டல் முறையின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தொடாமலேயே நிலக் குத்தகைக்காரர்களில் விரிவான பகுதியினருக்குக் குத்தகைப் ''பாதுகாப்பு'' கொடுத்தது. நிலக்கிழார்களை விவசாயிகளின் ஆத்திரத்திலிருந்து காப்பாற்றுவதற்கு இது அவசியமாக இருந்தது. மேலும் 1880க்களிலும் 1890க்களிலும் நிறைவேற்றப்பட்ட விவசாயச் சட்டங்கள் இந்தியாவின் கிராமங்களில் பண்ட-பண உறவுகளின் வளர்ச்சியைப் புறக்கணிக்க முடியவில்லை.

வர்த்தகர்களும் லேவாதேவிக்காரர்களும் விவசாயிகளைச் சுரண்டுவதைக் குறித்து ஏதாவது செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் காலனியாதிக்கவாதிகளுக்கும் ஏற்பட்டது. தக்காணப் பகுதியில் பல விவசாயிகள் எழுச்சிகள் ஏற்பட்ட உடனே லேவாதேவிக்காரர்களுக்கு எதிரானமுதல் சட்டம் 1879இல் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின் படி மிகவும் அதிகமாக உள்ள வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கு சிவில் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது; நீதிமன்றத்தின் விசேஷ உத்தரவு இல்லாமல் கடனாளியின் நிலத்தை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது. எனினும் லேவாதேவிக்காரர்களுக்கு எதிரான இந்தச் சட்டமும் மற்ற சட்டங்களும் (அப்படி 100க்கு அதிகமான சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன) நடைமுறையில் அமுலாக்கப்படவில்லை.

இந்தச் சட்டங்கள் இந்தியா முழுமைக்கும் உரியன அல்ல என்பதும் இச்சட்டமியற்றலில்

மற்றெரு அம்சமாகும். பல்வேறு மாகாணங்களும் தனித்தனியான சட்டங்களை இயற்றியிருந்தன. இவற்றை ஸ்தல அதிகாரிகள் அமுலாக்க வேண்டும். நடைமுறையில் இந்தச் சட்டங்களுக்குக் காலனியாதிக்க மத்திய அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கவில்லை. சட்டங்களின் மொத்த எண்ணிக்கை அதிகம். வழக்குரைஞர்கள் இவற்றுக்கு வெவ்வேறு விதமாக விளக்கம் கொடுத்தார்கள். எனவே விவசாயிகள் தங்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு இவற்றை உபயோகிக்க முடியாதது வியப்பல்ல.

காலனியாதிக்கவாதிகளுடைய நிலச் சட்டங்களின் நோக்கம் இந்தியாவில் விவசாயப் புரட்சியைத் தடுப்பதும் விவசாயத்தில் முதலாளித்துவக் காலனி வளர்ச்சிக்கு அவசியமான குறைந்தபட்ச நிலைமைகளையாவது ஏற்படுத்துவதுமாகும். இச்சட்டங்கள் அனைத்துக்கும் பொருளாதார மற்றும் அரசியல் பின்னணி இதுவே. இச்சட்டங்களில் ஒன்று கூட பெருந்திரளான விவசாயிகளின் நிலைமையை சுலபமாக்கவில்லை, நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களின் அல்லது ஏகாதிபத்தியச் சுரண்டலிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவில்லை. விவசாயச் சட்டங்கள் விரிவான அளவில் பிரச்சாரத்துக்கு, தங்களுடைய உரிமைகளுக்காக உண்மையான போராட்டத்தை நடத்துவதிலிருந்து விவசாயிகளுடைய கவனத்தைத் திருப்புவதற்குப் பயன்பட்டன.

எனவே முதல் உலக யுத்தம் தொடங்கும் சமயத்தில் இந்தியா ஒரு மூலச் சிறப்பான காலனியாக, அந்நிய மூலதன முதலீட்டுக்குரிய இடமாக,

மூலப்பொருள்களை அனுப்பித் தருகின்ற இடமாக, வெளிநாட்டு சரக்குகளுக்கு விற்பனைச் சந்தை யாக மாறியிருந்தது; அத்தகைய நாடுகளுக்குரிய பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்டிருந் தது. இந்தியாவுக்கு பிரிட்டிஷ் மூலதனம் ஏற்று மதி செய்யப்பட்டாலும், சில பாக்டரித் தொழில் துறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இந்தியா சின்னுபின்னமடைந்து கொண்டிருந்த கைத்தொழிலைக் கொண்ட நாடாகவே நீடித்தது; உற்பத்தி முறையின் புதிய வடிவங்கள் மெது வாகவே தோன்றிக் கொண்டிருந்தன; விவசாயி களை நிலப்பிரபுத்துவ மற்றும் அரை நிலப்பிரபுத் துவ வடிவங்களில் சுரண்டுவதைச் சார்ந்த விவ சாயத்துறை மேலோங்கியிருந்தது.

## அத்தியாயம் இரண்டு

# இரண்டு உலக யுத்தங்களுக்கு இடையில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

### 1. தொழில்துறை வளர்ச்சியின் பிரத்யேகமான கூறுகள்

இரண்டு உலக யுத்தங்களுக்கும் இடை யிலுள்ள கால் நூற்றுண்டுக் காலம் அனைத்து மனித குலத்தின் வளர்ச்சியிலும் ஒரு மைல் கல்லாகும். அக்காலகட்டம் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் முதல் கட்டத்துடன் ஆரம்பமாயிற்று; இன்னும் ஆழமான நெருக்கடி ஏற் பட்டிருந்த புதிய கட்டத்துடன் அது முடிவடைந் தது. இந்தக் காலகட்டத்தில்தான் ஏகாதிபத்

தியத்தின் அரசியல் மற்றும் பொருளாதார வலிமை பலவீனமடையத் தொடங்கியது; முந்திய ருஷ்ய சாம்ராஜ்யத்தில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுடைய அரசு நிறுவப்பட்டு, அந்த அரசு புதிய வாழ்க்கையை நிர்மாணிக்கத் தொடங்கியது. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி ஜாரிஸ்ட் ருஷ்யாவிலிருந்த காலனிப் பிரச்சினையைத் தீர்த்தது; காலனி ஒடுக்குமுறை உட்பட எல்லாவிதமான ஒடுக்குமுறைகளிலிருந்தும் எல்லா மக்களினங்களுக்கும் விடுதலையளித்தது.

இரண்டு உலக யுத்தங்களுக்கும் இடைப்பட்ட வருடங்கள் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியை மென்மேலும் தெளிவாக எடுத்துக்காட்டின.

இதற்கு முந்திய காலத்தில் தொடங்கிய, சுதந்திரமான பொருளாதார வளர்ச்சியின் தேவைகளுக்கும் காலனியாதிக்க அடிமைத்தனத்துக்கும் இடைப்பட்ட முரண்பாடுகள் மாபெரும் அளவுக்குத் தீவிரமடைந்தன; தேசிய விடுதலைப் போராட்டம் கூர்மையான முறையில் தீவிரமடைவதற்கு அவை அடிப்படையாக இருந்தன.

முதலாவது உலக யுத்தத்தின் முற்பொழுதிலும் அதன் தொடக்கநிலைக் கட்டங்களின் போதும் பல தொழில் துறைகள் வளர்ச்சியடைந்ததன் விளைவாக சுதந்திரமான பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சிக்கான ஆர்வம் தீவிரமடைந்தது. உலக யுத்தம் தொழில்துறையின் வளர்ச்சியைப் பெரிய அளவுக்கு பாதித்து, ஏகாதிபத்திய நிர்ப்பந்தத்தை ஓரளவுக்குக் குறைத்தது. ஏகாதி

பத்திய வல்லரசுகளுக்கிடையில் ஏற்பட்ட இராணுவச் சண்டை இந்தியத் தொழில்துறையின் குறுகலான வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமைகளைப் படைத்தது. ஐரோப்பாவிலிருந்து இறக்குமதிகள் குறைக்கப்பட்டன; உள்நாட்டுச் சந்தையில் தொழில்துறைச் சரக்குகளுக்குத் தேவை அதிகரித்தது. நேச நாடுகளின் யுத்தத் தேவைகளான சணல் சாக்குகள், மைக்கா, டங்ஸ்டன், வெடியுப்பு, மரம் மற்றும் இதர மூலப்பொருள்களை இந்தியா அளித்தது. இந்தியாவின் இராணுவ சப்ளைகள் 1918இல் 80 மில்லியன் பவுண்டுகள் என்று மதிப்பிடப்பட்டிருந்தன*; அதன் மொத்த இராணுவச் செலவுகள் 250 மில்லியன் பவுண்டுகள் என்று மதிப்பிடப்பட்டன. இராணுவ அனுப்பாணைகளும் இந்தியச் சந்தையில் ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் ஊடுருவல் அதிகரித்ததும் சில இந்தியத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவித்தன.

விலைகள் அதிகரித்ததும் கூட இந்தக் காலகட்டத்தில் உற்பத்தியின் வளர்ச்சியில் கணிசமான தாக்கம் செலுத்தியது. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியின் வாய்ப்புகளை ஆராய்வதற்காக இந்தியத் தொழில்துறைக் கமிஷன் என்ற விசேஷக் குழு 1916இல் அமைக்கப்பட்டது. இதற்கு ஒரு வருடத்துக்குப் பிறகு இராணுவத் தளவாட உற்பத்திக் கவுன்சில் அமைக்கப்பட்டது. கமிஷனின் ஆராய்ச்சிகள் நடைமுறையில் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. 1918இல் வெளியிடப்

* Vera Anstey, *The Economic Development of India*, p. 216.

பட்ட அதன் சிபாரிசுகளில் ஸ்தூலமான பிரேரணை கள் ஒன்றுமில்லை. இராணுவத் தளவாட உற்பத்திக் கவுன்சில் இதைக்காட்டிலும் வெற்றிகரமாக இயங்கியது; ஏனென்றால் யுத்தத்துக்குத் தேவையான சப்ளைகளை நிறைவேற்றுவது அதன் வேலையாக இருந்தது. இராணுவ தளவாடங்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் அதன் ஆதரவில் நிறுவப்பட்டன, ரயில் தண்டவாளங்கள், கம்பளித் துணிகள், தோல் மற்றும் இதர சரக்குகளை அளிப்பதற்கான ஒப்பந்தங்கள் அதன் உதவியினால் இந்தியக் கம்பெனிகளுடன் முடிவு செய்யப்பட்டன.

தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சியினால் இந்தியாவில் நிறுவப்பட்ட புதிய தொழிற்சாலைகள் பலவற்றிலும் பங்குகள் வைத்திருந்த, பிரிட்டிஷ் முதலாளி வர்க்கமே முதலாவதாகவும் முதன்மையாகவும் வளர்ச்சி அடைந்தது, நாட்டில் அந்நிய முதலீடுகள் அதிகரித்தன என்பது இங்கே வலியுறுத்தப்பட வேண்டும். பிரிட்டிஷ் மூலதனம் அநேகமாக ஏகபோகத்தைக் கொண்டிருந்த சணல், நிலக்கரி, தங்கம் மற்றும் பல தொழில் துறைகளில் யுத்தத்தின் போது வேகமான வளர்ச்சி ஏற்பட்டது. 1913-14க்கும் 1919-20க்கும் இடையில் சணல் மில்களின் எண்ணிக்கை 64இலிருந்து 76 ஆக உயர்ந்தது; சணல் உற்பத்திப் பொருள்களின் (சாக்குகள் மற்றும் துணி) ஏற்றுமதி இரண்டு மடங்குக்கும் கூடுதலாக அதிகரித்தது. சணல் தொழிலில் கொடுக்கப்பட்ட சராசரி லாப ஈவு 140 சதவிகிதத்துக்குக் குறையாமலிருந்தது.

யுத்தத் தொழில்துறையின் தேவைகள், இறக்குமதிகளின் நிறுத்தம், உலோகத் தொழிலின் வளர்ச்சி ஆகிய அனைத்தும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலை ஊக்குவிக்க முற்பட்டன. யுத்த காலத்தின் போது நிலக்கரி உற்பத்தி 16.2 மில்லியன் டன்களிலிருந்து 22.6 மில்லியன் டன்களாக அதிகரித்தது. மாங்கனிஸ், வெள்ளி, ஈயம், துத்தநாகம், இரும்புத் தாதுப்பொருள் ஆகியவற்றின் உற்பத்தியும் தீவிரமாக அதிகரித்தது. தேயிலை ஏற்றுமதி கணிசமாக வளர்ச்சியடைந்தது. யுத்தம் பிரிட்டிஷ் முதலாளிகளைப் பெரும் பணக்காரர்களாக்கியது; பிரிட்டிஷ் முதலீடுகளின் தனிமுதலான வளர்ச்சியை அதிகப்படுத்தியது. ஆனால் அதே சமயத்தில் இந்திய மூலதனத்தின் நிலைகளும் வலுப்படுத்தப்பட்டன, தேசியத் தொழில்துறையின் வளர்ச்சி வேகம் அதிகரித்தது, உள்நாட்டுச் சந்தையில் அதன் நிலைகள் பலமடைந்தன, தேசிய மூலதனத்தின் செயல் துறை விரிவடைந்தது. தேசிய மூலதனம் ஆதிக்கம் செலுத்திய சில தொழில் துறைகள் உள்நாட்டுச் சந்தையில் மேலும் பலமான நிலையைப் படிப்படியாகப் பெற்றன. பருத்தித் தொழிலில் இது குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

இந்தியச் சந்தையில் தன்னுடைய துணிகளைக் கொண்டுவந்து குவிப்பதற்கு லங்காஷயரினால் இனிமேல் முடியவில்லை. பிரிட்டிஷ் பருத்தித் துணிகளின் இறக்குமதி 1913-14ம் வருடங்களுக்கும் 1917-19ம் வருடங்களுக்கும் இடையில் அநேகமாகப் பாதியளவுக்குக் குறைக்கப்பட்டது; இந்தியாவில் அவற்றின் உற்பத்தி 27 சதவிகிதம்

அதிகரித்தது.* யுத்தம் நடைபெற்ற வருடங்களின் போது பருத்தி மில்களின் உற்பத்தி பெரிய அளவுக்கு மாறிவிட்டது. யுத்தத்துக்கு முன்பு பெரும்பான்மையான மில்கள் நூற்பு மில்களாகவே இருந்தன. யுத்த காலத்தின் போது மில்கள் மற்றும் நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை அநேகமாக மாறவில்லை, ஆனால் தறிகளின் எண்ணிக்கை 25 சதவிகிதம் அதிகரித்தது. யுத்தத்துக்கு முன்பாக பிரிட்டிஷ் துணிகள் இந்தியச் சந்தையில் 70 சதவிகிதத்தைக் கைப்பற்றியிருந்தன; இந்தியத் துணிகளின் பங்கு 28 சதவிகிதம் மட்டும் தான். யுத்தத்துக்குப் பிறகு பிரிட்டனுடைய பங்கு 35 சதவிகிதமாகக் குறைந்து விட்டது; இந்தியாவின் பங்கு 61 சதவிகிதமாக அதிகரித்தது. 1913ம் வருடத்துக்கும் 1920ம் வருடத்துக்கும் இடையில் பருத்தி மில்களுக்குக் கிடைத்த லாபம் 4.5மடங்கு அதிகரித்தது. இந்தியாவில் இரும்பு மற்றும் எஃகுத் தொழில் யுத்தத்தின் முற்பொழுதில்தான் தொடங்கியது. முக்கியமாக டாடா குடும்பம் அதில் ஈடுபட்டிருந்தது. யுத்தத்தினால் கிடைத்த அனுப்பாணைகளும் அதிகமான லாபமும் இத்தொழிலை வேகமாக வளர்த்தன. இந்தியாவில் பிரிட்டிஷ் கம்பெனிகளும் எஃகு உற்பத்தி செய்தன. ''இந்தியன் அயர்ன் அண்ட் ஸ்டீல் கார்ப்பரேஷன்'', ''ஸ்டீல் கார்ப்பரேஷன் ஆப் பெங்கால்'' மற்றும் மைசூரிலிருந்த அதன் சிறு

* பின்வரும் புத்தகத்தில் தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது: Brij Narain, *Indian Economic Life. Past and Present*, pp. 456-57.

கிளேயும் இத்தகைய பிரிட்டிஷ் கம்பெனிகளா கும். 1913இல் 19,000 டன்களாக இருந்த எஃகு உற்பத்தி 1918இல் 1,24,000 டன்களாக வேகமாக அதிகரித்தது. இதில் மூன்றில் இரண்டு பங்கு டாடா கம்பெனிகளில் உற்பத்தி செய்யப் பட்டது.

யுத்த காலத்தில் வளர்ச்சியடைந்த மற்ருெரு தொழில் துறை சிமெண்டுத் தொழிலாகும். யுத்தத்துக்கு முன்னர் 900 டன்களாக இருந்த சிமெண்டு உற்பத்தி 1919இல் 87,000 டன்களாக அதிகரித்தது.

முன்னர் பிரிட்டிஷ் மூலதனத்தின் ஏகபோக மாக இருந்த தொழில் துறைகளுக்குள் யுத்த காலத்தின் போது இந்திய மூலதனம் நுழையத் தொடங்கியது. சணல் மற்றும் தேயிலேத் தொழில் கள் இதற்கு உதாரணங்களாகும்.

இந்தியாவில் தொழில்துறை உற்பத்தியின் மொத்த வளர்ச்சியுடன் சேர்ந்து கடன் வழங்கும் துறையில் தேசிய மூலதனம் தன்னுடைய நிலேகளே பலப்படுத்திக் கொண்டது.

யுத்தம் இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தை மேலும் பணக்காரர்களாக்கியிருந்தது, தொழில் துறையில் மூலதனத்தின் மத்தியப்படுத்துதல் மற்றும் குவிப்பு நிகழ்ச்சிப் போக்கை அதிகப் படுத்தியிருந்தது. இதன் விளேவாக முதலாளித்துவம் மேலும் வேகமாக வளர்ச்சி அடைந்தது. 1921ம் வருட மக்கள் தொகைக் கணக்குப்படி இந்தியா வில் 11,000க்கும் அதிகமான பாக்டரிகள் இருந் தன (1911ம் வருடக் கணக்கின் போது இருந் ததைக் காட்டிலும் 4,000 அதிகம்); தொழிலாளர்

களின் எண்ணிக்கை 2.6 மில்லியன்கள் (1911ம் வருடக் கணக்கின் போது இருந்ததைக் காட்டிலும் சுமார் 0.5 மில்லியன் அதிகம்).

முன்னர் போலவே 20 தொழிலாளர்களுக்கும் கூடுதலாக வேலை செய்கின்ற நிறுவனம் பாக்டரி என்று கருதப்பட்டது. எனவே பெரும்பாலான சிறு பட்டறைகளும் இதரவைகளும் தொழில் துறை நிறுவனங்கள் என்று சேர்த்துக் கணக்கிடப்பட்டன.

யுத்தத்தின் போதும், யுத்தத்துக்குப் பிந்திய திடீர் வளர்ச்சிக் காலத்திலும் தொழில்துறை வளர்ச்சி அடைந்த போதிலும் தொழில்துறையின் கட்டமைப்பில் முக்கியமான, குணும்ச ரீதியான மாற்றங்கள் ஏற்படவில்லை. சிறு அளவு உற்பத்தி முறை இன்னும் மேலோங்கியிருந்தது; கனரகத் தொழில்துறையின் மிக முக்கியமான பிரிவுகள் இன்னும் ஏற்படவில்லை. தொழில்துறையின் காலனியாதிக்கக் கட்டமைப்பு மாறவில்லை; ஏனென்முல் ஏகாதிபத்தியம் யுத்த காலத்தில் கூட தொழில்துறை வளர்ச்சியை நேரடியாகவும் மறைமுகமாகவும் தாமதப்படுத்தியது. தொழில் துறை வளர்ச்சிக்கு ஒப்புநோக்கில் ஏற்பட்டிருந்த சுதந்திரம் நெடுங்காலத்துக்கு நீடிக்கவில்லை. 1920க்குள் யுத்தத்துக்குப் பிந்திய திடீர் வளர்ச்சி முடிவடைந்துவிட்டது. இத்தகைய குறுகிய காலத்துக்குள் உண்மையில் எவ்விதமான தொழில்மயமாக்கலையும் சாதித்திருக்க முடியாது. ஏனென்முல் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இயந்திரங்களை இறக்குமதி செய்வது கடினமாயிற்று; காலனியாதிக்கவாதிகளின் கொள்கையில்

தொழில்துறையைத் தீவிரமாக மாற்றியமைக்கின்ற எண்ணம் சிறிதும் இடம் பெறவில்லை. இந்திய முதலாளி வர்க்கம் யுத்தத்தின் போது திரட்டிய ஏராளமான லாபம் தொழில்துறையில் முதலீடு செய்யப்படவில்லை; அரசுக் கடன்களில், தேயிலைத் தோட்டங்களில், வங்கிகளில் மற்றும் நிலத்தில் முதலீடு செய்யப்பட்டது.

அதே சமயத்தில் ஏகாதிபத்தியவாதிகளால் பேணி வளர்க்கப்பட்ட பிற்போக்கான விவசாய முறை தொழில்துறைக்கு அவசியமான உள்நாட்டுச் சந்தையின் உருவாக்கத்தைத் தடுத்தது. குத்தகை விவசாயிகளின் அரை அடிமை உழைப்பை அடிப்படையாகக் கொண்ட அரை நிலப்பிரபுத்துவ விவசாய முறை நீடிக்கின்ற வரை விவசாயத்தில் நவீன இயந்திரங்களை உபயோகிக்கின்ற பிரச்சினைக்கே இடமில்லை.

இந்திய மூலதன முதலீடு அதிகரித்து, பல தொழில் துறைகளில் இந்தியர்களின் பங்குகளும் அதிகரித்த போதிலும் தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் அந்நிய மூலதனம் ஆதிக்கம் செலுத்தியது. அது போக்குவரத்து, அந்நிய வர்த்தகம், நிதி மற்றும் கடன் வசதி அமைப்பில் ஏகபோகத்தைக் கொண்டிருந்தது. 1925-26ம் வருடங்களில் 819 அந்நிய (பெரும்பாலும் பிரிட்டிஷ்) கம்பெனிகள் மொத்தம் 554 மில்லியன் பவுண்டுகள் (7.4 பில்லியன் ரூபாய்கள்) செலுத்தப்பட்ட மூலதனத்துடனும் 5,311 இந்தியக் கம்பெனிகள் 2.7 பில்லியன் ரூபாய்கள் மூலதனத்துடனும் இயங்கிக் கொண்

டிருந்தன.* இந்தப் புள்ளி விவரங்கள் அந்நிய மூலதனத்தின் தனிமுதலான ஆதிக்கத்தையும் இந்தியக் கம்பெனிகள் சிறிய அளவாக இருந்ததையும் அவற்றுக்கு எதிராகப் பெரிய, அந்நிய ஏகபோகங்கள் இருந்ததையும் எடுத்துக்காட்டுகின்றன. ஒரு அந்நியக் கம்பெனியின் சராசரி மூலதனம் ஒரு இந்தியக் கம்பெனியின் மூலதனத்தைக் காட்டிலும் சுமார் 18 மடங்கு அதிகமாக இருந்தது.

தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் பிரிட்டனுடைய நிலை மிகவும் பலமாக இருந்த போதிலும் பிரிட்டன் இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சியைத் தடுப்பதற்கு தன்னுடைய அரசியல் ஆதிக்கத்தை இன்னும் உபயோகித்தது. சட்டம், நீதிமன்றங்கள், காப்பு வரிகள், சுங்க வரிகள், வரிகள் ஆகிய எல்லாமே இந்தியச் சரக்குகளை பாதிக்கின்ற முறையில் பிரிட்டிஷ் சரக்குகளின் போட்டித் தன்மையை அதிகப்படுத்த உபயோகிக்கப்பட்டன. சுதந்திரமான முதலாளித்துவ நாடுகளில் தொழில் துறை வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முதலாளி வர்க்கம் எப்பொழுதுமே அரசை உபயோகப்படுத்தியது. இந்தியாவில் அரசு இயந்திரம் தேசியத் தொழில் துறை வளர்ச்சி நலன்களுக்கு விரோதமாக இருந்தது.

யுத்த காலத்தின் போது பலத்திலும் செல்வத்திலும் வளர்ச்சி அடைந்திருந்த இந்திய முதலாளி

* Vera Anstey, *The Economic Development of India*, p. 110.

வர்க்கம் அந்நியப் போட்டியிலிருந்து சில தொழில் களுக்குப் பாதுகாப்புக் கோரியது. தேசிய விடுதலை இயக்கத்தின் நிர்ப்பந்தத்தின் விளைவாக பிரிட் டிஷ் அதிகாரிகள் அரசாங்கத்தின் காப்பு வரிக் கொள்கையை ஆராய்வதற்கு ஒரு விசேஷ நிதிக் கமிஷனை 1921இல் ஏற்படுத்தினார்கள். நீண்ட விவாதங்கள் மற்றும் கூட்டங்களுக்குப் பிறகு ஒரு தொழில் துறைக்கு அரசாங்கத்தின் ஆதரவு கிடைப்பதற்கு அவசியமான நிபந்தனைகளை இக்கமிஷன் வகுத்துக் கொடுத்தது.

இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சி பிரிட் டிஷ் நலன்களுக்கு பாதகமான முறையில் நடை பெறக் கூடாது என்று நிதிக் கமிஷன் தன்னுடைய அறிக்கையில் கூறியது. இந்தியாவில் பிரிட் டிஷ் பொருளாதார நலன்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்பட மாட்டா என்ற உத்தரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட நிபந்தனைகளின் பேரில்தான் இந்தியத் தொழில்துறை பாதுகாப்புப் பெற முடியும். அது மட்டுமல்லாமல் அத்தகைய பாதுகாப்புப் பெறுவதற்குரிய நடைமுறை மிகவும் சிக்கலாக இருந்தபடியால் அதைப் பெறுவதற்குப் பல வருடங்களாயிற்று.

உலக யுத்தத்துக்குப் பிந்திய வருடங்களில் பிரிட்டிஷ் மூலதன நடவடிக்கைகளில் புதிய முறை கள்—கூட்டு ஆங்கில-இந்தியக் கம்பெனிகள் அமைக்கப்படுவதும் இந்தியாவில் பிரிட்டிஷ் கம் பெனிகள் பதிவு செய்யப்படுவதும்—தோன்றின. இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கம் தீவிர மடைந்த பொழுது செய்யப்பட்ட காப்பு நடவடிக் கையின் ஒரு வடிவம் இது. நாட்டின் பொருளா

தார வளர்ச்சியின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குப் புதிய, சுலபமாக வெளியே தெரியாத வடிவத்தைக் கண்டுபிடிப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சி இது; இந்திய முதலாளி வர்க்கத்தில் அதிகமான செல்வந்தர் பகுதியை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நலன்களுடன் மிகவும் நெருக்கமாகப் பிணைப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சி இது.

1927இல் ஹில்டன்-யங் கமிஷன் சிபாரிசின்படி ரூபாயின் பரிவர்த்தனை விகிதம் 1 ரூபாய்க்கு 16 முதல் 18 பென்ஸ்கள் வரை உயர்த்தப்பட்டது. இது இந்தியச் சரக்குகளின் போட்டித் தன்மையைப் பெருமளவுக்குக் குறைத்து பிரிட்டிஷ் ஏற்றுமதியாளர்களின் நிலைகளை பலப்படுத்தியது.

இந்தியாவில் வங்கிகள் முறிகின்ற அலை வீசியது. இதனால் தேசியக் கடன் அமைப்பு பலவீனமடைந்தது; தொழில்துறை வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டது. 1925-26ம் வருடங்களில் தொழில்துறையின் வளர்ச்சி வேகம் குறைந்தது; பல தொழில் நிறுவனங்கள் திவாலானதாக அறிவிக்கின்ற நிலை ஏற்பட்டது. இந்த சமயத்திலிருந்துதான் அந்நிய வர்த்தகத்தின் மொத்த அளவு குறையத் தொடங்கிற்று. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் 1921-29ம் வருடங்களில் தொழில்துறைத் திடீர் வளர்ச்சி இந்தியாவைத் தாண்டிக் கடந்து விட்டது. இவையும் மற்றும் 1926இல் தொடங்கிய விலைகளின் வீழ்ச்சியும் இந்தியா பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது, 1929-33ம் வருடங்களில் உலகப் பொருளா

தார நெருக்கடியை ஏற்படுத்திய காரணிகள் ஏற்கெனவே இந்தியாவில் இயங்கத் தொடங்கி விட்டன என்பவற்றை எடுத்துக்காட்டின. பெரிய முதலாளித்துவ நாடுகளில் குவிக்கப்பட்டிருந்த ஏராளமான மூலப்பொருள் கையிருப்புகள் உலகச் சந்தையை பாதித்தன; நெருக்கடி ஆரம்பமாவதற்கு முன்பே வாங்குவது குறைந்து விட்டது.

**1929**இல் முன்னெப்போதும் ஏற்பட்டிராத பரிமாணங்களைக் கொண்ட பொருளாதார நெருக்கடி உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தைத் தாக்கியது. இந்தியப் பொருளாதாரத்தின் மீது அதன் தாக்கம் பன்முகமானதாகவும் முரண்பாடானதாகவும் இருந்தது. விவசாயமும் தொழில் துறையும் வெவ்வேறு முறைகளில் பாதிக்கப் பட்டன. இந்த நெருக்கடியின் சுமையை இந்திய மக்கள் மீது சுமத்துவதற்கு பிரிட்டன் தன்னாலியன்ற அனைத்தையும் செய்தது. ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய பொருளாதாரத்தின் மீது இந்த நெருக்கடியினால் ஏற்பட்ட விளைவுகளை இந்தியாவின் மேல் சுமத்த முயற்சி செய்தார்கள். இந்தியா ஏற்றுமதி செய்த பொருள்களில் முக்கியமாக இருந்த மூலப்பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களின் விலைகள் இந்தியா இறக்குமதி செய்த தொழில்துறைப் பொருள்களின் விலைகளைக் காட்டிலும் மிகவும் அதிகமாக வீழ்ச்சி அடைந்தன. மேலும், பிரிட்டிஷ் பவுண்டு ஸ்டர்லிங்கைப் பொறுத்த மட்டில் இந்தியாவின் பரிவர்த்தனை விகிதம் செயற்கையாக உயர்த்தப் பட்டதனால் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் குறைந்தது. எல்லாவற்றின் விளைவாகவும்

இந்தியாவின் அந்நிய வர்த்தகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டது. நெருக்கடியின் போது சுதந்திரமான முதலாளித்துவ நாடுகளில் பெரும்பான்மையானவை கடன் தவணை உரிமைகளைக் கோரின; அவை கடன் வழங்கீடுகளைச் செய்யவில்லை. இந்தக் கடன் தவணை உரிமை இந்தியாவுக்குத் தரப்படவில்லை; இந்தியா முன்போலவே பிரிட்டனுக்கு எல்லாக் கடன்களையும் தீர்க்க வேண்டியிருந்தது. இந்த நெருக்கடியின் போது எல்லாக் கடன் வழங்கீடுகளும் தங்கத்தில் செய்யப்பட்டன. பல நூற்றாண்டுகளாகவே இந்தியா தங்கத்தையும் வெள்ளியையும் இறக்குமதி செய்து கொண்டிருந்தது; இந்தியாவின் அரை நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தில் இது ஒரு சேமிப்பு வடிவமாக இருந்தது. இந்தியாவின் நன்கு வளர்ச்சி அடைந்த அந்நிய வர்த்தகத்தினாலும், காலனிக் காலகட்டத்துக்குப் பல பத்தாண்டுகளுக்கு முன்னரே அந்நிய வர்த்தகத்தில் அதன் உபரியினாலும் பெருமளவில் தங்கத்தையும் வெள்ளியையும் அது இறக்குமதி செய்ய முடிந்தது. காலனிக் காலகட்டத்தில் தொழில்துறை வளர்ச்சியில் உபயோகிக்கப்படாத மூலதனம் தங்கம், வெள்ளி வடிவத்தில் இருந்தது. 1900க்குப் பிந்திய 30 வருடங்களில் இந்தியா 5.4 பில்லியன் ரூபாய்கள் மதிப்புள்ள தங்கத்தை இறக்குமதி செய்தது; ஆனால் 1931 முதல் 1937 முடிய ஆறு வருடங்களில் 3.2 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான மதிப்பைக் கொண்ட தங்கம் ஏற்றுமதி செய்யப்பட்டது.*

* Brij Narain, *India in the Crisis*, Allahabad, 1934, p. 102.

நெருக்கடியின் போது பிரிட்டனுடைய நிலையை பலப்படுத்துவதற்கு இந்தியத் தங்கம் பயன் படுத்தப்பட்டது. ''பாங்க் ஆப் இங்கிலாந்தின்'' தங்க இருப்பு மும்மடங்காக அதிகரித்தது. இந்தியாவிலிருந்து தங்கம் வெளியே அனுப்பப்பட்டது நேரடியான கொள்ளைக்குச் சமம். இந்த நெருக்கடி வருடங்களின் போது இந்தியாவில் விலைகள் மிகவும் அதிகமாக வீழ்ச்சியடைந்தன; மக்கள், குறிப்பாக விவசாயிகள் ஒட்டாண்டிகளான நிகழ்வுடன் இது சேர்ந்து நடைபெற்றது.

1929க்கும் 1933க்கும் இடையில் இந்தியாவில் மொத்த விலைகள் 42 சதவிகிதம் வீழ்ச்சியடைந்தன; ஆனல் பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பானில் விலைகளின் வீழ்ச்சி முறையே 30.4, 37.6, 34.7, 22.2 சதவிகிதமாக இருந்தது.*

உலகப் பொருளாதார நெருக்கடியின் போது இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளின் மதிப்பு பாதிக்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சி பெரும்பாலும் மூலப்பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களைப் பாதித்தது; ஏனென்றல் இந்தியா தொழில்துறைப் பொருள்களை அநேகமாக ஏற்றுமதி செய்யவில்லை. 1933-34இல் ஏற்றுமதிகளின் மொத்த அளவில் முழுமையடைந்த உற்பத்திப் பொருள்கள் (சணல் பொருள்களைச் சேர்க்காமல்) சுமார் 13 சதவிகிதம் மட்டுமே இருந்தன. இதிலும் கூட பாதி-முழுமையடைந்த பொருள்கள் கணிசமான அளவில் சேர்க்கப்பட்டிருந்தன; தொழில்துறைக்கு மூலப்பொருள் என்று

* *Ibid.*, p. 193.

கருதப்படக் கூடிய சுரங்கத் தொழில் உற்பத்தியும் (உதாரணமாக, வெடியுப்பு) சேர்க்கப்பட்டிருந்தது. ஏற்றுமதிகள் குறைந்ததும் விலைகளின் வீழ்ச்சியும் முக்கியமாக விவசாயத்தையும் சில ஏற்றுமதித் தொழில் துறைகளையும் பாதித்தன. எனவே உலகப் பொருளாதார நெருக்கடி இந்தியாவில் பெரும் அளவுக்கு விவசாய நெருக்கடியாகவே உணரப்பட்டது. இதற்கிடையில் பிரதானமாக உள்நாட்டுச் சந்தையுடன் இணைக்கப்பட்டிருந்த, அதில் உறுதியான நிலையைக் கொண்டிருந்த சில தொழில்துறைகளுக்கு இந்த நிலைமைகள் ஒப்பீட்டளவில் சாதகமாகவும் இருந்தன. மூலப்பொருள்களின் விலை குறைந்து விட்டதும், வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் அதிகரித்தபடியால் கூலிகளைக் குறைத்துவிட்டதும் உற்பத்திச் செலவைக் குறைத்து நெருக்கடியான காலத்தில் கூட அதிகமான லாபங்களை சாத்தியமாக்கின.

பிரிட்டிஷ் நிர்வாகத்தின் காப்பு வரிக் கொள்கையும் இந்த சமயத்தில் பல தொழில் துறைகளைக் கணிசமாக பாதித்தது. நெருக்கடி இந்தியச் சந்தைக்கான ஏகாதிபத்தியப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. 1929-30க்கும் 1931-32க்கும் இடையில் இந்தியாவின் அந்நிய வர்த்தகத்தில் பிரிட்டனுடைய பங்கு 42.8 சதவிகிதத்திலிருந்து 35.5 சதவிகிதமாகக் குறைந்தது.* பருத்தித் துணிகள் சந்தையில் பிரிட்டனுடைய நிலையை

---

* *Industrial Problems of India*, ed. by P. C. Jain, Allahabad, 1944, p. 177.

அரித்தழிப்பதில் ஜப்பான் மிகவும் அதிகமாக வெற்றியடைந்தது. 1913-14இல் பிரிட்டன் மற்றும் ஜப்பானுடைய பங்கு முறையே 97 மற்றும் 0.3 சதவிகிதமாக இருந்தது. 1932-33க்குள் ஜப்பான் தன்னுடைய நிலையை 47.3 சதவிகிதமாக அதிகரித்துக் கொண்டது. இந்தியாவுடன் வர்த்தகத்தில் அமெரிக்காவும் ஜெர்மனியும் கூட தங்கள் நிலைகளைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு பலப்படுத்திக் கொண்டன. 1932இல் பிரிட்டன் இந்தியாவின் தொழில்துறையில் முதலீடு செய்திருந்த பிரிட்டிஷ் முதலாளிகளின் நிலையை பலப்படுத்தவும் தன்னுடைய ஏற்றுமதிக்கு அதிகச் சாதகமான நிலைகளை ஏற்படுத்தவும் விரும்பியது. எனவே ஆட்டவா உடன்பாட்டின் கீழ் இம்பீரியல் முன்னுரிமைகள் அமைப்பில் இந்தியாவைச் சேர்த்துக் கொண்டது. இந்த அமைப்பில் இங்கிலாந்தின் ஏற்றுமதிகளுக்கு 10% சுங்கவரிச் சலுகை கொடுக்கப்பட்டது. இந்தியா இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்த சரக்குகளுக்கும் அதே சுங்கவரிச் சலுகை கொடுக்கப்பட்டது. முன்னுரிமைச் சுங்கவரிகள் பிரிட்டிஷ் தொழில்துறைக்குப் பேருதவியாக இருந்தன; பிரிட்டிஷ் சரக்குகள் இந்தியச் சந்தையில் முன்னைக் காட்டிலும் அதிகமான போட்டியிடக் கூடிய தன்மையைப் பெற்றன. இதற்குப் பிரதியாக பிரிட்டிஷ் தொழில்துறைக்கு அவசியமாக இருந்த இந்தியா ஏற்றுமதி செய்த மூலப்பொருள்களுக்கும் பாதி-பூர்த்தி செய்யப்பட்ட சரக்குகளுக்கும் முன்னுரிமைச் சுங்க வரிகள் சலுகை இந்தியாவுக்குக் கிடைத்தது. இந்த முன்னுரிமை வரிகள் பிரிட்டனுக்கு ஆபத்தாக

இருக்கவில்லை. அதே சமயத்தில் பிரிட்டனைத் தவிர மற்ற நாடுகளிலிருந்து வந்து கொண்டிருந்த சரக்குகள் மீது இந்தியாவில் மிகவும் அதிகமான காப்பு வரிகள் விதிக்கப்பட்டன.

ஜப்பானியப் போட்டி அதிகரித்திருந்த படியால் பிரிட்டனைத் தவிர மற்ற நாடுகளிலிருந்து வந்த துணிகள் மீது சுங்கவரிகள் 1933இல் 75 சதவிகிதம் உயர்த்தப்பட்டன.

பிரிட்டனுடைய ஏற்றுமதி-இறக்குமதிக் கொள்கை இந்தியாவில் அதன் நிலைகளை பலப் படுத்திக் கொள்ள உதவியாக இருந்தது. பெரிய பிரிட்டிஷ் ஏகபோகக் கம்பெனிகள் காப்பு வரி அமைப்பைத் தமக்குச் சாதகமாக உபயோகித்து இந்தியாவில் துணைக் கம்பெனிகளைத் தொடங்கின. இந்தியாவின் இறக்குமதிகளில் பிரிட்டனுடைய பங்கு 1931-32இல் 35.5 சதவிகிதம் என்ற நிலையிலிருந்து 1933-34இல் 41.2 சதவிகிதமாக அதிகரித்தது.* எனினும் ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்கா மற்றும் இதர நாடுகளின் வர்த்தகம் விரிவடைவதற்கு எதிராக பிரிட்டன் நடத்திய பொருளாதார யுத்தத்தினல் இந்தியத் தொழில் துறையின் சில பிரிவுகள் காப்புவாதத்தின் பலன்களைத் தம்முடைய சொந்த முன்னேற்றத் துக்குப் பயன்படுத்துகின்ற வாய்ப்பைப் பெற்றன. இன்னும் முக்கியமானது என்ன வென்ருல் இந்தியா இன்னும் நெருக்கடியின் இரும்புப் பிடிக் குள் சிக்கவில்லை. அது தலைமை நாட்டில் ஏற்பட் டிருக்கின்ற நெருக்கடியின் பிரதிபலிப்பாகவே

* *Ibid.*, p. 86.

அதிகமாக உணரப்பட்டது; அது எல்லாவற்றை யும் தழுவியதாக இருக்கவில்லை. பிரிட்டிஷ் சமூக மூலதனத்தின் புனருற்பத்தியில் நேரடியாகப் பங் கெடுத்த தொழில் துறைகளை மட்டுமே அது முக்கியமாக பாதித்தது. பருத்தி, சர்க்கரை, சிமெண்டு மற்றும் சில தொழில் துறைகளில் உற்பத்தி அதிகரித்தது; புதிய பாக்டரிகள் திறக் கப்பட்டன. 1932க்கும் 1936க்கும் இடை யில் நெசவாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தித் துணி 4,00,000 கஜங்கள் அதிகரித்தது. தேக்கமான நிலைமை ஏற்பட்டிருந்தாலும், 1937 இல் புதிய நெருக்கடி மறுபடியும் ஏற்பட்ட போதி லும் பருத்தி நெசவுத் தொழிலில் முன்னேற்றம் நீடித்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் முற்பொழுதில் 1913இல் உற்பத்தி செய்த நூலின் அளவை விட இரண்டு மடங்கும் துணிகளில் மூன்று மடங்கும் அது ஏற்கெனவே உற்பத்தி செய்து கொண்டிருந்தது. பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகள் 1913ம் வருடத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது 1938இல் ஐந்து மடங்கு குறைந்து விட்டன. எனவே இரண் டாவது உலக யுத்தத்தின் முற்பொழுதின் போது இந்தியாவின் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட துணிகளில் அந்நியத் துணிகளின் பங்கு 10-15 சதவிகிதத்துக்கு அதிகமாக இருக்க வில்லை.

1930க்களின் தொடக்கத்தில் இந்தியாவில் சர்க்கரைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன; இரண்டாவது உலக யுத்தத்தின் முற்பொழுதில் சர்க்கரைத் தொழிலில் 1,00,000 தொழிலாளர்

கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சிமெண்டுத் தொழில் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. 1939இல் ஏற்கெனவே இந்தியாவில் 19 பாக்டரிகள் 1.2 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்து கொண்டிருந்தன. அவை உள்நாட்டுச் சந்தையின் முழுத் தேவைகளையும் அநேகமாகப் பூர்த்தி செய்தன.

அதே சமயத்தில் சணல், சுரங்கத் தொழில்கள், கைத்தொழில்கள் ஆகிய ஏற்றுமதித் தொழில் துறைகள் நெருக்கடியில் மிக அதிகமாக பாதிக்கப்பட்டன. சணல் மில்களின் எண்ணிக்கை குறையவில்லை என்ருலும் அவற்றின் உற்பத்தி குறைந்தது. கனிப் பொருள் உற்பத்தியின் மொத்த மதிப்பும் குறைந்தது; 1923இல் 25 மில்லியன் பவுண்டுகள் மதிப்பைக் கொண்டிருந்த உற்பத்தி 1932இல் 18 மில்லியன் பவுண்டுகளாகக் குறைந்தது.*

இரண்டு உலக யுத்தங்களுக்கு இடையிலிருந்த இந்தக் காலகட்டத்தில் தொழில்துறையின் வளர்ச்சி வேகம் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்தது. பாக்டரித் தொழிலாளர்களின் எண்ணிக்கை முதலாவது உலக யுத்தத்துக்கு முந்திய 17 வருடங்களின் போது 2.2 மடங்கு அதிகரித்தது; ஆனல் 1922க்கும் 1939க்கும் இடையில் அவர்களின் எண்ணிக்கை 28 சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது. இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட பங்குக் கம்பெனிகளின் எண்ணிக்கை அதிகரித்த

---

* P. Banerjee, *A Study of Indian Economics*, London, 1944, p. 74.

போதிலும் (1927-28ம் வருடங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது 1933-34ம் வருடங்களின் போது 2,515 அதிகமாக இருந்தது), அதைப் போலவே பாக்டரிகளின் எண்ணிக்கையும் அதிகரித்த போதிலும் (1911இல் 7,000மாக இருந்தது 1935இல் 9,261 ஆயிற்று), செலுத்தப்பட்ட தேசியப் பங்கு மூலதனம் நெருக்கடிக்கு முந்திய வருடமான 1925-26இல் இருந்ததைக் காட்டிலும் 1 மில்லியன் ரூபாய்கள் குறைந்திருந்தது.*

இந்த நெருக்கடியினுல் மிகவும் பாதிக்கப்பட்ட மற்ருெரு துறை மூலதனக் குவிப்பு மற்றும் மத்தியப்படுத்துகின்ற போக்காகும். இந்திய மூலதனத்தின் பழைய ஏகபோகக் கூட்டமைப்புகள் விரிவடைந்தன; புதிய கூட்டமைப்புகள் உருவாயின. 1941ம் வருடப் புள்ளி விவரங்களின்படி இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 44 சதவிகிதத்தினர், 500க்கும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருந்த 9,276 பாக்டரிகளில் வேலை செய்தார்கள்; எஞ்சிய 56 சதவிகிதத்தினர் 249 பெருந்தொழில் நிறுவனங்களில் வேலை செய்தார்கள்.

சணல், நிலக்கரி மற்றும் தேயிலைத் தோட்டத் தொழில்களில் ஏகபோகச் சங்கங்கள் இருந்தன. ஆனுல் இவை எவ்விதமான உள் நிகழ்வுப் போக்கிஞலும் ஏற்பட்டவையல்ல. ஏகபோகங்கள் வெளியே இருந்து ஏற்படுத்தப்பட்டிருந்தன.

---

* *Ibid.*, p. 74.

ஏனென்றால் இத்தொழில் துறைகளில் பிரிட்டிஷ் ஏகபோக மூலதனம் ஆதிக்கம் செலுத்தியது.

இந்தியாவின் உலோகத் தொழில் துறையில் ஆரம்பத்திலிருந்தே ஏகபோகங்கள் வளர்ச்சியடைந்தன. முதல் பெரிய ஏகபோகக் கம்பெனி 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது. 1938க்குள் அந்தக் கம்பெனி தேனிரும்பில் 64 சதவிகிதமும் எஃகில் 90 சதவிகிதமும் உற்பத்தி செய்தது. 1930இல் சிமெண்டுத் தொழில் துறையில் ஒரு சின்டிகேட் அமைக்கப்பட்டது. 1936 இல் அதை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட டிரஸ்ட் சிமெண்ட் தொழிலின் மொத்த உற்பத்தியில் மூன்றிலொரு பகுதியைத் தயாரித்தது. சணல் தொழிலிலும் உற்பத்திக் குவிப்பு ஏற்பட்டது. அங்கே ஒரு மில்லில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் சராசரி எண்ணிக்கை 3,000க்கும் அதிகமாக இருந்தது. 1937இல் சர்க்கரைத் தொழிலில் அமைக்கப்பட்ட சின்டிகேட் மொத்த சர்க்கரை ஆலைகளில் 60 சதவிகிதத்துக்கும் அதிகமானவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தியது.

பஞ்சாலைகளில் குவிப்பு மற்றும் மத்தியப்படுத்துகின்ற நிகழ்வுப் போக்கு ஓரளவுக்குக் குறைவாகவே இருந்தது. 2,000க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கின்ற பெரிய மில்கள் மொத்த மில்களின் எண்ணிக்கையில் 16 சதவிகிதமாக இருந்தன; மொத்த எண்ணிக்கையில் சுமார் 40 சதவிகிதம் தொழிலாளர்கள் அவற்றில் வேலை செய்தார்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தின் முற்பொழு தில் பிர்லா மற்றும் டாடாவின் தலைமையிலிருந்த இந்திய ஏகபோகக் கம்பெனிகள் இந்தியாவின் தொழில்துறை அரங்கத்தில் முன்னணிக்கு வந்தன.

தொழில்துறையில் மூலதனத்தை மத்தியப் படுத்துவதில் ஏஜன்சிகள் மிக முக்கியமான பாத் திரத்தை வகித்தன. இவை அந்நிய மற்றும் இந்திய ஏகபோகங்களின் விசேஷ வடிவமாக இருந் தன. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏஜன்சி ஸ்தா பனங்களின் அடிப்படையில் இவை ஏற்பட்டன. கம்பெனி ஊழியர்கள், தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகச் சூதாடிகள் இந்தியாவில் கொள்ளை யடித்த பணத்தை உபயோகித்துத் தரகு நிலையங் களை ஏற்படுத்தினார்கள். இவை இந்தியச் சரக்கு களை விலைபேசி வாங்கின, பிரிட்டிஷ் தொழில் துறைச் சரக்குகளை இந்தியாவில் விற்பனை செய் வதிலும் பங்கெடுத்தன.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் இந்த ஏஜன்சி கள் புதிய அம்சங்களைப் பெற்றன. இவற்றின் மூலமாகவே பிரிட்டிஷ் மூலதனம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவில் பிரிட்டிஷ் மூல தனத்தின் ஊடுருவலுக்கு முக்கியமான வழிகளில் ஒன்றாகவும் இந்தியாவில் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதில் பங்கெடுத்த அமைப்பாகவும் இருந்த ஏஜன்சிகள் புதிய கூட்டுப் பங்குக் கம் பெனிகளில் நிர்வாகம் மற்றும் மேற்பார்வைப் பணிகளை மேற்கொண்டன. தரகு வேலையிலிருந்து இந்தியாவைச் சுரண்டுகின்ற ஏகாதிபத்தியக் கம் பெனிகளை நடத்துகின்ற முறையில் அவற்றின் பாத்திரம் மாற்றமடைந்தது.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் மானேஜிங் ஏஜன்சிகள் பழைய ஏஜன்சிகள் அமைப்பிலிருந்து மட்டும் வளர்ச்சியடைந்துவிடவில்லை; அவை சுதந்திரமான முறையிலும் தோன்றின; அந்நிய ஏகபோகங்களுடன் மிகவும் நெருக்கமான தொடர்புகளை வைத்துக் கொண்டிருந்தன. ஸ்தாபனத்தின் முக்கியமான வடிவம் வரையறுக்கப்பட்ட கூட்டுப் பங்குக் கம்பெனிகள்.

ஆனால் அவை வர்த்தகம் அல்லது தொழிலில் ஈடுபடுகின்ற வழக்கமான கம்பெனிகளைப் போல இருக்கவில்லை. அவை மிக விரிவான, பன்முகமான பணிகளில் ஈடுபட்டிருந்தன. தொழில் துறையின் பல்வேறு பிரிவுகளில் பங்குக் கம்பெனிகளை நிறுவுகின்ற பொறுப்பை மானேஜிங் ஏஜன்சி மேற்கொண்டது. அது பங்குகளை வெளியிட்டது, கடன் கொடுத்தது, நிர்வாக அதிகாரிகளை நியமித்தது, உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய உதவியளித்தது, இயந்திரங்களுக்கு ஏற்பாடு செய்தது, இதரவை. கூட்டுப் பங்குக் கம்பெனிக்கும் (அல்லது தொழில் நிறுவனத்துக்கும்) மானேஜிங் ஏஜன்சிக்கும் இடையில் உறவுகள் விசேஷ ஒப்பந்தத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டன. இந்த ஒப்பந்தக் காலம் வழக்கமாக 20 முதல் 40 வருடங்களுக்கு நீடித்தது. பெரும்பான்மையான ஒப்பந்தங்களில் காலக்கெடு நிர்ணயிக்கப்படவில்லை. மானேஜிங் ஏஜன்சி தரகர் என்ற முறையில் மட்டுமே இயங்கியபடியால் சட்டப்படி அது பங்குதாரர்களுக்கு எந்தப் பொறுப்பையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் அதன் நிர்வாகத்துக்கு உட்பட்ட கம்பெனிகள்

மானேஜிங் ஏஜன்சியை முழுமையாகச் சார்ந் திருந்தன. அது அந்தக் கம்பெனிகளை ஈவிரக்க மில்லாமல் சுரண்டியது.

தொழில்துறைக்குக் கடன் வசதிகளை அமைப் பதிலும் மானேஜிங் ஏஜன்சிகள் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்தன. அப்பொழுது இந்தியா வில் வங்கி அமைப்பு நன்கு வளர்ச்சி அடைந் திருக்கவில்லை; வங்கிகளுக்கும் தொழில் துறைக்கும் இடையில் நேரடியான தொடர்புகள் அநேகமாகக் கிடையாது. தொழில் துறைக்கு வங்கிகளின் கட னுதவி நடைமுறையில் மானேஜிங் ஏஜன்சிகளின் மூலமாகவே நிறைவேற்றப்பட்டது. அத்தகைய கடன்களுக்கு நேரடியான கடன்களைக் காட்டிலும் 1-2 சதவிகிதம் அதிக வட்டி வசூலிக்கப்பட்டது. ஒரு தொழில் நிறுவனம் கடன் வாங்குவதற்காக வங்கியை நேரடியாக அணுகினாலும் கூட கடன் பெறுவது முற்றிலும் மானேஜிங் ஏஜன்சியையே பொறுத்திருந்தது. தொழில் நிறுவனத்தின் தலைவர் பிணையப் பத்திரங்களில் கையெழுத்திட்டிருந்தா லும் மானேஜிங் ஏஜன்சியும் கையெழுத்திட்டிருந் தால் மட்டுமே வங்கிகள் கடன் கொடுத்தன.

மானேஜிங் ஏஜன்சிகள் தொழில் நிறுவனங் களின் சார்பில் வர்த்தகக் கேந்திரங்களுடனும் உலகச் சந்தையுடனும் உறவுகளை ஏற்படுத்திய தோடு அவற்றைத் தமது பிடிக்குள் உறுதியாக வைத்துக் கொண்டிருந்தன. கம்பெனிகள் தாமாக வே சரக்குகளை விற்பனை செய்யவோ அல்லது இயந்திரங்களையும் தளவாடங்களையும் வாங்கவோ அவற்றுக்கு உரிமை கிடையாது. இரண்டு நட வடிக்கைகளும் மானேஜிங் ஏஜன்சியின் மூலமாகவே

நடைபெற வேண்டும். இதற்காக அது கம்பெனி அல்லது தொழில் நிறுவனத்திலிருந்து மொத்த உற்பத்தி அல்லது விற்பனே செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பின் மீது கமிஷன் பெற்றுக் கொண்டது அல்லது லாபத்தில் குறிப்பிட்ட சதவிகிதம் என்ற வடிவத்தில் அதைப் பெற்றது.

ஒரு காலனி நாட்டில் அந்நிய நிதி மூலதன ஏகபோகத்தின் விசேஷமான ரகம் என்ற முறையில் மானேஜிங் ஏஜன்சிகள் இந்திய மூலதனத்தின் அடிப்படையிலும் தோன்றின. இந்தியாவின் பெருமுதலாளி வர்க்கம் நாட்டில் தொழில்துறை உற்பத்தியை நிர்மாணிப்பதில் ஈடுபட்ட பொழுது முன்னரே உருவாக்கப்பட்டிருந்த சுரண்டல் அமைப்பை சுவீகரித்துக் கொண்டது. அந்நிய மூலதனத்துடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்த, வர்த்தகர்கள் மற்றும் லேவாதேவிக்காரர்களிலிருந்து தோன்றிய ஸ்தல முதலாளி வர்க்கம் தன்னுடைய முந்திய நடவடிக்கைகளுக்கு மிகவும் ஒட்டிய வடிவம் என்ற முறையில் மானேஜிங் ஏஜன்சிகளே ஏற்றுக் கொள்வதற்கு முற்றிலும் தயாராக இருந்தது.

மானேஜிங் ஏஜன்சிகள் தங்களுடைய சொந்த, மிகவும் லாபகரமான முறைகளின் மூலம் நாட்டைச் சுரண்டுகின்ற வாய்ப்பை இந்தியாவின் பெரிய வர்த்தகர்களுக்கும் லேவாதேவிக்காரர்களுக்கும் கொடுத்தன; தொழில்துறையின் முன்னேற்றத்துக்கு ஏகாதிபத்தியம் விதிக்கின்ற தடைகளே, தேசிய உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள முதலாளி வர்க்கத்துக்கு மிகவும் தொல்லேயளிக்கின்ற தடைகளேச் சமாளிப்பதற்கு அவை உதவி செய்தன.

பிரிட்டிஷ் மானேஜிங் ஏஜன்சிகளைத் தவிர இந்திய மானேஜிங் ஏஜன்சிகளும் ஏற்பட்டன (அவற்றில் மிகவும் பெரியவை டாடா, பிர்லா, டால்மியா, சிங்கானியாவுக்குச் சொந்தமானவை). அவற்றின் நடவடிக்கைகள் பிரிட்டிஷ் மானேஜிங் ஏஜன்சிகளின் நடவடிக்கைகளிலிருந்து சிறிதளவு கூட வேறுபடவில்லை. அவை அந்நிய மூலதனம் மற்றும் அந்நிய மானேஜிங் ஏஜன்சிகளைச் சார்ந்திருந்தது மட்டும் ஒரே வேறுபாடாக இருந்திருக்கலாம். இந்தியத் தொழில்துறையைச் சுற்றி வளைத்துக் கொண்டு விலங்குகளைப் பூட்டிய மானேஜிங் ஏஜன்சி முறை அதன் பொருளாதார உள்ளடக்கத்தில் நாட்டில் ஸ்தல மற்றும் அந்நிய மூலதனத்தை ஒன்றுசேர்க்கின்ற ஏகபோக வடிவமாக இருந்தது. அவற்றின் நடவடிக்கைகள் விரிவடைந்ததால் மூலதனம் அதிகமாக மத்தியப் படுத்தப்படுவதற்கு வழி ஏற்பட்டது. இந்த நிகழ்வுப் போக்கு 1930க்களில் குறிப்பிடத்தக்க வேகத்துடன் வளர்ச்சியடையத் தொடங்கியது; மானேஜிங் ஏஜன்சிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்த கம்பெனிகளின் எண்ணிக்கை மென்மேலும் அதிகரித்தது.

இந்தியாவின் தொழில்துறையில் ஏகபோகங்களின் சங்கங்கள் மிகவும் தனித்தன்மையான கூறுகளைக் கொண்டிருந்தன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் மூலதனம் மத்தியப் படுத்தப்பட்டதனுல் மட்டும் ஏகபோகங்கள் தோன்றிவிடவில்லை; உற்பத்தி மிகவும் அதிகமான அளவுக்குக் குவிக்கப்பட்டதன் விளைவாகவும்— இது மூலதனத்தின் அங்கக அமைப்பை மிகவும்

அதிகப்படுத்தியது—அவை தோன்றின. இந்தியாவில் மானேஜிங் ஏஜன்சிகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத, பெரும்பாலும் வெவ்வேறு தொழில் துறைகளைச் சேர்ந்த டஜன் கணக்கான பங்குக் கம்பெனிகளை ஒன்றுசேர்த்தன. இந்திய ஏகபோகங்கள் உற்பத்திக் குவிப்பை அடிப்படையாகக் கொண்டு அதிகம் வளர்ச்சியடையவில்லை. அவை பங்குக் கம்பெனிகளை மானேஜிங் ஏஜன்சிகளுக்குக் கீழ்ப்படுத்தின. இது வர்த்தக மற்றும் கடனுதவி நிர்வாகம் ஒரே அமைப்பிடம் குவிவதற்கு வழி வகுத்தது. ஆகவே இது மூலதனக் குவிப்பின் பிரத்யேகமான வடிவமாக இருந்தது. இது பிரதானமாக பணச் செலாவணித் துறைக்கு மட்டுமே உரியதாக இருந்தது,இதனுடன் பொருந்திய உற்பத்திக் குவிப்பு ஏற்படவில்லை. இத்தகைய ஏகபோகம் வளர்ச்சியடைகின்ற பொழுது கட்டுப்படுத்தப்பட்ட மூலதன அளவின் அதிகரிப்பு கீழ்ப்படுத்தப்பட்ட தொழில் நிறுவனங்களின் மூலதனத்தின் அங்கக அமைப்பின் வளர்ச்சியைக் குறிக்கவில்லை, பிரதானமாக அந்த மானேஜிங் ஏஜன்சியினுல் நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பையே குறிக்கிறது.

இந்திய ஏகபோகங்களுடைய கம்பெனிகளும் தொழில் நிறுவனங்களும் மிகவும் அதிகமாக வேறுபட்டிருந்தபடியால், ஒரு குறிப்பிட்ட ஏகபோகத்திற்குள் அதன் தொழில்துறைப் பிரிவுகளின் ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கு எவ்விதமான சாத்தியமும் அநேகமாக இல்லை.

உதாரணமாக, பிர்லாவின் மானேஜிங் ஏஜன்சி எட்டு பஞ்சாலைகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள்,

வங்கிகள், நாளிதழ்கள் (**ஹிந்துஸ்தான் டைம்ஸ், தி லீடர், பாரத்**), ஒரு பேப்பர் மில், இதரவற்றை நிர்வகித்தது.

இந்தியாவின் மிகப் பெரிய ஏகபோக நிறுவனமாகிய டாடாவின் மானேஜிங் ஏஜன்சி உலோகத் தொழில் நிறுவனங்கள், ரயில் பெட்டித் தொழிற்சாலைகள், விவசாயக் கருவிகளைத் தயாரிக்கும் பாக்டரிகள், பஞ்சாலைகள், மின்சார உற்பத்தி நிலையங்கள், இரசாயன மற்றும் சிமெண்டுத் தொழிற்சாலைகள், பெயிண்ட் தயாரிக்கும் பாக்டரிகள், தாவர எண்ணெய் மற்றும் சோப்புத் தயாரிக்கும் பாக்டரிகள், போக்குவரத்துக் கம்பெனிகள், ரேடியோ நிலையங்கள், ஹோட்டல்கள் ஆகியனவற்றை நிர்வாகம் செய்தது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் குறிப்பிட்ட தொழில் துறைகளில் மிகவும் அதிகமான குவிப்பின் அடிப்படையில் ஏகபோகங்கள் தோன்றின; அதன் பிறகே அவை தமது ஆதிக்கத்தின் கீழ் மற்ற தொழில் துறைகளை ஏற்படுத்தின. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏகபோகங்கள் சற்று நீண்டகாலம் வரை தமது திட்டவட்டமான சிறப்பு ஈடுபாட்டைத் தக்க வைத்துக் கொண்டிருந்தன: எஃகு டிரஸ்டுகள், கார் உற்பத்தி, எண்ணெய்க் கம்பெனிகள் இதரவை. இந்தியாவில் ஏகபோகங்கள் இத்தகைய திட்டவட்டமான சிறப்பு ஈடுபாட்டைக் கொண்டிருக்கவில்லை. ஒருவேளை டாடா மட்டும் இதற்கு ஒரே விதிவிலக்காக இருக்கலாம். அக்குடும்பம் திட்டவட்டமாக கனரக இயந்திரத் தொழில்துறையில் அதிகமான அக்கறை கொண்டிருந்தது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏகபோகங்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைவாக இருந்தன, முதலாளித்துவ வளர்ச்சியின் உயர்ந்த மட்டத்தைப் பிரதிபலித்தன. ஆனால் இந்தியாவில் முதலாளித்துவம் வளர்ச்சியடையத் தொடங்கிக் கொண்டிருந்த பொழுது ஏகபோகங்கள் தோன்றின.

ஆகவே ஏகபோகங்களின் வடிவம் என்ற முறையில் மானேஜிங் ஏஜன்சி முறை தொழில் துறையில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு முக்கியமான தடைகளில் ஒன்றாக இருந்தது. அது தொழில்துறையின் பல பிரிவுகளை ஏகாதிபத்திய ஏகபோகங்கள், வர்த்தகர்கள், லேவாதேவிக்காரர்கள் மற்றும் நிதிவேட்டைக்காரர்களிடம் அப்படியே ஒப்படைத்தது. மானேஜிங் ஏஜன்சிகள் அந்நிய மூலதனத்துக்கு அதிகமான லாபங்களை உத்தரவாதம் செய்து, நாட்டில் தொழில்துறைக் குவிப்பைத் தீவிரமாகக் குறைத்தும் அதன் சுதந்திரமான பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்தும் தேசியத் தொழில்துறையின் வளர்ச்சியைத் தாமதப்படுத்தின.

இரண்டாவது உலக யுத்தத்தின் முற்பொழுதில் இந்தியாவில் தேனிரும்பு உற்பத்தி பிரிட்டனின் ஒரு நபருடைய அளவில் (Per Capita) $^1/_{36}$ பங்காகவும், ஜப்பானுடையதில் $^1/_7$ பங்காகவும் இருந்தது; அதன் எஃகு உற்பத்தி பிரிட்டனில் ஒரு நபருடைய அளவில் $^1/_{90}$ பங்காகவும் இருந்தது.

தொழில்துறையின் கட்டமைப்பு காலனித் தன்மைக்கு எடுத்துக் காட்டாக இருந்தது.

மென்னயத் தொழில்துறை மட்டுமே (குறிப்பாக பருத்தித் தொழில்துறை)ஒப்பீட்டளவில் வளர்ச்சி அடைந்திருந்தது. பாக்டரிகளின் மொத்த எண்ணிக்கையில் 80 சதவிகிதமும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 80 சதவிகிதமும் மென்னயத் தொழில்துறையில் இருந்தன. இந்தியாவில் தனியாக என்ஜினியரிங் தொழில்துறை ஏற்படவில்லை; மின்சார என்ஜினியரிங், கார் அல்லது கனரகத் தொழில்துறையின் முக்கியமான இதர பிரிவுகளும் கிடையாது. இந்தியாவில் அப்பொழுது சிறு அளவுக் கைத்தொழில்கள் தனிமுதலான மேலாதிக்கத்தைக் கொண்டிருந்தது இந்தியத் தொழில்துறைக்கு ஒரு குறியடையாளமாகும். 1931ம் வருட மக்கள் தொகைக் கணக்குப் படி தொழில்துறையின் எல்லாப் பிரிவுகளிலும் வேலை செய்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 15 மில்லியன்களுக்குச் சிறிது கூடுதலாகும். இந்த எண்ணிக்கையில் 2 மில்லியன் நபர்கள் மட்டுமே பாக்டரிகளில் வேலை செய்தார்கள்.

முதலாளித்துவ வளர்ச்சியின் மிகவும் கீழ்நிலையான கட்டங்கள் மேலோங்கியிருப்பது முதலாளித்துவத் தொழில்துறையின் வளர்ச்சி மட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்ற முக்கியமான குறியீடாகும். மூலதனத்தின் மிகவும் கீழ்நிலையான வடிவங்களாகிய வர்த்தக மற்றும் கடன் மூலதனம் தொழில்துறையில் வகிக்கின்ற மாபெரும் பாத்திரத்தை அவை எடுத்துக்காட்டுகின்றன. சிறு அளவு உற்பத்திக்குச் சந்தையுடன் அநேகமாக நேரடியான தொடர்பு இல்லை; வர்த்தகர்களும் லேவாதேவிக்காரர்களும் அதன் மீது விலங்குகளை

மாட்டி அதன் சுதந்திரத்தைப் பறித்துவிடுகிறார்கள், அதை ஈவிரக்கமில்லாமல் சுரண்டி வருகிறார்கள். அதன் போட்டித் தன்மை மிகவும் அதிகமான சுரண்டல், மலிவான உழைப்பு என்ற அடிப்படைகளின் மீது நிறுவப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் ஏகபோகங்கள் முதலாளித்துவ வளர்ச்சியின் மிகவும் கீழ்நிலையான வடிவங்களுடன் சக வாழ்க்கை நடத்தின; சிறிய, கைத்தொழில் பட்டறைகளுக்கு மேலே ஓங்கி உயர்ந்து நின்றன.

அந்நிய மூலதனம் தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துவது நீடித்தது. 1933இல் இந்தியாவில் 901 அந்நியக் கம்பெனிகள் இருந்தன; அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் 11,000 மில்லியன் ரூபாய்கள் (831 மில்லியன் பவுண்டுகள் அல்லது இந்தியப் பங்குக் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனத்தை விட நான்கு மடங்கு). மொத்த அந்நிய முதலீடுகள் 13,300 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகம் (1,150 மில்லியன் பவுண்டுகள்).* இந்தப் புள்ளிவிவரங்கள் அந்நிய மூலதனத்தின் உண்மையான நிலையை எடுத்துக்காட்டுவதற்குத் தவறுகின்றன. ஏனென்றால் இந்தியாவுக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் மட்டுமே அந்நியக் கம்பெனிகள் என்று குறிப்பிடப்படுகின்றன. ஆனால் 1930க்களில் ஏற்கெனவே பல அந்நியக் கம்பெனிகள் இந்தியாவில் பதிவு பெற்றுத்

* P. Banerjee, *A Study of Indian Economics*, p. 119.

தங்கள் பெயருடன் ''இந்தியா லிமிடெட்'' என்ற வாலைச் சேர்த்துக்கொண்டு இந்திய மாறு வேடத்தை அணிந்து கொண்டிருந்தன.

பிரிட்டிஷ் மூலதனம் தொழில்துறை, வர்த்தகம் மற்றும் நிதிவசதி ஆகியவற்றில் ஆதிக்கமான நிலைகளை வகித்தது; அரசு அதற்கு ஆதரவு கொடுத்தது. இந்தியக் கம்பெனிகளால் பிரிட்டிஷ் நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தை உதறித் தள்ள முடியவில்லை. மிகவும் குறுகலான உள்நாட்டுச் சந்தை இந்தியத் தொழில்துறையின் வளர்ச்சிக்கு மற்ருெரு முக்கியமான தடையாக இருந்தது. சணல், சர்க்கரை மற்றும் சிமெண்டுத் தொழில் துறைகளின் உற்பத்தி குறைவாக இருந்த போதிலும் அவை 1930க்களின் கடைசியிலேயே மிகை உற்பத்தி என்ற நெருக்கடியில் சிக்கி விட்டன. ஏகாதிபத்தியம் ஆதரவளித்த பிற்போக்கான விவசாய அமைப்பு இந்தியாவின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தைப் பெரிய அளவுக்குத் தடுத்தது. நகரங்களிலும் கிராமங்களிலும் முதலாளித்துவ வளர்ச்சியின் வேகங்களுக்கு இடையில் இடைவெளி அதிகரித்தது. அந்த இடைவெளி காலனியாதிக்க நிலைமையில் சமாளிக்க முடியாத முரண்பாடுகளைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியது; தொழில்துறை முன்னேற்றத்துக்குப் புறநிலையான வரையறைகளை விதித்தது. முதலாளித்துவத் தொழில்துறைக்கு அவசியமான சந்தையின் வளர்ச்சி மிக மிக மெதுவாக இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் பண்ட-பண உறவுகள் மற்றும் முதலாளித்துவ வளர்ச்சி பலமடைந்

தது; விவசாயத்தில் முதலாளித்துவத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் இடையில் தோன்றிய முரண்பாடுகளும் பலமடைந்தன. ஆனல் நிலப் பிரபுத்துவம் இன்னும் போதிய பலத்தைக் கொண்டிருந்தது, ஏகாதிபத்தியமும் அதற்கு ஆதரவு கொடுத்தது. எனவே இந்தியாவில் முதலாளித்துவ வளர்ச்சி ஏற்றத்தாழ்வாக இருந்தது. முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவச் சுரண்டலை அகற்றுவதற்கு பதிலாக அதனுடன் பின்னிப் பிணைந்து செயலாற்றியது. அதன் விளைவாக விவசாயிகள் சுரண்டப்படுவது பன்மடங்கு தீவிரமடைந்தது, விவசாயிகள் நிலங்களை இழப்பதற்கு இட்டுச் சென்றது. நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்கள் கொள்ளையடிக்கின்ற விவசாய முறைகளைப் பின்பற்றினர்கள். அவை கிராமங்களில் உற்பத்திச் சக்திகளை அழித்துப் பசியையும் வறுமையையும் பெருக்கின.

உற்பத்தியில் முக்கியமான காரணியாகிய நிலம் நிலப்பிரபுத்துவ வர்க்கத்திடம், லேவாதேவிக்காரர்கள் மற்றும் வர்த்தகர்களிடம் குவிந்தது. இரண்டு உலக யுத்தங்களுக்கு இடையிலிருந்த வருடங்களில் எண்ணற்ற விவசாயிகள் தமது நிலங்களைப் பறிகொடுத்தனர்; நிலமே இல்லாத அல்லது துண்டு நிலம் மட்டுமே உள்ள விவசாயிகளின் எண்ணிக்கை பெரிய அளவுக்கு அதிகரித்தது. 1930க்களின் கடைசியில் மிகவும் பெரிய இந்திய மாகாணங்களாகிய பஞ்சாபிலும் வங்காளத்திலும் 70 சதவிகிதத்துக்கும் அதிகமான நிலவுடைமைகளால் விவசாயிக்கும் அவன் குடும்பத்துக்கும் போதுமான உணவைக் கொடுக்க

முடியவில்லை. பம்பாய், சென்னை மற்றும் பிரிட்டிஷ் இந்தியாவின் இதர மாகாணங்களிலும் இதே நிலைமையே இருந்தது. விவசாயிகளிடம் இருந்த நிலவுடைமைகள் மிகவும் சிதறியிருந்தன என்பதையும் இங்கே கூடுதலாகச் சொல்ல வேண்டும். 10—15 ஏக்கர்கள் நிலவுடைமை ஒரே நிலமாக இருப்பது அபூர்வம். அவை பெரும்பாலும் ஒன்றுக்கொன்று தூரமான இடங்களில் சிறு துண்டு நிலங்களாக சிதறிக்கிடந்தன.

இந்தியாவில் விவசாயப் பிரதேசங்களில் நிலவிய மிகை மக்கட்பெருக்கம் இதற்கு முக்கியமான காரணம். கிராமங்களில் இருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட விவசாய மக்களின் இயற்கையான வளர்ச்சியும் நகரங்களிலும் நாட்டுப்புறத்திலும் அழிந்துபோன கைவினைஞர்கள் கிராமங்களுக்கு வந்ததும் விவசாய நிலவுடைமைகளைப் பிரிப்பதை அவசியப்படுத்தின.

நிலங்களைப் பறிகொடுத்தல் தீவிரமடைந்த பொழுது சிறிய, துண்டு நிலவுடைமைகள் ஏராளமாக ஏற்பட்டன. இந்த நிகழ்வுப் போக்கு ஒரு குறிப்பிட்ட விவசாய முறையைத் தோற்றுவித்தது. அது இயல்பாகவே உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை, உழைப்பின் சமூக வடிவங்களை, மூலதனத்தின் சமூகக் குவிப்பை, பெரிய அளவில் கால்நடை வளர்ப்பை, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை விவசாயத்துக்குப் பயன்படுத்துவதை இல்லாதபடிச் செய்தது. சிறு அளவு நிலவுடைமை உற்பத்திச் சாதனங்கள் முடிவில்லாமல் சிதறிப்போவதற்கு, மனிதனுடைய உழைப்பு வீணுவதற்கு, உற்பத்தி நிலைமைகள் மோசமடைவதற்கு வழி வகுத்தது.

விவசாயிகள் நிலத்தைப் பறிகொடுத்ததும் சிறு அளவு உடைமை பெயரளவில் ஒழிக்கப்பட்ட தும் சிறு அளவு உற்பத்தியைப் பாதுகாக்க முற்பட்டன. அங்கே சுதந்திரமான தொழிலாளி தோன்றவில்லை, விலங்குகள் மாட்டப்பட்ட குத் தகை விவசாயி தோன்றினன். ஒரு காலத்தில் அவனுடைய உடைமையாக இருந்த நிலத்திலேயே அவன் சில சமயம் உழைக்கும் படி நிர்ப்பந்திக்கப் பட்டான். குத்தகை விவசாயம் விவசாயியின் வாழ்க்கைக்கு முக்கியமான வழியாக இருப்பது மென்மேலும் அதிகரித்தது. நாட்டுப்புறப் பகுதி களில் மக்கட்பெருக்கம் அதிகரித்த பொழுது, காலனி ஆட்சி நீடிக்கின்ற வரை அங்கே முத லாளித்துவ வளர்ச்சி மென்மேலும் இயலாததா யிற்று. பெரிய அளவு நிலவுடைமை சிறு நிலத்தை யும் துண்டு நிலத்தையும் உபயோகிப்பதோடு ஒன்றுசேர்ந்தது. நிலக்கிழார்களுடைய நிலம் முழு வதும் அல்லது அநேகமாக முழு நிலமும் குத்தகை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது. அதைப் பயன்படுத்துவதற்காக அவர்கள் அறுவடையில் மூன்றில் இரண்டு பங்கை வாரமாகக் கொடுத் தார்கள். சொந்த நிலத்தைத் தானே பயிரிடா மல் வாரம் வசூலித்த, விவசாயம் செய்யாத நிலக்கிழார் இந்தக் காலத்தின் அடையாளச் சின்னமாகத் திகழ்கிறார். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பெரும்பகுதி நிலத்தைக் குத்தகை விவசாயிகள் விவசாயம் செய்தார்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 1930க்களில் அவர்கள் பஞ்சாபில் சுமார் பாதியளவு நிலத்தை விவசாயம் செய்தார்கள்; குஜராத்தில் 1917க்கும்

1943க்கும் இடையில் மொத்த நிலத்தில் விவசாயம் செய்யாத நிலக்கிழார்களிடமிருந்த நிலத்தின் பங்கு 24 சதவிகிதத்திலிருந்து 32 சதவிகிதமாக உயர்ந்தது. வங்காளத்தில் விவசாயம் செய்யாமல் நில வாரங்களைக் கொண்டு வாழ்க்கை நடத்திய நிலக்கிழார்களின் எண்ணிக்கை 1921க்கும் 1931க்கும் இடையில் 62 சதவிகிதம் அதிகரித்தது; பர்காதார்கள் என்று சொல்லப்பட்ட குத்தகை விவசாயிகள் மாகாணத்தின் மொத்த நிலத்தில் சுமார் 40 சதவிகிதத்தை விவசாயம் செய்தார்கள்.

இத்தகைய சூழ்நிலைகளில் நிலப்பிரபுக்களின் பண்ணைகள் முதலாளித்துவத் திசை வழியில் மிகக் குறைவாகவே வளர்ச்சியடைந்தன; இந்த வளர்ச்சி பிரதானமாக நிலப்பிரபுவுக்குத் தரப்பட்ட உழைப்பு அதிகரிக்கும் வடிவத்தையே அடைந்தது; புதிய முதலாளித்துவ உற்பத்தி முறைகள் வளர்ச்சியடையவில்லை. நிலப்பிரபுத்துவ நிலக்கிழார் தனக்கென்று சொந்தமான துண்டு நிலத்தையும் கருவிகளையும் வைத்திருக்கின்ற குத்தகை விவசாயியின் மீதே அக்கறை கொண்டிருந்தார். இத்தகைய உடைமைகளில் முதலாளித்துவம் மற்றும் பண்ட-பண உறவுகளின் வளர்ச்சி பிரதானமாக வாரம் அதிகரிப்பு என்ற வடிவத்தை அடைந்தது. எனினும் சில பண்ணைகளில் புதிய, முதலாளித்துவ உற்பத்தி வடிவங்கள் தோன்றத் தொடங்கின. 1930க்களின் கடைசியில் மூன்று விதமான நிலப்பிரபுத்துவப் பண்ணைகள் இருந்தன என்று உத்தேசமான முறையில் வரையறுத்துக் கூற முடியும்.

முதல் ரகத்தில் குத்தகை விவசாயிகளினுல் பயிரிடப்பட்ட நிலவுடைமைகள் இருந்தன; ஆனுல் இந்த ரகத்தில் நிலக்கிழார் விவசாயிக்கு விதைகளைக் கொடுத்தார். அதாவது நிலக்கிழார் எதை விரும்புகிருரோ அதையே விவசாயி விதைக்க முடியும். இந்த ரகத்தில் நிலவுடைமையை ஒரு ஒற்றைப் பொருளாதார அலகாகக் கருத முடியும்; அதில் குத்தகை விவசாயி ஏற்கெனவே கூலித் தொழிலாளியின் நிலைக்குப் பாதியளவுக்கும் அதிகமாகத் தாழ்த்தப்பட்டு விட்டார். இது முதலாளித்துவ உறவுகளில் முதலாவது வடிவம்—இதுவே மிகவும் கீழான வடிவம். குத்தகை விவசாயி உற்பத்திச் சாதனங்களை, அதாவது விவசாயக் கருவிகளைச் சொந்தமாக வைத்திருப்பது இதன் பிரத்யேகமான அம்சம்.

இரண்டாவது ரகத்தில் எல்லா உற்பத்திச் சாதனங்களும் விதைகளும் நிலக்கிழாரின் உடைமையாக இருக்கின்றன; குத்தகை விவசாயி இன்னும் கூலித் தொழிலாளியாகவில்லை. ஏனென்ருல் அவர் நிலக்கிழாருக்கு அறுவடையில் பங்கு கொடுக்கிருர். கூலிக்காக உழைக்கின்ற கூலித் தொழிலாளியிடமிருந்து அவர் ஒரு சிறு காலடி தூரமே தள்ளி நிற்கிருர்.

மூன்ருவது ரகத்தில் நிலக்கிழார் கருவிகளையும் உற்பத்திச் சாதனங்களையும் உடைமையாக வைத்துக் கொண்டு கூலியுழைப்பைப் பயன்படுத்துகிருர். அது ஏற்கெனவே முதலாளித்துவ உற்பத்தி முறையாக இருக்கிறது. இங்கே நிலக்கிழார் முதலாளித்துவ உற்பத்தி அடிப்படையில் விவசாயம் செய்கிருர்; கூலித் தொழிலாளர்களை

வேலைக்கு வைத்திருக்கிறார்; அவர்களுக்குக் கூலி கொடுக்கிறார்.

எனினும் நடைமுறை வாழ்க்கையில் இந்த வடிவங்கள் அனைத்தும் பின்னிப் பிணைந்திருந்தன, ஒரே நிலப் பண்ணையில் வெவ்வேறு நிலப் பகுதிகளில் வெவ்வேறு முறைகளில் விவசாயம் நடைபெறக் கூடும் என்பது உண்மையே.

மொத்தத்தில் இந்தியாவில் அரை-நிலப் பிரபுத்துவ நிலவுடைமைகள் நிலவின; முதலாளித்துவ ரகத்தைச் சேர்ந்த நிலவுடைமைகள் மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் இருந்தன. காலனி நாடாகிய இந்தியாவில் சொந்தமாக நிலத்தில் விவசாயம் செய்வதைக் காட்டிலும் குத்தகை விவசாயிகளிடமிருந்து மிகவும் அதிகமான வாரம் வசூலித்து அவர்களைச் சுரண்டுவது நிலக்கிழாருக்கு மிகவும் லாபகரமானதாக இருந்தது. ஆகவே நிலப்பிரபுத்துவ நிலவுடைமை இந்தியாவின் நாட்டுப்புறங்களில் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருந்தது.

விவசாய நிலங்களில் பெரும்பகுதி நிலக்கிழார்களுக்குச் சொந்தமாக இருந்தபடியால் அவர்கள் கூலியாட்களை வேலைக்கு வைத்துக் கொள்கின்ற பணக்கார விவசாயிகளின் வளர்ச்சியைத் தடை செய்தார்கள்.

கூலியாட்களை வேலைக்கு வைத்துக் கொள்கின்ற பணக்கார விவசாயிகளின் முயற்சிகளும் பிரதானமாக, நிலத்தில் மூலதன முதலீடு இல்லாமல் பழைய அடிப்படையிலேயே மிகவும் அதிகமான உபரியைப் பெறுவதில்தான் தீவிரமாக இருந்தன. அத்தகைய நிலவுடைமைகளில் மூல

தனத்தின் அங்கக அமைப்பு மிகவும் குறைவாக இருந்தது.

நிலத்தின் அதிகமான விலையும் உயர்ந்த வாரமும் நிலத்தைக் குத்தகைக்கு விடுவதை லாபகரமானதாக்கின. ஆட்களை வேலைக்கு வைத்திருக்கின்ற விவசாயி தன்னுடைய நிலத்தில் கணிசமான பகுதியை விவசாயிகளுக்கு குத்தகைக்கு விடுவது வழக்கமாக இருந்தது. அவர் மிகவும் சிறந்த நிலங்களைத் தனக்கு வைத்துக் கொள்வார்; கூலியுழைப்பையும் குத்தகை விவசாயிகள் மற்றும் தன்னிடம் கடன் வாங்கியிருப்பவர்களின் இலவச உழைப்பையும் உபயோகித்து அதில் விவசாயம் செய்வார். இந்த முறை நிலத்தின் அதிகமான விலையையும் உயர்ந்த வாரத்தையும் பயன்படுத்தி பணப்பயிர் விவசாயத்தைச்—சாராம்சத்தில் முதலாளித்துவ உற்பத்தியை—நடத்துவதைச் சாத்தியமாக்கியது. எனவே பணக்கார விவசாயி நிலவுடைமையில் நிலப்பிரபுத்துவ வடிவங்களுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும்படி ஆயிற்று.

ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவ நிலவுடைமையைப் பாதுகாத்து ஊக்குவித்தபடியால் பணக்கார விவசாயிகளின் பண்ணைகளில் கூட அரை நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகள் நெடுங்காலம் வரையிலும் பாதுகாக்கப்பட்டிருந்தன. அவை தற்காலிகமான வடிவமாக இருந்திருக்க வேண்டியவை; ஆனால் அவை கிராமங்களில் சமூக-பொருளாதார உறவுகளின் முறைச்சட்டமாக இருந்தன. இந்தியாவில் கூலியாட்களை வேலைக்கு வைத்துக் கொள்கின்ற பணக்கார விவசாயியின்

தனித்தன்மையான, முரண்பாடான அம்சம் இதில் அடங்கியிருக்கிறது. நிலப்பிரபுத்துவ எச்சங்கள் அவருக்குச் சுமையாக இருந்தன; ஆனல் அவர் அவற்றையும் உபயோகித்துக் கொண்டார்.

ஆனல் முதலாளித்துவ உறவுகளின் பிரதிநிதி என்ற முறையில் பணக்கார விவசாயி நிலப்பிரபுத்துவ நிலவுடைமைக்கு எதிராக இருந்தார்; நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் எல்லா விவசாயிகளுடனும் சேர்ந்து நின்றார்.

பண்ட-பண உறவுகள் மற்றும் முதலாளித்துவ வளர்ச்சி சிறு நிலவுடைமையாளர்கள் மற்றும் குத்தகை விவசாயிகளில் ஒரு பகுதியினர் விவசாயத் தொழிலாளர்களாக மாற்றப்படுவதற்கு வழி வகுத்தது. தங்களுடைய உழைப்பை விற்பனை செய்வதுதான் அவர்களுக்கு வருமானத்துக்கு ஒரே வழியாக இருந்தது.

கிராமப் பாட்டாளி வர்க்கத்தின் பெரும் பகுதியும், இந்திய கிராமங்களில் முதலாளித்துவ வளர்ச்சி வேகமாக முன்னேற்றமடைந்த 20ம் நூற்றுண்டின் உற்பத்தியே. 1891இல் விவசாயத் தொழிலாளர்கள் விவசாய மக்கள் தொகையில் 13 சதவிகிதமாக மட்டுமே இருந்தார்கள், 1921 இல் 26.2 சதவிகிதமாகவும், 1931இல் 38 சதவிகிதமாகவும் இருந்தார்கள். எனினும் கருவிகளையும் உற்பத்திச் சாதனங்களையும் இழந்த விவசாயிகளில் ஒரு சிறு பகுதியினர் மட்டுமே கூலித் தொழிலாளர்களாக மாறினர்கள்; மற்றவர்கள் மிகவும் மோசமான வறுமையில் உழன்றார்கள்;

கிடைக்கின்ற எந்த வேலையையும் செய்து கொண்டு உயிர் பிழைத்தார்கள்.

உபரி மக்கள் தொகை அதிகரித்த பொழுது கூலி உழைப்பின் விலை மிகவும் குறைந்தது; அதனால் இயந்திரங்களை உபயோகப்படுத்துவது லாபகரமாக இருக்கவில்லை. எனவே இந்திய விவசாயத்தின் தொழில்நுட்பத் தேக்கத்திற்கு மலிவான உழைப்பு ஒரு முக்கிய காரணியாக இருந்தது.

விவசாயிகள் அநீதியான முறையில் சுரண்டப்படுவது, இயந்திரமயமாக்கல் மற்றும் விவசாயத் தொழில்நுட்பவியலின் வளர்ச்சி குன்றிய நிலை—இவை அனைத்தும் மொத்த தானிய உற்பத்தி குறைவதற்கு வழி வகுத்தது. இந்திய மக்களின் நிலையான உணவு தானிய வகைகளே. இரண்டாவது உலக யுத்தத்தின் முற்பொழுதில் இந்தியா 2 மில்லியன் டன் உணவு தானியத்தை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமேற்பட்டது. சராசரி இந்தியனுக்கு நாளொன்றுக்கு 1 பவுண்டு உணவு தானியம் அவசியம் என்று கணக்கிட்டால் நாட்டில் 10 மில்லியன் டன் உணவு தானியப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதாக இந்தியப் பொருளியலாளர்கள் மதிப்பிட்டார்கள். 1880 இல் சராசரி இந்தியன் நாளொன்றுக்கு 1.5 பவுண்டு நுகர்வு செய்ததாக வைத்துக் கொண்டால் அப்பொழுது இந்தியாவில் 5 மில்லியன் டன் உணவு உபரி இருந்தது.*

---

* *Proceedings of the Sixth International Conference of Agricultural Economists*, Oxford University Press, London, 1948, p. 271.

1930க்களில் இந்தியாவில் கோதுமை விளைச்சல் சராசரியில் எகிப்தைக் காட்டிலும் 70—80 சதவிகிதம் குறைவாக இருந்தது; நெல் விளைச்சல் இத்தாலியைக் காட்டிலும் 75 சதவிகிதம் குறைவாக இருந்தது; கரும்பு விளைச்சல் ஜாவாவைக் காட்டிலும் மூன்றில் ஒரு பகுதியும் ஹவாய்த் தீவுகளைக் காட்டிலும் ஏழில் ஒரு பகுதியும் குறைவாக இருந்தது.

இரண்டாவது உலக யுத்தத்துக்கு முந்திய பத்தாண்டில் இந்திய கிராமங்களில் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. உலகப் பொருளாதார நெருக்கடி நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்கள் விவசாயிகளைச் சுரண்டுவதைத் தீவிரமாக அதிகப்படுத்தியது, வரிகள் மற்றும் லேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடன்களின் சுமையை அதிகப்படுத்தியது.

விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு அகில இந்தியச் சந்தை உருவாக்கமடைந்ததன் விளைவாகவும் உலகச் சந்தையில் உணவுத் தானியங்களுக்கும் மூலப்பொருள்களுக்கும் ஏற்பட்டிருந்த அதிகமான தேவை, முதலாவது உலக யுத்த காலத்தில் ஏற்பட்ட பணவீக்கம் ஆகியவற்றின் விளைவாகவும் 19ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் விவசாய உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிக்கத் தொடங்கிய நீண்ட காலகட்டம் அது தீவிரமாக வீழ்ச்சியடைந்த கட்டமாக மாறியது. லேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடன்களினுல் விவசாயிகள் அழிகின்ற நிலையில் இருந்தார்கள். 1929க்கும் 1937க்கும் இடையில் விவசாயிகள் வாங்கியிருந்த கடன் தொகை 9 பில்லியன் ரூபாய்

களிலிருந்து 18 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்தது, அதாவது இரண்டு மடங்காகப் பெருகியது. இந்திய ரூபாய்க்கு ஏற்பட்டிருந்த மதிப்புக் குறைவைக் கணக்கிலெடுத்துக் கொண்டால் உண்மையில் அந்தத் தொகை 22 பில்லியன் ரூபாய்களாகும். விவசாயியின் கடன் சுமை அதிகரித்ததும் நில வாரம் மற்றும் வரிகள் வளர்ச்சியடைந்ததும் விலைகள் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த நிலைமைகளில் விவசாய உற்பத்திச் செலவைத் தவிர்க்க முடியாதபடி அதிகப்படுத்தின. இந்திய விவசாயிக்கு இது உண்மையிலேயே துன்பமாக இருந்தது.

நிலையில்லாமலிருந்த சந்தைகளின் தாக்கத்தைக் குறைக்கின்ற முயற்சியில் விவசாயிகள் பணப் பயிர்கள் விவசாயம் செய்த நிலப்பரப்பைக் குறைத்தார்கள். பிழைப்பிற்கான பொருளாதாரத்துக்கு மறுபடியும் திரும்புகின்ற முயற்சியில் முக்தியைத் தேடினர்கள். ஆகவே இந்த நெருக்கடி பணப்பயிர் விவசாயத்தின் வளர்ச்சி மற்றும் கிராமங்களில் முதலாளித்துவ உறவுகளின் உருவாக்கத்தில் மிகவும் பாதகமான விளைவைக் கொண்டிருந்தது.

கோடிக்கணக்கான விவசாயிகள் மொத்தமாக அழிந்தது வர்த்தகர்கள், லேவாதேவிக்காரர்கள் மற்றும் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களைப் பெரும் பணக்காரர்களாக்கியது; அவர்களிடமிருந்த நிலக் குவிப்பு மற்றும் பணத்தை அதிகப்படுத்தியது. 1934க்குப் பிறகு விலைகள் மிகக் குறைவாகவே அதிகரித்தன; அது கிராமங்களின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்ய

முடியவில்லை. 1937இல் மற்றொரு புதிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பொழுது விலைகள் மறுபடியும் வீழ்ச்சியடையத் தொடங்கின.

இரண்டாவது உலக யுத்தத்தின் முற்பொழுதில் இந்தியாவின் மிக முக்கியமான பொருளாதாரத் துறையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின் ஒரே விளைவு வறுமையின் கோரப்பிடியில் சிக்கிய, அழிந்து போன நாட்டுப்புறப் பகுதியை ஏற்படுத்தியதே; அது தனக்கோ, நகரங்களுக்கோ உணவளிக்க முடியவில்லை; உற்பத்திச் சக்திகள் தேக்கமடைந்தன; விவசாய மிகை மக்கட் பெருக்கம் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது; வாரங்களும், வரிகளும் கடன் சுமைகளும் பெருகிக் கொண்டிருந்தன.

இரண்டு உலக யுத்தங்களுக்கு இடையில் இந்திய கிராமங்களின் நிலைமை வர்க்க முரண்பாடுகள் தீவிரமடைவதைத் தூண்டியது. அதன் விளைவாக விவசாயிகளின் எழுச்சிகள் அதிகரித்தன. விவசாயிகளின் வெகுஜன ஸ்தாபனமாக அகில இந்திய விவசாயிகள் சங்கம் 1936இல் நிறுவப்பட்டது. இந்திய விவசாயிகளின் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் அது ஒரு முக்கிய கட்டத்தைக் குறித்தது; அவர்களின் அரசியல் முதிர்ச்சிக்கு அடையாளச் சின்னமாகவும் இருந்தது. நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வீச்சு அதிகரித்த பொழுது விவசாயப் பிரச்சினைகளைக் குறித்து சில நடவடிக்கைகளைச் செய்யும்படி காலனியாதிக்க அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்; விவ

சாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் விவசாயிகள் பங்கெடுப்பதைத் தடுப்பது அல்லது குறைப்பது அவற்றின் நோக்கம். அரசாங்கம் சில விவசாயச் சட்டங்களை நிறைவேற்றியது. காலனி நாடாகிய இந்தியாவின் விவசாயச் சட்டங்களில் இது மூன்ருவது கட்டம் என்று கூறலாம். இச்சட்டங்களின் மூலம் பணக்கார விவசாயிகள் என்ற சிறு கோஷ்டியின் உரிமைகளை விரிவுபடுத்துவதற்கும் அவற்றின் மூலம் விவசாயிகளிடையே அரசியல் ஒற்றுமை உருவாகாத்படித் தடுத்து காலனிவாதிகளின் ஆதிக்கத்துக்குப் பரந்த சமூக அடிப்படையை அமைப்பதற்கும் முயற்சிக்கப்பட்டது.

1939இல் ஐக்கிய மாகாணத்தில் ஒரு நிலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது குத்தகை விவசாயிகளுக்குப் பரம்பரை உரிமைகளைக் கொடுத்தது; அவர்கள் நிலத்தில் வீடுகள் கட்டுவதற்கும் மரங்கள் வளர்ப்பதற்கும் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கும் உரிமை தரப்பட்டது. ஒரு குத்தகை விவசாயியின் குத்தகைக் கடன் கணிசமாக இருந்தால் மட்டுமே நிலக்கிழார் அந்த விவசாயியை நிலத்தைவிட்டு வெளியேற்ற முடியும். வாரத்தைத் தவிர வேறு விதமான கட்டணங்கள் அனுமதிக்கப்படவில்லை. மற்ற மாகாணங்களிலும் இதைப் போன்ற சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. விவசாய நெருக்கடி மேலும் ஆழமடைந்த பொழுது இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களைக் காப்பாற்றுவதற்கும் விவசாயப் புரட்சியைத் தவிர்ப்பதற்கும் காலனியாதிக்க அதிகாரிகள் முயற்சி செய்தனர்.

## அத்தியாயம் மூன்று

# இரண்டாவது உலக யுத்தத்தின் போது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

### 1. யுத்த காலத்தில் இந்திய கிராமங்கள்

இரண்டாவது உலக யுத்தத்தில் இந்தியாவும் ஈடுபட்டுவிட்டதாக 1939 செப்டெம்பரில் பிரிட்டன் அறிவித்தது. இது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம் ஆரம்பமாவதைக் குறித்தது. அக்கட்டம் இந்தியாவுக்கு ஏராளமான துன்பங்களைக் கொடுத்தது.

உணவுத் துறையில் இந்தியாவின் தேவைகளை இந்திய விவசாயத்தினால் பூர்த்தி செய்ய முடியாது என்பதை யுத்தம் எடுத்துக் காட்டியது. யுத்தத்துக்கு முந்திய வருடங்களின் போது இந்தியா சராசரியாக வருடத்துக்கு 52—53 மில்லியன் டன் தானியங்களை (நெல், கோதுமை, தினை) உற்பத்தி செய்தது; ஆனால் நாட்டின் வருடாந்தரத் தேவை 55 மில்லியன் டன்களாகும்.* இரண்டு மில்லியன் டன்கள் பற்றுக்குறையை பர்மா மற்றும் தாய்லாந்திலிருந்து இறக்குமதிகள் சரிசெய்தன. 1942இல் ஜப்பான் பர்மாவைப் பிடித்த பொழுது அரிசி சப்ளை செய்கின்ற முக்கியமான நாட்டை இந்தியா இழந்தது. மேலும் இந்தோ-சீனா மற்றும் தாய்லாந்திலிருந்து வந்து

---

* P. S. Lokanathan, *India's Post-War Reconstruction and Its International Aspects*, New Delhi, 1946, p. 9.

கொண்டிருந்த உணவு தானிய (முக்கியமாக அரிசி) இறக்குமதிகள் நின்றுவிட்டன. மறு பக்கத்தில் உணவுத் தேவைகள் கணிசமான அளவுக்கு அதிகரித்தன; ஏனென்ருல் இந்தியா இராணுவத்துக்கு (தன்னுடைய சொந்த இராணுவத்துக்கும் பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைகளுக்கும்) சுமார் ஒரு மில்லியன் டன்கள் சப்ளே செய்ய வேண்டியிருந்தது. இதன் விளேவாக 125 மில்லியன் மொத்த மக்கள் தொகையைக் கொண்ட 5 பெரிய மாகாணங்களில் (வங்காளம், சென்னே, பீகார், ஒரிஸ்ஸா மற்றும் அஸ்ஸாம்) பஞ்சம் ஏற்பட்டது. இறக்குமதிகள் நிறுத்தப்பட்டிருந்தன, அரசிடம் உணவு தானியக் கையிருப்பு இல்லாமை, கிராமங்களில் மோசமான வறுமை—அங்கே விற்பனே செய்வதற்குத் தானிய உபரி கிடையாது—இவையனேத்தின் விளேவாகக் கோடிக்கணக்கான இந்தியர்கள் பட்டினியில் மரணமடைந்தார்கள்.

நிர்ணயிக்கப்பட்ட விலேகளில் தானியத்தை வாங்குவதாகச் சொன்ன அதிகாரிகள் உண்மையில் விவசாயிகளிடமிருந்து தானியத்தைப் பறிமுதல் செய்தார்கள். இதஞல் விவசாயிகள் தங்களுடைய குறைந்த இருப்புகளே மட்டுமல்லாமல் விதைக்காக வைத்திருந்த தானியத்தையும் பறிகொடுத்தார்கள். இவற்றைப் பெரும்பாலும் வர்த்தகர்கள், லேவாதேவிக்காரர்கள் மற்றும் நிலக்கிழார்கள் வாங்கி உடனே கள்ளச் சந்தையில் அதிக லாபத்துக்கு விற்பனே செய்தார்கள். அவர்கள் ஏராளமான தானிய இருப்புகளே வைத்திருந்தார்கள்; ஆனுல் கோடிக்கணக்கான மக்கள் பட்டினியில் செத்துக் கொண்டிருந்தார்கள்.

பணப்பயிர்களான சணலும் பருத்தியும் வழக்கமாக இந்தியாவின் ஏற்றுமதியில் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தன. ஆனல் யுத்தத்தின் போது அவை மிகவும் குறைந்த பட்ச அளவில் தான் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனல் ஏற்பட்ட உபரி முழுவதையும் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்ய முடியவில்லை. எனவே சணல் மற்றும் பருத்தியின் விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. இவற்றை உற்பத்தி செய்தவர்கள் நெருக்கடியான நிலையில் சிக்கிக்கொண்டார்கள்; கோடிக்கணக்கான விவசாயிகள் அழிந்தார்கள். விலைகளை நிலைக்க வைப்பதற்கும் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அரசாங்கம் செய்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

விலைக்குக் கட்டுப்பாடு பெயரளவுக்கு அமுலாக்கப்பட்ட பொழுது கள்ளச் சந்தை விலைகள் இன்னும் அதிகமாக உயர்ந்தன. 1943இல் 2 மில்லியன் மக்களுக்கு மட்டுமே பங்கீட்டு முறை இருந்தது; யுத்தம் முடிவடைந்த பொழுது 26 மில்லியன்களாக அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆனல் உணவு தானியத்துக்கு மட்டுமே பங்கீட்டு முறை இருந்தது.

யுத்தத்துக்கு முந்திய பத்தாண்டின் போது விலைகள் தொடர்ச்சியாகக் குறைந்து கொண்டிருந்தன. இந்த நீண்ட காலகட்டம் பெரும்பான்மையான விவசாய நிலவுடைமைகளின் பொருளாதார நிலையை அரித்தழித்தது. யுத்தத்தின் போது பணவீக்கத்தினல் விலைகள் உயர்ந்தன, ஆனல் யுத்தத்தினல் எல்லாத் துறைகளிலும் ஏற்பட்ட பணவீக்கத்தினல் விவசாயி

கள் வறுமையையும் அழிவையும் நோக்கிச் சரிந்து கொண்டிருந்தனர். 1939க்கும் 1945க்கும் இடையில் செலாவணியிலிருந்த காகிதப் பணம் ஏழு மடங்கு அதிகரித்தது; நாடு முழுமைக்கும் உணவுப் பொருள்களுக்கான சராசரி விலைகள் சுமார் மூன்று மடங்கு அதிகரித்தன. இத்தகைய நிலைமையில் விவசாயிகள் முன்னைக் காட்டிலும் வசதியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் யதார்த்தம் வேறுவிதமாக இருந்தது. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களின் விலைகள் 3 மடங்கு அதிகரித்த போதிலும் விவசாய உற்பத்திக்கு அவசியமான பொருள்களின் (கால்நடை, உரம், விவசாயக் கருவிகள், மாட்டுத் தீவனம், இதரவை) விலைகள் 4.5 மடங்குக்கும் அதிகமாக உயர்ந்திருந்தன*. இதனால் விவசாயியின் ரூபாயின் வாங்கும் சக்தி குறைந்தது; பெரும்பான்மையான விவசாய நிலவுடைமைகளில் புனருற்பத்தி நிலைமைகள் மோசமடைந்தன.

இந்தக் காலகட்டத்தில் நில வாரமும் நிலத்தின் விலையும் அதிகரித்தன என்பதை நினைவிலிறுத்த வேண்டும். தரிசு நிலம் கூட ஏக்கருக்கு 20—40 ரூபாய்கள் வாரத்துக்கு விடப்பட்டது, கரும்பு பயிர் செய்யப்படும் நிலத்தின் வாரம் ஏக்கருக்கு 200—300 ரூபாய்கள் அதிகரித்தன என்று பிரபல இந்தியப் பொருளியலாளரான

---

* பின்வரும் புத்தகத்தில் உள்ள புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது: M. B. Desai, *The Rural Economy of Gujarat*, London, 1948, pp. 282-284.

டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கூறுகிறார்.*

1948இல் நடைபெற்ற விவசாயப் பொருளியலாளர்களின் சர்வதேச மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி எம். நாணவதி உரையாற்றிய பொழுது யுத்தத்தினலும் பணவீக்கத்தினலும் விவசாய நிலவுடைமைகளில் புனருற்பத்தி நிலைமைகள் க்ஷீணமடைந்ததைப் பற்றிக் குறிப்பிட்டார். யுத்தம் தொடங்கிய பிறகு 4—5 வருடங்கள் விவசாயப் பொருள்களின் விலைகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்தன என்றாலும் அதனல் விவசாயிகளுக்குச் சாதகம் கிடைக்கவில்லை என்ருர். அவர்களுக்கு அவசியமான மற்ற பொருள்களின் (விவசாயக் கருவிகள், துணி, உழவு மாடுகள், எண்ணெய் மற்றும் இதரவை) விலைகள் மிகவும் அதிகரித்த காரணத்தால் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் இதே காலகட்டத்தில் ஏராளமாக இழந்தார்கள்.** இதன் விளைவாக அவர்கள் யுத்தத்தினல் மேலும் ஏழைகளானர்கள்.

யுத்தமும் பணவீக்கமும் கிராமங்களிலிருந்த வறுமையை மேலும் அதிகப்படுத்தின. விவசாய உற்பத்திப் பொருள்களில் உபரியைக் கொண்டிருந்த பண்ணைகள் மட்டுமே உண்மையில் லாபமடைந்தன. வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல் பணவீக்கம் நிலக்கிழார்கள், வர்த்தகர்கள்,

---

* V. K. R. V. Rao, *Studies in Rural Economy*, Bombay, 1953, p. 103.

** *Proceedings of the Sixth International Conference of Agricultural Economists*, p. 266.

லேவாதேவிக்காரர்கள் மற்றும் பணக்கார விவசாயிகளைச் செல்வந்தர்களாக்கியது.

விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைகள் உயர்ந்த பொழுது லேவாதேவிக்காரர்கள் தாம் கொடுத்த கடன்கள் மதிப்புக் குறைந்துவிடும் என்று அஞ்சியபடியால் தங்களுடைய கடன்களை விவசாய உற்பத்திப் பொருள்களாக மாற்றுவதற்குத் தொடங்கினர்கள். அவர்கள் மதிப்புக் குறைந்து கொண்டிருந்த பணத்தில் கடன் கொடுத்தார்கள்; அதன் வட்டி மற்றும் கடன் வழங்கீடுகளை விவசாய உற்பத்திப் பொருள்களாகப் பெற்றுக் கொண்டார்கள்.

யுத்தகாலத்தின் போது கடன் சுமை அதிகரித்ததற்கு மற்ெருரு காரணமும் இருந்தது. பெரும்பான்மையான விவசாயிகளின் சிறு நிலவுடைமைகளில் புனருற்பத்தி நிலைமைகள் மிகவும் க்ஷீணமடைந்தன. விவசாயிகளின் சிறு நிலவுடைமைகளில் பெரும்பகுதி (கடன் சுமையில் பெரும் பகுதி இவற்றையே தாக்கியது) பொருளாதார ரீதியில் பலவீனமடைந்து விட்டன; அவற்றின் செல்வாதாரங்கள் குறைந்து விட்டன. இது கடன் சுமையின் தாக்கத்தை அதிகப்படுத்தியது. அத்துடன் நில்லாமல் யுத்த காலத்தில் லேவாதேவிக்காரருடைய வட்டி விகிதமும் அதிகரித்தது.

விலை உயர்வுகள் கிராமப் பொருளாதாரத்தை அழித்தன; பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலிருந்த இடைவெளியை அதிகப்படுத்தின.

பெரிய அளவு நிலப்பிரபுத்துவ நிலவுடைமைக்கும் மற்றும் அரை-நிலப்பிரபுத்துவ நிலவுடைமைக்கும் சிறு விவசாய நிலவுடைமைகளுக்கும்

இடையிலிருந்த முரண்பாடுகள் இக்காலகட்டத்தில் மிகவும் கூர்மையாக வெளிப்பட்டன. விவசாயிகள் தமது நிலத்தைப் பறிகொடுப்பது மாபெரும் பரிமாணங்களை அடைந்து நிலக்கிழார்கள் மற்றும் லேவாதேவிக்காரர்களிடம் நிலவுடைமை குவிவதற்கும், நில வாரம் பேரளவில் அதிகரிப்பதற்கும், நிலமற்ற விவசாயிகள் நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்த நிலைமைகள் தீவிரமாக மோசமடைவதற்கும் வழி வகுத்தது. விவசாயி நிலத்தைப் பறிகொடுத்தது அதற்குப் பொருந்திய முதலாளித்துவ முன்முயற்சியின் வளர்ச்சிக்கு இட்டுச் செல்லவில்லை; எனவே விவசாயி விலங்குகள் மாட்டப்பட்ட குத்தகை விவசாயியாக அல்லது விவசாயத் தொழிலாளியாக மாற்றப்பட்டான்.

முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி வடிவங்கள் பாதுகாக்கப்பட்டிருந்தபடியால் பண்ணைகள் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைக்கு மாறுவது தாமதமடைந்தது. நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்கள் மற்றும் லேவாதேவிக்காரர்களிடம் நிலம் குவிந்திருந்தது பணக்கார விவசாயிகளின் நிலையை வலுப்படுத்தியது; அவர்களை வாரம் மற்றும் லேவாதேவிச் சுரண்டலில் சம்பந்தப்படுத்தியது; மத்திய காலம் மற்றும் காட்டுமிராண்டித்தனத்தின் விலங்குகளை அவர்கள் உதறிப் போட முடியாமற் தடுத்தது. அதே சமயத்தில் விவசாயிகளின் மத்தியில் அதிகமான படிநிலை நிகழ்வுப் போக்கும் மூலதனக் குவிப்பு மற்றும் கிராமாந்தர முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சியும் முதலாளித்துவத்தின் அதிக வேகமான வளர்ச்

சிக்குப் பொருளாயத அடிப்படையை ஏற்படுத்தி கிராமங்களில் நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித் துவ உறவுகளுக்கு இடையில் போராட்டத்தை மிகவும் தீவிரப்படுத்தின. எனினும் காலனி யாதிக்க நிலைமைகளில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளே ஆதிக்கம் செலுத்தின; ஏகாதிபத்தி யம் நாட்டைச் சுரண்டுகின்ற நிலைமைகளை அவை உறுதிப்படுத்தியபடியால் ஏகாதிபத்தியத்தின் முழு ஆதரவைப் பெற்றன.

ஆகவே முதலாளித்துவ உற்பத்தி முறையின் குறியடையாளமான உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தாமதமடைந்தது; முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவச் சுரண்டல் வடிவங்கள் முரண்பாடான முறையில் பின்னிப்பிணைந்திருப்பது வளர்ச்சியடைந்தது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட தாமதம் பெரும்பான்மை யான சந்தர்ப்பங்களில் அழிக்கின்ற வடிவத்தை மேற்கொண்டது; விவசாயத்தின் தேக்கமான, பின்தங்கிய நிலைமையை நிரந்தரப்படுத்தியது.

முதலில் 19ம் நூற்றுண்டின் பிற்பாதியில் தொடங்கி 1930க்களிலும் 1940க்களிலும் குறிப் பாக வெளிப்பட்ட இந்த நிகழ்வுப் போக்குகள் இந்தியாவில் விவசாய நெருக்கடியின் சாராம்ச மாக இருந்தன. யுத்த காலத்தின் போதும் யுத் தத்துக்குப் பிந்திய ஆரம்ப வருடங்களிலும் அந்த நெருக்கடி தீவிரமடைந்து நாட்டின் விவசாயப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கும்படி கோரியது. நாட்டுப் பொருளாதாரத்தின் முக்கிய துறையாகிய விவசாயம் மிகவும் பின்தங்கியிருந் தது மொத்தப் பொருளாதாரத்தின் மீதும் மிக

வும் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது; உள்நாட்டுச் சந்தையின் உருவாக்கத்தையும் வளர்ச்சியையும் தடுத்தது.

கிராமப் பகுதிகளில் நிலப்பிரபுத்துவ மற்றும் காலனியாதிக்கச் சுரண்டலின் எல்லா வடிவங்களும் ஒழிக்கப்பட வேண்டும் என்று கோரிய விவசாயிகளின் போராட்டம் ஓங்கியதும் விவசாய சீர்திருத்தங்களின் அவசியத்தை வலியுறுத்தியது.

## 2. தொழில்துறை உற்பத்தியின் கட்டமைப்பு

இரண்டாவது உலக யுத்தத்தின் போது அரசின் நுகர்வு அதிகரித்திருந்த போதிலும் இந்தியாவின் தொழில்துறை அநேகமாக வளர்ச்சி அடையவில்லை. தொழில்துறை அரசு ஒப்பந்தங்களின் மொத்த மதிப்பு 10 மடங்கு அதிகரித்திருந்த போதிலும் தொழில்துறை உற்பத்தி 20 சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது.* தொழில்துறையின் முக்கிய பிரிவுகளில் யுத்தம் தொடங்கிய முதல் 2—3 வருடங்களில் மட்டுமே உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருந்தது. 1943க்குப் பிறகு தொழில்துறையின் பல பிரிவுகளில் உற்பத்தி அநேகமாக அதிகரிக்கவில்லை; சில பிரிவுகளில் உற்பத்தி குறைந்தும் போயிற்று. இராணுவ ரீதியாக இல்லாத நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி தீவிரமாகக் குறைந்தது.

1945இல் கனரகத் தொழில்துறையின் மொத்த உற்பத்தி இன்னும் 1939ம் வருடத்தின் மட்டத்

* P. S. Lokanathan, *India's Post-War Reconstruction and Its International Aspects*, p. 16.

தில்தான் இருந்தது. டாடா கம்பெனி விஸ் தரிக்கப்பட்டதன் விளைவாக இரும்பு மற்றும் எஃகின் உற்பத்தி ஓரளவு அதிகரித்தது, 1939இல் 7,50,000 டன்களாக இருந்த எஃகு உற்பத்தி 1944இல் சுமார் 1.2 மில்லியன் டன்களை எட்டியது. டாங்கிகளின் கவசத்துக்குத் தேவையான விசேஷ ரக எஃகை இந்தியா உற்பத்தி செய்யத் தொடங்கியது.

இரும்பு அல்லாத உலோகத் தொழிலும் சிறிது வளர்ச்சியடைந்தது. அதற்கு அலுமினிய உற்பத்தி அதிகரித்தது முக்கிய காரணமாகும். யுத்தம் முடிவடைந்த பொழுது அலுமினியத் தயாரிப்புத் தொழிற்சாலைகளின் உற்பத்தி அளவு 5,000 டன்களை எட்டியது.

இந்தியாவில் சில யுத்தத் தொழில்களை—விமானத் தொழில், கார் தயாரிப்பு (இஞ்சின்கள் இறக்குமதி செய்யப்பட்டன), ரைபிள்கள், இயந்திரத்துப்பாக்கிகள், பீரங்கி குண்டுகளின் உற்பத்தி — தொடங்கும்படி யுத்தம் காலனியாதிக்கவாதிகளை நிர்ப்பந்தித்தது. தனியார் கம்பெனிகள் பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கக் கம்பெனிகளுடன் (ஜெனரல் மோட்டார்ஸ், போர்டு, ஸ்டுடிபேக்கர்) கூட்டுச் சேர்ந்திருந்தன. சில இரசாயனப் பொருள்களும் (குளோரின், அம்மோனியா சல்பேட், வெடிமருந்துகள்) உற்பத்தி செய்யப்பட்டன.

தொழில்துறை உற்பத்தியின் மொத்தக் குறியீட்டெண் யுத்த காலத்தில் 20 சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது. ஆனல் சிவிலியன் உற்பத்தி யுத்தத்துக்கு முன்பிருந்ததைக் காட்டிலும்

குறைந்திருந்தது; ஏனென்றால் பல தொழில்களில் இராணுவ ஒப்பந்தங்களுக்காகவே உற்பத்தி நடைபெற்றது; இந்த உற்பத்தி வளர்ச்சி தற்காலிகமானதே.

இரண்டாவது உலக யுத்தம் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த ஆழமான நெருக்கடியை வெளிக்காட்டியது. அந்த நெருக்கடி முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தினால் இன்னும் மோசமான நிலையை அடைந்திருந்தது. ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையில் காலனிகளுக்காக நடைபெற்ற போராட்டம் தீவிரமடைந்த பொழுது இந்தியப் பொருளாதாரத்தின் மீது தன்னுடைய கட்டுப்பாட்டை இறுக்கி அதன் முன்னேற்றத்தைத் தடுக்கும்படி பிரிட்டிஷ் நிதிமூலதனம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

உள்நாட்டுச் சந்தையின் மிகக் குறுகிய நிலை உலக யுத்தத்தின் போது நன்கு உணரப்பட்டது. இந்தியத் தொழில்துறை ஏற்கெனவே அடைந்திருந்த வளர்ச்சி காலனியாதிக்கத்தின் கீழ் அதன் உச்ச வளர்ச்சி மட்டமே என்று நிரூபிக்கப்பட்டது.

யுத்தத்தின் போது தொழில்துறையில் அடிப்படையான, குணும்ச ரீதியான மாற்றங்களும் ஏற்படவில்லை. கனரகத் தொழில் ஓரளவுக்கு வளர்ச்சியடைந்திருந்தாலும் தொழில்துறையின் கட்டமைப்பு அப்படியே தானிருந்தது. தொழில்துறையின் தொழில்நுட்ப அடிப்படை புதுப்பிக்கப்படவில்லை; அது தொழில்துறையின் உற்பத்தித் திறனை பாதித்தது. இயந்திரங்கள் அளவுக்கு மீறி உபயோகிக்கப்பட்டுக் கடைசியில் தேய்ந்து விட்டன.

அதே சமயத்தில் யுத்தம் இந்திய முதலாளிகளைப் பெரும் பணக்காரர்களாக்கி மூலதனம் மத்தியப்படுத்தப்படுகின்ற நிகழ்வுப் போக்கைத் துரிதப்படுத்தியது. மொத்தப் பங்கு மூலதனத்தில் பெரிய கம்பெனிகளின் (10 மில்லியன் ரூபாய்கள் அல்லது அதற்கும் அதிகமான மூலதனத்தைக் கொண்டவை) பங்கு 1939இல் 20 சதவிகிதமாக இருந்தது, 1945இல் 61 சதவிகிதமாக அதிகரித்தது. பங்குக் கம்பெனிகளின் (அந்நியக் கம்பெனிகள் உட்பட) எண்ணிக்கை 1945 இல் சுமார் 15,000 ஆக இருந்தது. அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் 1939இல் 3 பில்லியன் ரூபாய்களாக இருந்தது, 1945இல் 4 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்தது.* எனினும் பணவீக்கம், ரூபாயின் மதிப்புக் குறைவு ஆகியவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டால் இது அவ்வளவு கணிசமான வளர்ச்சியல்ல.

யுத்தத்தின் போது இந்தியாவின் தேசிய மூலதனம் தன்னுடைய நிலைகளை பலப்படுத்திக் கொண்டது. புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கியதனாலும் பிரிட்டிஷ் கம்பெனிகளில் ஓரளவுக்குப் பங்குகளை வாங்கியதனாலும் அதன் செயல்துறை விரிவடைந்தது. 1945இல் இந்தியாவில் 822 அந்நியக் கம்பெனிகள் இயங்கிக் கொண்டிருந்தன; யுத்தத்துக்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும் சுமார் 100 கம்பெனிகள் குறைந்திருந்தன. இக்கம்பெனிகளின் முழுமையாகச் செலுத்தப்பட்ட மூலதனம் 703.5 மில்லியன் பவுண்டுகள், அதா

* *Statistical Abstract, India, 1953-54*, Calcutta, 1956, p. 436.

வது 1933இல் இருந்ததைக் காட்டிலும் 130 மில்லியன் பவுண்டுகள் குறைவு.* யுத்தத்தின் போதும் அதற்குப் பிந்திய ஆரம்ப வருடங்களின் போதும் தொழில்துறையில் தேசிய மூலதனத்தின் பங்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தது. சோவியத் பொருளியலாளர்களான எல். இ. ரேய்ஸ்னர் மற்றும் ஜி. கே. ஷிரோக்கவ் செய்திருக்கும் கணக்குகளின்படி 1948இல் இந்தியாவின் தனியார் தொழில்துறையில் மொத்த முதலீடுகளில் அந்நிய ஏகபோகங்களின் பங்கு 19.3 சதவிகிதமாக இருந்தது. அந்நிய ஏகபோகங்கள் (காலனியாதிக்க அதிகாரிகளின் உடைமைகள் உள்பட) பாக்டரிகளில் 13.1 சதவிகிதம் பங்கை வைத்திருந்தன; தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 34.9 சதவிகிதத்தினர் இவற்றில் வேலை செய்தார்கள்.

யுத்தத்தின் போது கடுமையான சுரண்டல் மற்றும் தன்னுடைய செல்வ வளங்களை அள்ளிக் கொடுத்ததன் மூலம் இந்தியா பிரிட்டனிடம் வாங்கியிருந்த ஸ்டர்லிங் கடனை ஒழித்தது. 1939இல் யுத்தம் தொடங்கிய பொழுது இந்தியாவின் ஸ்டர்லிங் கடன் 4,700 மில்லியன் ரூபாய்களாக (சுமார் 350 மில்லியன் பவுண்டுகள்) இருந்தது. ஆனல் 1944க்குள் இந்தத் தொகை 38 மில்லியன் ரூபாய்களாகக் (281,000 பவுண்டுகள்) குறைக்கப்பட்டது.** இந்தியாவை பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் கடுமையாகச் சுரண்டிய

* *Ibid.*, p. 460.

** P. S. Lokanathan, *India's Post-War Reconstruction and Its International Aspects*, p. 42.



10–775

தனுல் இந்தக் கடன் ஏற்பட்டிருந்தது. ஆனல் பிரிட்டன் இப்பொழுது இந்தியாவிடமிருந்து வாங்கிய மூலப்பொருள்கள், உணவு தானியங்கள் மற்றும் இதர சரக்குகளுக்குப் பணம் கொடுக்காமல் இந்தக் கடனைக் கழித்துக் கொண்டது.

இந்தியா பிரிட்டனுக்கு அனுப்பிய பல பொருள்களுக்கு எதுவுமே கொடுக்கப்படவில்லை. அவற்றின் விலை பாங்க் ஆப் இங்கிலாந்தின் ஸ்டர்லிங் கணக்குகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது இந்தியாவில் பணவீக்கத்தை அதிகப்படுத்தியது; உள்நாட்டுக் கடன் பிரம்மாண்டமான அளவில் அதிகரிக்க வழிவகுத்தது. 1939இல் 7,100 மில்லியன் ரூபாய்களாக இருந்த உள்நாட்டுக் கடன் 1944இல் 13,300 மில்லியன் ரூபாய்களாக அதிகரித்தது. மொத்தத்தில் இந்தியாவின் இராணுவச் செலவுகள் 25,000 மில்லியன் ரூபாய்கள். இந்தியாவின் ஸ்டர்லிங் இருப்பு 1945 ஆகஸ்டில் 15,000 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமாக இருந்தது.* ஆகவே இந்தியா பிரிட்டனுக்குக் கடன் கொடுத்த நாடாக மாறியிருந்தது. ஆனல் அதற்காக இந்தியப் பொருளாதாரம் கொள்ளையடிக்கப்பட்டது, வெகுஜனங்களிடையே மோசமான வறுமை ஏற்படுத்தப்பட்டது, இந்தியாவின் பொருளாயத மற்றும் மனித வளங்கள் கடுமையாகச் சுரண்டப்பட்டன, நாட்டில் பணவீக்கம் அதிகரித்தது, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் பின்னடைவும் தேக்கமும் ஏற்பட்டன.

---

* *Ibid.*, pp. 36, 45.

அந்நிய முதலீடுகளின் அளவு குறைந்த போதிலும் இந்தியா பொருளாதார ரீதியில் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருப்பது கணிசமாகக் குறையவில்லை. யுத்தத்தின் போது பெரிய இந்திய ஏகபோகங்களுக்கும் அந்நிய மூலதனத்துக்கும் இடையில் உறவுகள் பலமடைந்தன; கூட்டுக் கம்பெனிகள் என்ற வடிவத்தில் புது ரகமான உறவுகள் தோன்றின.

யுத்தம் முடிவடையும் சமயத்தில் முதல் கூட்டுக் கம்பெனிகள் தோன்றின. பிர்லா குரூப்பும் ''ஸ்டுடிபேக்கர் கார்ப்பரேஷனும்'' கூட்டுச் சேர்ந்து ''ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ்'' கம்பெனியும் வால்சந்த் ஹிராசந்தும் ''கிரைஸ்லர் கார்ப்பரேஷனும்'' கூட்டுச் சேர்ந்து ''பிரிமியர் ஆட்டமோபைல்'' கம்பெனியும் ஏற்பட்டன.

20ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அமெரிக்க மூலதனம் இந்தியாவுக்குள் நுழையத் தொடங்கிற்று. 1920க்களில் ''அமெரிக்க இன்டர்நேஷனல் பாங்கிங் கார்ப்பரேஷன்'' கிளைகள் இந்தியாவில் இருந்தன; பல அமெரிக்க ஏகபோகக் கம்பெனிகள் (''போர்டு'', ''ஜெனரல் மோட்டார்ஸ்'', இதரவை) இந்தியாவில் கிளைகளை வைத்திருந்தன. 1948க்குள் இந்தியாவில் அமெரிக்க மூலதன முதலீட்டின் மொத்த அளவு சுமார் 180 மில்லியன் ரூபாய்களாக, அதாவது யுத்தத்துக்கு முன்பிருந்த அதே அளவில் இருந்தது. ஆனல் யுத்தத்தின் போதும் அதற்குப் பிறகும் அமெரிக்க மூலதனம் அந்நிய வர்த்தகத்தில் தன்னுடைய நிலைகளை மிகவும் கணிசமான அளவுக்கு பலப்படுத்திக் கொண்டது; அதற்குப் பிந்திய வருடங்களின் போது

கடன்கள் மற்றும் ''உதவி'' என்ற வடிவத்தில் இந்தியாவிற்குள் தன்னுடைய ஊடுருவலை அதிகப் படுத்தியது. யுத்தத்துக்கு முன்பு இந்தியாவின் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளில் அமெ ரிக்காவின் பங்கு முறையே 6 சதவிகிதமாகவும் 8 சதவிகிதமாகவும் இருந்தது. யுத்தம் முடிவடைந்த பொழுது இந்தியாவுக்கு அமெரிக்காவின் ஏற்று மதிகள் கடன்-குத்தகை (Lend-Lease) நடவடிக்கை களையும் கணக்கிலெடுத்துக் கொண்டால் 7 மடங் காக அதிகரித்திருந்தன. 1944-45இல் இந்தியா வின் அந்நிய வர்த்தகத்தில் அமெரிக்காவின் பங்கு சுமார் 25 சதவிகிதமாகும். ஆனால் பிரிட்டிஷ் மானேஜிங் ஏஜன்சிகளும் அந்நிய வங்கிகளும் இன்னும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன. 1946-47ம் வருடங்களில் அப்பொழுதிருந்த 200—300 மானேஜிங் ஏஜன்சிகளில் 21 மானேஜிங் ஏஜன்சிகள் தலைமையான இடத்தைப் பெற்றிருந் தன; இவை பொருளாதாரத்தில் எல்லாத் துறை களிலும் 934 தலைமையான கம்பெனிகளை நிர் வகித்தன. 10 மிக முக்கியமான பிரிட்டிஷ் மானே ஜிங் ஏஜன்சிகள் தேயிலை, நிலக்கரி உற்பத்தி, சணல், போக்குவரத்து, இதர துறைகளில் 413 பங்குக் கம்பெனிகளை நிர்வகித்தன. பின்வரும் பிரிட்டிஷ் மானேஜிங் ஏஜன்சிகள் அதிகமான எண் ணிக்கையுள்ள கம்பெனிகளை நிர்வகித்தன: ''ஆண்ட்ரு யூல்'' (78 கம்பெனிகள்—தேயிலை, நிலக்கரி உற்பத்தி, சணல் முக்கியமான துறை கள்), ''ஹிலான்டர்ஸ் அர்பத்னட்'' (70 கம் பெனிகள்—தேயிலை, நிலக்கரி உற்பத்தி, போக்கு வரத்துத் துறை, இதரவை), ''ஆக்டேவியஸ்

ஸ்டீல்'' (57 கம்பெனிகள்), ''மக்லியோட் ஸ்டீல்'' (55 கம்பெனிகள்). 1947இல் இந்தியாவில் 15 அந்நிய வங்கிகள் இயங்கிக் கொண்டிருந்தன; இவையும் இம்பீரியல் வங்கியும் (அதன் பங்குகளில் 75 சதவிகிதம் அந்நியர்களுக்குச் சொந்தம்) நாட்டின் வங்கி அமைப்பிலிருந்த மொத்த வைப்பு நிதிகளில் 64 சதவிகிதத்தைக் கொண்டிருந்தன.*

யுத்தத்தின் போது ஏற்பட்ட தொழில்துறை வளர்ச்சி அந்நியச் சரக்குகளின் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவைக் காப்பாற்றவில்லை. யுத்தத்துக்குப் பிந்திய காலகட்டத்தில் இந்தியாவில் பொருளாதார நிலைமை மிகவும் சீர்கேடடைந்தபடியால் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவைச் சார்ந்திருப்பது பேரளவாக அதிகரித்தது. முக்கியமான எல்லா தொழில்துறைச் சரக்குகளின் உற்பத்தியும் 15 சதவிகிதம் குறைந்தது. உற்பத்தி குறைந்தது அநேகமாக இந்தியத் தொழில்துறையின் ஒவ்வொரு பிரிவையும் பாதித்தது.

1947க்குள் தொழில்துறை உற்பத்தி 1939ம் வருடத்திய யுத்தத்துக்கு முந்திய நிலைக்குக் குறைந்து விட்டது; சில தொழில்களில் (பருத்தி, சணல், எஃகு, வர்ணச் சாயங்கள், மாவு, இதரவை) உற்பத்தி இன்னும் அதிகமாகக் கூடக் குறைந்து விட்டது. யுத்தத்தின் போது ஏற்பட்ட உற்பத்தி வளர்ச்சியை நிலைப்படுத்துகின்ற அளவுக்குப் போதிய உறுதியான அடிப்படை பொருளாதாரத்தில் கிடையாது, யுத்த காலத்தின்

* *Statistical Abstract, India, 1953-54*, pp. 425-426.

மிகையான தேவைகளே அதற்குப் பிரதான காரணம் என்பனவற்றை இது வெளிப்படுத்தியது.

இந்திய முதலாளித்துவம் நூறு வருடங்களுக்கும் அதிகமாகவே வளர்ச்சியடைந்து கொண்டிருந்தாலும் நாட்டின் உருத்திரிபான, ஏற்றத் தாழ்வான, காலனிப் பொருளாதாரக் கட்டமைப்பு இன்னும் நீடித்தது. இந்தியாவின் தொழில் துறை சமூக மூலதனத்தின் புனருற்பத்தியை சுதந்திரமாகச் செய்ய முடியாததாக இருந்தது. ஏனென்றால் கன இயந்திரத் தொழில் துறைகள் அநேகமாக முற்றிலும் இல்லாதிருந்தன.

பொருளாதார ரீதியில் நாட்டின் பின்தங்கிய நிலைமையும் அதன் காலனிக் கட்டமைப்பும் இந்தியாவின் தேசிய வருமானத்தில் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டன.

தேசிய வருமானக் கமிட்டி 1948-49ம் வருடங்களுக்குரிய யுத்தத்துக்கு பிந்திய முதலாவது அறிக்கையை 1951இல் வெளியிட்டது.* தேசிய வருமானத்தைக் கணக்கிடுவதில் முறையியல் சார்ந்த குறைகள் பல இருந்த போதிலும் அந்த அறிக்கையினுல் பொருளாதாரத்தின் காலனித் தன்மையை மறைக்க முடியவில்லை. இந்திய யூனியனுடைய (பாகிஸ்தான் நீங்கலாக) தேசிய வருமானம் 1948-49ம் வருடங்களில் 87,300 மில்லியன் ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டது. தேசிய வருமானம் என்பது நிகர வருமானம் அல்ல, தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத்

---

* *First Report of National Income Committee*, April, 1951.

துறைகளின் உற்பத்திப் பொருளின் மதிப்பும் எல்லாவிதமான நடவடிக்கைகளிலிருந்தும் எல்லா நபர்களுக்கும் அமைப்புகளுக்கும் கிடைக்கின்ற வருமானங்களைச் சேர்ந்தது என்று முடிவு செய்யப் பட்டது. இத்தகைய கணக்குகளின் விளைவாக முக்கிய வருமானங்கள் அவற்றிலிருந்து ஏற்படு கின்ற துணை வருமானங்களுடன்—வர்த்தகர்கள், லேவாதேவிக்காரர்கள், மதகுருக்கள், இதரர் களுடைய வருமானங்கள் உள்பட—கூட்டிக்கொள் ளப்பட்டன. இந்தக் கணக்குகளை ஆராய்கின்ற பொழுது பின்வரும் உண்மைகளை அறிகிறோம்; மீன்பிடித்தல், வனத்துறை உள்பட விவசாயம் மொத்தத்தில் 47.6 சதவிகிதப் பங்கைக் கொண் டிருந்தது; தொழில்துறை 17.2%—இதில் பெருந் தொழில்துறை 6.6% மட்டும்தான், சிறு தொழில் துறை 9.9%; வர்த்தகர்கள், லேவாதேவிக்காரர் கள், வங்கிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், ரயில் வேக்கள், தபால், தந்தித்துறை வருமானங்கள் 19.5%; அரசு ஊழியர்கள், சுயமாக சம்பாதிப்ப வர்கள், வீட்டுச் சொந்தக்காரர்களின் (வேலைக் காரர்களின் வருமானம் உட்பட) வருமானம் 15.9%.

இந்த மொத்த தேசிய வருமானப் புள்ளி விவரங்கள் விவசாயத்திலும் தொழில்துறையிலும் சிறு அளவு உற்பத்தியின் ஆதிக்கத்தையும் சுரண் டல்காரர்களுடைய வருமானங்களின் அதிகமான பங்கையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்த வருமானங்களில் 35.4%, அதாவது பெரிய பகுதி வர்த்தகர்கள், லேவாதேவிக்காரர்கள், வீட்டுச் சொந்தக்காரர்களுடையதாக இருக்கிறது.

இந்தத் தொகையில் பெரிய நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்கள், மானேஜிங் ஏஜன்சிகள், இதர வற்றின் வருமானங்களைச் சேர்த்துக் கொள்ளத் தவறிவிட்டார்கள்.

வர்த்தகத்தில் (வங்கிகள், இன்ஷூரன்ஸ், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புத் துறைகள் உள்பட) ஒரு நபருடைய சராசரி வருமானம் வருடத்துக்கு 1,600 ரூபாய்களாகும், தொழில்துறையில் இது 800 ரூபாய்களாகவும் விவசாயத்துறையில் 500 ரூபாய்களாகவும் இருந்தது. ஆகவே வர்த்தகத் துறையில் சராசரி வருமானம் தொழில்துறையை விட 2 மடங்கு அதிகமாகவும் விவசாயத் துறையை விட $3^1/_2$ மடங்கு அதிகமாகவும் இருந்தது. ஆகவே மக்கள் தொகையில் எந்தப் பிரிவு உண்மையில் தேசிய வருமானத்தை உற்பத்தி செய்யவில்லையோ அந்தப் பிரிவுதான் மிகவும் சிறப்பான நிலையில் இருந்தது. (சரக்குப் போக்குவரத்துத் துறையை இப்பிரிவில் சேர்த்திருப்பது தவறு என்பதால் அதை ஒதுக்கி விட வேண்டும்); விவசாயத்தில் ஈடுபட்டிருந்த கோடிக்கணக்கான மக்கள் மற்ற எல்லோரையும் காட்டிலும் மோசமான நிலையில் இருந்தார்கள்.

பெருந் தொழில்துறையில் ஈடுபட்டிருந்த நபரின் சராசரி வருடாந்தர தேசிய வருமானம் 1,700 ரூபாய்கள், விவசாயத் தொழில், கைத் தொழில்களில் ஈடுபட்டிருந்த நபரின் வருமானம் 600 ரூபாய்கள் மட்டுமே என்று அறிக்கை கூறுகிறது.

தேசிய வருமானத்தில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பங்கு எவ்வளவு என்

பதையும் அந்நிய மூலதனம் ஒதுக்கீடு செய்த பங்கு எவ்வளவு என்பதையும் இந்த அறிக்கை தெரிவிக்கவில்லை.

ஒரு இந்தியரின் சராசரி வருமானம் 247 ரூபாய்களாக இருந்தது. உலக நாடுகளில் தனி நபரின் சராசரி வருமானத்தில் பின்தங்கிய நாடுகளான இலங்கை, இரான், இராக் ஆகிய நாடுகளுக்கும் கீழே கடைசி இடங்களில் ஒன்றை இந்தியா பெற்றிருந்தது.

முதலாளி வர்க்கப் புள்ளியியல் முறைகளின் குறைகள் எப்படியிருந்தாலும் இந்தியாவின் தேசிய வருமான அறிக்கை, நாட்டின் பொருளாதாரத்தின் காலனி-நிலப்பிரபுத்துவக் கூறுகளையோ பொருளாதார ரீதியில் அதன் மிக மோசமான பின்தங்கிய நிலைமையையோ மறைக்கவில்லை.

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்ததும் ஏகாதிபத்தியக் காலனி அமைப்பின் நெருக்கடி தீவிரமடைந்தது, காலனி நாடுகளைச் சேர்ந்த மக்களினங்களின் தேசிய சுதந்திரப் போராட்டம் ஓங்கியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வெகுஜனப் புரட்சிகர, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை இனியும் அடக்கி வைக்க முடியவில்லை.

உலக அரங்கத்தில் சக்திகளின் சமநிலை சோஷலிசத்துக்கு ஆதரவாக மாறிய சமயத்தில், முதலாளித்துவம் தன்னுடைய பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தை அடைந்த பொழுது இந்திய மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டம் வளர்ச்சி அடைந்தது.

இந்தியாவைப் பிரிவினை செய்து டொமினியன்

அந்தஸ்து கொடுப்பதன் மூலம் நிலைமையைச் சமாளிப்பதற்கு பிரிட்டிஷ் லேபர் கட்சி முயற்சி செய்தது. இந்தியா 1947 ஆகஸ்ட் 15இல் சுதந்திரம் பெற்றது.

இந்தியாவை இரண்டு அரசுகளாகப் பிரித்ததற்குப் புறநிலையான பொருளாதார அவசியங்கள் காரணமல்ல, அரசியல் நோக்கங்களே காரணமாகும். மதத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் கொடுக்கப்பட்டது. மதத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பிரிவினையின் விளைவாக பொருளாதார ரீதியில் மிக முக்கியமான இரண்டு மாகாணங்கள்—பஞ்சாப் மற்றும் வங்காளம்—இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பிரிக்கப்பட்டன.

பிரிவினை ஏற்படும் என்ற முதல் வதந்திகளினால் 1947 மார்ச்சில் பஞ்சாபில் இந்துக்களுக்கும் (சீக்கியர்கள் உள்பட) முஸ்லிம்களுக்கும் இடையில் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன. பிரிட்டிஷ் ரகசியப் போலீஸ் ஏஜன்டுகளும் ஸ்தலங்களைச் சேர்ந்த பிற்போக்காளர்களும் இக்கலவரங்களைத் தூண்டினார்கள்.

இந்தியா பிரிவினை செய்யப்பட்ட பொழுது வகுப்புக் கலவரங்களில் எண்ணற்ற மக்கள் உயிரிழந்தார்கள்; கோடிக்கணக்கான மக்கள் உடைமைகளை இழந்தார்கள். இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும் குடிபெயர்ந்த அகதிகள் ஈவிரக்கமின்றிக் கொலை செய்யப்பட்டார்கள். எங்கும் அழிவு. இந்த நிலைமை பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்குச் சாதகமாக இருக்கவில்லை.

இந்தியாவில் வகுப்புக் கலவரங்கள் மிகவும் பயங்கரமான தேசிய நெருக்கடியை ஏற்படுத்தின. 7.5 மில்லியன் இந்துக்கள் மேற்கு பஞ்சாபிலிருந்தும் கிழக்கு வங்காளத்திலிருந்தும் இந்தியாவுக்கு வந்தார்கள்; 5.8 மில்லியன் முஸ்லிம்கள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்றார்கள். 1947இல் இந்தியாவில் ''அமைதியான'' என்று சொல்லப்பட்ட பிரிவினை ஏகாதிபத்தியவாதிகள் இதற்கு முன் நடைபெற்றிராத அளவில் இந்து-முஸ்லிம் வெறியைத் தூண்ட அனுமதித்தது. கோடிக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளையும் எல்லா உடைமைகளையும் இழந்தார்கள்; எந்த வன்முறையான புரட்சியிலும் நடைபெற்றிராத அளவுக்கு இலட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்தார்கள். எனினும் மொத்தத்தில் பிரிவினையின் போது ஏற்பட்ட உயிரிழப்பும் இரத்த வெள்ளமும் தாங்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவாக இருந்ததாக பிரிட்டிஷ் முதலாளி வர்க்கமும் வலதுசாரி சோஷலிஸ்ட் பத்திரிகைகளும் கூறின.

நாட்டுப் பிரிவினை பொருளாதாரத்தின் மீது மிகவும் துர்ப்பாக்கியமான விளைவைக் கொண்டிருந்தது. மொத்தப் பிரதேசத்தில் 14.9 சதவிகிதமும் மக்கள் தொகையில் 17.7 சதவிகிதமும் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்டன. பிரிவினைக்கு முன்னர் இந்தியாவின் கோதுமையில் 35 சதவிகிதத்தையும், அரிசியில் 32 சதவிகிதத்தையும், சணலில் சுமார் 80 சதவிகிதத்தையும், பருத்தியில் 35 சதவிகிதத்தையும் உற்பத்தி செய்த விவசாயப் பகுதிகள் பாகிஸ்தானுக்குத் தரப்பட்டன.

ஆனல் பாகிஸ்தானுக்குத் தரப்பட்ட பகுதியில் ஒரு சில தொழில் நிறுவனங்களே இருந்தன. மேலும், மேற்கு பாகிஸ்தான் அதன் கிழக்குப் பகுதியிலிருந்து (கிழக்கு வங்காளம்) 1,300 கிலோ மீட்டர்களால் பிரிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவில் நிலக்கரிச் சுரங்கங்களும், அநேக மாக எல்லாப் பெரிய இரும்பு மற்றும் எஃகுத் தொழிற்சாலேகளும் சணல் தொழிற்சாலேகளும், பல நெசவாலேகளும், சர்க்கரை ஆலேகளும் சிமெண்டுத் தொழிற்சாலேகளும் தேயிலேத் தோட் டங்களும், இரயில்வேப் பாதையில் பெரும் பகுதியும் பெரும்பான்மையான துறைமுகங்களும் இருந்தன.

பிரதேசங்களுக்கு இடையில் வளர்ச்சியடைந் திருந்த பொருளாதார உறவுகளேப் பிரிவினே தாறு மாருகச் செய்தது; உள்நாட்டுச் சந்தையின் உரு வாக்கத்தின் மீது பாதகமான விளேவைக் கொண் டிருந்தது. ஒரு பகுதி இயற்கை வளங்களே இழந் தது; மறு பகுதி தொழிற்சாலேகளே இழந்தது. இத்தகைய சூழ்நிலேயில் இரண்டு டொமினியன் களும் பொருளாதாரத்துறையில் ஏகாதிபத்திய அரசுகளேயும் உலகச் சந்தையையும் சார்ந்திருப் பது தவிர்க்க முடியாதபடி அதிகரித்தது.

ஆகவே பிரிவினே யுத்தத்தினல் ஏற்கெனவே பலவீனமடைந்திருந்த இந்தியப் பொருளா தாரத்தை மேலும் அரித்தழித்தது, நெடுங்காலத் துக்கு அதன் வளர்ச்சியைத் தடுக்கப் போகின்ற தீவிரமான தடைகளேத் தயாரித்தது.

இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சியில் 1947க்குப் பிந்திய கட்டம் நெருக்கடி மற்றும்

தேக்கம் நிறைந்த காலகட்டமாகும். உற்பத்தி குறைந்தது. அநேகமாக எல்லாப் பொருள்களின் உற்பத்தியும் 1938ம் வருட உற்பத்தி மட்டத்துக் கும் கீழே குறைந்து விட்டது. ஏராளமான தொழிற்சாலேகள் மூடப்பட்டன, பல தொழிற் சாலேகள் வாரத்தில் சில நாட்கள் மட்டுமே இயங் கின.

இவை எல்லாவற்றுடனும் பஞ்சம், பணவீக் கம்,அதிகரித்துக்கொண்டிருந்த வர்த்தகப் பற்ருக் குறை, இந்தியாவின் தங்கம் மற்றும் நாணய இருப்புக்கள் குறைவதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சியின் ''நன்மைகளேச்'' சுமார் 200 வருடங்களாக அனுபவித்த பிறகு சுதந்திர இந்தியா ஒரு பொருளாதாரப் பேராபத்தின் விளிம்பில் நின்று கொண்டிருந்தது. காலனி யாதிக்கச் சுரண்டலிஞல் இந்தியா வறுமை மிகுந்து, அழிந்துபோன நாடாக இருந்தது. அரசி யல் ரீதியில் சுதந்திரமடைந்த இந்தியா இந்த நிலேயிலிருந்துதான் தன்னுடைய பொருளாதார வளர்ச்சியைத் தொடங்க வேண்டியிருந்தது.

## அத்தியாயம் நான்கு

## விவசாய உறவுகளும் விவசாய சீர்திருத்தங்களும்

இன்றும்கூட இந்தியப் பொருளாதாரத்தின் முக்கியமான துறையாக விவசாயம் இருக்கிறது. நாட்டின் மொத்த உழைப்புச் சக்தியில் 70 சதவிகி

த்தினர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்; தேசிய வருமானத்தில் பாதியை விவசாயம் உற்பத்தி செய்கிறது.

நாடு சுதந்திரமடைவதற்கு முன்பு வளர்ச்சியடைந்த விவசாய உறவுகளின் தன்மை, கிராமப் பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அடிப்படையான நிகழ்வுப் போக்குகளையும் இன்னும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களின் செயற்பரப்பையும் பெருமளவுக்கு நிர்ணயிக்கிறது.

## 1. விவசாய உறவுகள்

விவசாய சீர்திருத்தங்களுக்கு முன்னர் நிலப் பிரபுத்துவ நிலக்கிழார்களில் 2-3 சதவிகிதத்தினர் விவசாயம் செய்யப்பட்ட நிலத்தில் 70 சதவிகிதத்தை உடைமையாக வைத்திருந்தனர். அவர்களும் லேவாதேவிக்காரர்களும் வர்த்தகர்களும் மொத்த உபரி உற்பத்தியையும் கைப்பற்றியதுடன் நில்லாமல் விவசாயிகள் மற்றும் குத்தகை விவசாயிகளின் துண்டு நிலங்களில் பயிர்செய்யப்பட்ட அவசியமான உற்பத்தியின் பகுதியையும் எடுத்துக் கொண்டனர்.

சுதந்திரத்துக்குப் பிந்திய ஆரம்ப வருடங்களின் போது சமூக, பொருளாதார மாற்றங்களின் விளைவாக—பிரதானமாக, விவசாய சீர்திருத்தங்களின் மூலமாக—நிலப்பிரபுத்துவ உறவுகளின் முக்கிய குணும்சங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன, பல பகுதிகளில் அவை அகற்றப்பட்டிருந்தன, கிராமப்பகுதிகளில் முதலாளித்துவ

உறவுகளின் வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் நவீன இந்தியாவின் கிராமப்பகுதிகளில் முதலாளித்துவ மாற்ற நிகழ்வுப் போக்கு சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதற்கு பதிலாகப் பெரும்பாலும் அவற்றைத் தீவிரப்படுத்த முற்பட்டது. விவசாயிகளில் பெரும் பகுதி, கீழ்நிலையிலிருந்த அதன் அணிகளில் பெரும் பகுதி முதலாளித்துவப் பரிணாமத்தின் மொத்த நிகழ்வுப் போக்கிலிருந்து ஒதுங்கி நின்றதுடன் முதலாளித்துவ நோக்குடைய கிராமப்புறப் பெருந்தனக்காரர்களின் தொடக்க நிலை மூலதனக் குவிப்புக்குத் தோற்றுவாயாக இருந்தது; அதன் நோக்கமும் அதுதான்.

உற்பத்தி செய்கின்ற விவசாயிக்குப் பதிலாக கிராமப்புற முதலாளி வர்க்கத்தின் உறுப்பினர்களாகிய நிலக்கிழார்களும் லேவாதேவிக்காரர்களும் வர்த்தகர்களும் உபரி உற்பத்திப் பொருளைப் பெரும்பகுதியும் இன்னும் கைவரப் பெற்றார்கள், அதாவது அதை விற்பனை செய்யப் படக் கூடிய வடிவமாக மாற்றினார்கள். அவர்கள் படிப்படியாக இணைந்து விவசாய முதலாளித்துவத்தின் வளர்ச்சியைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரே சமூக ரகமாக மாறினார்கள். இத்தகைய சூழ்நிலையில் கோடிக்கணக்கான சிறு உடைமையாளர்களுக்காகச் செய்யப்படுகின்ற உற்பத்தி அவர்களுடைய தனிப்பட்ட நுகர்வாக மாறிவிடுகிறது, அது உழைக்கும் சக்தியையும் அதிகப் பூர்விகமான உற்பத்திச் சாதனங்களையும் மட்டுமே புனருற்பத்தி செய்யப் போதுமானதாக இருக்கிறது. உற்பத்தியின் ரகமும் நுகர்வின் தன்மை

யும் கூடுதலான உழைப்பு அல்லது புதிய கருவிகள் மிகக் குறைவாகவே தேவைப்படுவதை முன் நிர்ணயம் செய்கின்றன. விவசாயி அல்லது குத்தகை விவசாயி விவசாயப் பொருள்களின் உற்பத்தியில் தனிப்பட்ட செலவை நிர்ணயிக்கும் பொழுது செலவு அளவு விகிதங்களைப் பற்றியோ, சமூக ரீதியில் அவசியமான உழைப்பில் அவற்றின் உறவைப் பற்றியோ சிந்திக்க முயற்சிப்பதில்லை; ஆனால் அவர்களுக்கு அநேகமாகத் தொடர்பில்லாத தேசியச் சந்தையில் அதன் வெளியீடாகவே விலைகள் இருக்கின்றன. எனவே தங்களுடைய குறைந்த பட்ச சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வது—அவை நில வாரத்தின் அளவை வரையறுக்கின்றன — அவர்களுடைய உற்பத்தியின் நோக்கமாக இருக்கிறது. உற்பத்தித் திறனைத் தூண்டுவதற்கோ, உயர்த்துவதற்கோ அல்லது உற்பத்திக்கு அவசியமான நேரத்தைக் குறைப்பதற்கோ அதனால் முடியாது. நடைமுறையில் கிராம உற்பத்தியாளர்களில் அதிகப் பெரும்பான்மையினர் பிழைப்பிற்கான அல்லது ஓரளவு பிழைப்பிற்கான பொருளாதாரத்தைக் கொண்டிருக்கின்றனர். பொருளாதாரத்தின் விவசாயத் துறையில் முதலாளித்துவ உறவுகளின் உருவாக்கத்துக்கு ஏறக்குறைய விரிவான அடிப்படையை அமைப்பதற்கு அவசியமான கட்டமாகிய சிறு பண்ட உற்பத்திக் கட்டத்துக்கு அது மிகவும் மெதுவாகவே வளர்ச்சியடைகிறது.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில், பிழைப்பிற்கான பொருளாதாரம் ஆதிக்கம் வகித்து, பண்டப் பரிவர்த்தனை வளர்ச்சி அடையாதிருக்

கும் பொழுது விவசாயி அல்லது குத்தகை விவசாயி சுரண்டப்படுவது நிலப்பிரபு தன்னுடைய சொந்த நுகர்வுக்கும் தன்னுடைய பரிவாரத்துக்கும் பெற்றுக்கொள்கின்ற உற்பத்திப் பொருள்களின் அளவின் மூலமாக எடுத்துரைக்கப்படுகிறது. ஆகவே பிழைப்பிற்கான பொருளாதாரம் விவசாயியின் நிலவுடைமையிலிருந்து நில வாரத்தின் வடிவத்தில் எடுக்கப்படக் கூடிய உற்பத்திப் பொருள்களின் அளவுக்கு எல்லைகளை விதிக்கிறது.

இந்திய கிராமங்களில் பாரம்பரியமான பெரிய தனக்காரர்களும்—நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்கள், வர்த்தகர்கள், லேவாதேவிக்காரர்கள்—முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியுடன் சேர்ந்து தோன்றிய புதிய பெருந்தனக்காரர்களும் விவசாயிகளினால் படைக்கப்பட்ட உபரி உற்பத்திப் பொருளில் பெரும் பகுதியை ஒதுக்கிக் கொண்டு விற்பனை செய்கிறார்கள். சுரண்டல்காரர்களைக் கொண்ட இந்தச் சிறு குழு விவசாயப் பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனையைத் தனது ஏகபோகமாக வைத்துக் கொள்கிறது, அதன் மூலம் மூலப்பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களுக்கான விலைகளின் இயக்கியலில் இக்குழு கணிசமான தாக்கத்தைச் செலுத்த முடிகிறது. விவசாய உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு செய்கின்ற எல்லா முயற்சிகளையும் தீவிரமாக எதிர்க்கிறது.

ஆகவே விவசாயிகளின் சிறு நிலவுடைமைகளில் பிழைப்பிற்கான பொருளாதாரத்தைப் பெருமளவுக்குப் பாதுகாப்பது இந்திய கிராமங்களின் விவசாய உறவுகளின் குறிப்பிடத்தக்க

அம்சமாக இருக்கிறது. இந்தச் சிறு நிலவுடைமைகள் கிராமங்களுக்கு வெளியில் இருக்கின்ற பண்ட-பண உறவுகள் என்ற சுழலுக்குள் இழுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயி தன்னுடைய சொந்த நுகர்வுக்காகவும் வாரம் மற்றும் லேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடனைக் கொடுப்பதற்காகவுமே பிரதானமாக விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்தாலும் பெரிய நிலக்கிழார்கள் விவசாயியின் உற்பத்திப் பொருளை அதன் பரிவர்த்தனை மதிப்பு என்ற கோணத்திலிருந்தே பார்க்கிறார்கள். அதிகமான லாபத்தை அடைய வேண்டும் என்ற ஆசைக்கு அளவு இல்லை.

பெரிய நிலக்கிழார்கள் விவசாயியின் உற்பத்திப் பொருளின் மீது, அதன் பரிவர்த்தனை மதிப்புக்காகவே அக்கறை கொண்டிருக்கிறார்கள். இயன்ற அளவுக்கு அதிகமான லாபத்தை அடைய வேண்டுமென்ற அவர்களுடைய விருப்பத்தையும் சுரண்டலின் அதிகரிக்கும் அளவையும் இது நிர்ணயிக்கிறது.

இந்தியாவின் பன்முகமான சமூக-பொருளாதாரக் கட்டமைப்பில் முதலாளித்துவ உறவுகள் ஆதிக்கம் செலுத்தவில்லை என்பதால் தேசியப் பொருளாதாரத்தின் ஆகப் பெரிய துறையாகிய விவசாயத் துறையில் லாபம் உற்பத்தியை ஒழுங்கு படுத்துவது என்ற முறையில் இயங்கவில்லை. கிராமங்களில் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவது நில வாரமே—லாபம் அல்ல; ஆகவே நில வாரம் லாபத்துக்கு உச்ச வரம்பை நிர்ணயிக்கிறது.

முதலாளித்துவ நில உறவுகள் ஆதிக்கம் செலுத்துகின்ற பொழுது லாபம் வாரத்துக்கு

உச்ச வரம்பை நிர்ணயிக்கிறது; ஆகவே வாரத்தின் அளவு மூலதனத்தின் செயல் முறை மற்றும் கைவரப் பெறுதலால் நிர்ணயிக்கப்படுகிறது. எல்லா சமூக, பொருளாதார அமைப்புகளும் மூலதனத்தின் போக்குவரத்துக்குக் கட்டுப்பட்டவை என்பதை இந்த நிகழ்வு எடுத்துரைக்கிறது.

கிராமப் பெருந்தனக்காரர்களால் உற்பத்தியைக் கட்டுப்படுத்தவும், உற்பத்திச் செலவுக்குச் சம்பந்தமில்லாதபடி சிறு விவசாயிகள், குத்தகை விவசாயிகளுடைய உபரி மற்றும் அவசியமான உற்பத்திப் பொருளின் கணிசமான பகுதியை அநேகமாக ஒதுக்கீடு செய்துகொள்ளவும் முடிவதால் அவர்கள் தங்களுடைய வருமானத்தின் பெரும் பகுதியைப் பெரும்பாலும் முதலாளித்துவத்துக்கு முந்திய வாரம் அல்லது கடன்களின் மீது வட்டி என்ற வடிவத்தில் பெறுகிறார்கள்—லாபம் என்ற வடிவத்தில் அல்ல. தங்களுடைய நிலத்தில் கூலியுழைப்பைக் கொண்டு விவசாயம் செய்கின்ற பெருந்தனக்காரர்களுக்கும் இது பொருந்துவதே. சிறு விவசாயிகள் மற்றும் குத்தகை விவசாயிகளின் நிலவுடைமைகளிலிருந்து வசூலிக்கப்படுகின்ற வருமானங்கள் ரகத்திலும் தோற்றுவாயிலும் முதலாளித்துவத்துக்கு முந்திய தன்மை கொண்டவை; ஆனால் அவற்றின் அளவில் அவை வழக்கமாக முதலாளித்துவ ரகத்தைச் சேர்ந்த பண்ணைகளிலிருந்து கிடைக்கும் லாப அளவைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருக்கின்றன. உபரி உற்பத்திப் பொருள் இந்த வடிவத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற பொழுது உற்பத்திச் செலவு என்பது அநேகமாக இல்லாத இனமே;

வருமான அளவை லாப அளவுடன் ஒப்பிடக் கூட முடியாது. இந்தச் சூழ்நிலையில் மற்றும் வளர்ச்சிக் கட்டத்தை மனதில் வைத்துப் பார்க்கும் பொழுது முதலாளித்துவ முறையில் நடத்தப் படுகின்ற பண்ணைகள் ''பாரம்பரியமான'' உற்பத்தி வடிவங்களில் சிறு விவசாய நிலவுடைமைகளின் உபரி உற்பத்திப் பொருளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் கைவரப்பெறுதல் ஆகியவற்றில் கிடைப்பதைக் காட்டிலும் பெரும்பாலும் குறைந்த லாபத்தைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் விவசாய அமைப்பிலுள்ள இந்த நிகழ்வுகள் அனைத்தும் முதலாளித்துவ உறவுகள் நிறுவப்பட்டுள்ள, பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளிலும் செயல்படுகின்ற நாடுகளிலிருந்து வேறான ஒரு நிலைமையை உருவாக்குகின்றன. லாபங்களுக்கு மிகுதியாக வாரங்கள் அமைவதில்லை, ஆனால் வாரங்களுக்கு மிகுதி என்ற வடிவத்தில் மட்டுமே லாபங்கள் தோன்ற முடியும்.

இத்தகைய நிலைமை இந்தியாவின் விவசாயத் துறையில் முதலாளித்துவ வளர்ச்சியின் மீது கடுமையான நிபந்தனைகளைச் சுமத்துகிறது. உபரி உழைப்பின் வடிவம் என்ற முறையில் லாபம் பெரும்பான்மையான சிறு விவசாய நிலவுடைமைகளில் இருக்கின்ற உற்பத்தி மற்றும் கைவரப் பெறுதலின் நிலைமைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. விவசாயத்தில் படைக்கப்படுகின்ற உபரி உற்பத்திப் பொருளின் மிகப் பெருவாரியான பகுதி நில வாரம், கடன்களுக்கு வட்டி, ஒதுக்கீடுகளின் முதலாளித்துவத்துக்கு முந்திய இதர வடிவங்களைக் கொண்டிருக்கிறது. இந்திய கிராமங்களில்

மூலதனத்தின் ஊடுருவலின் அளவை மட்டுமல்லாமல் அதன் புனருற்பத்தியின் பொது நிலைமைகளையும் இது பிரதிபலிக்கிறது.

பொருளாதாரத்தின் ஆகப் பெரிய துறையில் மூலதனக் குவிப்பு முதலாளித்துவத்துக்கு முந்திய அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்படுவதால் இறுதிக் கணக்கில் அது பண மிகைக் குவிப்புகளாக மாற்றப்படுகிறது; இவை நிலவுடைமையாளர்களின் பல்வேறு சமூகக் குழுக்களிடம், வர்த்தகர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள் மற்றும் லேவாதேவிக்காரர்களிடம் குவிக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் அது பயனுள்ள உற்பத்தியில் ஒருபோதும் ஈடுபடுத்தப்படுவதில்லை, அது சுரண்டுகின்ற நுகர்வின் துறையை மட்டுமே விரிவுபடுத்துகிறது. இது முதலாளித்துவ முறையில் பயனுள்ள குவிப்புக்கு மட்டுமல்லாமல் எவ்விதமான குவிப்புக்கும் சாத்தியத்தையும் குறைத்துவிடுகிறது. இந்தக் கோணத்தில், முதலாளித்துவத்துக்கு முந்திய வாரமும் மற்றும் இதர, இணைகரமான வருமான வடிவங்களும் மூலதனக் குவிப்பின் தொடக்க நிலை வடிவங்களாக (கணிசமான நிபந்தனைகள் இல்லாமல்) கருதப்பட முடியாது. உபரி உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக நட்ட ஈடு கொடுக்கப்படாமல் ஒதுக்கீடு செய்யப்படுதல், முதலாளித்துவத்துக்கு முந்திய நில வாரம் மற்றும் கடன்களுக்காகத் தரப்படுகின்ற வட்டியின் குவிப்பு ஆகியவற்றின் மூலம் கிராமங்களில் படைக்கப்படுகின்ற பணவியல் மற்றும் பொருளாயத வளங்கள் மிகைக் குவிப்புச்

செய்யப்படுகின்ற வேகம் அவற்றை மூலதனமாக மாற்றுவதற்கு அவசியமான சமூக நிபந்தனைகள் நிறுவப்படுவதைக் காட்டிலும் அதிகமான வேகத்தில் வளர்ச்சியடைகிறது. தொழில்துறை மூலதனக் குவிப்பின் (கிராமங்களுக்கு வெளியில்) குறைவான வேகத்தினால் மூலதனத்தின் காலாவதியான வடிவங்களின் மிகைக்குவிப்பு மூலதனக் குவிப்பின் வட்டத்துக்குள் மிகவும் குறைவாகவே இழுத்துக் கொள்ளப்படுகிறது.

முதலாளித்துவ உற்பத்தி முறை தன்னைத் தடை செய்கின்ற கட்டமைப்புகளுடன் தீவிரமாகப் போராடித் தன்னை நிறுவிக்கொள்ள வேண்டியிருக்கிறது; இந்தப் போராட்டம் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளைத் தழுவியது. எங்கே வரலாற்று நிலைமைகள் காரணமாக முதலாளித்துவம் பழைய உற்பத்தி முறையின் எச்சங்களுடன் சமரசம் செய்து கொண்டதோ அந்த நாடுகளில் பொருளாதாரத்திலும் அரசியலிலும் பிற்போக்கான கூறுகள் இருந்தது மட்டுமின்றி அவற்றின் பொருளாதார முன்னேற்றத்தின் வேகமும் குறைவாக இருந்தது. இந்த நாடுகள் நெடுங்காலம் வரை முதலாளித்துவ ஐரோப்பாவில் இரண்டாந்தர அரசுகளாக இருந்தன.

முதலாளித்துவத்துக்கு முந்திய பொருளாதார வடிவங்களைப் பாதுகாப்பதும் வெவ்வேறு முதிர்ச்சியைக் கொண்ட முதலாளித்துவக் கட்டமைப்புகள் இருப்பதும் வளர்முக நாடுகளில் தொழில்துறை மூலதனத்தின் தன்மையையும் இயைபையும் முன்நிர்ணயம் செய்கின்றன; ஒரு பன்முகப் பொருளாதாரத்தில் மூலதனக் குவிப்பு

மற்றும் விரிவாக்கப் புனருற்பத்தியின் பிரத்யேகக் கூறுகளையும் முன்நிர்ணயம் செய்கின்றன.

கிராமங்களில் உற்பத்தி முதலீடுகள் ஒப்பு நோக்கில் சிறு அளவில் இருக்கின்ற நிலையில் சுரண்டல் அளவு மிக அதிகமாக இருப்பது தொழில்துறை மூலதனக் குவிப்பின் குறைந்த வேகத்தை முன்நிர்ணயம் செய்கிறது, அதாவது முதலாளித்துவக் கட்டமைப்புகளின் வளர்ச்சியை அது தாமதப்படுத்துகிறது அல்லது பின்னுல் இழுக்கிறது. வருமானத்தின் உயர்ந்த விகிதமும் அதனுல் ஏற்படுகின்ற மிகைக்குவிப்பும் முதலாளித்துவத் துறையில் குவிப்பு மற்றும் புனருற்பத்தி வேகத்தின் மீது பாதகமான தாக்கத்தைச் செலுத்துகின்றன; செல்வத்தின் பழங்கால வடிவத்துக்கு—தங்கம், வைரங்கள், இதரவை—பிரத்யேகமான, அதிகரிக்கப்பட்ட முதலீட்டுத் தேவையைத் தோற்றுவிக்கின்றன; எல்லா ரொக்கப் பணக் குவிப்புகளையும் (உபரி மதிப்பின் பகுதி உள்பட) வர்த்தகம், கள்ளச் சந்தை, லேவாதேவி, வாரச் சுரண்டல் ஆகியவற்றின் துறைக்குள் அதாவது, தொழில்துறை மூலதனத்துக்கு பாதகமான முறையில் முதலாளித்துவத்துக்கு முந்திய குவிப்பின் துறையை விரிவுபடுத்துகின்ற ரகத்தைச் சேர்ந்த பொருளாதார நடவடிக்கைக்குள் இழுக்கின்றன.

உற்பத்தி மற்றும் பரிவர்த்தனைத் துறையில் முதலாளித்துவத்துக்கு முந்திய சுரண்டல் முறைகளைப் பயன்படுத்திப் பெறுகின்ற வருமானத்தின் உயர்ந்த அளவு தொழில்துறை மூலதன முதலீட்டுக்கு ஒருவகையில் தடையாக மாறிவிடுகிறது.

முதலாளித்துவத்துக்கு முந்திய வாரம் அல்லது கடன்களின் மீது வட்டியைக் காட்டிலும் லாபங்கள் பெரும்பாலும் குறைவாக இருக்கின்றன.

இந்தியப் பொருளியலாளரான பட்ஞய்க் இந்த உண்மையைச் சுட்டிக்காட்டி முதலாளித்துவத்துக்கு முந்திய வாரம் இந்த அளவுக்கு அதிகமாக இருப்பது முதலாளித்துவரக உற்பத்தியின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உறுதியான தடையாக இருக்கிறது என்று கூறியுள்ளார்.

நவீன இந்தியாவின் விவசாயப் பொருளாதாரத்தைப் பற்றிய ஆராய்ச்சியில், இத்தகைய சூழ்நிலையில் தொழில்நுட்பத் தொகுதிகளைக் கொண்ட அபிவிருத்தி வளம் ஏற்கெனவே முழுவதும் நிறைவேற்றப்பட்டிருந்தால் பயனுள்ள மூலதன முதலீடுகளை சமநிலைப்படுத்துவதை அல்லது குறைப்பதைக் கூட ஒருவர் ஆலோசனை கூறலாம் என்று குறிப்பிடுகிருர். மூலதனத்தின் தொழில்நுட்ப இயைபு மிகவும் அதிகரிக்கும் பொழுது உழைப்பின் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியின் அளவின் வளர்ச்சி ஒரு முதலாளித்துவ நிறுவனத்தில் உற்பத்தி, உற்பத்திச் செலவுகளைப் பற்றி அக்கறை இல்லாமல் நடத்தப்படுகின்ற, ஒதுக்கீடு முதலாளித்துவத்துக்கு முந்திய வாரத்தின் வடிவமாக இருக்கின்ற மரபுவழிப்பட்ட நிறுவனங்களின் உற்பத்தியுடன் போட்டியிடக் கூடிய அளவுக்கு அதன் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதை சாத்தியமாக்கிஞல், முதலாளித்துவ முதலீடுகள் சாத்தியமே. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் உற்பத்தித் திறனின் வளர்ச்சிக்குப் பிறகு முதலாளித்துவத் தொழிற்சாலை

களின் உற்பத்திப் பொருள்கள், முதலாளித்துவத்துக்கு முந்திய பொருளாதார கட்டமைப்புகளிலிருந்து சந்தைக்குக் கொண்டுவரப்படுகின்ற விவசாயப் பண்டங்களின் தொகுதியுடன் போட்டியிட இயலாதென்றால், அப்பொழுது தொடக்க நிலையில் இருக்கின்ற முதலாளிகளின் மூலதனக் குவிப்புகள் லேவாதேவி, கள்ளச் சந்தை, இதரவைகளுக்குத் திருப்பிவிடப்படுகின்றன. மூலதனக் குவிப்புப் பிரச்சினை முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்களின் இப்படிப்பட்ட மிகவும் முரண்பாடான இடைச் செயலின் மூலம் தீர்க்கப்படுகிறது. அது கிராம மட்டத்தில் மட்டுமல்லாமல் தேசியப் பொருளாதாரத்தின் அளவிலும் தீர்க்கப்படுகிறது; ஏனென்றால் நிலவுடைமையும் அதனுடன் இணைந்திருக்கின்ற முதலாளித்துவத்துக்கு முந்திய வாரமும் லேவாதேவித் தொழிலும் இதர லாபகரமான நடவடிக்கைகளும் தொழில்துறை மூலதனம் நகரங்களில் இயங்கும் வடிவங்களில் ஈடுபடுத்தப்படுகின்றன.

ஆகவே நாடு முழுவதிலும் மற்றும் விவசாயத் துறையிலும் உள்ள மொத்த சமூக-பொருளாதார நிலைமைகள் உடைமை வர்க்கத்தினர் குவித்திருக்கின்ற மூலதனத்தை உபயோகிப்பதற்கு நிலவுடைமையை மிகவும் கவர்ச்சிகரமான, லாபகரமான வடிவமாக இன்னும் செய்கின்றன. அது நிலத்தின் தனியார் உடைமையையும் அதை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைகின்ற சுரண்டலின் அதிகமான அளவையும் பாதுகாப்பதற்கும், அதிகப்படுத்துவதற்கும் கூட முற்படுகிறது. விரிவான ஒதுக்கீடுகள் விவசாயப் பொருளாதாரத்தை

அரித்தழிக்கின்றன; விவசாய இந்தியாவின் புனருற்பத்தி இயந்திரத்தில் அவசியமான உறுப்பாகியுள்ள லேவாதேவி மூலதனத்தின்—பிரதான உற்பத்தியாளர் மீது விழுகின்ற சுரண்டல் சுமையை அது அளவிட முடியாத அளவுக்கு அதிகப்படுத்துகிறது—வளர்ச்சிக்குப் புறநிலையான அடிப்படையை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக இயற்கை வளங்கள் அளவுக்கு மீறிக் கொள்ளையடிக்கப்படுகின்றன, மனித முயற்சிகள் களைப்படைகின்ற அளவுக்குத் தீவிரப்படுத்தப்படுகின்றன; இது உழைப்பின் உற்பத்தித் திறன் குறைவதற்கும் உற்பத்தியின் புதிய வடிவங்கள் மிகவும் மெதுவாக வளர்ச்சியடைவதற்கும் இட்டுச் செல்கிறது. இந்த நிகழ்வுப் போக்குகள் நெடுங்காலத்துக்கு இழுபறியான விவசாய நெருக்கடியின் நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கின்றன; அது நாட்டின் மொத்த சமூக-பொருளாதாரப் பரிணமத்தின் மீதும் தேசிய அரசாங்கத்தின் சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பயனுறுதியின் மீதும் தாக்கம் செலுத்துகிறது. ஆகவே நாடு சுதந்திரமடைந்த பிறகு தேசியச் சீரமைப்பு முதலாவதாகவும் முதன்மையாகவும் விவசாயச் சீர்திருத்தங்களுடன் தொடங்கியது.

## 2. விவசாயச் சீர்திருத்தங்கள்

இந்தியாவின் விவசாய அமைப்பைச் சீர்திருத்துகின்ற பணி கால் நூற்றுண்டுக்கு முன்பு தொடங்கியது. ஆனல் அது இன்னும் பூர்த்தி அடையவில்லை.

சுதந்திர இந்தியாவின் விவசாயக் கொள்கை முதல் தடவையாக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1950-51 முதல் 1955-56 முடிய) வகுத்துரைக்கப்பட்டது. நாட்டுக்குத் தேவை யான உணவுப் பொருள்கள் மற்றும் மூலப் பொருள்களின் சப்ளையை உறுதிப்படுத்துகின்ற முறையில் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரான தடைகளை அகற்றுவது என்ற கடமையை இத் திட்டம் முன்வைத்தது. சுரண்டலை அகற்றி எல்லா விவசாயிகளுக்கும் சமமான உரிமைகளையும் வாய்ப்புகளையும் உத்தரவாதமளிக்கின்ற நிலைமை களை ஏற்படுத்துவது என்ற சமூகக் குறிக்கோள் வலியுறுத்தப்பட்டது. நில உறவுகளைப் பற்றிய பிரச்சினை முக்கியமான தேசியப் பிரச்சினை; நிலத்தை உழுது, பயிரிடுகின்ற அனைவருக்கும் அவர் களுடைய உழைப்பின் பலன்கள் கிடைக்கின்ற வகையில் விவசாய அமைப்பு இருக்க வேண்டும் என்ற முன்னுரையுடன் திட்டம் தயாரிக்கப்பட் டிருந்தது.

அரசின் மொத்த முதலீடுகளில் 34 சதவிகி தத்துக்கும் அதிகமான தொகையை விவசாயத் தின் வளர்ச்சிக்கு, கிராமங்களின் சீரமைப்புக்கு, நீர்ப்பாசன முன்னேற்றத்துக்குச் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டது.

மத்திய அரசாங்கம் நாடு முழுமைக்கும் பொதுவான ஒரு நிலச் சட்டத்தைத் தயாரிக்க வில்லை. ஒவ்வொரு மாநிலத்துக்கும் அவசியமான நிலச் சட்டத்தைத் தயாரிப்பதும் நிறைவேற்றுவதும் அமுல் செய்வதும் மாகாண சட்டமன்றங்களிடம், அரசாங்கங்களிடம் விடப்பட்டது. மாகாண அர

சாங்கங்களும் அவற்றின் சட்டமன்றங்களும் நில வுடைமையாளர்களுடன் நெருக்கமான தொடர்பு களைக் கொண்டிருந்தபடியால் அங்கே விவசாய சீர்திருத்தங்களின் அளவு மற்றும் வேகத்தின் மீது இது உடனடியான தாக்கத்தைக் கொண்டிருந் தது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் சிபாரிசுகளுக் கேற்ப ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடி வடைகின்ற போது எல்லா மாகாணங்களிலும் நிறைவேற்றப்பட்ட நிலச் சட்டங்கள் காலனி யாதிக்க காலத்திலிருந்து பெறப்பட்ட ஜமீன்தாரி முறையை ஒழிப்பதையும், நில வாரங்களைக் குறைப் பதையும், நிலவுடைமைகளை ஒன்றுசேர்ப்பதன் மூலம் விவசாயத்தைச் சீரமைப்பதையும், உற்பத் தியில் கூட்டுறவுக் கொள்கைகளின் வளர்ச்சியை யும் மற்றும் கிராமத்தின் சுய நிர்வாகத்தில் கூட் டுறவு வடிவங்களின் வளர்ச்சியையும், நிலவுடை மைக்கு உச்ச வரம்பு நிர்ணயித்து உபரி நிலத்தை நிலமில்லாத விவசாயிகளுக்கு அல்லது சிறு நில வுடைமைகளை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மாற்றுவதையும், எடுத்துக் கொள்ளப்பட்ட உபரி நிலத்துக்குக் கண்டிப்பாக நட்ட ஈடு வழங்கு வதையும் வற்புறுத்தின. 1956—1957ம் வருடத் துக்குள் ஜமீன்தாரி முறை அமுலில் இருந்த எல்லா மாநிலங்களுமே அரசுக்கும் உற்பத்தியாளர்களுக் கும் இடையில் இடைத்தரகர்களின் நிலவுடைமை உரிமையை, அதாவது ஜமீன்தார்கள், ஜாகீர்தார் கள், தாலுக்தார்கள், மல்குசார்கள், இதரர் களின் உரிமைகளை ரத்துச் செய்த சட்டங்களை இயற்றின. ரயத்துவாரி முறை அமுலில் இருந்த,

அதாவது விவசாயிகள் நிலத்துக்கு உடைமை யாளர்களாக இருந்த பிரதேசங்களை இந்தச் சட்டங்கள் பாதிக்கவில்லை. ஆனால் உண்மை என்ன வென்றால் இப்பிரதேசங்களிலும் பெரிய அளவு நிலவுடைமை நெடுங்காலமாகவே இருந்து வந்திருக்கிறது, பலவிதமான கொத்தடிமைக் குத்தகைகளும் இருந்தன, மிகவும் சிறிய, துண்டு நிலவுடைமைகளும் இருந்தன.

ஜமீன்தாரி முறை மற்றும் அதைப் போன்ற முறைகளை ஒழிக்கின்ற சட்டத்தின் கீழ் நிலத்தைத் விவசாயம் செய்யாமல் வாரம் மட்டும் வசூலித்துக் கொண்டிருந்தவர்களிடமிருந்து நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டது. நிலத்தில் விவசாயம் செய்த குத்தகை விவசாயி களுக்கு நிலவுடைமை உரிமை கொடுக்கப்பட்டது. இந்த நிலவுடைமை உரிமைகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக இருந்தன. விவ சாயிகள் ஜமீன்தார்களுக்குக் கொடுத்து வந்த வாரத்துக்கு பதிலாக அரசாங்கத்துக்கு நில வரி கட்டினார்கள். இச்சீர்திருத்தத்துக்கு முந்திய நில வாரத்தின் அடிப்படையில் நில வரி நிர்ணயிக்கப் பட்டது.

அதிகாரபூர்வமான புள்ளிவிவரங்களின் படி ஜமீன் நிலங்களில் விவசாயம் செய்த 20 மில்லிய னுக்கும் அதிகமான குத்தகை விவசாயிகளுக்கு 1961க்குள் நிலவுடைமை கொடுக்கப்பட்டது. இச்சீர்திருத்தங்கள் அமுலாக்கப்பட்ட பொழுது ஜமீன்தார்களும் அவர்களைப் போன்றவர்களும் தங்களிடமிருந்த நிலங்களில் 60 சதவிகிதத்துக் கும் அதிகமானவற்றை இழந்தார்கள்.

ரயத்துவாரிப் பிரதேசங்களில் விவசாயச் சட்டங்கள் பெரிய நிலவுடைமையாளர்களை அநேகமாக பாதிக்கவில்லை. நிலச் சீர்திருத்தங்கள் பிரதானமாக வாரத்துக்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பதையும் குத்தகை விவசாயிகளுக்கு நிலப் பாத்தியத்தை சம்பந்தமாகப் பல உத்தரவாதங்களைக் கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. சட்டத்தின்படி நஞ்சை நிலங்களில் மொத்த விளைச்சலில் நான்கில் ஒரு பகுதிக்கும் புஞ்சை நிலங்களில் மூன்றில் ஒரு பகுதிக்கும் அதிகமாக வாரம் வசூலிக்க முடியாது. துணை வாரம் மற்றும் நிலக்கிழாருக்கு மறைமுகமாகப் பணம் கொடுப்பது தடைசெய்யப்பட்டது.

மொத்த நட்ட ஈட்டுத் தொகை சுமார் 7 பில்லியன் ரூபாய்களாகும். இந்த நட்ட ஈடு ரொக்கப் பணமாகவும் அரசுப் பத்திரங்களாகவும் கொடுக்கப்பட்டது. இந்த வழங்கீடுகளின் சுமை சிறு நிலவுடைமையாளர்கள் மீது விழுந்தது; தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இது சிக்கலை ஏற்படுத்தியது; நாட்டின் சமூக வளர்ச்சி தாமதமடைந்தது. கிராமங்களில் முக்கியமான பிரச்சினை நிலத்தை மறு பங்கீடு செய்வதே. இச்சீர்திருத்தங்களினல் அப்பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. ஜமீன்தாரி முறையை ஒழித்த நோக்கம் முதலாளித்துவ முறைகளை உபயோகிக்கக் கூடிய நிலவுடைமையாளரை உருவாக்குவதே. ஜமீன்தார் குறிப்பிட்ட அளவு நிலத்தைத் தன்னுடைய சொந்த நிலமாக வைத்துக் கொள்வதற்கும் அந்த நிலத்தில் அவரோ, குடும்பத்தினரோ சொந்தமாக அல்லது கூலியுழைப்பின் மூலமாக விவசாயம்

செய்ய முடியுமென்றால் குத்தகை விவசாயி களை வெளியேற்றுவதற்கும் உரிமை கொடுக்கப் பட்டது.

நிலவுடைமை குறித்த கட்டுப்பாடுகள் பெரிய தோட்டங்களுக்கும் விசேஷமான பண்ணைகளுக் கும் (பால்வளம், கால்நடை, பழத் தோட்டம்), அதிகமான மூல்தனம் போடப்பட்டிருந்த பண்ணை களுக்கும் அமுல் செய்யப்படவில்லை.

இச்சீர்திருத்தங்களின் போது ஏராளமான குத்தகை விவசாயிகள் நிலத்தை விட்டு வெளி யேற்றப்பட்டார்கள். ஏனென்றால் நிலக்கிழார் கள் தம் உடைமைகளைப் பாதுகாப்பதற்காக நிலங் களைத் தங்களுடைய உறவினர்களுக்கிடையில், பொய்யான நபர்களுக்கிடையில் கூட பிரித்து எழுதிவைத்தார்கள்.

பெரிய நிலக்கிழார்கள் கணிசமான நிலங் களை, மிகவும் நல்ல நிலங்களை வைத்துக் கொண் டார்கள். அவர்கள் உடனடியாகப் புதிய விவசாய முறைகளைப் பின்பற்றுவது இயற்கையே. எனவே நிலத்தில் குத்தகை விவசாயிகள் தொடர்ந்து விவ சாயம் செய்தார்கள். மறைமுகமான குத்தகை முறைகள் வாடிக்கையாகப் பின்பற்றப்பட்டன. இவை விவசாயிகளின் நிலைமையை இன்னும் மோசமாக்கின.

காலனியாதிக்க காலத்திலிருந்து இந்தியாவில் இருந்து வருகின்ற அமைப்புகளையும் சமூக-பொருளாதாரக் கட்டமைப்பையும் பாதுகாத்துக் கொண்டு கிராம வாழ்க்கையைத் திருத்தியமைக்க முடியாது என்பது விவசாய சீர்திருத்தங்களின்

முதல் கட்டத்திலேயே தெட்டத் தெளிவாயிற்று.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1955-56—1960-61) இந்தியாவைத் தொழில்மய மாக்குவதன் தொடக்கத்தையும் அதன் பொருளா தார வளர்ச்சியின் அளவு விகிதங்களை மாற்று வதற்கும் செய்யப்பட்ட முயற்சிகளைக் குறித்தது. குத்தகை விவசாயிகள் மற்றும் சிறு நிலவுடைமை யாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது திட்டத் தின் விவசாயக் கொள்கையின் முக்கிய நோக்கமா கும். விவசாய சீர்திருத்தங்களின் இந்தக் கட்டத் தில் நிலவுடைமைக்கு உச்ச வரம்பு நிர்ணயிப் பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. இப் பிரச்சினையைப் பற்றி முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் சில சிபாரிசுகளைச் செய்திருந்தது. இப் பொழுது குத்தகை விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுவதையும் நிலத்தைப் பொய் யான முறையில் பங்கிடுவதையும் தடுப்பதற்கு ''நிலத்தைச் சொந்தமாக விவசாயம் செய்வது'' என்ற கருத்தை இன்னும் துல்லியமாக வரை யறுக்க வேண்டியிருந்தது. எனினும் ''உழுபவ னுக்கே நிலம்'' என்ற கோஷம் நிறைவேற்றப்பட வில்லை.

இந்தியாவின் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத் தில் (1960-61—1965-66) விவசாயத்தைத் திருத் தியமைப்பதற்குச் செய்யப்பட்ட பத்து வருட கால முயற்சிகளைத் தொகுத்துக் கூறும் பொழுது குத்தகை விவசாயிகளின் வாழ்க்கையில் சட்டத் தின் விளைவுகள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவாகவே இருந்தன என்று தெரிவிக்கப் பட்டது. எனவே நில உரிமைகளைக் குத்தகை

விவசாயிகளுக்கு மாற்றிக் கொடுக்கும் செயல் திட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அவசியத்திலிருந்து திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. குத்தகை விவசாயிகள் பயிரிட்ட நிலங்கள் அனைத்துமே அரசு உடைமையாக அறிவிக்கப்பட்டுப் பிறகு குத்தகை விவசாயிகளுக்கு மாற்றிக் கொடுக்கப்பட வேண்டும் அல்லது நட்ட ஈடு கொடுப்பதுடன் குத்தகை விவசாயிகளின் உடைமையாக மாற்றப்பட வேண்டும் என்று இதன் தொடர்பாகச் சிபாரிசு செய்தது. எனவே நாட்டில் முக்கியமான நிலப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை என்பது அங்கீகரிக்கப்பட்டது.

நான்காவது (1969—1974) மற்றும் ஐந்தாவது (1974—1979) திட்டங்கள் விவசாயச் சட்டங்களின் சமூக நோக்கங்களை — கிராமங்களில் சமூக நீதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தை—நிறைவேற்ற வேண்டிய பொதுக் கடமைகளை வகுத்துரைத்தன; விவசாயச் சீர்திருத்தத்தின் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய அவசியத்தை அவற்றுடன் நெருக்கமாக இணைத்தன.

உதாரணமாக, நான்காவது திட்டம் உரிமைகள் இல்லாத குடிவார விவசாயிகள் மிகவும் பாதுகாப்பற்ற நிலைமையில் இருக்கிறார்கள், எதிர்காலத்தைப் பற்றிக் கவலையின்றி நிலம் தொடர்ந்து உபயோகிக்கப்படுகின்றது என்று வலியுறுத்தியது.

இந்தியாவில் ஜனதா கட்சி ஆட்சி புரிந்த குறுகிய காலத்தின் போது (1977—1979) நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியின் முக்கிய

கோட்பாடுகள் ஆருவது ஐந்தாண்டுத் திட்ட (1978—1983) நகலில் வகுத்துரைக்கப்பட்டன. அந்த நகல் விவசாயச் சீரமைப்புப் பிரச்சினை களுக்கு அதிகமாக எளிமைப்படுத்தப்பட்ட அணுகுமுறையையும் கூர்மையான சமூகப் பிரச்சினைகளை மழுப்புகின்ற முயற்சியையும் தெளிவாக எடுத்துக்காட்டியது.

சமூக நீதியின் பெயரால் வளர்ச்சியை உறுதிப் படுத்துவது விவசாய சீர்திருத்தங்களின் நோக்கம் என்று ஆருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் சுட்டிக் காட்டியது; அடுத்த பத்து வருடங்களில்(!) நாட்டில் எல்லோருக்கும் வேலை கொடுக்கப்படு மென்றும் வறுமை முற்றிலும் ஒழிக்கப்படுமென் றும் நகல் அறிவித்தது. ஆனல் விவசாயக் கொள் கையின் உள்ளடக்கத்தை வகுத்துரைக்குமிடத் தில் நகல் தெளிவில்லாதிருந்தது, உழைப்புக்கு நியாயமான பலன் கிடைக்கின்ற முறையில் உற் பத்தி மட்டத்தில் நிலையான வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படும் என்று மட்டுமே அது குறிப்பிட்டது.

நீர்ப்பாசன வசதிகள் மிகவும் துரிதமான, உச்சபட்சமான வளர்ச்சியடைதல், நிலம், தண் ணீர் மற்றும் இதர ஸ்தல வளங்களின் அதிக பட்ச உபயோகம் ஆகியவற்றை நோக்கி வளர்ச்சி யின் செயல்திட்டம் திருப்பப்பட வேண்டும் என்று திட்டத்தைத் தயாரித்தவர்கள் கூறினர்கள். முத லீட்டையும் வேலைவாய்ப்புகளையும் அதிகப்படுத்து வதற்கு கிராமங்களில் பல்வகைப் பண்ணைகளை ஏற் படுத்த ஆலோசிக்கப்பட்டது, அதாவது விவசா யம், கால்நடைப் பண்ணை, காடு மற்றும்

மீன்பிடித்தலின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டது. கிராமங்களில் மிகவும் அதிகமான ஏழ்மையில் இருப்பவர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் விசேஷமாக வலியுறுத்தப்பட்டது; ஆனால் இதைப் பற்றி எத்தகைய உத்தரவாதங்களும் கொடுக்கப்படவில்லை. கிராமங்களில் விவசாய உறவுகள் மற்றும் சமூக மாற்றங்களைப் பற்றிய துறைகளில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் ஜனதா கட்சியின் செயல்திட்டத்தில் இடம் பெறவில்லை.

விவசாய அமைப்பில் சீர்திருத்தங்களைப் பற்றி கூறிய விசேஷப் பகுதி விவசாய சீர்திருத்தங்கள் பொதுவான பொருளாதாரச் செயல்திட்டத்தின் பகுதியாகவும் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்குரிய செயல்திட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாகவும் கருதப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு மேல் வேறு எதையும் சொல்லவில்லை.

நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்குரிய ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தை (1980—1985) இந்திய தேசிய காங்கிரஸ் (இ) அரசாங்கம் நிறைவேற்றியது. இத்திட்டம் விவசாயத்துக்கும் விவசாயப் பிரச்சினைக்கும் மிக அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. இந்த ஐந்து வருடகாலத்தில் விவசாய செயல்திட்டத்தின் முக்கிய நோக்கம் கடந்த காலத்தின் சாதனைகள் அனைத்தையும் உறுதிப்படுத்துவது, விவசாய சீர்திருத்தங்களை அமுல் நடத்துவதைத் துரிதப்படுத்துவது, புதிய தொழில் நுட்பவியலை அறிமுகப்படுத்துவது, விவசாய உற்பத்திப் பொருளை

நிலையான முறையில் அதிகரிக்கும் படி செய்வது ஆகியனவாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்று வதற்கு ''விவசாய வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற அடிப்படையான சமூக-பொருளாதார வரையளவு களை நாம் நினைவிலிறுத்த வேண்டும்...''* என்று திட்டம் வற்புறுத்துகிறது. குத்தகை உரிமைச் சீர்திருத்தங்கள், குத்தகை விவசாயிகளைப் பாது காத்தல், நிலத்துக்கு உச்சவரம்பு, துண்டு நிலங் களை இணைத்தல்** ஆகிய பிரிவுகளில் மேலும் முன் னேற்றம் அவசியம் என்று திட்டம் கூறுகிறது.

திட்டம் விவசாயச் சீரமைப்புக்கு விரிவான செயல்திட்டத்தை எடுத்துக் கூறும் பொழுது கிராமங்களின் சமூக, பொருளாதார மற்றும் தொழில் நுட்பவியல் பிரச்சினைகளைப் பொருளா தார சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதை நோக்க மாகக் கொண்ட தேசியப் பொருளாதாரத்தின் பொதுக் கடமைகளோடு நெருக்கமாக இணைக் கிறது.

இந்தப் பொதுவான போர்த்திட்டத்தின் ஒளியில் விவசாய சீர்திருத்தங்கள் மற்றும் விவ சாய வளர்ச்சியைப் பேணுதல் என்ற கடின மான கடமையை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட இந்தியாவின் சாதனைகளையும் தவறுகளையும் இப் பொழுது ஆராய்வோம். சுதந்திரத்துக்குப் பிந்திய வருடங்களில் பல பெரிய விவசாயப் பிரச்சினை களைத் தீர்ப்பதில் இந்தியா அடைந்திருக்கும்

* *The Sixth Five Year Plan, 1980-85*, Government of India, New Delhi, 1980, p. 98.

** *Ibid.*, p. 8.

முன்னேற்றம் கொஞ்சமல்ல. விவசாயத்தில் இயந்திரங்களையும் இரசாயன உரங்களையும் உபயோகிப்பது அதிகரித்திருக்கிறது. உயர் ரக விதைகள் தயாரிக்கப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன. பல சமூக மாற்றங்களை நிறைவேற்றுவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகளும் விலைக் கொள்கை, உணவுக் கையிருப்புகளை வைத்திருத்தல், வினியோக முறையை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றிற்குச் செய்யப்பட்ட முயற்சிகளும் பலன் கொடுத்திருக்கின்றன.

எனினும் விவசாயப் பொருளாதாரத்தில் அடிப்படையான பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜமீன்தாரி நிலங்களில் விவசாயம் செய்த 20 மில்லியன் குத்தகை விவசாயிகள் தாங்கள் விவசாயம் செய்த நிலங்களின் உடைமையாளர்களானார்கள் (சில கட்டுப்பாடுகள் இன்னும் நீடித்தன). மிகச் சிறிய துண்டு நிலங்களை வைத்திருந்த அல்லது நிலங்களே இல்லாத பெருந்திரளான விவசாயிகளைப் பொறுத்த மட்டில் நில உச்ச வரம்புச் சட்டம் அமுலாக்கப்படுகின்ற பொழுது கைப்பற்றப்படுகின்ற உபரி நிலத்தின் மூலம் அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டது.

நிலவுடைமைக்கு உச்ச வரம்பு விதிப்பதற்குப் பல வருடகாலமாக முயற்சி செய்த பிறகு 1970க்களின் கடைசியில் உபரி நிலம் என்று சொல்லப்பட்ட 1.6 மில்லியன் ஹெக்டேர்கள் அரசுக்குக் கிடைத்தன. இதில் பாதியளவுக்குச் சற்றுக் குறைவான நிலம் நிலமில்லாத அல்லது மிகக் குறை

வான நிலத்தை வைத்திருந்த விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டது. 1.1 மில்லியனுக்கும் அதிகமான நிலமில்லாத விவசாயிகள் நிலங்களைப் பெற்றார்கள்.*

நில உச்ச வரம்புச் சட்டம் திருப்திகரமான முறையில் அமுல்நடத்தப்படாததுதான் இதற்குக் காரணம் என்று ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒத்துக்கொள்கிறது. பல மாநில அரசாங்கங்கள் வாரத்தின் அளவை ஒழுங்குபடுத்துகின்ற தேசியக் கொள்கைக்குப் பொருத்தமான சட்டங்களை இன்னும் நிறைவேற்றவில்லை.

நில வாரத்துக்கு உச்ச வரம்பு மொத்த உற்பத்திப் பொருளில் $^1/_5$ அல்லது $^1/_4$ பகுதியாக இருக்க வேண்டும் என்ற தேசியக் கொள்கை விவசாய சீர்திருத்தங்களின் போது நிறைவேற்றப்படவில்லை.

இச்சீர்திருத்தங்களின் ஆரம்பக் கட்டங்களின் போது நில அடங்கல்கள் இல்லாதது மாநில அரசாங்கங்களுக்குப் பெருஞ் சிக்கலை ஏற்படுத்தியது. கிராமங்களில் வெவ்வேறு சமூகப் படிநிலைகளைக் கொண்ட நபர்களுடைய நில உரிமை மற்றும் அவர்களிடமிருந்த நிலத்தின் அளவை நிர்ணயிப்பதற்கு இந்த அடங்கல் மிகவும் அவசியமானதாகும். விவசாய சீர்திருத்தங்கள் ஆரம்பமாகி இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகும் இந்த நிலைமையில் அதிகமான மாற்றமில்லை. நாட்டில் இன்னும் அதிகாரபூர்வமான நில அடங்கல் கிடையாது. நிலச்சீர்திருத்தங்களின் விளைவுகளைப் பற்றிய அளவு ரீதியான மதிப்பீடுகளில் சில

* *Ibid.*, p. 115.

வற்றை ஆட்சேபிப்பதற்கு இது போதிய காரண மாகும்.

இந்திய அரசாங்கம் விவசாய சீர்திருத்தங்களுடன் சேர்த்து கிராமங்களில் வேறு பல முக்கிய மான நடவடிக்கைகளையும் வெவ்வேறு சமயங்களில் அமுலாக்கியது. கிராமத்தின் வெவ்வேறு பகுதிகளில் ஒரு விவசாயிக்கு இருக்கின்ற துண்டு நிலங்களை ஒரே நிலவுடைமையாகச் சேர்ப்பதற்கு விசேஷச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. வெவ்வேறு நிலவுடைமையாளர்களுக்கிடையில் நிலங்களைப் பரிவர்த்தனை செய்வது சுலபமான காரியமாக இருக்கவில்லை. ஏனென்றால் நிலத்தின் தன்மை வெவ்வேறாக இருந்தது; பல சமயங்களில் அவர்களுடைய நலன்களுக்கிடையில் மோதல்களும் இருந்தன. நிலத்தை வாரத்துக்கு விடுவதையும், நிலவுடைமையைப் பிரிவினை செய்வதனால் உபயோகமற்ற நிலவுடைமை தோன்றுமானால் பிரிவினை செய்வதையும் தடை செய்யும் சட்டங்கள் எல்லா மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட்டன.

இந்திய அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் விவசாயியின் நிலவுடைமை மென்மேலும் துண்டு துண்டாகப் பிரிக்கப்படுவதைத் தடுப்பதற்கு முயற்சி செய்கிறது. ஆனால் நாட்டின் விவசாயப் பகுதியினரிடம் மிகையான மக்கட் பெருக்கம் இருக்கின்ற காரணத்தால் நிலவுடைமைகள் ஒன்றுசேர்க்கப்படும் நடவடிக்கையுடன் சேர்ந்து நிலவுடைமை பிரிக்கப்படுதலும் நடைபெற்ற வண்ணமாக இருக்கிறது. எந்தச் சட்டத்தினாலும் இதைத் தடுக்க முடியாது.

''இந்த நடவடிக்கைகள், குறிப்பாக, உச்ச வரம்புச் சட்டம் மிகவும் மெதுவான முறையில், அதிகமான இடைவழிகளுடன் அமுலாக்கப்பட்ட படியால் நிலவுடைமை அமைப்பின் மீது அவற்றின் தாக்கம் மிகவும் சொற்பமாகவே இருந்தது''* என்று ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிட்டது.

இந்தியாவில் பல வருடங்களாகவே கிராம சமூக வளர்ச்சித் திட்டத்தை அமுலாக்குவதற்கு அதிகமான கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதும் கிராம வாசிகளின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்வதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். ஸ்தல நீர்ப்பாசன வேலை, நிலத்தின் தரத்தை உயர்த்துதல், இரசாயன உரங்கள் மற்றும் உயர்ந்த ரக விதைகளை சப்ளை செய்தல், நிலத்தைப் பயிரிடுவதில் புதிய அபிவிருத்திகளைச் செய்தல், விவசாயத்தில் புதிய, விஞ்ஞான முறைகளைப் புகுத்துதல் ஆகியவை இத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தன. நிலத்தைச் சிறப்பான முறையில் உபயோகித்தல், தேர்ந்தெடுத்தல், நிலத்தைச் சீர்படுத்துதல், வெள்ளச் சேதத்திலிருந்து நிலத்தைப் பாதுகாத்தல், இரசாயனப் பொருள்களை உபயோகித்துப் பயிர்களைப் பாதுகாத்தல், விவசாயத் துறையில் விரிவான விஞ்ஞான ஆராய்ச்சி, விவசாய இயல் நிபுணர்களைப் பயிற்றுவித்தல், கால்நடைப் பெருக்கம், மீன் பிடித்தல் மற்றும் வனத்துறை வளர்ச்சி, விவ

* *The Sixth Five Year Plan*, p. 8.

சாயக் கடன் விஸ்தரிப்பு நடவடிக்கைகள், கிராமக் கூட்டுறவு இயக்க வளர்ச்சி, விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியன பற்றி அதிகமான கவனம் செலுத்தப்பட்டது. விவசாய-தொழில் துறை இணையங்களின் பிரச்சினையும் முன்வைக்கப் பட்டது.

இந்திய கிராமங்களைச் சீரமைக்கும் திட்டங்களில் எப்பொழுதுமே கூட்டுறவு முக்கியமான இடம் பெற்றிருக்கிறது.

இந்தியாவில் முதல் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்டன. இச்சங்கங்களின் தோற்றம் கிராம முதலாளி வர்க்கத்தின் தோற்றத்துடன் பொருந்தியது முற்றிலும் இயற்கையே.

கூட்டுறவுச் சங்கங்களை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் (மொத்த கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 80% இந்த ரகத்தைச் சேர்ந்தவை), விவசாயம் அல்லாத கூட்டுறவுச் சங்கங்கள் என்று இரண்டு ரகங்களாகப் பிரிக்கலாம்.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (மொத்த விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் 80% கூட்டுறவுக் கடன் சங்கங்களே) கூட்டுறவு இயக்கத்துக்கு அடிப்படையாக இருக்கின்றன. இவை தவிர, உற்பத்தி மற்றும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கையும் அவற்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்தன. கிராமங்களில் உள்ள மக்களில் மிகப்பெரும்

பகுதியினரை சீக்கிரத்தில் கூட்டுறவு இயக்கத்திற்குள் கொண்டுவருவது இந்திய அரசாங்கத்தின் நோக்கமாகும்.

கூட்டுறவு இயக்கத்தின் மிகவும் உயர்ந்த வடிவமான உற்பத்திக் கூட்டுறவுகள் இந்தியாவில் குறைந்த அளவில்தான் வளர்ச்சியடைந்திருக்கின்றன. இத்தகைய கூட்டுறவுகளில் பெரும்பான்மையானவை புதிய நிலங்களில் அரசினுல் ஏற்படுத்தப்பட்டவையாகும். உற்பத்திக் கூட்டுறவுகளில் ஒரு பகுதி பெரிய பண்ணைகளை வைத்திருக்கின்ற நிலவுடைமையாளர்களால் ஏற்படுத்தப்பட்டது. விவசாய சீர்திருத்தங்களினுல் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகளிலிருந்து தப்பிப்பதற்கு இவர்கள் இந்த சங்கங்களை உபயோகிக்க முயற்சி செய்கிருர்கள்.

மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் கிராமக் கடன் சங்கங்களே அதிகமான வளர்ச்சியடைந்திருக்கின்றன; இவை முக்கியமாக கிராமப் பணக்காரர்களுக்குத்தான் பயன்படுகின்றன. இந்தக் கூட்டுறவுகள் பெரும்பாலும் வர்த்தகர்கள்,லேவாதேவிக்காரர்கள் மற்றும் நிலக்கிழார்களின் கைகளில் சிக்கியிருக்கின்றன. கிராமங்களில் பிரதானமாக லேவாதேவிக்காரர்களும் வர்த்தகர்களும்தான் கடன் கொடுப்பவர்கள்; இக்கடன் நடவடிக்கைகளில் அவர்களுடைய பங்கு 70 சதவிகிதம் வரை இருக்கிறது. இவர்களுக்கு மாற்ருக இருக்கக் கூடிய அளவுக்குப் போதிய மூலதனம் இக்கூட்டுறவுகளிடம் கிடையாது.

கிராம மக்கள் தொகையில் மிகவும் ஏழ்மையான பகுதியினரை லேவாதேவிக்காரர்கள்

சுரண்டுவதும் அதனையொட்டி ஏற்படுகின்ற கொத்தடிமை முறையும் இன்னும் பரவலாக இருக்கின்றன.

கிராமப் பகுதிகளில் வங்கிக் கடன் முறையை நிலைநிறுத்துவதற்காக இந்திய அரசாங்கம் கூட்டுறவுகளை பலப்படுத்துவதற்குச் சில நடவடிக்கைகளைச் செய்தது. 1969இல் பெரிய வங்கிகளை தேசவுடைமையாக்கி அவற்றின் சேவைகளை கிராமங்களுக்கு விஸ்தரித்தது இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகும். கிராம விவசாய வங்கிகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் கிராமங்களில் வங்கி முறைகளை விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கைகள் செய்யப்பட்டன. 1980இன் தொடக்கத்தில் அத்தகைய மத்திய வங்கிகள் 60 ஏற்படுத்தப்பட்டிருந்தன; அவற்றுக்கு 2,420 கிளைகள் இருந்தன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவிற்குள் இத்தகைய வங்கிகளின் எண்ணிக்கையை 170ஆக உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. விவசாயம் மற்றும் கிராமங்களின் முன்னேற்றத்துக்கு ஒரு தேசிய வங்கியை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. கிராமங்களுக்கு வங்கி வசதிகள் விஸ்தரிக்கப்பட்டிருந்த போதிலும் லேவாதேவிக்காரர்களிடம் கடன் வாங்கிய விவசாயிகளை அந்தக் கடன் சுமையிலிருந்து விடுவிப்பதற்கு இவை போதுமானவையாக இன்னும் இருக்கவில்லை. 1979இல் கிராமக் கடனில் வர்த்தக வங்கிகளின் பங்கு 12 சதவிகிதத்துக்கு அதிகமல்ல. இந்தக் கடன்களும் மிகவும் சமத்துவமற்ற முறையில் கொடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் பாதிக்கு

மேல் மிகவும் வளர்ச்சியடைந்த ஐந்து மாநிலங்களில், ஆந்திரப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரம், பஞ்சாப் மற்றும் தமிழ்நாட்டில் கொடுக்கப்பட்டிருந்தன. இத்தகைய கடன்கள் வழக்கமாகப் பணக்கார விவசாயிகளுக்குத்தான் முதலில் தரப்படுகின்றன. அவர்களுடைய பங்கு மிக அதிகம் (எல்லா வங்கிக் கடன்கள் மற்றும் விவசாய வளர்ச்சிக்கு அரசு நிதி ஒதுக்கீடுகளில் சுமார் 70%). விவசாயிகளில் பெரும்பகுதியினர் (சுமார் 85%) கடன்களுக்கு லேவாதேவிக்காரர்களிடம் போகும்படியான கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வங்கிக் கடன்களில் விவசாயத் துறையின் பங்கு 16 சதவிகிதமாக அதிகரிக்கும். இக்கடன்களின் மொத்த மதிப்பு இரு மடங்காகி, 54 பில்லியன் ரூபாய்களை எட்டும்.*

கிராமங்களில் வங்கிக் கடன் வசதிகளைக் கணிசமான அளவுக்கு விரிவுபடுத்தியிருப்பதும் கிராமம் பெறுகின்ற கடன்களின் மொத்த அளவில் அவற்றின் பங்கு அதிகரித்திருப்பதும் விவசாயிகள் லேவாதேவிக்காரர்களிடம் கடனாளியாக இருப்பது அல்லது காலாவதியான மூலதன வடிவங்களைச் சார்ந்திருப்பது என்ற பிரச்சினையை இன்னும் தீர்க்க முடியவில்லை. இத்தகைய நிலைமை தற்செயலாக ஏற்படவில்லை, அது நிர்வாகக் குறைகளின் விளைவாகவும் ஏற்படவில்லை. கிராமங்களில் மேலாதிக்கம் வகிக்கின்ற உற்பத்தி ரகங்களின்

---

* *The Sixth Five Year Plan*, p. 114.

இயற்கையான விளைவுதான் அது. முதலாளித்துவத்துக்கு முந்திய அல்லது குட்டி-முதலாளித்துவ உற்பத்திக்குக் கூட லேவாதேவி மற்றும் அதைப் போன்ற கடன் வடிவங்கள் போதுமானவை. முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்கள் கணிசமான அளவுக்குப் பாதுகாக்கப்பட்டிருக்கின்ற வரையிலும் உற்பத்தியாளர்களில் பெருந்திரளானவர்கள் ஈடுபட்டிருக்கின்ற கடன் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து லேவாதேவிக்காரரை விரட்டுவது அநேகமாகச் சாத்தியமல்ல. இதன் விளைவாக கிராமவாசிகளில் மேல்தட்டினருக்கு உதவியளிக்கின்ற வங்கிக் கடன் வசதி மிகவும் அடக்கமான நிலையையே தொடர்ந்து வகிக்கும்.

கூட்டுறவை வளர்ப்பது, ஜனநாயகப்படுத்துவது, லேவாதேவிக்காரர்கள் மற்றும் வர்த்தகச் சூதாட்டக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து கூட்டுறவு இயக்கத்தை விடுவிப்பது, விவசாயப் பண்ணைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற அமைப்பாக அதை மாற்றுவது—இவை இந்தியாவிலுள்ள ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளின் அவசரமான கடமையாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி உறவுகளின் புதிய வடிவம் அல்ல என்பது உண்மையே. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஆதிக்கம் வகிக்கின்ற உற்பத்தி உறவுகளின் ரகத்தின் பிரதியாக மட்டுமே அவை இருக்கின்றன. அதனால்தான் இந்தியாவிலுள்ள கூட்டுறவுகள் விவசாயப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதிருக்கின்றன. ஆனால் கூட்டுறவு இயக்கத்தில் மென்மேலும் அதிகமான விவசாயப்

பெருந்திரளினர் ஈடுபடுகின்ற பொழுது, ஜனநாயக சக்திகள் முற்போக்கான சமூக-பொருளாதார மாற்றங்களுக்காக நடத்துகின்ற போராட்டத்தால் அதைப் பயன்படுத்த முடியும்.

கிராமத்தின் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்ற உண்மை விவசாய உற்பத்தியின் வளர்ச்சியின், குறிப்பாக உணவு தானிய உற்பத்தியின் வளர்ச்சியின் வேகத்தின் மீது பாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது.

நாட்டின் மொத்தப் பரப்பு சுமார் 327 மில்லியன் ஹெக்டேர்களாகும். 1979-80ம் வருடப் புள்ளிவிவரங்களின்படி, இதில் 168 மில்லியன் ஹெக்டேர்களில் விவசாயம் செய்யப்படுகிறது. சுமார் 28 மில்லியன் ஹெக்டேர்களில் வருடத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் விவசாயம் செய்யலாம்; 50 மில்லியனுக்கும் அதிகமான ஹெக்டேர்கள் நீர்ப்பாசன வசதி உள்ளவை.*

விவசாயத்தின் முக்கிய பிரிவு உணவு தானிய விளைச்சலாகும். பயிர் செய்யப்படுகின்ற நிலத்தில் சுமார் 75 சதவிகிதப் பகுதியில் உணவு தானியங்கள் பயிரிடப்படுகின்றன. நிலத்தில் பெரும் பகுதியில் உணவு தானியங்களும் பயறு வகைகளும் பயிரிடப்பட்டு அவை மெதுவாக முதிர்ச்சியடைந்து அறுவடை செய்யப்படுகின்றன; ஆனால் மக்கள் தொகையோ வேகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. ஆகவே நாட்டின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய நிலைமைகள் அநேக

---

* *The Sixth Five Year Plan*, p. 26.

மாக உருவாக்கப்படவில்லை. அதே சமயத்தில் விவசாய உறவுகளைத் திருத்தியமைப்பதற்கும் கிராமங்களில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக் கான செயல்திட்டத்தை அமுலாக்கவும் செய்யப் படுகின்ற முயற்சிகள்—அவற்றில் எவ்வளவு குறை களும் வரையறைகளும் இருந்த போதிலும்— நாட்டின் உணவு நெருக்கடியைக் குறைப்பதற்கும் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உதவி புரிந்திருக்கின்றன.

1980-81 மற்றும் 1984-85 வருடங்களுக்குரிய திட்டம் விவசாய உற்பத்தியில் சராசரி 6.5% அதிகரிப்புக்குத் திட்டமிட்டிருக்கிறது. ஐந்து வருடத் திட்டத்தின் முடிவில் உணவு தானிய உற்பத்தி 154 மில்லியன் டன்களாக இருக்க வேண்டும். இத்திட்டத்திற்கேற்ப எல்லா அரசு ஒதுக்கீடுகளிலும் கால் பங்கை விவசாய முன் னேற்றத்துக்காகச் செலவு செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.* தனி நபருடைய மாதாந்தர உணவு தானிய நுகர்வு 12.9 கிலோகிராம்களி லிருந்து 14.3 கிலோகிராம்களாக அதிகரிக்கும்.

விவசாய சீர்திருத்தங்கள் அமுலாக்கப்படு கின்ற வடிவங்களும் முறைகளும் வாரச் சுரண்டலை யும் லேவாதேவிக்காரர்களிடம் விவசாயிகள் கடனாளியாக இருப்பதையும் கணிசமாகக் குறைக் கின்ற அளவுக்கு போதுமானவையாக இல்லை என்பதை மேலே கூறப்பட்ட முயற்சிகளின் விளைவு கள் எடுத்துக்காட்டுகின்றன. விவசாயத் துறை யில் மிகை மக்கட்பெருக்கமும் வளர்ச்சியடைந்து

---

* *Ibid.*, p. 41.

கொண்டே இருக்கிறது. வாரம் பல சமயங்களில் மொத்த அறுவடையில் 50 சதவிகிதமாகக் கூட இருக்கிறது. விவசாயம் செய்யப்படுகின்ற நிலங்களில் 20 சதவிகிதத்துக்குக் குறையாத நிலம் எத்தகைய உரிமைகளுமே இல்லாத குத்தகை விவசாயிகளால் விவசாயம் செய்யப்படுகிறது, விவசாயப் பாட்டாளி வர்க்கத்தினரின் கொத்தடிமை முறை மிகப் பரவலாக இருக்கிறது என்று இந்தியப் பொருளியலாளர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் நிலவுடைமைக் குவிப்பு குறைக்கப்படாமலிருப்பதை அதிகார பூர்வமான புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. 1960-61இல் மிகவும் ஏழ்மையான 10% நிலவுடைமைகள் கிராமச் சொத்துக்களின் மொத்தத் தொகையில் 0.1 சதவிகிதமாக இருந்தன, மிகவும் பணக்கார நிலவுடைமைகளான 10% அவற்றின் மொத்தத் தொகையில் 51.4 சதவிகிதமாக இருந்தன என்று ரிசர்வ் பாங்க் மதிப்பிட்டிருக்கிறது. இதே முறைகளைப் பின்பற்றி 1971-72ம் வருடத்துக்குச் செய்யப்பட்ட மதிப்பீடுகள் நிலைமையில் எவ்விதமான மாற்றத்தையும் எடுத்துக் காட்டவில்லை—மிகவும் வறுமையான 10% நிலவுடைமைகள் கிராமச் சொத்துக்களின் மொத்தத் தொகையில் 0.1 சதவிகிதமாகவும், மிகவும் பணக்கார 10% நிலவுடைமைகள் நிலத்திலும் உற்பத்திச் சாதனங்களிலும் 51 சதவிகிதமாகவும் இருந்தன.* 1970க்களின்

* *Reserve Bank Staff Occasional Papers*, Issue No. 1, June 1976, p. 15; *The Sixth Five Year Plan*, p. 8.

தொடக்கத்தில் கூட கிராமங்களின் செல்வ நிலைமையை மாற்றியமைப்பதில் நிலச்சீர்திருத்தங்கள் எத்தகைய புலப்படத்தக்க விளைவையும் ஏற்படுத்தவில்லை என்பதை இப்புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

விவசாயத் துறையில் மிகை மக்கட்பெருக்கம் நீடிக்கின்றவரை, மக்கட்பெருக்கம் மிக அதிகமாக அதிகரித்து இந்த நிலைமையைத் தீவிரப்படுத்துகின்றவரை, கிராமப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் உயர்ந்த மட்டம் நீடிக்கின்ற வரை, பழைய, அமைப்பு ரீதியான வரையறைகள் அகற்றப்படாத வரை இந்தியாவின் நாட்டுப் புறத்தில் சமூக நிலைமையில் தீவிரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் உற்பத்திச் சக்திகள் வேகமாக வளர்ச்சியடைவதற்கும் சாதகமான நிலைமைகள் இல்லை.

விவசாய முதலாளித்துவத்தை ஊக்குவிப்பதற்கும் அதே நிலக்கிழார்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களில் சிறு நிலவுடைமைகளை அமைப்பதற்கும் ஒரே சமயத்தில் முயற்சி செய்வதன் மூலம் விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பாடுபட்டது கிராமங்களில் முதலாளித்துவப் பரிணமத்தைச் சிக்கலாக்குகின்ற பல பிரச்சினைகளையும் தோற்றுவித்தது.

ஆனால் பல வருடங்களாக நடைபெற்ற முயற்சிகளும் விவசாய சீர்திருத்தங்களும் நிலமே இல்லாமலிருந்த அல்லது துண்டு நிலங்களை மட்டுமே வைத்திருந்தவர்கள் மத்தியில் சிறு நிலவுடைமையாளர்களின் எண்ணிக்கையை ஓரளவு உயர்த்தின.

சிறு மற்றும் மிகவும் சிறிய நிலவுடைமை களில் (1970-71க்கும் 1976-77க்கும் இடையில் நிலவுடைமைகளின் சராசரி அளவு 2.28 ஹெக் டேர்களிலிருந்து 2 ஹெக்டேர்களாகக் குறைந் திருக்கிறது; எனவே சிறு நிலவுடைமைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது, அது தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருப்பதும் சாத்தியமே) சுமார் 80% வரையில் சொந்த நுகர்வுக்கு உணவு தானியங்கள் பயிரிடப்படு கின்றன.* இந்த நிலவுடைமைகளில் குடும்ப நுகர்வுக்காகவே விவசாயம் செய்யப்படுவதால் சந்தையின் மொத்த வர்த்தகத்தில் அவை மிகவும் சொற்பமான முறையில்தான் பங்கெடுக்கின்றன. இது மூலதனக் குவிப்பின் கீழான வடிவத்தையும் மிகக் குறைவான முதலீட்டையும் முன்நிர்ணயம் செய்கின்றன.

நிலமில்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பது விவசாய சீர்திருத்தங்களின் நோக்கமாக இருந் தாலும் புறநிலேயில் அவை பண்ட மற்றும் முத லாளித்துவ உறவுகளின் வளர்ச்சியைத் தடுக் கின்றன. லாபமளிக்கமுடியாத நிலவுடைமைகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது, இது உழைப்புச் சக்தியைத் திறமையின்றி உபயோகிப்பதற்கு வழி வகுக்கிறது; தொழில்துறையில் உள்நாட்டுச் சந் தையை விரிவுபடுத்துவதற்கு அல்லது விஞ்ஞானத் தையும் தொழில் நுட்பவியலேயும் விவசாயத்தில் அதிகமாக உபயோகிப்பதை ஊக்குவிப்பதற்கு உதவாத முதலாளித்துவத்துக்கு முந்திய ஒடுக்கு முறையின் வடிவங்களேயும் கொத்தடிமைத்தனத்

* *The Sixth Five Year Plan*, p. 139.

தையும் பாதுகாக்கின்ற, பெருக்குகின்ற நிலைமைகளைப் படைக்கிறது.

நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள பல அடுக்குக் கட்டமைப்பிலுள்ள பொருத்தமின்மைகளும் முரண்பாடான பரிணாமமும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மீது பாதகமான விளைவைக் கொண்டிருக்கின்றன. அவை நெடுங்காலமாக இருக்கும் கட்டமைப்பு நெருக்கடியைத் தீவிரப்படுத்துகின்றன, தேசிய வருமானத்தின் வளர்ச்சி வேகத்தைக் குறைக்கின்றன; பணவீக்கத்தை அதிகப்படுத்துகின்றன. சமூக-பொருளாதார முரண்பாடுகளும் அரசியல் போராட்டமும் தீவிரமடைந்தது 1975 ஜூலையில் நாட்டில் நெருக்கடி நிலைமையைப் பிரகடனம் செய்யும் படி இந்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது; அரசாங்கம் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தையும் முன்வைத்தது. இத்திட்டத்தில் விவசாய நிலைமைகளைப் பற்றிய பகுதி விவசாயிகளின் கடன்களை ரத்துச்செய்வதை, நிலவுடைமைக்கு உச்ச வரம்பு நிர்ணயித்து ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட விவசாயச் சட்டங்களை அமுலாக்குவதை, நிலமில்லாத விவசாயிகளுக்கு உபரி நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதைத் துரிதப்படுத்துவதை, விவசாயத் தொழிலாளர்களின் கொத்தடிமைச் சுரண்டலை ஒழிப்பதை வலியுறுத்தியது. ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டங்களை அமுலாக்குவதும் கிராமங்களில் ஓரளவுக்கு நிலங்கள் மறுபங்கீடு செய்யப்படுவதும் அதன் மூலம் பிரத்யேகமான, முதலாளித்துவத்துக்கு முந்திய ஒடுக்குமுறை உறவுகளும் சுரண்டலும் அமைக்கப்பட்டிருந்த

அடிப்படையைத் தகர்ப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். நிலவுடைமை உறவுகளை மாற்றியமைப்பதற்கு முயற்சி செய்ததைத் தவிர இன்னும் விரிவான அளவில் அரசு மற்றும் கூட்டுறவுகள் கடன் வழங்குவதும் நிர்ணயிக்கப் பட்ட அல்லது மான்யமளிக்கப்பட்ட விலைகளில் உற்பத்திப் பொருள்களை வாங்குவதும் விற்பனை செய்வதும் விவசாய இயந்திரங்களையும் கருவிகளை யும் கடனில் குறைந்த வட்டிக்குக் கொடுப்பதும் இத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

1980 ஜனவரியில் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தல்களில் இந்திய தேசியக் காங்கிரஸ் வெற்றியடைந்ததும் இந்திரா காந்தி தலைமை யில் அமைக்கப்பட்ட அரசாங்கம் 20 அம்சத் திட்டத்தை மறுபடியும் அமுலாக்கத் தொடங் கியது. இன்றைய கட்டத்தில் விவசாய வளர்ச்சி யின் செயல்திட்டத்தை வகுக்கும் பொழுது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் கிராமங்களில் மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பவர் களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத் துடன் சமூக அபிவிருத்தித் திட்டங்கள் விசேஷ மாக வலியுறுத்தப்பட்டன. ''விவசாய வளர்ச்சி மட்டும் வறுமைப் பிரச்சினையைத் தீர்க்க முடி யாது''* என்பதை ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் மறைக்கவில்லை. இத்திட்டத்தில் ஒரு முக்கிய மான பகுதி கிராம மக்களின் பரந்த பகுதியின ருடைய குறைந்த பட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு விரிவான செயல்திட்டத்தைத் தருவதுடன் அதற்காக 58 பில்லியன் ரூபாய்களை

* *The Sixth Five Year Plan*, p. 8.

யும் ஒதுக்குகிறது. இந்த ஒருங்கிணைந்த செயல் திட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுடைய நுகர்வை அபிவிருத்தி செய்வதும் கிராமங்களில் சாலைகள் அமைப்பதும் மின்சார வசதி ஏற்படுத்துவதும் மிகவும் ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவதும் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதும் இதர நடவடிக்கைகளும் இடம் பெற்றிருந்தன.

சமூக வாழ்க்கையை ஜனநாயகப்படுத்துவதையும் பொருளாயத வசதிகளை நியாயமான முறையில் விநியோகிப்பதையும் பொருளாதார வளர்ச்சியில் அதிகரிக்கப்பட்ட வேகத்தையும் உறுதி செய்கின்ற நாட்டின் சமூக வளர்ச்சியின் திசைவழியை நிர்ணயிக்கின்ற தேசியப் போர்த் திட்டத்தின் மொத்தப் போக்கிலிருந்து தனியான முறையில் கிராமங்களில் சமூக-பொருளாதார மாற்றங்களை நிறைவேற்ற முடியாது என்பதை இந்தியாவில் விவசாயச் சீர்திருத்தங்களின் கடந்த கால அனுபவம் நிரூபிக்கிறது.

## அத்தியாயம் ஐந்து

# தொழில்துறையின் சமூக-பொருளாதாரக் கட்டமைப்பு

காலனியாதிக்கம் இந்தியாவின் தேசிய உற்பத்தி பிரிட்டனைப் பொறுத்து இருக்கும்படிச் செய்து, நாட்டின் தொழில்துறை வளர்ச்சியைத் தாமதப்படுத்தியது, சமூகக் கட்டமைப்பின் மாற்றத்தை நிறுத்தி வைத்தது. 1950-51இல்

கட்டுமானத் துறை மற்றும் உற்பத்தியின் உள்ளமைப்பு உள்பட பெரிய அளவு மற்றும் சிறிய அளவுத் தொழில்துறைகள் தேசிய வருமானத்தில் 18.8 சதவிகிதப் பங்கைக் கொண்டிருந்தன. அது 1978-79இல் 29.9 சதவிகிதமாக அதிகரித்தது. சுதந்திரத்துக்குப் பிந்திய வருடங்களில் தொழில் துறையின் கட்டமைப்பில் சில மாற்றங்கள் ஏற்பட்டன; பாரம்பரியமான பிரிவுகளின் பங்கு குறைந்தது, புதிய பிரிவுகளின் பங்கு அதிகரித்தது. 1956க்கும் 1970க்கும் இடையில் தொழில் துறை உற்பத்தியில் உணவு மற்றும் நெசவாலைத் தொழில்துறைகளின் பங்கு முறையே 15.7% இலிருந்து 9.5% ஆகவும் 47.0% இலிருந்து 21.5% ஆகவும் குறைந்து விட்டது. அதே சமயத்தில் இரசாயன மற்றும் எஞ்சினியரிங் தொழில்துறைகளின் பங்கு முறையே 11.7% இலிருந்து 18.2% ஆகவும் 8.3% இலிருந்து 25.9% ஆகவும் அதிகரித்தது*. எனினும் இத்தகைய முற்போக்கான மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் தேசியப் பொருளாதாரத்தில் தொழில்துறையின் பங்கு போதுமான அளவுக்கு இல்லை; சிறு அளவு குடிசைத் தொழில்துறையின் பங்கு இன்னும் அதிகமாகவே இருக்கிறது. இக்குடிசைத் தொழில்துறையில் முதலாளித்துவத்துக்கு முந்திய மற்றும் தொடக்ககால முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் மேலாதிக்கம் வகிக்கின்றன. பெரிய அளவுத் தொழில்துறையில் தனியார் மற்றும் அரசு முதலீடுகள் கணிசமாக இருந்த போதிலும் நாட்டின் தொழில் வளர்ச்சி அதன் அடிப்படைக் கட்டத்தில், அதா

* *The Sixth Five Year Plan*, p. 13.

வது உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்கின்ற கட்டத்தில்தான் இருக்கிறது. இந்தியா இன்னும் ஏராளமான சாதனைகளை நிறைவேற்ற வேண்டி யிருக்கிறது — தொழில்துறைப் புரட்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும், தேசியப் பொருளா தாரம் முழுவதையுமே தொழில்துறை உற்பத்தி முறைகளுக்கு மாற்ற வேண்டும், பல்வேறு பொருளாதார வடிவங்களுக்கு இடையிலுள்ள பிரிவினைகளை ஒழிக்க வேண்டும், தொழில்துறையில் ஒரே ஒற்றைப் பொருளாதாரக் கட்டமைப்பைத் தோற்றுவிக்க வேண்டும்.

தேசியப் பொருளாதாரம் முழுவதிலும், சிறப் பாக, தொழில்துறையிலும் உள்ள கட்டமைப்புப் பொருத்தமின்மைகள் உழைப்பின் சமூகப் பிரி வினையையும் அதன் உற்பத்தித் திறன் அதிகரிப் பையும் நிறுத்தி வைத்திருக்கின்றன; அவை தேசியப் பொருளாதாரத்தின் ஒருங்கிணைவு நிகழ்வுப் போக்குகளைத் தடுத்து, உள்நாட்டுச் சந்தை உருவாவதைத் தாமதப்படுத்துகின்றன. ஆனால் தொழில்மயமாக்கலின் சமூக, பொருளா தார எல்லைகள் மற்றும் தொழில்துறையில் புனருற்பத்தியின் வேகமும் அளவு விகிதங்களும் இதையே பொறுத்திருக்கின்றன.

இந்தியாவின் மொத்தத் தொழில்துறை நிறு வனங்களில் 90% சிறு அளவானவைதான். இவை உற்பத்தியின் மொத்த மதிப்பில் 49 சதவிகிதப் பங்கையும் சேர்க்கப்பட்ட மதிப்பில் (Value added) 51 சதவிகிதப் பங்கையும் கொண்டிருக்கின்றன.* 1951இல் சிறு அளவு தொழில்துறை நிறுவனங்

* *The Sixth Five Year Plan*, p. 187.

களில் மொத்தம் 9.9 மில்லியன் நபர்கள் வேலை செய்தார்கள். 1979-80ம் வருடங்களில் பாரம்பரியமான குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த சுமார் 14 மில்லியன் நபர்களையும் சேர்த்து சிறு அளவு உற்பத்தியின் எல்லாப் பிரிவுகளிலும் மொத்தம் 23.3 மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் வேலை செய்தார்கள்.*

பெருந்தொழில் துறையைப் பொறுத்த மட்டில் (அதன் நிலையான உடைமைகள் மட்டும் 2.5 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமாக இருக்கின்றன) மொத்த நிலையான உடைமைகளில் 86 சதவிகிதத்துக்கும் அதிகமாக அதனிடம் இருக்கின்றது; தொழில்துறை உற்பத்தியில் 50 சதவிகிதத்துக்கும் அதிகமாகவும் சேர்க்கப்பட்ட மதிப்பில் சுமார் அரைப் பங்கையும் அது உற்பத்தி செய்கிறது. பெருந்தொழில்துறையின் நிலையான உடைமைகள் சிறு தொழில் உற்பத்தியைக் காட்டிலும் 350 மடங்கு அதிகம்; ஆனால் அதன் உற்பத்தி அதைக் காட்டிலும் 54 மடங்குதான் அதிகம். பெருந்தொழில் துறையில் நிலையான உடைமைகள் ஒவ்வொரு சராசரித் தொழிலாளிக்கும் சிறு தொழில் துறையைக் காட்டிலும் 8 மடங்கு அதிகம்; ஆனால் சேர்க்கப்பட்ட மதிப்பு 2 மடங்கு மட்டுமே அதிகம்.**

ஆகவே சிறு தொழில்துறையில் முதலீடுகளின் செயல்திறம் பெருந்தொழில் உற்பத்தித் துறையைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருப்பது

* *Ibid.*, p. 187.

** *India's Economic Problems*, Allahabad, 1975, p. 92.

உழைப்பையும் இயந்திரங்களையும் முதலாளி உபயோகிப்பதற்கு ஒரு வகையான சமூக வரையறையை ஏற்படுத்தி விடுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் நாடு தானுகவே தொழில்மயமாக முடியாது. ஏனென்ருல் சிறு தொழில் உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தும் முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்களின் செயல் திறமும் ஒரே சீராக இல்லாத உள்நாட்டுச் சந்தையின் பிரத்யேகமான கூறுகளும் தொழில்மயமாக்கலை ஊக்குவிக்கின்ற விசையைக் கட்டுப்படுத்துகின்றன. அந்த உள்நாட்டுச் சந்தையில் தேவை முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்கள் ஆதிக்கம் செலுத்துவதையும் தொழில்துறையின் முக்கிய பிரிவுகளில் அதன் விளைவாக ஏற்படுகின்ற நெடு நாளையத் தகுதிகள் குறைவாகப் பூர்த்தி செய்யப்படுவதையும் நிதித்துறை வளங்கள் குவிக்கப்படும் வேகம் குறைவதையும் பிரதிபலிக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகத் தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களுடன் ஒட்டிய முறையில் தொழில்மயமாக்கல் முதலில் பொதுத் துறையின் சுற்றுவட்டத்துக்குள் தொடங்குவதை இவை அனைத்தும் முன்நிர்ணயம் செய்கின்றன. நாட்டில் இருக்கும் உறவுகளின் அமைப்பை நேரடியாக பாதிக்காமல் பொதுத் தொழில்துறை நாட்டின் தொழில்துறையின் அவசியமான உறுப்பாக முன்னேறிக்கொண்டிருக்கிறது.

### 1. தொழில்துறையில் அரசுத் துறை

ஒரு வளர்முக நாடு சுதந்திரம் பெற்ற உடனே பொருளாதாரச் சீரமைப்புப் பிரச்சினை தலைமை

யான முக்கியத்துவத்தைப் பெற்றுவிடுகிறது. உள்நாட்டின் பல வடிவங்களுடைய (Multi-form) தேசியப் பொருளாதாரத்தைத் திருத்தியமைப்பது மற்றும் உலகச் சந்தையில் தேசியப் பொருளாதாரத்தின் தாழ்வான நிலையை அகற்றுவது பொருளாதார வளர்ச்சியின் முக்கியமான பிரச்சினைகளாகும். பல வடிவங்களுடைய பொருளாதாரத்தில் ஒருங்கிணைப்பு நிகழ்வுப் போக்கு பிழைப்பிற்கான பொருளாதாரம் பண்ட வடிவங்களுக்கு மாறுதல், சிறு அளவுத் தொழில்துறை முதலாளித்துவத் தொழில்துறைக்கு மாறுதல், கீழ்நிலையான முதலாளித்துவ வடிவங்கள் உயர் நிலையாக மாறுதல் என்ற அடிப்படையில் தானுகவே வளர்ச்சியடைகிறது. வெவ்வேறு வடிவங்களுக்கு இடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் இந்த வடிவங்களை ஒற்றைப் பொருளாதார உடலாக அமைப்பதற்கும் அரசு உதவி செய்கிறது; பல வடிவங்களுடைய பொருளாதாரத்தை வெளியிலிருந்து வருகின்ற ஏகாதிபத்திய நிர்ப்பந்தத்திலிருந்து அரசு பாதுகாக்கிறது. ஆனுல் அரசு வெறும் அரசியல் ரீதியான மேற்கட்டுமானமாக இருந்தால் அல்லது அது மரபு வழிப்பட்ட பொருளாதார அல்லது பொருளாதாரம் அல்லாத ஒழுங்குபடுத்துகின்ற முறைகளை மட்டுமே உபயோகித்தால் இந்த நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியாது. இருக்கின்ற வடிவங்களில் எந்த ஒன்றையும் அது முழுமையாகச் சார்ந்திருக்க முடியாது என்பதால் அது இருக்கின்ற வடிவங்களின் பொருளாதாரச் செயல்களை வளர்ப்பதற்கும் பகுதியளவுக்கு அவற்றை மாற்

றீடு செய்வதற்கும் ஒரு புதிய சமூக வடிவத்தைப் படைக்க வேண்டியிருக்கிறது. ஒரு செயல்முனைப் பான பொருளாதாரக் கொள்கையை தேசிய அளவிலும் நாட்டு நலனுக்காகவும் அமுல் நடத்து வதற்கு அந்த சமூக வடிவம் அடிப்படையாக இருக்கிறது. அந்த அரசு வடிவம் வளர்ச்சியடை கின்ற பொழுது பல வடிவங்களுடைய அமைப் பில்—ஏராளமான இந்த வடிவங்கள் அகற்றப் படுவதற்கு முன்பாகக் கூட — புனருற்பத்தி நிகழ்வுப் போக்கு ஏறக்குறைய சகஜமான முறை யில் இயங்கத் தேவையான நிலைமைகளை உறுதிப் படுத்துகின்ற சமூகப் பொறியமைவு ஏற்படு கிறது.

அரசுத் துறை மிக அதிகமாகச் சமூக மயமாக்கப்பட்ட பொருளாதார வடிவமாகும். அதன் புனருற்பத்தி நிகழ்வுப் போக்கின் முக்கிய மான அம்சம் என்னவென்றால் அது மதிப்பு விதியினால் கறாராகக் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதாகும். நிதி மற்றும் கடன்வசதி முறைகளை உபயோகித்தும் அரசுத் தொழில் நிறுவனங் களைச் சார்ந்தும் தனியார் வடிவங்களால் முடி யாத அளவுக்கு அரசு செல்வ வளங்களைத் திரட்ட முடியும், அவற்றை நாட்டு நலன்களுக்காக உபயோகிக்க முடியும்.

அரசுத் துறையின் பொருளாயத அடிப்படை அரசாங்கத்தின் முதலீட்டுக் கொள்கையினாலும் சில தனியார் தொழில் நிறுவனங்களும் ஸ்தாபனங் களும் நாட்டுடைமையாக்கப்படுவதன் மூலமாக வும் ஏற்படுகிறது. இதில் சம்பந்தப்பட்டுள்ள உற்பத்திச் சக்திகள் அரசுப் பொருளாதாரத்

துறையை அல்லது தேசியப் பொருளாதாரத்தின் பொதுத் துறையை உருவாக்குகின்றன.

இயன்ற அளவுக்கு மிகவும் அதிகமாக லாபமடைவதே முதலாளித்துவ உற்பத்தியின் முக்கியமான நோக்கம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் மொத்த இயந்திரமும் இந்த நோக்கத்தைச் சாதிப்பதற்கு முடுக்கி விடப்படுகிறது.

வளர்முக நாடுகளில் உற்பத்தியின் நோக்கம் தேசிய வருமானத்தை உயர்த்துவதே—இந்தியா இதற்கு விதிவிலக்கல்ல. இது பாரம்பரியமான உற்பத்தி வடிவங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் மற்றும் நவீனத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள், மக்கள் தொகையின் எல்லாப் பகுதியினருக்கும் நன்மை செய்கிறது.

அரசுத் துறையில் மூலதனக் குவிப்பு நிகழ்வுப் போக்கு குவிப்பின் முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்கள் மற்றும் தனியார் மூலதனக் குவிப்பின் நேரடித் தாக்கத்திலிருந்து ஒப்பீட்டளவில் சுதந்திரமான முறையில் நடைபெறுகிறது. மேலும் பொருளாதார சக்தி என்ற முறையில் அரசு மற்ற வடிவங்களின் விவகாரங்களில் பொருளாதார ரீதியிலும் பொருளாதார ரீதி அல்லாமலும் தலையிடுகின்ற பொழுது அது அவற்றின் குவிப்புகளை அரசுக் குவிப்புகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ள முடியும்; கடைசி நிலையில், தேசிய வருமானத்தை உயர்த்துவதற்கும் பயன்படுத்த முடியும்.

அரசு உள்நாட்டுப் பொருளாதார உறவுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமாகப் புனருற்பத்தியின்

வெவ்வேறு வடிவங்களுக்கு இடையில் அவசியமான ஒருங்கிணைப்பை நிறைவேற்ற முடியும், அதாவது தேசியப் பொருளாதார வளர்ச்சியின் புறநிலையான தேவைகளுக்குப் பொருந்திய முறையில் புனருற்பத்தி நிகழ்வுப் போக்கை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும். அந்நியப் பொருளாதார உறவுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் உலகச் சந்தையில் பரிவர்த்தனைகளுக்கு மிகவும் லாபகரமான நிலைமைகளை அரசு பெறுகிறது; அதன் வளர்ச்சியடைகின்ற பொருளாதாரத்துக்கும் உலகப் பொருளாதாரத்துக்கும் இடையில் பயனுள்ள உறவுகளைப் படைத்துக் கொள்வதை உறுதி செய்கிறது. இவை அனைத்தும் இளம் அரசுகளின் பொருளாதார வளர்ச்சியில் அரசுத் துறையைத் தீர்மானமான கூறுகச் செய்கின்றன.

உற்பத்தி உறவுகளின் அமைப்பு என்ற முறையில் அரசுத் துறை—அது நாட்டின் பல வடிவங்களுடைய அமைப்பின் ஒரு பகுதியாகவும் இருக்கிறது—மற்ற பொருளாதார வடிவங்களுடனும் உலகப் பொருளாதாரத்துடனும் உற்பத்தி, வினியோகம் மற்றும் பரிவர்த்தனையில் நெருக்கமாக இணைந்திருக்கிறது. ஆனல் தனியார் வடிவங்களைப் போலன்றி அரசுத் துறை அரசியல் மேற்கட்டுமானத்துடன் நேரடியான இணைப்புகளைக் கொண்டிருக்கிறது. ஏனென்றுல் உற்பத்திச் சாதனங்கள் அரசின் உடைமையாக இருக்கின்றன. ஆகவே வளர்முக நாடுகளில் அரசுத் துறை அடிப்படை, மேற்கட்டுமானம் ஆகிய இரண்டின் பகுதியாகவும் இருக்கிறது. பெரிய அளவில் தேசியமய

மாக்கல் இல்லை என்பதால் அதன் வளர்ச்சி இடைநிலை உறவுகளின் துறையிலும்—வினியோகம் மற்றும் பரிவர்த்தனை — முதன்மையான உறவுகளிலும் — உடைமை உறவுகள் — தொடங்குகிறது. அரசுடைமை அதிகரிக்கும் பொழுது முதன்மையான உறவுகள் முன்னணிக்கு வருகின்றன; அரசுத் துறையின் அரசியல்-பொருளாதார சாராம்சத்தையும் தேசியப் பொருளாதார வளர்ச்சியில் அதன் தீர்மானகரமான தாக்கத்தையும் மென்மேலும் பிரதிபலிக்கின்றன. அரசின் உடைமையாக இருக்கின்ற நிறுவனங்களுடைய எண்ணிக்கை வளர்ச்சியடைகின்ற பொழுது அந்தப் பல வடிவங்களுடைய பொருளாதாரத்தில் உற்பத்தி உறவுகளின் மிக உயர்ந்த, சமூகமயமாக்கப்பட்ட, அமைப்பு ரீதியான வடிவம் தோன்றுகிறது, அது வளர்ச்சியடைந்த, சுதந்திரமான தேசியப் பொருளாதாரத்தின் உருவாக்கப் பணிக்குத் தலைமை தாங்குகிறது.

உற்பத்தியையும் செலாவணியையும் சமூகமயமாக்கி ஒழுங்குபடுத்துகின்ற பொழுது புனருற்பத்தி வேகத்தைத் துரிதப்படுத்துவதற்கு, அதன் அளவு விகிதங்களை மறு அமைப்புச் செய்வதற்கு அவசியமான பொருளாயத மற்றும் சமூக நிலைமைகளை அரசு படைக்கிறது. இவை இல்லாமல் நாட்டுப் பொருளாதாரத்தின் பின்தங்கிய நிலையையும் சார்பு நிலையையும் அகற்ற முடியாது.

வளர்முகப் பொருளாதாரத்தில் அரசுத் துறை தன்னைச் சுற்றி ஒரு புதிய உழைப்புப் பிரிவினை ஏற்படுகின்ற மையமாகச் செயல்படுவது மட்டுமல்லாமல் தனியார் துறையின் எல்லா வடிவங்

களின் வளர்ச்சியையும் வரையறுக்கின்ற ஒரு வகையான சமூகத் தடையாகவும் செயல்படுகிறது.

அரசுத் துறையின் சமூக-பொருளாதாரச் சாராம்சம் ஆதிக்கம் வகிக்கின்ற உற்பத்தி உறவுகளினுலும் மேற்கட்டுமானத்தின் வர்க்கத் தன்மையினுலும் நிர்ணயிக்கப்படுகிறது. முதலாளித் துவச் சுற்று வட்டத்துக்குள் அரசுத் துறை அரசு முதலாளித்துவத்துக்குச் சமமாக இருக்கிறது. இந்தியா உள்படப் பெரும்பான்மையான வளர் முக நாடுகளில் முதலாளித்துவப் பொருளாதார வடிவம் நிறுவப்பட்டிருக்கிறது, ஆனுல் தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் அது ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆகவே அரசுத் துறையைக் கலப்பற்ற அரசு முதலாளித்துவம் என்று வரையறுத்துவிட முடியாது.

பல வடிவங்களுடைய பொருளாதாரங்களில் அரசுத் துறையின் வளர்ச்சியில் இருக்கின்ற வரலாற்று ரீதியான போக்குகள் ஒரு நாட்டில் ஏதாவதொரு காலகட்டத்தில் வர்க்க சக்திகளின் சமநிலையையும் ஒழுங்கமைப்பையும் பிரதிபலிக் கின்றன. ஆகவே வளர்முக நாடுகளில் அரசுத் துறையின் பங்கெடுப்பு அல்லது அதன் அடிப் படையில் சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்கள் செல்கின்ற திசை வழி முதலாளித்துவத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும் அல்லது தாமதப் படுத்த முடியும்.

இந்தியாவில் அரசுத் துறை நாட்டு வளர்ச்சி யின் வெவ்வேறு கட்டங்களில், வெவ்வேறு வழி களில் தேசிய முதலாளித்துவத்தின் உருவாக்கத் தின் மீது தாக்கம் செலுத்தியது. சமூக உடைமை

யின் வடிவம் என்ற முறையில் அரசுத் துறையின் புறநிலையான வளவாய்ப்பு உடைமையின் இந்த வடிவம் இணைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் மேற் கட்டுமானத்தால் தொடர்ச்சியாக பாதிக்கப்படு கிறது, அதாவது பொருளாதார வளர்ச்சியின் மீது அரசுத் துறையின் இறுதிநிலை விளைவு அந்தக் கட்டத்தில் வர்க்க சக்திகளின் சமநிலையைப் பொறுத்திருக்கிறது.

எனினும், அரசுத் துறை பொருளாதாரக் கட்டமைப்பில் ஒரு முக்கியமான கூறுக ஆகின்ற பொழுது அது ஓரளவுக்குச் சுதந்திரத்தையும் தன் னுடைய சொந்த வளர்ச்சித் திறனையும் பெற்று விடுகிறது, ஆகவே அடிப்படையின் உறவுகளை மட்டுமல்லாமல் மேற்கட்டுமானத்தின் உறவு களையும் பாதிக்கிறது. இந்த எதிர்மாறுன சார்பு நிலையும் பொருளாதார மற்றும் அரசியல் உறவு களில் அரசுத் துறைப் பாத்திரத்தின் வளர்ச்சியும் பொருளாதாரத்தில் அரசுத் துறையின் பங்கையே பிரதானமாகச் சார்ந்திருக்கின்றன.

அரசுத் துறை பொருளாதார ரீதியில் போது மான பலத்தைப் பெற்று சுயேச்சையாக, மற்ற வடிவங்களுக்கு உதவியாக இல்லாமல் தன்னுடைய சொந்த வளர்ச்சித் திறனைப் பின்பற்றி இயங்கும் பொழுது மட்டுமே அதன் வளவாய்ப்பைச் சாதிக்க முடியும். அரசுத் துறைக்குள்ளாக உறவு களின் பொருளாதார சாராம்சத்தை உடைமை யின் பொது வடிவம் மென்மேலும் அதிகமாக நிர்ணயிக்கிறது. அரசுப் பொருளாதாரத்தின் அளவு ரீதியான வளர்ச்சியும் அதன் நிலைகள் வலுப்படுவதும்—குறிப்பிட்ட அரசியல் நிலைமை

கள் இருக்கும் பொழுது—புனருற்பத்தி நிகழ்வுப் போக்கு மற்றும் குவிப்புகளின் எல்லா வரையளவுகளின் வேகம் மற்றும் அளவுவிகிதங்களை அரசுப் பொருளாதாரத்தின் எல்லைகளுக்குள் மட்டுமல்லாமல் தேசியப் பொருளாதாரம் முழுமையிலுமே நிர்ணயிக்கத் தொடங்குகின்ற விளைவை ஏற்படுத்துகின்றன.

இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டின் பிரத்யேகமான நிலைமைகளில் அரசுத் துறை புறநிலையான முறையில், முதலாளி வர்க்கம் மற்றும் தனியார் தொழில் அமைப்பைச் சேர்ந்த இதர உறுப்பினர்களின் அகநிலையான விருப்பங்களுக்குச் சம்பந்தமில்லாத முறையில் பொது உடைமை வடிவத்தை ஏற்படுத்துகிறது; இது முதலாளித்துவ உடைமை உள்பட தனியார் உடைமைக்கு ஒரு வகையான மறுப்பைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. இந்தக் கருத்தில் அரசுத் துறை வளர்ச்சியடைவதும் வலுப்படுவதும் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதைக்கு மாறுவதற்கு வழி ஏற்படுத்துகிறது. உண்மையான சுதந்திரத்துக்காக, பொருளாதார மற்றும் கலாச்சாரப் பின்தங்கிய நிலையையும் சுரண்டலின் எல்லா வடிவங்களையும் ஒழிப்பதற்காக நடைபெறும் போராட்டத்தில் ஜனநாயக சக்திகளின் கரங்களில் அரசுத் துறை சக்திமிக்க ஆயுதமாக இருக்க முடியும்.

இந்தியாவில் அரசுத் துறையை வளர்க்க வேண்டும், வலுப்படுத்த வேண்டும், ஜனநாயகப் படுத்த வேண்டும் என்று முற்போக்கு சக்திகள் வற்புறுத்துகின்றன. அரசுத் துறையை ஜனநாயகப்படுத்துவதற்கு, குறுகிய வர்க்க நலன்

களுக்காக இல்லாமல் தேசிய நலன்களுக்காக உபயோகிப்பதற்கு நடைபெறுகின்ற போராட்டம் ஏகாதிபத்தியம், ஏகபோக மூலதனம் மற்றும் இதர பிற்போக்கான கோஷ்டிகளுக்கு எதிராகப் பரந்த மக்கட்பகுதியினரையும் அனைத்து முற்போக்கு சக்திகளையும் திரட்டக்கூடிய பொருளாயத அடிப்படையைத் தோற்றுவிக்கிறது. இந்த அர்த்தத்தில் அரசுத் துறையின் வளர்ச்சி தேசிய முக்கியத்துவத்தைக் கொண்டதாகும். அரசுத் துறையின் வளர்ச்சி அந்நிய மூலதனம் ஈடுபடுத்தப் படுகின்ற துறையைக் குறைக்கிறது, தேசியப் பொருளாதாரத்தின் கேந்திரமான நிலைகளிலிருந்து அதை அகற்றுகிறது, சில சமயங்களில் நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் அதன் தாக்கத்தின் தன்மையை மாற்றுகிறது.

நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் அரசின் தலையீட்டைக் குறிப்பிட்ட அளவுக்குள் நிறுத்தி வைப்பதற்கு சுரண்டும் வர்க்கங்கள் முயற்சி செய்கின்றன. வெவ்வேறு சமூகக் குழுக்கள் தருகின்ற எதிர்ப்பின் பலமும் தன்மையும் ஒரே விதமாக இருக்கவில்லை. தொழில்துறையுடன் தொடர்பு கொண்டிருக்கின்ற குட்டி முதலாளிகளின் பரந்த பகுதியினரும் நடுத்தர முதலாளிகளின் ஒரு பகுதியினரும் அரசின் நேரடியான உதவியிலும் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு அதன் நடவடிக்கைகள் சிலவற்றிலும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் முதலாளித்துவத்தின் தன்னிச்சையான வளர்ச்சி உற்பத்தியைக் குவிப்பதற்கும் மூலதனத்தை மத்தியப் படுத்துவதற்கும் இட்டுச் சென்று ஏகபோகங்

களின் நிலையையும் செல்வாக்கையும் பலப்படுத்து கிறது; குட்டி முதலாளிகளில் கணிசமான பகுதி யினருக்கு — நடுத்தரமான தொழிலதிபர்களில் சில பகுதியினருக்குக் கூட — தேக்கத்தையும் அல்லது அழிவையும் கூட ஏற்படுத்துகிறது. ஆகவே இந்த கோஷ்டிகள் அரசின் ஆதரவைப் பெறுவதற்கு இயற்கையாகவே முயற்சி செய் கின்றன. அவை ஏகபோகங்களை உருவாக்கு கின்ற போக்குகளை எதிர்க்கின்றன, மொத்தத்தில் அரசுத் துறையின் வளர்ச்சியை ஆதரிக்கின்றன. ஆனால் அவற்றின் அணுகு முறையில் முரண்பாடு இருக்கிறது. அவை அரசுத் தலையீட்டின் சில வடிவங்களை எதிர்க்கின்றன; தமக்குச் சுதந்திரத் தையும் மற்றவர்கள் மீது கட்டுப்பாடுகளையும் கோருகின்றன.

பெரிய முதலாளி வர்க்கத்தினரும் ஏகபோக முதலாளி வர்க்கத்தினரும் கடந்த 15—20 வருடங் களில் மிகவும் அதிகமாக லாபமடைந்துள்ளனர். இவர்களும் தங்களுடைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளை பலப்படுத்திக் கொண்டுள்ள னர். ஆகவே இவர்கள் அரசுத் துறையை விரிவு படுத்தக் கூடாது என்று மென்மேலும் அதிக மாக வற்புறுத்துகின்றனர். தாங்கள் ஆதிக்கம் வகிக்கின்ற பொருளாதாரத் துறைகளில் அரசு நுழைவதற்குச் செய்கின்ற எந்த முயற்சியையும் தீவிரமாக எதிர்க்கின்றனர். முதலாளி வர்க்கத் தின் இப்பகுதி தன்னுடைய நிலைகளை எவ்வளவு அதிகமாக பலப்படுத்திக் கொள்கிறதோ அந்த அளவுக்குத் தீவிரமான முறையில் அதன் கருத்துக் களை எடுத்துரைக்கின்ற பொருளியலாளர்கள்

அரசு மற்றும் தனியார் துறைகள் ஒத்துவாழ வேண்டிய அவசியத்தைப் பற்றி கூறுகிறுர்கள். ஆனல் பெரிய முதலாளி வர்க்கமும் கூட அரசுத் துறை முற்றிலும் ஒழிக்கப்படுவதை விரும்பவில்லே. ஏனென்ருல், அரசின் நேரடியான உதவியை அது பெரிய அளவுக்குச் சார்ந்திருக்கிறது என்பதைத் தவிர, குறுகலான உள்நாட்டுச் சந்தையைக் கொண்ட நாடாகிய இந்தியாவில் தனியார் தொழில்துறையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பல சரக்குகளுக்கு அரசு முக்கியமான நுகர் வாளராக இருக்கிறது.

நடைமுறையில் அரசுத் துறை முற்றிலும் பொருளாதாரப் பிரச்சினேகளேச் சமாளிக்கின்ற நடவடிக்கைகளுடன் நிற்க வேண்டும் என்று பெரிய முதலாளி வர்க்கம் விரும்புகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், நாட்டில் முதலாளித்துவ அமைப்பை வலுப்படுத்துவதைக் கடமையாகக் கொண்ட சக்தி என்ற முறையில் மட்டுமே அரசுத் துறையைப் பார்க்கிறது. ஆகவே பெரிய முதலாளி வர்க்கத்தின் வார்த்தைகளில் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் அரசுத் துறையின் அளவுக்கு மீறிய விஸ்தரிப்பை அந்த முதலாளி வர்க்கம் எப்பொழுதும் எதிர்க்கிறது; ஆனல் உண்மையில் அரசுத் துறையின் ஜனநாயக அம்சங்களேயே அது ஆட்சேபிக்கிறது.

ஜனதா கட்சி ஆட்சியிலிருந்த பொழுது ஏக போகவாதிகளும் பெரிய தொழிலதிபர்களும் பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களில் தங்களுடைய செல்வாக்கை மிகப் பெரிய அளவுக்கு அதிகரித்துக்கொள்ள முடிந்தது. ஜனதா கட்சி

தனியார் தொழில் முயற்சிகளின் எல்லா வடிவங்களையும் ஆதரித்தபடியால் அது பொருளாதாரத்தில் அரசின் தலையீட்டைக் குறைக்கத் தொடங்கியது. இது தேசியப் பொருளாதாரத்துக்கு ஆபத்தாக இருந்தது. 1977ல் ஜனதா கட்சி பதவியேற்ற பின் அதன் பொருளாதாரக் கொள்கை நாட்டில் நெருக்கடி தீவிரமடையக் காரணமாக இருந்தது. 1979-80இல் மொத்த தேசிய உற்பத்தியில் 4.5% குறைந்தது; விலைகள் 21 சதவிகிதத்துக்கும் அதிகமாக அதிகரித்தன.* தொழில் துறையில், குறிப்பாக எரிபொருள் மற்றும் சக்தி தொழில்துறைகளில் உற்பத்தி குறைந்தது, போக்குவரத்துத் துறையில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது, பணவீக்கம் அதிகரித்தது. இந்திரா காந்தி தலைமை தாங்கிய இந்திய தேசியக் காங்கிரஸ் 1980 ஜனவரியில் வெற்றியடைந்த பிறகு முந்திய பொருளாதார முன்னேற்றப் பாதை மறுபடியும் பின்பற்றப்பட்டது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் அரசு வடிவம் இன்னும் தன்னிறைவு பெறவில்லை என்பதை இந்தியாவின் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. இறுதியாகப் பார்க்கும் பொழுது அரசு வடிவத்தின் பாத்திரமும் முக்கியத்துவமும் வளர்ச்சிப் பாதையும் நாட்டில் பொருளாதாரத்திலும் அரசியலிலும் உண்மையான அதிகாரத்தை வகிக்கின்ற சமூக சக்திகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்தியா வளர்ச்சியடைந்து கொண்டிருந்த கடந்த 20 வருடங்கள் முழுவதும் பெரிய முத

---

* *The Sunday Standard*, March 1, 1981.

லாளி வர்க்கம்—குறிப்பாக அதன் ஏகபோகப் பகுதி — அரசாங்கத்தை நிர்ப்பந்தம் செய்ய முயற்சி செய்திருக்கிறது. இது நாட்டின் பொருளாதாரக் கொள்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.

இன்று இந்தியா பின்பற்றுகின்ற பொருளாதாரக் கொள்கை பெருமளவுக்கு சமரசப்படுத்துகின்ற தன்மையைக் கொண்டிருக்கிறது; அது சமூக மோதல்களின் தீவிரத்தையும் அவற்றைத் தீர்ப்பதற்கு அவசரமான நடவடிக்கைகள் தேவை என்பதையும் கணக்கிலெடுத்துக் கொள்கிறது. அத்தகைய அணுகுமுறை அவசியமாக இருக்கிறது. ஏனென்றால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் சுட்டிக்காட்டியதைப் போல மக்களில் பெரும்பான்மையினர் வறுமையின் விளிம்பில் வாழ்க்கை நடத்தும் பொழுது சமூக நீதி, வேலைக்கு உரிமை, சம வாய்ப்புகள், குறைந்த பட்ச ஊதியம் முதலிய கோரிக்கைகள் அசாதாரணமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. பல பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கத்தின் அறிவிப்புகளையும் சிலரிடம் செல்வமும் அதிகாரமும் குவிந்திருக்கக் கூடாது என்று வலியுறுத்துகின்ற அரசாங்க ஆவணங்களின் பொதுப் போக்கினையும் இந்தக் கண்ணோட்டத்திலிருந்துதான் ஒருவர் மதிப்பிட வேண்டும். நடைமுறையில் ஏகபோக வட்டாரங்கள் மற்றும் அவற்றின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் நிர்ப்பந்தத்தின் விளைவாக இந்தக் கொள்கை போதுமான அளவுக்கு எப்பொழுதும் அமுல் நடத்தப்படவில்லை.

அரசு பொருளாதாரக் கொள்கையின் முக்கிய நோக்கங்களையும் கோட்பாடுகளையும் அமுல் நடத்துவதற்கு முயற்சி செய்யும் பொழுது முதலில் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் இருக்கின்ற தன்னுடைய உடைமைகளை உபயோகிப்பதுடன் பொருளாதாரத்தை அரசு ஒழுங்குபடுத்துகின்ற இதர வடிவங்களையும் உபயோகிக்கின்றது. ஆகவே அரசுப் பொருளாதாரத்தை அமைத்தல் மிகவும் முக்கியமான செய்முறைக் கடமைகளில் ஒன்றாகிவிட்டது. ஜவகர்லால் நேரு நாட்டு வளர்ச்சிக்குத் தேர்ந்தெடுத்த சமூக-பொருளாதார மாதிரிப் படிவத்தை நிறைவேற்றுவதற்கு அது அடிப்படையாக இருக்க வேண்டும்.

இன்று தொழில்துறையில் அரசுடைமை ஒப்பீட்டளவில் தேசிய வருமானத்தில் மற்றும் மூலதன முதலீடுகளின் மொத்தத் தொகையில்—ஆகவே தொழில்துறையின் உற்பத்தியின் மொத்த மதிப்பில்—சிறு பங்கைக் கொண்டிருக்கிறது. இந்த உடைமை பின்வரும் மூன்று முக்கியமான வழிகளில் அமைக்கப்பட்டிருக்கிறது:

1) காலனியாதிக்க அரசாங்கத்தின் உடைமை தேசிய அரசுக்கு மாற்றப்படுதல்;

2) இந்திய மற்றும் அந்நிய முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளுக்குச் சொந்தமான ஏராளமான தனியார் கம்பெனிகள் நாட்டுடைமையாக்கப்படுதல்;

3) அரசு பெரிய அளவில் முதலீடு செய்ததன் அடிப்படையில் புதிய தொழில் நிறுவனங்கள் நிறுவப்படுதல்.

மேற்கூறிய மூன்று வழிகளில் புதிய நிறுவனங்களை நிறுவுதல் என்ற மூன்ருவது வழி மிகவும் முக்கியமானதாகும்.

நாடு சுதந்திரமடைந்த பிறகு அரசின் உடைமைகளில் போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு அமைப்புகள், முக்கிய துறைமுகங்கள் (சென்னை, விசாகபட்டினம், காண்ட்லா, பம்பாய், கல்கத்தா, கொச்சி), பெரிய இராணுவத் தொழிற்சாலைகள், நீர்ப்பாசன அமைப்புகள் முதலியன இருந்தன, வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், தேசிய அரசாங்கம் முந்திய காலனியாதிக்க அரசாங்க உடைமைகளை மரபுரிமையாகப் பெற்றது.

*1947-48*இல் அரசின் உடைமைகளின்(போக்குவரத்து,செய்தித் தொடர்பு,நீர்ப்பாசன அமைப்புகள் உள்பட) மொத்த மதிப்பு சுமார் 9 பில்லியன் ரூபாய்களாகும்.

தொழில்கள் நாட்டுடைமையாக்கப்படுதல் மிக மிகக் குறைவாக இருந்தது. உற்பத்தி மிகவும் குறைவாக இருந்த கோலார் தங்கச் சுரங்கங்களை அதிகமான நட்ட ஈடு கொடுத்து அரசு எடுத்துக்கொண்டது. நட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பல கயிறு தொழிற்சாலைகளை, அநேகமாகக் காலியாகிவிட்ட பன்ன வைரச் சுரங்கங்களை, விசாகபட்டினத்தில் மூடப்படவிருந்த கப்பல் கட்டும் தொழிற்சாலையை, சில மின்சார உற்பத்தி நிலையங்களை, இராஜஸ்தானில் செம்புச் சுரங்கங்களை மற்றும் சில நிலக்கரிச் சுரங்கங்களையும் அரசு மேற்கொண்டது.

நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் இவையே. *1950-51*இல், முதலாவது

ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கிய பொழுது அரசுத் துறையின் உடைமைகள் 12 பில்லியன் ரூபாய்களுக்குச் சற்றுக் கூடுதலாக இருந்தன; இதில் போக்குவரத்து, செய்தித் தொடர்பு மற்றும் நீர்ப்பாசன அமைப்புகளின் பங்கு 90 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருந்தது, தொழில்துறைக்கு 4% பங்கு மட்டுமே இருந்தது. புனருற்பத்தி செய்யப்பட்ட செல்வத்தில் அரசின் பங்கு 15% மட்டுமே. அதே சமயத்தில் தனியார் துறையின் உடைமைகள் (விவசாயம், சிறு தொழில்துறை, வங்கிகள், இதரவை நீங்கலாக) 15 பில்லியன் ரூபாய்களாக இருந்தன; இதில் 11 பில்லியன் பாக்டரிகளிலும் 300 மில்லியன் சுரங்கத் தொழில்களிலும் 320 மில்லியன் கப்பல் கட்டும் தொழில் மற்றும் விமானத் தொழிலிலும் 700 மில்லியன் மின்சார உற்பத்தியிலும் இருந்தன.* வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தனியார் முதலீடுகளில் சுமார் 85% தொழில்துறையில் குவிக்கப்பட்டிருந்தன; அவை தொழில்துறையில் அரசின் முதலீடுகளைக் காட்டிலும் 25 மடங்கு அதிகமாக இருந்தன. தேசிய வருமானக் கமிட்டியின் அறிக்கைப்படி அரசு தொழில் நிறுவனங்களின் நிகர உற்பத்தி 3 பில்லியன் ரூபாய்களாக இருந்தது, தனியார் நிறுவனங்களின் நிகர உற்பத்தி 88 பில்லியன் ரூபாய்களாக இருந்தது.**

---

* *The First Five Year Plan*, New Delhi, 1952, p. 32.

** *National Income Committee. Final Report*, Delhi, 1954, p. 109.

1950-51இல் தேசிய வருமானத்தில் அரசு தொழில் நிறுவனங்களின் பங்கு 3 சதவிகிதமாக மட்டுமே இருந்தது, தனியார் நிறுவனங்களின் பங்கு 92 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருந்தது.*

அரசின் பொருளாதார வளங்கள் மிகவும் அதிகமாக இல்லாதபடியால் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை அரசினல் மாற்ற முடியவில்லை என்பது இயற்கையே. ஆகவே முதன்மையாக அரசுத் துறையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தக் கூடிய வடிவங்களையும் முறைகளையும் தேடுவதில் அது தன் கவனம் முழுவதையும் குவித்தது.

சுதந்திரத்துக்குப் பிந்திய ஆரம்ப வருடங்களில் தொழில்துறை முதலீடு மிகவும் மெதுவாகவே வளர்ச்சியடைந்தது, அதன் கட்டமைப்பு மாற்றமில்லாமல் இருந்தது. 1948-49இல் எல்லா விதமான தொழில் துறைகளிலும் (சிறு தொழில் துறை உள்பட) மொத்த மூலதன முதலீடுகள் 2,100 மில்லியன் ரூபாய்களாக இருந்தன, 1951-52இல் அவை 2,500 மில்லியன்களாக மட்டுமே அதிகரித்தன. மூலதன முதலீடுகளும் உற்பத்தியும் பிரதானமாக மென்னயத் தொழில்துறையில் அதிகரித்தன.** இரண்டாவது உலக யுத்தத்துக்கு பின்னர் ஏற்பட்ட நிலைமையையும் நாடு இரண்டு அரசுகளாகப் பிரிக்கப்பட்டதனல் ஏற்பட்ட நெருக்கடிகளையும் சமாளிப்பதற்கு நாடு அரும்

---

* *Ibid.*

** D. R. Rangnekar, *Poverty and Capital Development in India*, London, 1958, p. 224.

பாடுபட்டுக் கொண்டிருந்தது. இத்தகைய சூழ் நிலையில் முக்கியமான பொருளாதாரப் பிரச்சினை களைத் தீர்ப்பதில் அரசு மெத்தனமாக இருந்தது; அது தேசிய அரசாங்கத்தின் அரசியல் அதிகாரத் துக்கு ஆபத்துண்டாக்குவதற்குச் சமமாகும்.

அரசுத் துறை பிரதானமாக, புதிய முதலீடு களின் மூலம் வளர்ச்சி அடைந்து கொண்டிருந் தது; அந்த முதலீடுகளின் அளவும் திசையும் ஐந்தாண்டுத் திட்டங்களினுல் நெறிப்படுத்தப் பட்டிருந்தன. 1949 டிசம்பரில் அரசாங்கம் ஜவ கர்லால் நேருவின் தலைமையில் தேசியத் திட்டக் குழுவை அமைத்தது. இக்குழு 1950 மார்ச்சில் பணிகளைத் தொடங்கியது. நாட்டின் பொருளா யத, நிதி மற்றும் உழைப்புச் செல்வ வளங்களை மதிப்பிட்டு அவற்றை மிகச் சிறப்பான முறையில் உபயோகிப்பதற்குத் திட்டம் தீட்டுகின்ற கடமை அதற்குத் தரப்பட்டது.

இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் திட்ட மிடுதலின் கடமைகளும் புறநிலையான வாய்ப்பு களும் சோஷலிஸ்ட் நாடுகளில் திட்டமிடு வதிலிருந்து கணிசமாக வேறுபட்டிருக்கின்றன. ஆகவே இந்தியாவில் திட்டமிடுதலை சோஷலிஸ்ட் திட்டமிட்ட பொருளாதாரத்தில் புறநிலையாக இருக்கின்ற வாய்ப்புகள் என்ற நோக்கிலிருந்து மதிப்பிடக் கூடாது, ஒரு வளர்முக நாட்டில் திட்டத்தினுல் தீர்க்கக் கூடிய கடமைகளின் ஒளி யிலிருந்துதான் அதை ஆராய வேண்டும்.

திட்டமிடுதல் அரசுத் துறையை வளர்ப் பதற்கு முக்கியமான முறையாக, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் மீது அரசாங்கத்

தாக்கத்தின் முக்கியமான கருவியாக இருந்தது. திட்டங்கள் பொருளாதாரக் கொள்கையின் திசை வழிக்கும் தன்மைக்கும் ஸ்தூலமான வடிவத்தைக் கொடுக்கின்றன, தேசியப் பொருளாதாரத்தில் அரசுத் தலையீட்டின் அளவு மற்றும் ஆழத்தை வரையறுக்கின்றன. நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் அரசு தலையிடுகின்ற சாத்தியம் இந்தியாவில் திட்டமிடுதலுக்கு ஒரு வரை யறையைக் கொடுத்தாலும் அதன் முக்கியத்துவம் சாதாரணமான திட்டமிடுதலுக்கு மிகவும் அப்பால் போகிறது. ஏனென்றால் அது அரசுத் துறையின் மூலமாகத் தனியார் துறையின் மீது கணிசமான தாக்கம் செலுத்துகிறது, நாடு முழுவதிலும் பொருளாதார வளர்ச்சியின் தலைமையான பிரச் சினைகள் எப்படித் தீர்க்கப்படுகின்றன என்பதன் மீதும் தாக்கம் செலுத்துகிறது. வளர்ச்சியை நிர்ணயிப்பதற்கு அல்லது வரிகள், கடனுதவி கள், காப்புவரிகள் மற்றும் இதரவற்றின் மூலம் தனியார் துறையை நேரடியாக ஒழுங்குபடுத்து வதற்கு (அவை அதிகமான பங்கு வகிக்க முடி யும்) அரசுக்கு ஏற்பட்டுள்ள வாய்ப்புகள் முக்கியத்துவத்தைப் பெறுவது மட்டுமின்றி, ஒரு கலப்புப் பொருளாதாரத்தில் சமூக நிதிகளின் புனருற்பத்தியின் மீது அரசின் உடைமை கொண்டிருக்கும் தாக்கமும் முக்கிய மானதே.

அரசுத் துறை, தனியார் துறை என்ற இரண்டு துறைகளின் பரஸ்பரத் தாக்கம் மாறாமல் இருப் பதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அரசுத் துறையின் அளவினால் அது நிர்ணயிக்கப்படுகிறது.

அதன் பங்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு தனியார் துறையின் மீது அதன் தாக்க மும் அதிகரிக்கும்; நாட்டுப் பொருளாதாரம் முழு வதிலும் திட்டமிடுதலின் தாக்கம் அதிகச் சீராக வும் ஆழமாகவும் இருக்கும். ஆகவே பொருளா தாரத்தில் நேரடியான அரசு முதலீடுகளின் அளவுப் பெருக்கமும் அரசுடைமை விரிவு படுத்தப்படுதலும் நாட்டை எதிர்நோக்கியுள்ள பொருளாதார மற்றும் அரசியல் கடமை களைத் தீர்ப்பதில் மிகப் பெரிய முக்கியத்து வத்தைக் கொண்டிருக்கின்றன. அரசுடைமை வளர்ச்சியடைந்து உறுதிப்படுகின்ற பொழுது பொருளாதார நிகழ்வுப் போக்குகளின் மீது இன்னும் ஆழமாகத் தாக்கம் செலுத்துவதற் குரிய அரசின் வாய்ப்புகள் அதிகரிப்பதுடன் திட்டமிடுதலும் ஒழுங்குபடுத்துதலும் வன்மை யடைகின்றன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு 23,800 மில்லியன் ரூபாய்களை முதலீடு செய் வதற்குத் திட்டமிடப்பட்டது. ஆனால் அரசின் முதலீடுகள் 19,600 மில்லியனுக்கு அதிகமல்ல. 1980-85ம் வருடங்களுக்குரிய ஆறாவது ஐந் தாண்டுத் திட்டம் 1980இல் தயாரிக்கப்பட்டது. அது பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு 15,87,100 மில்லியன் ரூபாய்களை மூலதன முதலீடு செய்வதற்குத் திட்டமிட்டது; இத்தொகையில் 9,75,000 மில்லியன் அல்லது 61% அரசுத் துறையில் முதலீடு செய்யப்படும். ஐந்தாவது ஐந் தாண்டுத் திட்டத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது அரசு முதலீடுகள் நிலையான விலைகளில் சுமார்

80 சதவிகிதமும் நடப்பு விலேகளில் 148 சதவிகிதமும் அதிகரிக்கப்பட்டன.*

ஆருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் துறை முதலீடுகளில் பாதிக்கும் அதிகமானது அரசுத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1976ம் வருடப் புள்ளிவிவரங்களின்படி பெருந்தொழில்துறையில் நிலேயான மூலதனத்தில் 60 சதவிகிதமும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பாதியும் அரசுத் துறையில் இருந்தன. 1950-51க்கும் 1978-79க்கும் இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசு நிறுவனங்களின் நிலேயான மூலதனத்தின் பங்கு 2.3%இலிருந்து 9.2%ஆக அதிகரித்தது. 1978இல் மொத்த தேசிய உற்பத்தியில் அரசுத் துறையின் பங்கு (நிர்வாகம் உள்பட) 17 சதவிகிதமாகவும், மொத்த உள்நாட்டுக் குவிப்பில் 22 சதவிகிதமாகவும் இருந்தது. 1980-85ம் வருடங்களுக்கு அதன் பங்கு 22.9% என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 1970-71இல் புனருற்பத்தி செய்யப்பட்ட தேசியச் செல்வத்தில் அதன் பங்கு 43 சதவிகிதமாக இருந்தது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தீர்மானகரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்ற 50 ரகங்களேச் சேர்ந்த தொழில்துறைச் சரக்குகள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் அரசுத் துறை ஆதிக்கம் வகிக்கிறது. 1960-61க்கும் 1978-79க்கும் இடையில் உற்பத்தி மற்றும் சுரங்கத் தொழில்களில் சேர்க்கப்பட்ட மதிப்பில் அரசு நிறுவனங்களின் பங்கு 8.1% இலிருந்து 28.9% ஆக அதிகரித்தது. 1979இல் 179 அரசுத் துறைத்

* *The Sixth Five Year Plan*, p. 19.

தொழில் நிறுவனங்களின் மொத்த முதலீடுகள் 156 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமாக இருந் தன.*

மாநில அரசாங்கங்கள் மற்றும் ஸ்தல உறுப்பு களின் கட்டுப்பாட்டிலிருக்கும் உற்பத்தியை இதனுடன் சேர்த்தால் அரசு முதலீடுகளின் மொத்தத் தொகை 250 பில்லியன் ரூபாய்களாக இருக்கும் என்று கூறலாம். இவை 600 வெவ் வேறு தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யப் படும். 1979ம் வருடப் புள்ளிவிவரங்களின்படி 4 மில்லியன் நபர்களுக்கும் அதிகமானவர்கள் அரசின் தொழில் நிறுவனங்கள் எல்லாவற்றிலும் வேலை செய்தார்கள்.**

இரும்பு, எஃகுத் தொழில், எஞ்சினியரிங் மற்றும் இரசாயனத் தொழில் ஆகிய கேந்திர மான துறைகளில் அரசு முதலீடு செய்கிறது. எல்லா வகையான விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும் மொத்தச் செலவில் 90% அரசு செலவழிக்கிறது. உற்பத்தி உள்ளமைப்பிலும் அரசுத் துறை தலைமையான நிலையைப் பெற்றிருக்கிறது. 80% நிலையான மூலதனம் குவிக்கப்பட்டிருக்கும் கன இயந்திரத் தொழில் துறையில் அரசின் முதலீடுகள் ஆதிக்கம் வகிக்கின்றன; மொத்தத் தொழிலாளர் களின் எண்ணிக்கையில் 40% இத்துறையில் வேலை செய்கின்றனர், உற்பத்தித் தொழில்துறையின் மதிப்புச் சேர்க்கப்பட்ட நிகர உற்பத்திப் பொரு ளில் 50% அதிகமாக இத்துறை உற்பத்தி செய் கிறது.

---

* *Commerce*, January 10, 1981, pp. 52-53.

** *Ibid*.

அரசுத் துறையில் உற்பத்தி மற்றும் மூலதனக் குவிப்பு மிகவும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. 1976இல் 28 மிகப் பெரிய அரசுக் கம்பெனிகளின் வருடாந்தர வர்த்தகம் தனியார் துறையைச் சேர்ந்த 20 மிகப் பெரிய ஏகபோகங்களைக் காட்டிலும் 1.4 மடங்கு அதிகமாக இருந்தது. மொத்த முதலீடுகளில் 80% இப்பெரிய அரசு கம்பெனிகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.*

அரசுத் தொழில்துறையின் உருவாக்கமும் வளர்ச்சியும் உழைப்பின் சமூகப் பிரிவினை நிகழ்வுப் போக்கு, தொழில்துறை உற்பத்தியின் கட்டமைப்பு மாற்றங்கள், வளர்ச்சி வேகங்கள் மீதும் உள்நாட்டுச் சந்தையின் தோற்றம் மற்றும் விரிவுபடுத்தலின் மீதும் குறிப்பிடத்தக்க விளைவைக் கொண்டிருக்கின்றன.

எனினும், அரசு முதலீடுகள் வேகமாக வளர்ச்சியடைந்த போதிலும் அரசு உடைமைகள் ஒப்பு நிலையாகவும் தனிமுதலாகவும் அதிகரித்த போதிலும் தேசியப் பொருளாதாரத்தில் அரசுத் துறையின் பங்கு இன்னும் பெரிய அளவில் இல்லை. தேசிய வருமானத்தில் சுமார் பாதியை உற்பத்தி செய்கின்ற, பொருளாதாரத்தில் மிகப் பெரிய துறையான விவசாயத் துறையில் அரசு உடைமை அநேகமாகக் கிடையாது. அரசுத் தொழில் நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் லாபமும் தனியார் துறையைக் காட்டிலும் மிகக் குறைவாக இருக்கிறது. நெடுங்காலம் வரை அரசுத் துறை நட்டத்

* *The Econonic Times*, Bombay, March 12, 1977, p. 1.

தில் நடைபெற்றது. அதன் உற்பத்தி உச்ச அளவு இன்னும் மிகவும் குறைவாகவே இருக்கிறது.

இவை அனைத்தும் சேர்ந்து அரசு பண்ட விலைகள் மீதும் மூலதன மாற்றத்தின் மீதும் செயலுரத்துடன் தாக்கம் செலுத்துவதையும் உள்நாட்டுச் சந்தை என்னும் பொறியமைவின் மூலமாகத் தொழில்துறையை மறு அமைப்புச் செய்வதை ஊக்குவிப்பதையும் நடைபெற முடியாதபடிச் செய்கின்றன.

இதிலிருந்து பின்வரும் முடிவுகளைப் பெறலாம்:

*1)* அரசின் முதலீடுகளின் மொத்த அளவு, தனியாக எடுத்துப் பார்க்கும் பொழுது வேகமாக வளர்ச்சியடைந்த போதிலும் நாட்டின் பொருளாதாரத்தில் தீவிரமான அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் அரசுத் துறையின் பங்கைக் கணிசமாக அதிகரிப்பதற்கும் இன்னும் போதிய அளவில் இல்லை.

*2)* அதிக மூலதனம் தேவைப்படுகின்ற, இதுவரை குறைவான லாபத்தையே கொடுக்கின்ற துறைகளில் அரசு முதலீடு செய்திருக்கிறது. அரசின் மூலதன முதலீடுகளில் பெரும்பகுதி கன இயந்திரத் தொழில் துறைக்கே செய்யப்பட்டிருக்கிறது.

*3)* விவசாயப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமலிருக்கும் பொழுது, தொழில்துறைக் கட்டமைப்பு பின்தங்கிய நிலையில் இருக்கும் பொழுது உள்நாட்டுச் சந்தையை வளர்க்கும்படி அரசு நிர்ப்பந்திக்கப்படுவதால் பொருளாதார முன்

னேற்றத்தின் சுமையின் பெரும்பகுதியும் அரசுத் துறையைச் சேர்ந்து விடுகிறது. உள்நாட்டுச் சந்தையின் தேவைகள் ஒப்பீட்டளவில் குறைவாகத்தான் இருக்கின்றன. இவற்றைப் பூர்த்தி செய்யக் கூடிய சிறு தொழில் நிறுவனங்களை அரசுத் துறையில் நிறுவுவது இந்தியாவின் இன்றைய சூழ்நிலையில் தவறாகவே இருக்கும். நவீனத் தொழில் நிறுவனங்களை அமைப்பது என்பதற்கு உச்சத் தகுதிகளைக் குறைப்பதும் மொத்த பொருளாதாரக் கட்டுக்கோப்பிற்குள்ளும், சிறப்பாக அரசுத் துறையிலும் தற்காலிகமாக மூலதன முதலீடுகளின் செயல் திறனைக் குறைப்பதும் என்பது தவிர்க்க முடியாத அர்த்தமாகும்.

4) அரசின் முதலீடுகள் தொழில்துறை வளர்ச்சிகுன்றிய பகுதிகளில் செய்யப்படுகின்றபடியால் அதனையடுத்துத் தனியார் மூலதனம் வருவதற்கு வழி ஏற்படுகிறது. சில உதாரணங்களில், மூலப் பொருள்கள் அருகில் கிடைக்கின்றனவா என்பதைக் காட்டிலும் பின்தங்கிய பிரதேசங்களில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

ஆகவே அரசுத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியும் செய்முறையும் தேசியக் கடமைகளை இலக்காகக் கொண்டிருக்கின்றன. கடந்த காலத்திலிருந்து பெறப்பட்ட பொருளாதார அமைப்பைத் திருத்தியமைக்கின்ற பெருஞ்சுமையை அரசுத் துறை வேண்டுமென்றே எடுத்துக் கொண்டது. உயர்வான மற்றும் நிலையான

வளர்ச்சி வேகத்தை அடைவது, பெருந்திரளான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது, ''உறுதியான சோஷலிசப் பொருளாதாரத்துக்குப்'' பொருளாயத அடிப்படையை அமைப்பது ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு தேசியப் பொருளாதாரத்தைத் திருத்தியமைப்பது திட்டமிடுதல் மற்றும் அரசு முதலீடுகளின் நோக்கம் என்று ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிடுகிறது. அரசுத் துறை முதலீடுகள் பொருளாதாரத்தின் மொத்த வளர்ச்சியில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. அதனுல் பொருளாதாரத்தின் எஞ்சிய பகுதிகளின் வளர்ச்சி அரசுத் துறையின் வளர்ச்சியுடன் நெருக்கமாக இணைக்கப்படுகிறது என்றும் அதில் குறிப்பிடப்படுகிறது. அரசுத் துறையின் தேசியப் பாத்திரத்துக்கும் தேசிய வளர்ச்சியின் கேந்திரமான கடமைகளைத் தீர்ப்பதில் மற்றும் நாட்டின் பொருளாதார, சமூக மாற்றத்தில் அதன் முக்கியமான பாத்திரத்துக்கும் இத்தகைய அங்கீகாரம் அதன் சமூக முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

## 2. தொழிற் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் பொதுவான போர்த்திட்டம் அதன் தொழிற் கொள்கையில் தெளிவாகப் பிரதிபலிக்கப்படுகிறது. நாட்டின் பல வடிவங்களுடைய சமூக-பொருளாதாரக் கட்டமைப்பில் உள்ள சிக்கலான, முரண்பாடான நிகழ்வுப் போக்குகளை நயப்

படுத்தக் கூடிய சமரசத் தீர்வுகளைக் காண்பது அதன் நோக்கமாகும்.

ஒரே உற்பத்தி வடிவத்தைக் கொண்டிராத பல வடிவங்களுடைய பொருளாதாரத்தில் பொருளாதாரக் கொள்கை தமது சுதந்திரமான, நிலையான புனருற்பத்தி வரையளவுகளைக் கொண்டிருக்கும் வெவ்வேறு சமூக-பொருளாதார வடிவங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வெவ்வேறு சமூக வடிவங்களின் தன்னியல்பான வளர்ச்சி—அதைப் போலவே கண்டிப்பான கட்டுப்பாடும் அல்லது சில கட்டமைப்புகளை பாதித்து மற்ற கட்டமைப்புகளுக்குத் தரப்படுகின்ற அநியாயமான ஊக்குவிப்பும்—நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையில் ஆழமான நெருக்கடி நிகழ்வுகளை வளர்க்கும், நாட்டில் ஒப்பு நோக்கில் நிலையான பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற வெவ்வேறு கட்டமைப்புகளுக்கு இடையில் அவசியமான சமநிலையைக் கவிழ்த்து விடும்.

இந்தியாவின் தொழிற் கொள்கை அரசாங்கம் வெளியிட்டிருக்கும் பல ஆவணங்களில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

*1948* ஏப்ரலில் அரசாங்கம் தன்னுடைய பொருளாதார வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருந்த பொழுது தொழிற் கொள்கை சம்பந்தமாக ஒரு விசேஷத் தீர்மானத்தை நிறைவேற்றியது. நாட்டில் இருக்கின்ற செல்வத்தை அப்படியே வினியோகிப்பது வறுமையை மறுவினியோகம் செய்வதில் முடியும் என்ற

உறுதியான கருத்தை அடிப்படையாகக் கொண்டு இத்தீர்மானம் தொழில்துறையை வளர்ப்பதிலும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் அரசாங்கத்தின் கடமைகளை வரையறுத்தது. சாத்தியமான எல்லா வழிகளையும் பயன்படுத்தி உற்பத்தி வளர்ச்சியை உறுதிப்படுத்துவதும் அதன் பலன்களை நியாயமான முறையில் வினியோகம் செய்வதும் இயக்காற்றலைக் கொண்ட தேசியக் கொள்கையின் நோக்கமாகும். இத்தீர்மானம் பொருளாதாரத்தில் அரசின் தனிச்சிறப்பான பாத்திரத்தை வலியுறுத்தியது; அரசிடம் செல்வ வளங்களும் தேர்ச்சியுடைய நிபுணர்களும் இல்லாததனுல் அரசு தொழில்துறை வளர்ச்சியில் சுறுசுறுப்பான பாத்திரத்தை வகிக்க முடியவில்லை என்பதால் தனியார் துறைக்குப் போதுமான அளவுக்கு விரிவான வாய்ப்புகள் தரப்படுகின்றன—எனினும் தொழில்துறையை வளர்ப்பதில் அரசு தன்னுடைய பாத்திரத்தை அதிகப்படுத்த வேண்டும். இத்தீர்மானத்தில் இடம் பெற்ற கருத்துக்கள் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்தன.

இந்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் கோட்பாடுகளை வரையறுக்கின்ற மிக முக்கியமான மற்ருெரு ஆவணம் 1956 ஏப்ரல் 30இல் நிறைவேற்றப்பட்ட தொழிற் கொள்கைத் தீர்மானமாகும். முதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு எட்டு வருடங்களாகி விட்டன. இதற்கிடையில் நாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. பொருளாதார நிலைமை ஓரளவுக்கு ஸ்திரமடைந்திருந்தது, தொழில்துறை

உற்பத்தியின் அளவு அதிகரித்திருந்தது, அரசுத் துறை பொருளாதாரத்தின் பல பிரிவுகளில் தன்னுடைய நிலையை உறுதிப்படுத்தியிருந்தது. அரசாங்கம் தயாரித்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்துறை வளர்ச்சிக்கு, குறிப்பாக கன இயந்திர தொழில் துறைக்குப் பிரதான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

எனவே நாட்டிலிருந்த புதிய நிலைமைகளுக்கு ஏற்ப 1948ம் வருட வரையறுப்புகளை அதிகமான அளவுக்கு ஸ்தூலப்படுத்துவது அவசியமாக இருந்தது.

இந்திய நாடாளுமன்றம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிய அதே சமயத்தில் தொழிற் கொள்கை பற்றி ஒரு புதிய தீர்மானத்தையும் அங்கீகரித்தது. புதிய தொழில் நிறுவனங்களை நிறுவுவதிலும் மிக முக்கியமான தொழில்துறைப் பிரிவுகள், போக்குவரத்து, அரசு வர்த்தகம் ஆகியவற்றை வளர்ப்பதிலும் அரசின் தீர்மானகரமான பாத்திரத்தை இத்தீர்மானம் வலியுறுத்தியது. இந்தியாவில் சோஷலிஸ்ட் பாணிச் சமூகத்தை நிர்மாணிக்க வேண்டும் என்ற நோக்கம் இத்தீர்மானத்துக்கு அடிப்படையாக இருந்தது. சோஷலிஸ்ட் பாணிச் சமூகத்தை தேசியக் குறிக்கோள் என்று அங்கீகரித்திருப்பதால் அடிப்படையான, கேந்திரமான முக்கியத்துவத்தைக் கொண்ட அனைத்துத் தொழில்துறைகளும் அரசுத் துறையில் அமைக்கப்பட வேண்டும் என்று அது குறிப்பிட்டது.

தனியார் துறையைச் சேர்ந்தவர்களின் அச்சங்களைப் போக்குவதற்காகப் பல விதிவிலக்கு

களும் அதில் இடம் பெற்றிருந்தன. உதாரண மாக, இரு துறைகளுக்கும் இடையில் கூர்மை யான எல்லைக்கோடு இல்லை, சில சந்தர்ப்பங்களில் முழுமையாக அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளில் தொழில்களைத் தொடங்குவதற்கு தனியார் நிறு வனங்கள் அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. சில சரக்குகளின் உற்பத்தியில் அரசு மற்றும் தனியார் துறைகள் ஒத்துழைக்கும் என்றும் அனுமானிக்கப்பட்டது.

1956ம் வருடத் தீர்மானம் தொழில்களை நாட்டுடைமையாக்குவதைப் பற்றி எதுவுமே கூறவில்லை. சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் முழு உதவி செய்யப்பட வேண் டும் என்று குறிப்பிட்ட அத்தீர்மானம் தேசிய உற்பத்தியில் அவற்றின் பாத்திரத்தை வலியுறுத் தியது.

இத்தீர்மானத்தில் தேர்ச்சி நிறைந்த நிபுணர் களைப் பயிற்றுவிக்கின்ற பிரச்சினை, உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான உறவு, நாட்டின் எல்லாப் பகுதிகளும் ஒரே சீரான முறையில் வளர்ச்சியடைதல் ஆகியவை பற்றி விசேஷமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாட்டில் அரசுத் துறை கணிசமான அளவுக்கு வலுப்பெற்றிருப்பதை இத்தீர்மானம் பிரதிபலித் தது; அரசுத் துறை மேலும் முன்னேற்றம் பெறக் கூடிய செயல் திட்டத்தைத் தயாரித்தது. நாட் டின் பொருளாதார வளர்ச்சியின் திசை வழியை யும் தன்மையையும் நிர்ணயிப்பதில் அரசின் தீர்மானகரமான பாத்திரத்தை அது வரையறுத் தது. இந்திய தேசிய காங்கிரஸ் அரசாங்கம்

தன்னுடைய அரசியல் மற்றும் பொருளாதார நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள, அரை நிலப் பிரபுத்துவப் பொருளாதாரத்தை இயன்ற அள வுக்கு வேகமாக நவீனப்படுத்த விரும்பியதை இத்தீர்மானம் பிரதிபலித்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நாட்டின் பொருளாதாரச் செல்வ வளங்களை தேசியப் பொருளாதாரத்தின் தீர்மானகரமான துறைகளில் செலுத்துவதற் கும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியின் மொத்தப் போக்கினையும் நிர்ணயிப்பதற்கும் எல்லா முயற்சிகளையும் திரட்டுவதும் அரசின் கைகளில் பொருளாதாரச் செல்வ வளங்களைக் குவிப்பதும் தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன. நாட்டைத் தொழில்மயமாக்கு கின்ற பொறுப்பை அரசு மேற்கொண்டிருந்த படியால் உள்நாட்டுச் சந்தையின் வளர்ச்சியுடன் ஒட்டிய, துரிதமான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தக் கூடிய ஸ்திரமான நிலையை ஏற் படுத்துவதற்குரிய எண்ணற்ற பிரச்சினைகளைத் தீர்ப்பது அரசின் கடமையாயிற்று.

சோஷலிஸ்ட் பாணிச் சமூகத்தை அமைப்பது தேசிய இலட்சியம் என்று இந்திய தேசிய காங் கிரஸ் பிரகடனம் செய்த பிறகு 1956ம் வருடத்திய தொழிற் கொள்கைத் தீர்மானம் அதிக விரிவாகப் பொருள்விளக்கம் செய்யப்பட்டது. அரசுப் பொறுப்பு தொழில்துறையின் எல்லாப் பிரிவு களுக்கும் பரவியது. அரசு எந்தத் தொழிலையும் அடிப்படையானது, கேந்திரமான முக்கியத்து வத்தைக் கொண்டது என்று குறிப்பிட்டு அரசுத் துறையில் சேர்த்துக் கொள்ள முடியும். 1961ம்

வருட நாடாளுமன்றத் தீர்மானத்தில் இது உறுதிப்படுத்தப்பட்டது. தொழில்களை அவற்றின் முக்கியத்துவத்துக்குத் தகுந்தவாறு பிரிக்கின்ற சம்பிரதாயமான பிரிவினையை இத்தீர்மானம் சாராம்சத்தில் ஒழித்தது. எந்தக் கட்டத்திலும் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கான தேசியத் திட்டத்தின் குறிப்பிட்ட திசைவழி மற்றும் நோக்கங்களின் அடிப்படையில் எல்லாத் தொழில் துறைகளையும் அரசாங்கம் ஒழுங்குபடுத்துவதை இத்தீர்மானம் அனுமதித்தது.

அரசுத் தீர்மானங்களிலும் ஐந்தாண்டுத் திட்டங்களிலும் வரையறுக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் செயல்திட்டத்தை 1970க்களின் நடுப்பகுதி வரையிலும்—பெரிய மாற்றங்கள் ஏதுமில்லாமல்—நிர்ணயித்தன.

இந்திய தேசிய காங்கிரசுக்கு பதிலாக ஜனதா கட்சி பதவியேற்ற பொழுது பொருளாதாரக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. 1979இல் முடிவடையவிருந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. 1977 நவம்பரில் ஜனதா அரசாங்கம் பொருளாதாரக் கொள்கையைப் பற்றி வெளியிட்ட அறிக்கை ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு (1978—1983) அடிப்படையாக அமைந்தது. வரப்போகின்ற ஐந்து வருடங்களுக்குப் பொருளாதார வளர்ச்சியின் பிரதான குறிக்கோள்களை தேசிய வளர்ச்சிக் கவுன்சில் 1978 மார்ச்சில் அங்கீகரித்தது.

ஜனதா கட்சி உருவாக்கிய ஆருவது ஐந் தாண்டுத் திட்டம் உற்பத்தித் திறனை அதிகரிப் பதையும் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதை யும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டிருந்தது. இந்த நோக்கத்துக்காக சில முதலீடுகளை மறு திசைப்படுத்தவும் அவற்றின் அமைப்பை மாற்ற வும் உத்தேசிக்கப்பட்டது.

ஆருவ்து ஐந்தாண்டுத் திட்ட நகல் தொழில் துறையில் 7% சராசரி வளர்ச்சி விகிதத்துக்குத் திட்டமிட்டது. இதை நிறைவேற்றுவதற்கு முத லாவதாகவும் முதன்மையாகவும் விவசாயம், குடி சைக் கைத்தொழில்கள், நீர்ப்பாசனம், உள்ள மைப்புத்துறை (குறிப்பாக சாலைகளை அமைத்தல்), வீடுகள் நிர்மாணம் ஆகிய உழைப்பு மிகுதியாகத் தேவைப்படுகின்ற துறைகளில் முதலீடுகள் கணிச மாக அதிகரிக்கப்படும். இவை அனைத்தும் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும், நுகர்வுப் பொருள் கள், பாதி-பூர்த்தியடைந்த பொருள்கள் மற்றும் கன இயந்திரங்களுக்குச் சந்தை விரிவடைவதைத் தூண்டும்.

தொழில்துறையில் இருக்கின்ற உச்ச அளவுத் தகுதிகளை முன்னைக் காட்டிலும் அதிகமாக உப யோகப்படுத்தியும் உற்பத்தி உச்சத் தகுதிகளைக் குறைப்பதை இயன்ற அளவுக்குத் தடுத்தும் தொழில்துறையின் வளர்ச்சி நிறைவேற்றப்பட வேண்டும். வேலை வாய்ப்புகளை அதிகரிக்கக் கூடிய தொழில் நுட்பவியல் நிகழ்வுப் போக்குகளைத் தேர்ந்தெடுப்பதில் விசேஷ கவனம் செலுத்தப் பட்டது. பெரிய தொழில்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது சிறு தொழில் துறையில் முதலீடுகளின்

பங்கை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. பெருந் தொழில்துறையில் முதலீடு 25% இலிருந்து 19% ஆகக் குறைக்கப்படும்; சிறு அளவு உற்பத்தி யின் எல்லாத் துறைகளிலும் முதலீடுகள் மும் மடங்காக அதிகரிக்கப்படும்.

ஐந்தாண்டுத் திட்டம் பெரிய தேசிய கம்பெனி கள் மற்றும் அந்நியக் கம்பெனிகளைப் பற்றிய கொள்கையையும் வரையறுத்தது. பெரிய இந்தியக் கம்பெனிகள் மற்றும் அந்நியக் கம் பெனிகளிடம் பொருளாதாரச் சக்தி குவிவதைத் தடுப்பதற்கு நடுத்தர அளவான தேசிய மற்றும் அரசுக் கம்பெனிகளுக்குச் சலுகை அளிக்க வேண் டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் ஒரு முக்கியமான விதிவிலக்கும் செய்யப்பட்டிருந் தது. ''ஆரோக்கியமான தொழில்துறை வளர்ச்சி யின் நன்மைக்காக—இந்த வளர்ச்சி சமூக நலன் களுக்கு எதிராக உபயோகிக்கப்படாத வரை''— தேசிய மூலதனம் மற்றும் அந்நிய மூலதனத்தின் ''நிதானமான வளர்ச்சி'' அவசியம் என்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. பழைய கெய்னிசிய முறைகளை, கடன் வசதி முறை என்ற பொறிய மைவை உபயோகித்துப் பெரிய அளவு மூலதனத் தின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தத் திட்டமிடப் பட்டது. ஆனல் முதலாளித்துவ நாடுகள் மற்றும் இந்தியாவின் அனுபவம் இந்த முறை பயனளிக்காது என்று எடுத்துக் காட்டியிருக் கிறது.

முந்திய வருடங்களின் பொருளாதார செயல் திட்டத்தின் பொதுவான உருவரையை சம்பிர தாயமாக வைத்துக் கொண்டிருக்கின்ற பொழுதே

புதிய திட்டம் சிறு அளவு உற்பத்தி மற்றும் விவசாயத்தின் வளர்ச்சியை முக்கியமாகக் கருதியது. அரசுத் துறையின் கேந்திரமான பாத்திரத்தை அங்கீகரித்த போதிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் சிறு தொழில்களை வளர்ப்பதற்கு விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. புனருற்பத்தி நிகழ்வுப் போக்கை ஒழுங்குபடுத்தும் அரசுப் பொறியமைவு இதன் மூலம் பலவீனமடையும்; அரசுத் துறை நாட்டின் பன்முக சமூக-பொருளாதாரக் கட்டமைப்பைத் திட்டமிடுதலிலும் அளவுப் பொருத்தங்களை அமைப்பதிலும் தடையாக இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பொருளாதாரச் செயல்திட்டத்தின் இத்திசையமைவு பொருளாதாரக் கட்டமைப்பு உறுதிப்படுவதைத் தாமதப்படுத்தியிருக்கும். அது சமநிலையான வளர்ச்சிக்கு அவசியமான நிபந்தனை; அரசுத் துறையின் முன்னுரிமை வளர்ச்சியின் அடிப்படையில் அது நிறைவேற்றப்படுகிறது. அது சிதறலின் அளவையும் அதிகப்படுத்தியிருக்கும். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மொத்த வேகத்தையும் நாட்டின் சமூக-பொருளாதாரப் புத்தமைப்பு நிகழ்வுப் போக்குகளையும் பாதிக்காதிருக்க முடியாது. நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல இந்தியாவில் இதுதான் நடைபெற்றது.

பொருளாதாரக் கொள்கையில் செய்யப்பட்ட தப்புக் கணக்குகள் ஜனதா கட்சி அரசாங்கத்தின் கடைசி வருடத்தில் தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தின. 1979-80இல் பொருளாதார வளர்ச்சி விகிதம் 3% ஆகக் குறைந்து விட்டது.

1980 ஜனவரியில் இந்திரா காந்தி தலைமை தாங்கிய இந்திய தேசியக் காங்கிரஸ் வெற்றியடைந்த பிறகு ஆருவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் திருத்தியமைத்தது. அதே வருடம் ஜூன் மாதத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை பற்றிய தீர்மானத்தை அது நிறைவேற்றியது. இக்கொள்கையின் தொடர்ச்சியை, குறிப்பாக தேசியப் பொருளாதாரத்தைத் திருத்தியமைக்கின்ற பிரச்சினையை முதன் முதலில் எடுத்துக் கொண்ட 1956ம் வருடத் தீர்மானத்துடன் அதன் இணைப்புகளை அது சுட்டிக் காட்டியது. ஜனதா கட்சியின் பொருளாதாரக் கருதுகோள்களைக் குறைகூறிய தீர்மானம் நாட்டின் உள்நாட்டுச் செல்வ வளங்களை உச்ச அளவுக்குத் திரட்டுதல், உற்பத்தித் தகுதிகளை உச்ச அளவில் உபயோகித்தல், தேசிய உற்பத்தியை விரிவுபடுத்துதல், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துதல், வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியது. நாட்டின் குறிப்பிட்ட பிரதேசங்களின் வளர்ச்சியில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், விவசாயத்-தொழில்துறை இணையங்களை வளர்த்தல், உற்பத்தியின் தொழில் நுட்பவியல் மட்டத்தை உயர்த்துதல், இறக்குமதி பதில் பொருள்களின் உற்பத்தியை விரிவுபடுத்துகின்ற அதே சமயத்தில் ஏற்றுமதிச் சரக்குகளைத் தயாரிக்கின்ற தொழில் துறைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல் ஆகியவற்றின் அவசியத்தைச் சுட்டிக்காட்டியது. அரசுத் துறையின் வளர்ச்சி மற்றும் அதன் செயல்திறனை உயர்த்துவதன் அவசியம் விசேஷமாக வலியுறுத்தப்பட்டது.

ஏகபோக வளர்ச்சிப் போக்குகளை எதிர்ப்பது, பொருளாதார சக்தி பெரிய முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சிறு கோஷ்டியிடம் குவிந்து விடுவதைத் தடுக்க வேண்டிய அவசியத்தையும் அது எடுத்துக் கூறியது. உள்நாட்டு விலைகளை ஒழுங்குபடுத்த வேண்டிய பிரச்சினையையும் அது எழுப்பியது.

தொழில்துறையின் உசிதமான கட்டமைப்பைப் பற்றிய பிரச்சினைகளுக்கும் பெருந் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்கு இடையில் உற்பத்தி மற்றும் பொருளாதாரப் பிணைப்புகளைப் பற்றிய பிரச்சினைகளுக்கும் அதிகமான கவனம் செலுத்தப் பட்டது.

ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் (1980—1985) மொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு 1,722 பில்லியன் ரூபாய்களையும் நிலையான மூலதன முதலீடுகளுக்கு 1,587 பில்லியன் ரூபாய்களையும் ஒதுக்கியது. அரசுத் துறையில் 840 பில்லியன் ரூபாய்களை முதலீடு செய்வதற்குத் திட்டமிடப் பட்டது. அந்தக் காலகட்டத்தில் முடிவடைகின்ற திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட வேண்டிய நடப்புச் செலவையும் சேர்த்து இத்தொகை 975 பில்லியன் ரூபாய்களாகும். தனியார் துறை மூலதன முதலீடுகள் 747.1 பில்லியன் ரூபாய்கள். ஆகவே மொத்த முதலீடுகளில் அரசுத் துறையின் பங்கு 53% ஆகவும் தனியார் துறையின் பங்கு 47% ஆகவும் இருந்தது.

முந்திய ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது அரசுத் துறை வளர்ச்சிக்கு ஒதுக்கீடுகள் 148% அதிகரிக்கப்பட்டன. தேசிய

வருமானத்தின் மொத்த வளர்ச்சி விகிதம் 5.2% ஆகவும் தனி நபர் வருமானம் 3.3% ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. ஆறுவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் சராசரி தனி நபர் வருமானம் 17% வளர்ச்சியை அடையும், அதாவது 1979-80ம் வருட விலைகளின்படி, 1,749 ரூபாய்களாக இருக்கும்.

மூலதனத் திரட்டலின் வரையளவு 1979-80இல் 21.8% ஆக இருந்தது, 1985இல் 25.1% ஆக அதிகரிக்கும். உபயோகமில்லாத நுகர்வைக் குறைத்து அரசுத் துறையில் திரட்டலை மிகப் பெரிய அளவுக்கு அதிகப்படுத்துவதன் மூலம் இந்த அதிகரிப்பு நிறைவேற்றப்படும் என்று திட்டம் கூறியது. உள்நாட்டுச் சேமிப்புகளைத் திரட்டுவதன் மூலம் முதலீட்டில் 94%க்கும் அதிக மான அளவு நிறைவேற்றப்படும்.

ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் முன் மொழி கின்ற புனருற்பத்தி பற்றிய அளவு ரீதியான வரை யளவுகள் முந்திய திட்டங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் துரிதப்படுத்துவதற்கும் அதன் அளவுவிகிதங்களை உசிதப்படுத்துவதற்கும் சில தகவமைப்புகளைச் செய்கின்றன.

பொருளாதார வளர்ச்சியின் மொத்த வேகத் தையும் பொருளாதாரத்தில், குறிப்பாக அதன் அரசுத் துறையில் முதலீடுகளையும் உயர்த்துகின்ற நோக்கம் தேசியப் பொருளாதாரத்தின் அடிப் படையான துறைகளின் நிலையான மற்றும் சம நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற பல அவசரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உதவுவதற்காகவே.

இப்பொழுதுள்ள அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதார நிலைமையின் மீது—குறிப்பாக, தொழில்துறை உற்பத்தியின் மீது — தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கின்றன. *1980-81*இல் இந்தியா தொழில்துறை உற்பத்தியின் இறக்கத்தைத் தடுத்து நிறுத்தியதுடன் 4% வளர்ச்சியைச் சாதிப்பதிலும் வெற்றியடைந்தது.*

இக்காலகட்டத்தின் பொது உருவரைகளைக் கூறும்பொழுது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் பொருளாதார முன்னேற்றத்தை சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன் இணைக்கிறது. இது திட்டத்தின் மிகவும் முக்கியமான கூறுகும். பொருளாதார வளர்ச்சி எப்பொழுதும் சமூக முன்னேற்றத்துக்குச் சமமல்ல. சில சந்தர்ப்பங்களில் வளர்ச்சி வேகம் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானபடி இருக்காது, வேறு சந்தர்ப்பங்களில் இந்த வளர்ச்சியின் கட்டமைப்பு இந்தத் தேவைகளை முழு அளவில் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. இந்தியாவில் சமூகப் பிரச்சினைகள் மிகவும் கூர்மையாக இருக்கின்றன.

தேசியப் பொருளாதாரத்தை வளர்ப்பதில் திட்டவட்டமான முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம் அல்லது மக்கள் தொகையின் பெரும்பகுதியினர் வறுமையில் சிக்கியிருப்பது போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய நிலைமையில் நாடு இல்லை. இந்தியா உற்பத்தித் துறையில், குறிப்பாகத் தொழில்துறை உற்

---

* *The Sunday Standard*, March 1, 1981.

பத்தியில் ஓரளவுக்கு வெற்றியடைந்திருந்தாலும் வினியோகத் துறையிலும் செல்வம் மற்றும் வருமானங்களை மறு வினியோகம் செய்கின்ற துறையிலும் நாடு மிகவும் மெதுவாகவே முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியின் இயக்கியலுக்கும் வளர்ச்சியின் சமூக இலட்சியங்களுக்கும் இடையில் நெருக்கமான இணைப்புகளை ஏற்படுத்துகின்ற முயற்சியில் புதிய ஐந்தாண்டுத் திட்டம், பொருளாதாரத்தின் எப்பிரிவுகளின், பொருளாதாரக் கட்டமைப்பின் எந்த சமூக வடிவங்களின் வளர்ச்சி சமூக முன்னேற்றத்தின் தேவைகளை மிகவும் முழுமையான அளவுக்குப் பூர்த்தி செய்யுமோ அவற்றின் மீது கணிசமான அக்கறையைச் செலுத்துகிறது. அது ''குறைந்த பட்சத் தேவைகளின் செயல்திட்டம்'' என்று வரையறுக்கப்படுகின்ற சமூகத் திட்டத்தை வலியுறுத்துகிறது. இச்செயல் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டுக்கும் கீழே இருப்பவர்களின் நுகர்வை அதிகப்படுத்துதல், கிராமங்களில் வசிப்பவர்களுக்குச் சுகாதார மற்றும் கல்வி வசதிகள், சுகாதாரப் பாதுகாப்புக்குப் பல தொடர் நடவடிக்கைகளை அமுலாக்குதல், மிகவும் கீழ்நிலையிலிருக்கும் ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல், மின்சார வசதிகளையும் சாலை வசதிகளையும், குறிப்பாக கிராமப் பகுதிகளில் விரிவுபடுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் நிறைவேற்றப்படும். ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிக்கின்ற மக்களின் எண்ணிக்கை 18% குறையும் என்று நம்பப்படுகிறது.

ஆகவே இந்த நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தில் பொருளாதார வளர்ச்சியை சமூகத்தின் வளர்ந்து வரும் தேவைகளுடன் இன்னும் நெருக்கமாக இணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் கீழ்நிலையில் வசிக்கின்ற பகுதி உள்பட சமூகத்தின் அனைத்து மக்களின் தேவைகளை உற்பத்தி மற்றும் நுகர்வுடன் இன்னும் கண்டிப்பான முறையில் இசைவுபடுத்துவது பொருளாதார வளர்ச்சியின் சமூக இலட்சியங்கள் நிறைவேறுவதற்குத் துணை புரியும்.

பொருளாதார வளர்ச்சி ஸ்தூலமான அரசியல் நிலைமைகளில் நடைபெறுகின்றபடியால் அது எப்பொழுதுமே பிரத்யேகமான சமூகப் பூச்சைக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகளை ஜனநாயகப்படுத்துதல், பெருந்திரளான மக்களின் தேவைகளையும் விருப்பார்வங்களையும் புரிந்து கொள்ளுதல், பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகப்படுத்துதல் ஆகியவை பொருளாதாரச் செயல்திட்டத்தின் சமூக இலட்சியங்கள் நிறைவேறுவதற்கு உதவி செய்யும்.

### 3. சிறு அளவு உற்பத்தியின் கட்டமைப்பு

இந்தியாவின் தொழில்துறையின் பொருளாதாரக் கட்டமைப்பின் மாற்றங்கள் மீது தன்னியல்பான முதலாளித்துவ வளர்ச்சி நிகழ்வுப் போக்குகளும் அரசின் சுறுசுறுப்பான பொருளாதார முயற்சிகளும் தாக்கம் செலுத்துகின்றன.

நாட்டில் தொழில்துறைப் புரட்சி ஒரே சீராக இல்லாததும் அது இன்னும் பூர்த்தி அடையவில்லை என்பதும் முதலாளித்துவ மற்றும் முதலாளித்

துவத்துக்கு முந்திய வடிவங்களின் சக வாழ்க்கை யில் மட்டுமல்லாமல், தொழில்துறை முதலாளித்து வத்தின் வகைவேறுபட்ட தன்மையிலும் எடுத்து ரைக்கப்படுகின்றன; அது ஒரே மாதிரியான ஆனல் முதிர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் உள்ள முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மிகவும் உயர்ந்த மற்றும் மிகவும் கீழான வடிவங்களைக் கொண்டிருக்கிறது. இவை அனைத்தின் காரண மாகவும் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப் பில் ஏற்படும் மாற்றங்கள் தெளிவாக வரையறுக் கப்பட்ட சமூகச் சாயலைக் கொண்டிருக்கின்றன.

உற்பத்தி உறவுகளையும் உற்பத்திச் சக்தி களின் மட்டத்தையும் பொறுத்தவரையில் இவை வெவ்வேறு வடிவங்களாக இருக்கின்றபடியால், அவற்றின் வளர்ச்சி வெவ்வேறு பாணிகளில் நடைபெறுகின்றபடியால் பல வடிவங்களுடைய பொருளாதாரத்தில் புனருற்பத்தி நிகழ்வுப்போக்கு மிகவும் முரண்பாடான தன்மையை அடைகிறது.

முதலாளித்துவத் துறை, குறிப்பாக அதன் மிகவும் முதிர்ச்சியடைந்த வடிவங்களான பெரிய மூலதனமும் ஏகபோக மூலதனமும் இயற்கை யாகவே இயக்காற்றலும் விரிவடைகின்ற தன்மை யும் உடையவை, அந்தத் துறை தன்னுடைய செல்வாக்கின் எல்லையை விரிவுபடுத்துகின்ற பொழுது பாரம்பரிய வடிவங்களை—சில சமயங் களில் குறைவான முதிர்ச்சி நிலையில் உள்ள முத லாளித்துவ வடிவங்களைக் கூட—அழிக்க முயல் கிறது. இப்படி அழிக்கப்பட்ட பழைய வடிவங் களும் உறவுகளும் புதிய வடிவங்களின் தோற்றத் தினல் போதுமான நட்ட ஈடும் அடைவதில்லை.

இத்தகைய சூழ்நிலையில் சிறிய அளவுப் பண்ட மற்றும் சிறிய அளவு முதலாளித்துவ வடிவங்களின் பொருளாதார அமைப்புக்குள் அரசுத் தலையீடு தீர்மானகரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் பழமையான முறைகள், தீவிரமான முறைகள் ஆகிய இரண்டின் மூலமாகவும் குறைவான வளர்ச்சியடைந்த பொருளாதார வடிவங்களை மேலே தூக்கி, ஒற்றைப் புனருற்பத்தி நிகழ்வுப் போக்கிற்குள் இழுக்கக் கூடிய ஒரே சக்தி அதுதான். அரசின் பொருளாதார முயற்சிகள் இரண்டு முக்கியமான வழிகளைப் பின்பற்றுகின்றன: முதலாளித்துவ முன்முயற்சிகளின் மிகவும் உயர்ந்த வடிவங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் குறைவாக வளர்ச்சியடைந்த வடிவங்களின் பரிணமத்துக்குச் சாதகமான நிலைமைகளைப் படைத்தல்.

தொழில்துறையின் — மொத்த இந்தியப் பொருளாதாரத்தின் — பிரத்யேக தேசியக்கூறுகள் இன்றுவரை சிறு அளவு உற்பத்தியின் தனித்தன்மைகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஏனென்றால் பொருளாதாரத்தில் அதன் பங்கு மிகவும் அதிகமாக இருக்கிறது. 1979-80இல் 309 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான மதிப்புள்ள சரக்குகளை அது உற்பத்தி செய்தது அல்லது உற்பத்தியின் மொத்த மதிப்பில் 49%, சேர்க்கப்பட்ட மதிப்பில் 51% உற்பத்தி செய்தது. இதே காலகட்டத்தில் சிறு அளவு உற்பத்தியில் 23.3 மில்லியன் நபர்கள் ஈடுபட்டிருந்தார்கள், பெரிய மற்றும் நடுத்தர உற்பத்தியில் 4.5 மில்லியன் நபர்கள் ஈடுபட்டிருந்தார்கள். இப்பொழுது,

நாட்டின் ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பகுதி இத்துறையின் பங்காகும்.

சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியப் பொருளாதாரத்தில் ஓரளவுக்குக் கணிசமான கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், தேசியப் பொருளாதாரத்தில் சிறு அளவுத் தொழில்துறையின் பங்கு தொடர்ந்து வளர்ச்சியடைகிறது. 1973-74க்கும் 1979-80க்கும் இடையில் அதன் உற்பத்தியின் மதிப்பு (1979-80 விலைகளில்) 100 பில்லியன் ரூபாய்களுக்கு அதிகமாகவும் வேலை வாய்ப்புகள் 6 மில்லியன் கூடுதலாகவும் அதிகரித்தன.*

சிறு அளவு உற்பத்தியின் பொருளாதார அமைப்பு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாக இல்லை. அது வெவ்வேறு பொருளாதார வடிவங்களைச் சேர்ந்த தொழில்துறையின் வெவ்வேறு சமூக ரகங்களைக் கொண்டிருக்கிறது. இது சிறு அளவு உற்பத்தியின் பல்வேறு ரகங்களின் வெவ்வேறு நிலைமைகளை, ஒப்புநோக்கில் அவற்றின் புனருற்பத்திச் சக்கரத்தின் தனித்த நிலையை, பெரிய அளவு உற்பத்தியுடன் அவற்றினுடைய உறவுகளின் பல்வேறு வடிவங்களையும் அளவையும் மட்டுமல்லாமல் அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு அவற்றின் பல்வகையான எதிர்ச்செயல்களையும் விளக்குகிறது.

''சிறுதொழில்'' என்ற சொல் இருபதுக்குக் குறைவான நபர்கள் வேலை செய்கின்ற, இயந்திரம் உபயோகிக்கப்படாத தொழில் நிறுவனங்களையும் பத்துக்கும் குறைவான நபர்கள் வேலை

* *The Sixth Five Year Plan*, p. 187.

செய்கின்ற, இயந்திரம் உபயோகிக்கப்படுகின்ற தொழில் நிறுவனங்களையும் உள்ளடக்கியிருக்கிறது. நிலையான மூலதனத்தின் அளவை அடிப்படையாகக் கொண்ட இதர ரகப் பிரிவினையும் இருக்கிறது: 1953இல் அது 1,00,000 ரூபாய்கள் வரை நிலையான மூலதனத்தைக் கொண்ட தொழில் நிறுவனம்; 1956இலிருந்து 5,00,000 ரூபாய்கள், 1966இலிருந்து 7,50,000 ரூபாய்கள் வரை நிலையான மூலதனத்தைக் கொண்ட தொழில் நிறுவனம்; இன்று நிலையான மூலதனம் 2-2.5 மில்லியன் ரூபாய்களுக்கு அதிகமாக இருக்கக் கூடாது. எனினும் இந்தப் பொதுவான விவரங்கள் சிறு தொழில்களின் வகை வேறுபாட்டையும் அவற்றின் பரிணாமத்தையும் போதுமான அளவுக்குத் தெளிவாக விளக்கவில்லை.

சிறு தொழில்களை அவற்றின் சமூக-பொருளாதார மற்றும் பொருளாயத-தொழில் நுட்பவியல் கூறுகளுக்குத் தகுந்தபடி இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

1) குடிசைத் தொழில்கள்—இது பாரம்பரியமான உற்பத்தி வடிவம். இது கூலியுழைப்பு முற்றிலும் அல்லது அநேகமாக முற்றிலும் உபயோகிக்கப்படாத சிறுபண்ட உற்பத்தி என்று கூறலாம். இதில் பெரும்பாலும் பூர்விகமான கருவிகளைக் கொண்டு தேர்ச்சியற்ற உடலுழைப்பு உபயோகிக்கப்படுகிறது. ஸ்தல சந்தையின் தேவைகளுக்காகவே உற்பத்தி நடைபெறுகிறது, ஆனால் சில சமயங்களில் வரிசையான பல இடைத் தரகர்கள் மூலம் தேசிய அல்லது உலகச் சந்தைக்கும் அனுப்பப்படுவதுண்டு.

குடிசைத் தொழில்கள் பிரதானமாக கிராமங்களில் குவிக்கப்பட்டிருக்கின்றன, அவற்றின் பொருளாதாரத்தில் ஒரு பகுதியாக இருக்கின்றன. இவை பெரும்பாலும் இந்திய கிராம சமூகத்தின் பாரம்பரியக் கைத்தொழில்களின் தொடர்ச்சியாக இருக்கின்றன. விவசாய நிலவுடைமைகளில் படைக்கப்பட்ட அவசிய மற்றும் உபரி உற்பத்திப் பொருளின் முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்களின் புனருற்பத்திக்குக் குடிசைத் தொழில்கள் உதவுகின்றன. அவற்றின் உற்பத்திப் பொருள்கள் பிரதானமாக பூர்விகமான முறைகளில் தயாரிக்கப்பட்ட பாரம்பரியமான நுகர்வுச் சரக்குகளே. தேசியப் பொருளாதாரத்தில் குடிசைத் தொழில்கள் நிலைத்திருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. உழைப்பு அமைப்பின் பாரம்பரிய வடிவங்கள், ஸ்தலச் சந்தையின்—பெரும்பாலும் கிராமச் சந்தையின்—பிரத்யேகமான கூறுகளும் அதன் ஒரே மாதிரியான தேவையும் மற்றும் சில சமயங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் தரத்தையும் அளவையும் முன்னதாகவே நிர்ணயித்தல் இவற்றிலடங்கும். சமீபகாலத்தில்தான் இந்தியாவில் முதலாளித்துவ வளர்ச்சி நவீன பாக்டரிகளுக்கும் பாரம்பரிய உற்பத்தி வடிவங்களுக்கும் இடையில் நெருக்கமான உறவுகளுக்கு வழிவகுத்தது. குடிசைத் தொழில்களில் சில பிரிவுகள் சந்தைத் தேவைகளைப் புரிந்து கொண்டு நவீனமான சரக்குகளை உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கின்றன. அதன் மூலம் பாரம்பரியமான குடிசைத் தொழிலில் ஒரு விதமான துணைப் பிரிவு ஏற்பட்டிருக்கிறது. 1979-

80இல் குடிசைத் தொழில் துறையின் மொத்த உற்பத்தி 44.1 பில்லியன் ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; இத்துறையில் சுமார் 13.3 மில்லியன் நபர்கள் வேலை செய்தார்கள்.*

2) சிறு அளவு முதலாளித்துவத் தொழில் துறை கூலியுழைப்பையும் இயந்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்ற உற்பத்தியாகும். அதன் உற்பத்திப் பொருள்கள் பிரதானமாக பிரதேச மற்றும் தேசியச் சந்தைகளுக்கு அனுப்பப்படுகின்றன. சில சரக்குகளைப் பொறுத்தமட்டில் உலகச் சந்தையில் அதன் உறவுகள் நிலையாக இருக்கின்றன. 1979-80இல் அதன் உற்பத்திகள் 223 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டன; இத்துறையில் 7.5 மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் வேலை செய்தார்கள்.**

சாராம்சத்தில் இது தொழில்துறை மூலதனத்தில் ஒரு பகுதியே. பிரதானமாக, தொழில் துறை மூலதனப் புழக்கத்துக்கு உதவுகிறது. இது ஒரே சீரானதல்ல.

இந்தத் துறையைச் சேர்ந்த வளர்ச்சியடைந்த தொழில் நிறுவனங்கள் நகரங்களில் அமைந்திருக்கின்றன. அவை இயந்திரங்களையும் கூலியுழைப்பையும் அதிகமாகப் பயன்படுத்துகின்றன, தேசியச் சந்தையுடன் பிணைந்திருக்கின்றன. இவை பிரதானமாக, எஞ்ஜினியரிங், உலோகத் தொழில், இரசாயன மற்றும் இதர நவீன தொழில்துறைப்

* *The Sixth Five Year Plan*, p. 187.

** *Ibid.*

பிரிவுகளைச் சேர்ந்தவை. இவற்றில் 67% தொழில் துறையில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் அமைந்திருக்கின்றன. குறைவான வளர்ச்சியடைந்த சிறிய அளவு முதலாளித்துவ தொழில் நிறுவனங்கள் சிறிய அளவு பண்ட உற்பத்தியிலிருந்து சிறிய அளவு முதலாளித்துவ உற்பத்திக்கு மாறுகின்ற கட்டத்திலிருக்கும் குடிசைத் தொழில்களைப் போன்றே அதிகமாக இருக்கின்றன. அவற்றில் பெரும்பகுதி கிராமப் பகுதிகளில் அல்லது சிறு நகரங்களில் இருக்கின்றது; அவை இயந்திரங்களையும் கூலி உழைப்பையும் சிறு அளவில் மற்றும் குறைவான அளவில் உபயோகிக்கின்றன.

சிறு அளவு உற்பத்தியின் நிலை, முக்கியத்துவம் மற்றும் பாத்திரம் எல்லாவற்றுக்கும் மேலாக உழைப்பின் தேசியப் பிரிவினை மற்றும் இடைத் துறைப் பிணைப்புகளின் பிரத்யேகமான கூறுகளின் விளைவே. அவை இவ்விதமான உற்பத்திரகத்தைக் குறைவான வளர்ச்சி நிலையிலுள்ள முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அவசியமான பகுதியாகச் செய்கின்றன. விவசாயத்துக்கும் தொழில்துறைக்கும் இடையில் உற்பத்திப் பிணைப்புகள் ஒரு தரப்பாகவும் நன்கு வளர்ச்சியடையாமலும் இருக்கின்றன. விவசாயம் பிரதானமாக மூலப்பொருள்களை அளிக்கும் துறையாக இருக்கிறதே தவிர தொழில்துறைச் சரக்குகளை நுகர்வு செய்யும் துறையாக இல்லை. அது மட்டுமல்ல. சிறிய அளவுத் தொழில்துறையுடன் (பெரும்பாலும் குடிசைத் தொழில்) அதன் பிணைப்புகள் பெரிய அளவுத் தொழில்துறையுடன் அதன் பிணைப்புகளைக் காட்டிலும் அதிக நெருக்க

மானவை. சிறிய அளவுத் தொழில்துறையின் பொருளாயதச் செலவுகளில் 50% விவசாயத் துறையிலிருந்து கிடைக்கிறது, அதன் நுகர்வு உற்பத்தியில் 35 சதவிகிதத்தை விவசாயம் நுகர்வு செய்கிறது; ஆனுல் பெருந் தொழில்துறையின் நுகர்வு உற்பத்தியில் 6% மட்டுமே நுகர்வு செய்கிறது.

தனிப்பட்ட நுகர்வுத் துறையில் சிறிய அளவுத் தொழில்துறையின் பாத்திரம் இன்னும் அதிகமாக இருக்கிறது. அதன் உற்பத்தி பெருந் தொழில் துறையைக் காட்டிலும் அதிக அளவில் நுகர்வுச் சரக்குகள் துறைக்காக முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. உள்நாட்டு நுகர்வோர் சந்தையின் தேவையின் தன்மைக்கு இது முழுமையாகப் பொருந்தியிருக்கிறது. இந்தியாவில் நுகர்வோருடைய தேவையின் பெரும் பகுதியை விவசாயம் பூர்த்தி செய்கிறது; இத்தேவையில் உணவுப் பொருள்கள் (பாக்டரியில் பதப்படுத்தப் படாத உணவுப் பொருள்களின் பங்கு 46% உள்பட) 55% ஆக இருக்கின்றன. தனிப்பட்ட நுகர்வு நிதியில் 20% மட்டுமே தொழில்துறை சரக்குகளாக இருக்கின்றன. இவற்றில் பாதியை சிறிய அளவுத் தொழில்துறை அளிக்கிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையை அகற்ற அளவுவிகிதங்களை உசிதப்படுத்த வேண்டும், உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டும். பல வடிவங்களுடைய பொருளாதாரத்தில் தொழில்துறை மற்றும் விவசாயத்தின் பாரம்பரியமான வடிவங்களைத் திருத்தியமைக்காமல் நவீனத் தொழில்களை நிறுவுவதனுல் மட்டும் இதை நிறைவேற்ற முடியாது.

முதலாளித்துவத்துக்கு முந்திய மற்றும் அரை முதலாளித்துவ உற்பத்தி வடிவங்களை ஒழிக்கின்ற தீவிரமான முயற்சிகள்—அவை வேண்டுமென்றே செய்யப்பட்டாலும் அல்லது தன்னியல்பாக இருந்தாலும்—வெவ்வேறு வடிவங்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கின்ற சமநிலையையும் புனருற்பத்தி நிகழ்வுப் போக்கு முழுவதையும் கவிழ்த்துவிடக் கூடிய விளைவையே ஏற்படுத்தக் கூடும். பழைய வடிவங்களுக்கு பதிலாகப் புதிய வடிவங்களை ஏற்படுத்தாமல் அவற்றை அழிப்பது தவிர்க்க முடியாத வகையில் நெருக்கடியை, சீர்குலைவை, தேக்கத்தை ஏற்படுத்தும்; சமூக உழைப்பின் உற்புத்தித் திறன் தீவிரமாகக் குறைவதில், வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதில் முடிவடை யும்; ஏற்கெனவே கீழே இருக்கின்ற உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் கீழே இறங்கும்.

இந்தியாவின் அரசியல் சுதந்திரம் தொழில் துறையின் எல்லா வடிவங்களுக்கும் சாதகமான வாய்ப்புகளைத் தோற்றுவித்தது என்றாலும் உயர்ந்த விரிவாக்கப் புனருற்பத்தி விகிதங்களைக் கொண்ட பெருந் தொழில்துறைதான் மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் அதிகமாக வளர்ச்சி யடைந்தது. சிறு தொழில்துறையில் முதலாளித் துவ வடிவங்கள்—விரிவாக்கப் புனருற்பத்தி மாதிரிப் படிவம் இந்த வடிவங்களுக்குப் பொருந்தும்—மிகவும் வேகமாக வளர்ச்சியடைந் தன. 1974—1980ம் வருடங்களில் சிறு தொழில் களின் வளர்ச்சி விகிதம் 6% மற்றும் 8% க்கு இடை யில் ஊசலாடியது. ஆறுவது ஐந்தாண்டுத்

திட்டம் பாரம்பரியமான வடிவங்களுக்கு 7.3% வளர்ச்சி மற்றும் நவீன வடிவங்களுக்கு 9.2% வளர்ச்சி உள்பட சிறு தொழில்துறையில் 8% வளர்ச்சிக்குத் திட்டமிட்டிருக்கிறது.*

முதலாளித்துவத் தொழில்துறை நிறுவனங்களின் அளவு எப்படியிருந்தாலும் அத்துறை வேகமாக வளர்ச்சியடைகின்ற படியால் சமநிலையின் மொத்தம் சிறு தொழில்துறைக்கு—அதன் பாரம்பரியமான, குறிப்பாக முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்களில்—சாதகமில்லாதிருக்கிறது. முதல் பார்வைக்கு மொத்த தொழில்துறைப் போக்கு ஓரளவுக்குத் தெளிவாக இருக்கிறது: சிறு அளவுப் பண்ட வடிவம் அகற்றப்படும் அல்லது சிறு அளவு முதலாளித்துவ வடிவங்களாக மாற்றப்படும், பின்னர் அவை பெருந்தொழில்துறையாக மெதுவாக வளர்ச்சி அடையும் அல்லது நவீனப் பெருந்தொழில் உற்பத்தியின் ஒட்டுப்பகுதியாக ஆகும். ஆனால் இந்தப் பொது போக்கு பல வடிவங்களுடைய பொருளாதாரம் இன்னும் எதார்த்தமாக இருக்கின்ற சமயத்தில் தொழில்துறை மூலதனத்தின் வளர்ச்சி வேகம் துரிதப்படுத்தப்படுகின்ற பொழுது சிறு தொழில் மற்றும் பெருந்தொழில் உற்பத்திக்கு இடையில் தோன்றும் பிரத்யேகமான கூறுகளையும், புதிய பிணைப்புகளையும் முரண்பாடுகளையும் பிரதிபலிக்கத் தவறிவிடுகிறது.

முதலில் சிறு தொழில்துறையின் விரிந்த அளவையும் ஒப்பு நோக்கில் ஸ்திர நிலைமையையும்

* *The Sixth Five Year Plan*, p. 190.

கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்; அதனுல் அதை மாற்றுவதற்கு எத்தகைய சாதனங்களும் முயற்சிகளும் அவசியம், சிறு தொழில்துறைக்கும் விவசாயத்துக்கும் இடையில் உற்பத்திச் சாதனங்களுக்கு நுகர்வுப் பொருள்களைக் கொடுத்த ஒப்புநோக்கில் ஸ்திரமான, பாரம்பரியமான பண்ட மாற்றின் அடிப்படையில் வளர்ச்சியடைந்த புனருற்பத்தி நிகழ்வுப் போக்கில் எத்தகைய புதிய வடிவங்கள் அதற்கு பதிலாக ஏற்பட முடியும் என்ற மிகக் கூர்மையான பிரச்சினையை அது முன்வைக்கிறது. விவசாய உறவுகளின் பரிணமம் மற்றும் மாற்றத்தைப் பற்றிச் சரியான சிந்தனையில்லாமல், அதாவது இன்னும் அதிகமான அளவுக்குச் சிக்கலான சமூக-பொருளாதார உறவுகளைக் கொண்ட, பொருளாதாரத்தின் மாபெரும் துறையில் குறுக்கிடாமல், சிறு அளவு பண்ட மற்றும் சிறு அளவு முதலாளித்துவத் தொழில் துறைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதும் தொடர்கிறது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் சிறு தொழில்துறை பெருந் தொழில்துறையுடன் நெருக்கமான பிணைப்பை வைத்துக் கொண்டு அதற்குச் சேவை புரிகிறது; ஆனுல் இந்தியாவில் சிறு தொழில்துறை, குறிப்பாக அதன் பாரம்பரியமான வடிவங்கள் இன்னும் அதிகயாகத் தனித்து நிற்கின்றன, இன்னும் அதிகமான சுயபூர்த்தியைக் கொண்டிருக்கின்றன. அதே சமயத்தில் இத்துறைக்கு மூலப்பொருள்களை அளிக்கின்ற முக்கியமான துறையும் அதன் தயாரிப்புகளை நுகர்வு செய்கின்ற முக்கிய துறையுமான விவ

சாயத் துறையுடன் அதன் புனருற்பத்தி உறவு கள் பெருந் தொழில்துறையுடன் இருப்பதைக் காட்டிலும் ஒப்பிட முடியாத அளவுக்கு நெருக்க மாக இருக்கின்றன. மறுபக்கத்தில், வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளில் சிறு தொழில் துறைக்கும் பெருந் தொழில்துறைக்கும் இடையில் உற்பத்திச் சரக்குகளின் பரிவர்த்தனே இருதரப் பிலும் நடைபெறும் பொழுது இந்தியாவில் சிறு தொழில்துறைக்கும் பெருந் தொழில்துறைக்கும் இடையில் புனருற்பத்தி உறவுகள் ஒரு தரப்பில் மட்டுமே நடைபெறுகின்றன; பெருந் தொழில் துறையின் உற்பத்திப் பொருள்கள் சிறு தொழில் துறைக்கு அனுப்பப்படுகின்றன, ஆனல் எதிர்த் திசையில் சரக்குகள் கணிசமான அளவில் அனுப்பப் படுவதில்லே. 1950க்களிலும் 1960க்களிலும் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களின் படி பெருந் தொழில்துறையின் உற்பத்தியில் 20% சிறு தொழில்துறையில் வாங்கிக் கொள்ளப்பட்டது— இது முந்திய துறையின் பொருளாயதச் செலவில் சுமார் 30% ஆகும்; ஆனல் அத்துறை உற்பத்தி நோக்கங்களுக்காக சிறு தொழில் துறையிலிருந்து அநேகமாக சரக்குகளேப் பெறவில்லே.

இரு ரகங்களேயும் சேர்ந்த தொழில் துறை களுக்கு இடையில் உறவுகளின் பிரத்யேகமான கூறு, விவசாயிக்கும் கைவினேஞனுக்கும் இடை யில் விவசாய மற்றும் கைத்தொழிற் சரக்குகளேப் பரிவர்த்தனே செய்வதை அடிப்படையாகக் கொண்ட சிறு அளவு பண்டப் பொருளாதாரத் தின் புனருற்பத்திச் சக்கரத்தின் தனித்து நிற்கும் தன்மையுடன் பொருந்துவதே. இத்தகைய உள்ளீ

டான புனருற்பத்திப் பிணைப்புகள் சிறு அளவுப் பண்ட உற்பத்தியின் அதிகமான ஸ்திர நிலைமைக்கு உதவுகின்றன என்பதில் சந்தேகமில்லை; ஆனால் அதே சமயத்தில் பெருந்தொழில் இயந்திர உற் பத்தியுடன் அதன் புனருற்பத்தி உறவுகளை விரிவு படுத்திக் கொள்வதற்கு இவை உதவவில்லை.

மூலதனத்தின் தீவிரமான பற்றுக்குறையினு லும் தொழிலாளர்கள் உபரியாக இருப்பதனாலும் சிறு தொழில் உற்பத்தி நன்கு பாதுகாக்கப்படு கிறது. இந்தியாவில் சிறு தொழில் உற்பத்தியில், குறைந்த அளவு நிலையான மூலதனத்தை உச்ச அளவு தேர்ச்சியில்லாத அல்லது பாதித் தேர்ச்சி யடைந்த உழைப்புடன் செயலுரத்துடன் இணைப் பது சாத்தியமாக இருக்கிறது. சில சரக்குகளைப் பொறுத்தமட்டில் அதிகமான பற்றுக்குறை இருப் பதையும்—அவற்றின் உற்பத்திச் செலவுகள் மிகவும் அதிகமாக இருந்த போதிலும் அவற்றை விற்பனை செய்வது சாத்தியமாக இருக்கிறது— பொருளாதாரத்தில் சமநிலை இல்லாதிருக்கும் பொழுது சந்தை உருவாக்கத்தின் பிரத்யேகமான கூறுகளையும், சில பண்டங்களுக்குக் குறைவான தேவை இருப்பதையும் இவற்றுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். கடைசியாகச் சொல்லப் பட்ட கூறு, உசிதமான அளவுகளில் லாபகரமான பாக்டரி உற்பத்தியின் மூலம் பண்டங்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்வதைக் கஷ்டமாக்கு கிறது. இதற்கு மாறாக, சிறு தொழில் உற்பத்தி இத்தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்; ஏனென் றால் அத்துறையில் லாபம் உற்பத்தியின் உசித அளவுகளுக்குச் சம்பந்தமில்லாதிருக்கிறது.

மதிப்பு, உற்பத்திச் செலவு, லாப விகிதம் ஆகிய பொருளாதாரக் கருத்தமைப்புகளை ஒதுக்கி விடுகின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற விசேஷ மான உற்பத்தி நிலைமைகளும் சிறு அளவு பண்ட மற்றும் சிறு அளவு முதலாளித்துவ வடிவங்களின் ஸ்திரத் தன்மையைப் பாதுகாக்கின்றன. இந்தியப் பொருளியலாளர்கள் செய்திருக்கும் கணக்குகள் தொழிற்சாலைகளின் உசிதமான அளவுக்கும் சிறு தொழில் உற்பத்திக்கும் சம்பந்தமில்லை என்று நிரூபிக்கின்றன. சிறு தொழில்துறையில் மூலதன முதலீடுகளின் செயல்திறம்—அது மதிப்பு சேர்க் கப்பட்ட உற்பத்திக்கும் செலவழிக்கப்பட்ட மூலதனத்துக்கும் இடையிலுள்ள பொருத்த விகி தம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது—பெருந் தொழில்துறையைக் காட்டிலும் வாடிக்கை யாகவே அதிகமாக இருக்கிறது. சிறு தொழில்துறை யிலிருக்கும் அதிகமான உற்பத்தித் திறன் உழைப் பையும் மூலதனத்தையும் உபயோகிப்பதற்கு உசிதமான நிலைமைகளைத் தோற்றுவிக்காமல், அதிகமான மூலதன முதலீடு, உழைப்பின் அதிக மான உற்பத்தித் திறன் ஆகியவற்றின் மூலமாக இல்லாமல் உற்பத்தியாளருடைய தேவைகளை பருப் பொருள் குறைந்த பட்சமாகக் குறைத்து, கருவிகள் மற்றும் உற்பத்திச் சாதனங்களுக்கு மிகக் குறைவாகச் செலவிடுவதன் மூலம் இது சாதிக்கப்படுகிறது. ஆகவே சிறு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற சரக்குகளுக்கு — அவற்றின் உண்மையான மதிப்புக்கு எவ்விதமான சம்பந்த மும் இல்லாமல்—விலைகளை நிர்ணயிப்பதையும் உற்பத்திச் சரக்குகளின் மீது விலைகளின் (சந்

தையின்) தாக்கத்தை மிகவும் குறைத்துவிடு வதையும் இது சாத்தியமாக்குகிறது.

மேற்கூறிய ''இயற்கையான'' ஸ்திர நிலைமைக் காரணிகள் பாரம்பரியமான குடிசைத் தொழில்கள், சிறு பாக்டரிகள் ஆகிய இரண்டுக் கும்—கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ— பொருந்துகின்றன. சிறு முதலாளித்துவ பாக்டரிகள் பெரிய தொழில் நிறுவனங்களின் துணை அமைப்புகளாக இல்லாவிட்டால் அவையும் இடைவடிவத் தடைகள், கட்டுப்படுத்தப்பட்ட புனருற்பத்திச் சக்கரம், பெருந் தொழில் துறையுடன் நேரடியான போட்டியிலிருந்து சந்தை ஒதுங்கி நிற்றல் ஆகியவற்றினுல் பாதுகாக்கப்படுகின்றன.

சிறு பாக்டரிகள் பெரிய தொழில் நிறுவனங்களுடன் ஒத்து வாழ்வதையும் காமிராக்கள், பார்வைக்குரிய உபகரணங்கள், பீங்கான் சாமான்கள், தோல் பொருள்கள், பின்னப்பட்ட உடைகள், டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள், மரச் சாமான்கள் ஆகிய ஓரளவுக்குச் சிக்கலான ரகங்களைச் சேர்ந்த சரக்குகளின் தயாரிப்பில் பலமான நிலையை வகிப்பதையும் இவையனைத்தும் சாத்தியமாக்கியிருக்கின்றன.

இந்த ஸ்திர நிலை தனிமுதலானதல்ல. அது ஆழத்திலும் அகலத்திலும் முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் வேகத்தைப் பொறுத்திருக்கிறது; ஏனென்றுல் அது பல வடிவங்களுடைய பொருளாதாரத்தின் பொது வார்ப்பையும் இருத்தலின் நிலைமைகளையும் பாதிக்கிறது. தொழில் துறையின் வளர்ச்சிப் போக்கில் சிறு தொழில் உற்பத்திப் பொருள்களில் ஒரு பகுதியை பெருந்

தொழில்துறை உற்பத்திப் பொருள்கள் மாற்றீடு செய்கின்றன அல்லது அகற்றிவிடுகின்றன; ஆனல் அதே சமயத்தில் சில சமயங்களில் பெரும் பாக்டரிகள் புதிய சந்தைகளைத் தோற்றுவிக்கும் பொழுது அல்லது தேவை மிகவும் அதிகரிப்பதற்கு ஈடு கொடுக்க முடியாமல் தங்களுடைய சந்தைகளைக் கைவிடும் பொழுது சிறு தொழில் நிறுவனங்களில் சில குழுக்கள் உற்பத்தியை விரிவு படுத்தும் படி தூண்டப்படலாம். இப்படி வேறுபட்ட போக்குகள் பின்னிப் பிணைதலும் மோதுவதும் ஒன்று சேருவதும் இறுதி நிலையில் சிறு தொழில் உற்பத்தியின் வளர்ச்சி அல்லது தேய்வு நிகழ்வுப் போக்குகளை நிர்ணயிக்கின்ற தன்னியல்பான சக்திகளின் மூல அளவை என்று குறிப்பிடலாம்.

ஒப்புநோக்கில் சிறு அளவு உற்பத்தியின் சுதந்திரத்தை ஊக்குவிக்கின்ற மற்ருெரு காரணி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையாகும். சிறு தொழில்துறை பெருந் தொழில்துறையுடன் மற்ருெரு உழைப்புப் பிரிவினையில் ஈடு பட்டு விடாமல் அக்கொள்கை தடுத்தது.

ஆருவது ஐந்தாண்டுத் திட்டம் தேசிய உழைப்புப் பிரிவினையில் சிறு அளவு உற்பத்தியின் இடத்தை வரையறுக்கும் பொழுது இந்த நிலைமையில் சில மாற்றங்களை ஏற்படுத்த உத்தேசிக்கிறது.

அகலத்திலும், குறிப்பாக ஆழத்திலும் முதலாளித்துவத்தின் வளர்ச்சி—சிறு அளவு உற்பத்தி இதுவரை ஒப்புநோக்கில் ஸ்திரமாக இருப்பதை உறுதிப்படுத்தும் காரணிகள் இருந்தாலும் கூட— அதை அழிக்கின்ற உள்ளீடான மற்றும் வெளிப்

போக்குகளைத் தீவிரப்படுத்துகிறது. தொழில் துறையிலும் விவசாயத்திலும் முதலாளித்துவத் தின் வளர்ச்சிக்குப் பாதையைச் சீர்படுத்துவது சிறு அளவு உற்பத்தியாளருடைய அதிக அழிவுடன் ஏதாவதொரு வகையில் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தத்தில் முதலாளித்துவம் பல வடிவங் களுடைய பொருளாதாரத்தின் உள் முரண்பாடு கள் தீவிரமடைவதற்கும் வெவ்வேறு பொருளா தார வடிவங்களுக்கு இடையில் பிணைப்புகளை அரித்தழிப்பதற்கும் சில சமயங்களில் அவற்றை நொறுக்குவதற்கும் முடிவில் புனருற்பத்தியின் வாடிக்கையான நிகழ்வுப் போக்கைச் சீர்குலைப் பதற்கும் தவிர்க்க முடியாதபடி இட்டுச் செல்கிறது. இந்தியாவின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் இருக்கின்ற சிக்கல் நிறைந்த, சிடுக்காகியுள்ள பிரச்சினைகளின் காரணமாக அது ஐரோப்பா வில் சுதந்திரமடைந்த முதலாளித்துவ நாடுகள் தமது வளர்ச்சியின் இதே வரலாற்றுக் கட்டத் தில் செய்ய முடிந்த அதே அளவில், அதே முறை யில் முதலாளித்துவ வளர்ச்சிக்குப் பாதையைச் செப்பனிட முடியவில்லை.

இவை அனைத்தும் சிறு அளவு மற்றும் பெரிய அளவு உற்பத்தியின் பிரச்சினைகளுக்கும் பொரு ளாதாரத்துக்கும் மொத்தமாகவும், முறைப்படி யான அணுகுமுறையைக் கோருவது மட்டுமல் லாமல் இந்த நிகழ்வுப் போக்கில் அரசு சுறுசுறுப் பாகத் தலையிட வேண்டும் என்றும் கோருகின்றன, இதில் அரசு தன்னியல்பான நிகழ்வுப் போக்கு களை அமைப்போனாகவும் ஒழுங்குபடுத்துவோனாக வும் செயலாற்றிப் பொருளாதாரத்தின் வெவ்

வேறு பிரிவுகள் வெவ்வேறு விகிதங்களில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் பொழுது வெவ் வேறு பொருளாதார வடிவங்களுக்கு இடையில் பின்னிய செயல்விளைவுப் பொறியமைவு செயல் படுவதை உறுதிப்படுத்தி அந்த அடிப்படையில் புனருற்பத்தி நிகழ்வுப் போக்கின் ஒருமையை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தியாவைத் தொழில்மயமாக்குகின்ற பொ ழுது தோன்றுகின்ற சிக்கலான, முரண்பாடான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பிரச்சினை களை முழுமையாக உணர்ந்த இந்திய அரசாங் கம் சிறு அளவு உற்பத்தியை மாற்றுவதற்கும் வளர்ச்சியுறச் செய்வதற்கும் ஒரு விரிவான செயல்திட்டத்தைத் தயாரித்திருக்கிறது; அதை அமுலாக்குவதற்குப் பல விசேஷ அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது.

சிறு தொழில்துறையைப் பாதுகாப்பதும் பெருந் தொழில் இயந்திர உற்பத்தியுடன் அதை ஒரே சீராக இசைவுபடுத்துவதும் அவசியம் என்று அதிகாரபூர்வமான ஆவணங்களும் பெரும்பான்மை யான பொருளாதார மதிப்பீடுகளும் கூறுகின்றன.

சிறு தொழில்களைப் பற்றி அரசின் பொருளா தாரக் கொள்கையின் அடிப்படையான கோட் பாடுகளும் போக்குகளும் மிக முந்திய கால மான 1950க்களில் வகுக்கப்படத் தொடங்கின. உதாரணமாக, தொழில்துறைக் கொள்கையைப் பற்றிய 1956ம் வருடத் தீர்மானம் சிறு அளவு உற்பத்தி ஆகக் குறைந்த காலத்தில், மிகக் குறை வான மூலதன முதலீட்டுடன் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பைப் பேரளவில் விரிவுபடுத்துவதை

சாத்தியமாக்கி இருக்கிறது, செல்வ வளங்களைச் சிறப்பான முறையில் திரட்டுவதையும் வருமானத்தையும் செல்வத்தையும் அதிகச் சமமான முறையில் வினியோகிப்பதையும் ஊக்குவித்திருக்கிறது என்று சுட்டிக்காட்டியது. சிறு அளவு உற்பத்தி பொருளாதாரக் கட்டமைப்பில் மட்டுமல்லாமல், தேசியத் திட்ட அமைப்பிலும் பிரிக்க முடியாத, நிரந்தரமான பகுதி என்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வர்ணித்தது.

இந்திய நாடு தன்னுடைய பொதுவான பொருளாதாரச் செயல்திட்டத்தை அந்த சமயத்தில் வகுத்தது; முதலீடுகளை கன இயந்திரத் தொழில் துறையில் குவிப்பது அவசியம், சிறு தொழில் துறை நுகர்வுச் சரக்குகள் துறையிலும் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதிலும் தலைமையான பாத்திரத்தை வகிக்க வேண்டும், ஏனென்றால் அத்துறையில் உற்பத்திக்கும் உழைப்புக்கும் அதிக மூலதன முதலீடு அவசியமில்லை என்ற நிலைகளிலிருந்து அத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

இரண்டாவதும் மற்றும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் விவசாயம் மற்றும் சிறு தொழில் துறையில் முறையே 21% மற்றும் 25% மூலதனம் முதலீடு செய்யப்பட்டது, ஆனால் அவற்றின் வளர்ச்சி தேசிய வருமானத்தின் அதிகரிப்பில் 51% மற்றும் 61% பங்கையும், வேலை வாய்ப்புகளின் அதிகரிப்பில் 42.5% மற்றும் 54.5% பங்கையும் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்—ஓரளவுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்

திலும்—சிறு தொழில்துறையை, குறிப்பாக சிறிய அளவுப் பண்ட ரகத்தை வளர்ப்பதைக் காட்டிலும் பாதுகாப்பது முக்கியமான நோக்க மாக இருந்தது. இத்திட்டங்களின் பொருளா தாரச் செயல்திட்டத்தில் நேரடியான காப்புவா தம் மேலோங்கியிருப்பதற்கு இதுவே காரணம். எனினும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசாங்கப் பொருளாதாரக் கொள்கையில் புதிய கூறுகள் காணப்படுகின்றன. சிறு தொழில் நிறு வனங்களுக்கு கடனுதவி மற்றும் நிதியுதவி அளிக் கும் முறையை அபிவிருத்தி செய்தல், அவற்றின் தொழில் நுட்ப மட்டத்தையும் உழைப்பின் உற் பத்தித் திறனையும் உயர்த்துதல், கிராமப் பகுதி களிலும் சிறு நகரங்களிலும் சிறு தொழில்துறை யின் வளர்ச்சியை விரைவுபடுத்துதல் ஆகிய கடமைகளை அத்திட்டம் முன்வைத்தது. எனினும் அத்திட்டம் சிறு தொழில்துறையின் சமூக, பிரிவு சார்ந்த மற்றும் தொழில் நுட்பவியல் சீரமைப் புக்குத் திட்டவட்டமான செயல்திட்டத்தை வகுத்தளிக்கவில்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நாட் டின் சமூக-பொருளாதார முன்னேற்றத்துக்கு வகுத்துக் கொடுத்த செயல்திட்டத்தின் அடிப் படையில் தொழில்துறையின் கட்டமைப்பையும் உற்பத்தித் தொழில்நுட்பவியலையும் அபிவிருத்தி செய்வதற்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது, ஏராளமான, உயர்ந்த தரமுள்ள, நவீனப் பொருள்களைப் போட்டிக்குரிய விலைகளில் சிறு தொழில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதே சமயத்தில்

நாட்டின் உற்பத்தியை இன்னும் சமமாக வினியோகம் செய்வதும் பொருளாதார அதிகாரத்தை பரவலாக்குவதும் வருமான வினியோகத்திலுள்ள சமமின்மையைக் குறைப்பதும் அதன் கடமையாயிற்று. முந்திய திட்டங்களுக்கு மாறான முறையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அரசின் சமூக-பொருளாதாரச் செயல்திட்டத்தில் சிறு அளவு உற்பத்திக்கு முக்கியமான பாத்திரத்தை ஒதுக்கியது. அது செயலற்ற கூறாக இருக்காமல், பொருளாதார வளர்ச்சியில் சுறுசுறுப்புள்ள சக்தியாக, ஓரளவுக்கு அரசு மூலதனத்தின் பொருளாயத அடிப்படையாகவும் சமூகத் தூணாகவும் இருக்கும். ஆகவே அரசின் பொருளாதாரக் கொள்கையின் திசைவழியிலும் முறைகளிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன: மறைமுகமாக ஒழுங்குபடுத்தும் முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது, சிறு அளவான பாக்டரி உற்பத்தி மற்றும் சிறு அளவான பண்ட உற்பத்தியை சிறு அளவு முதலாளித்துவ உற்பத்தியாக மாற்றக் கூடிய நிலைமைகளைத் தோற்றுவிப்பதில் அதிகமான கவனம் செலுத்தப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதியுதவி மற்றும் கடனுதவி வசதிகளை விரிவுபடுத்துவதிலும், சிறு அளவு உற்பத்திக்கு மூலப்பொருள்களையும் கருவிகளையும் கொடுப்பதிலும் அமைப்பு, தொழில்நுட்ப உதவி, நிதி மானியங்கள் மற்றும் வேறுபட்டிருக்கும் மறைமுக வரி விதிப்பிலும் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது. சிறு தொழில்துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதும், ஒரு பக்கத்தில் விவசாயத்துடனும் மறு பக்கத்தில்

பெருந் தொழில்துறையுடனும் நெருக்கமான இணைப்பைக் கொண்ட, இன்னும் அதிகமாக ஒப் பேறக் கூடிய உற்பத்தி வடிவமாக அதை மாற்று வதும் இந்த நடவடிக்கைகளின் முடிவான நோக் கம் என்று திட்டம் தெளிவாகக் கூறியது.

இத்தகைய சூழ்நிலையில் சிறு அளவு உற்பத் தியை நவீனப்படுத்துவதும், அதன் கட்டமைப்பு மற்றும் சமூக மாற்றமும் மொத்த சமூக அளவில் உற்பத்தி நிகழ்வுப் போக்குகளைத் தீவிரப்படுத்து வதற்கு அவசியமான முறையாக இருக்கின்றன. மிகவும் உயர்ந்த மற்றும் மிகவும் கீழான தொழில் வடிவங்களை வெவ்வேறு முறைகளில் இணைப்பதன் மூலம் இத்தீவிரப்படுத்தல் நிறைவேற்றப்படுகிறது.

அத்தகைய நவீனப்படுத்தலின் அவசியம் வெளிப்படையானதே; அதை நிறைவேற்றுவதற் கான வாய்ப்புகள் அரசு முதலாளித்துவப் பொறி யமைவு என்ற மொத்த அமைப்பையும் சார்ந்து இதை நிறைவேற்றுவதற்குரிய அரசின் திறமை யினுல் பிரதானமாக நிர்ணயிக்கப்படுகின்றன. அரசு தன்னுடைய நடவடிக்கைகளையும் அவற்றின் சமூக-பொருளாதாரத் தர்க்கவியலையும் எந்த வரிசைக்கிரமத்தில் எடுத்துக் கொள்ளும் என்பதை இது நிர்ணயிக்கிறது. முதலில் தொழில்துறை உற்பத்தியின் மிகக் கீழான கட்டங்களைப் பாது காப்பதை உறுதிப்படுத்துகின்ற பிரதான கடமை களைத் தீர்ப்பதற்கு அவை முடுக்கிவிடப்படுகின் றன; பிறகு அவற்றை நவீனப்படுத்தல் எடுத்துக் கொள்ளப்படுகிறது; கடைசியில் வெவ்வேறு பொருளாதார வடிவங்களுக்குள் உற்பத்திச் சக்திகளின் இயக்கியலான வளர்ச்சியை இணைப்

பதை சாத்தியமாக்குகின்ற புதிய பொருளாதாரக் கட்டமைப்புகளுக்குத் தேடல் தொடங்குகிறது.

சிறு தொழில்துறையை நவீனப்படுத்துவதற்கு அதன் பிரிவுக் கட்டமைப்பை வகைப்படுத்தல் இரண்டாவது முக்கியமான வழியாகும். சிறு தொழில்துறை முக்கியமாக நுகர்வுச் சரக்குகளைத் தயாரிக்கின்ற பிரிவில் இயங்குகின்றது; ஆனால் நகரங்களில் வசிப்பவர்களிடமும் கிராமங்களில் வசிப்பவர்களில் வசதியானவர்களிடமும் உயர்ந்த தரமான சரக்குகளுக்குத் தேவை அதிகரிப்பதைக் குறிப்பாக கவனிக்கிறது. உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்வதும் சிறு தொழில்துறையின் வளர்ச்சியில் முன்னைக் காட்டிலும் மிகவும் அதிகமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. கடந்த காலத்தில் அரசு நடவடிக்கைக் களங்களைப் பிரிப்பதிலும் வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்தியதென்றால் இப்பொழுது சிறு தொழில் துறையை விவசாயத்துடன் (விவசாய உற்பத்திப் பொருள்களைப் பதப்படுத்துகின்ற மற்றும் உற்பத்திச் சாதனங்களைச் சப்ளை செய்கின்ற திசையில்) மற்றும் பெருந் தொழில்துறையுடன் (புதிய சரக்குகளை உற்பத்தி செய்கின்ற திசையில்) ஒருங்கிணைக்கின்ற வெவ்வேறு வடிவங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

இவையனைத்தும் காலனியாதிக்கத்திலிருந்து பெறப்பட்டிருக்கும் இந்தியப் பொருளாதாரத்தின் பொருளாயத மற்றும் சமூகக் கட்டமைப்பைத் திருத்தியமைத்தல் தொடங்கிவிட்டது, சில சமூக-பொருளாதாரக் கட்டுக்கோப்புக்களுடன் அநேகமாக மொத்தமாகப் பொருந்திய பழைய

உற்பத்தி வடிவங்களை அழித்தல் தொடங்கி விட்டது என்பனவற்றைப் பிரதிபலித்தன. வெவ்வேறு பொருளாதார வடிவங்களுக்கு இடையில் கிடைக்கோட்டான பிணைப்புகளை நிறுவுவதற்கு வழி வகுக்கின்ற தன்னியல்பான போக்குகளின் செயலை அரசு ஊக்குவித்துத் தீவிரப்படுத்துகிறது; அதன் மூலம் அவற்றை மாற்றுவதற்கும் சமூக உற்பத்தியின் செயல்திறனை அதிகப்படுத்துவதற்கும் உதவி புரிகிறது.

சிறு அளவு உற்பத்தித் துறையில் அரசு செய்திருக்கும் ஸ்தூலமான நடவடிக்கைகளில் மூன்று போக்குகளைக் காண முடியும்:

*1)* பெருந் தொழில்துறையின் போட்டியினால் சிறு தொழில்துறைக்கு ஏற்படுகின்ற அழிவிலிருந்து அதற்கு பொருளாதார மற்றும் சட்டரீதியான பாதுகாப்பளித்தல்;

*2)* சிறு தொழில்துறையைச் சமூக-பொருளாதார நிகழ்வு என்ற முறையிலும் மற்றும் விவசாயத்துடனும் பெருந் தொழில்துறையுடனும் அதன் ஒருங்கிணைப்பைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் சமூகப் புனருற்பத்தியின் கட்டமைப்பு, வேகம் மற்றும் அளவு விகிதங்களை மாற்றுதல்;

*3)* சிறு தொழில்துறையின் வளர்ச்சியில் நேரடியாக அரசு பங்கெடுப்பது மற்றும் மறைமுகமான உதவி உள்பட நிதி, கடன், வர்த்தகம், அமைப்பு ரீதி, விஞ்ஞானம், தொழிலநுட்பம் ஆகிய துறைகளில் உதவி செய்வது. மறைமுக உதவி பிரதானமாக உள்ளமைப்புத் துறையைக் கட்டுவதற்கு (சக்தி, போக்குவரத்து, பொதுச் சேவைகள், உற்பத்தி மற்றும் கிட்டங்கி இடங்கள், இயந்

திரங்கள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தொழிலாளர்களுக்குப் பயிற்சி) தரப்படுகின்ற உதவியாகும்.

சிறு தொழில்துறையின் வளர்ச்சிக்கான செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்திய அரசாங்கம் தேசிய மற்றும் மாநில அளவில் விசேஷ கவுன்சில்களையும் கமிட்டிகளையும் அமைத்திருக்கிறது.

தேசிய வளர்ச்சிக் கவுன்சில், தேசியத் திட்டக் குழு, சம்பந்தப்பட்ட மத்திய இலாகாக்கள் மற்றும் மாநில அரசாங்கங்கள் இவ்வமைப்புகளுக்கு வழிகாட்டுகின்றன.

சிறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை ஒவ்வொரு திட்டத்திலும் அதிகரிக்கப்படுகிறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 400 மில்லியன் ரூபாய்களாக மட்டுமே இருந்த ஒதுக்கீடு இரண்டாவது திட்டத்தில் 1.6 பில்லியன் ரூபாய்களாகவும் மூன்றாவது திட்டத்தில் 2.4 பில்லியன்களாகவும் நான்காவது திட்டத்தில் 2.9 பில்லியன்களாகவும் ஐந்தாவது திட்டத்தில் 5.4 பில்லியன்களாகவும் ஆறாவது திட்டத்தில் 17.8 பில்லியன் ரூபாய்களாகவும் அதிகரித்திருக்கின்றது.*

வங்கி அமைப்பின் மூலமாக உபரி மதிப்பைத் திரட்டுகின்ற வாய்ப்புகள் இந்தியாவில் குறைவு என்பது அறிந்ததே. பொருளாதாரத்துக்குக் கடன்கள், குறிப்பாக நீண்ட காலக் கடன்களின் தேவை மென்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது;

* *The Sixth Five Year Plan*, p. 190.

வங்கிகளால் இத்தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. சிறு பண்ட உற்பத்திப் பிரிவு தொழில்துறை மூலதனப் புழக்கத்தில் இன்னும் மிகக் குறைவான அளவிலேயே சம்பந்தப்பட்டிருக்கிறது; ஆகவே முதலாளித்துவக் கடன் வடிவங்களுடன் அதற்கு உறுதியான பிணைப்புகள் இல்லை. பெரும்பான்மையான கடனுதவி அமைப்புகள், குறிப்பாக வர்த்தக வங்கிகள் 1969க்கு முன்பு தனியார் உடைமையாக இருந்தபடியால் இந்த விசேஷ நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதன் விளைவாக அரசுக் கடனுதவி அமைப்புகள் பொருளாதாரத்தின் இத்துறையில் எப்பொழுதுமே முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்திருக்கின்றன, இத்துறையை ஏதாவதொரு வழியின் மூலம் அரசுத் துறையுடன் இணைக்கின்றன.

1948இல் இந்தியா தொழில்துறை-நிதியுதவிக் கார்ப்பொரேஷனை ஏற்படுத்தியது. இது சிறு தொழில்துறைக்குக் கடன்வசதிகளை அதிகரிப்பதைச் சுலபமாக்கியது, 1951இல் மாநிலங்களிலும் நிதிக் கார்ப்பொரேஷன்கள் நிறுவப்பட்டன; இவை சிறு தொழில்களின் உடைமையாளர்களுக்கு நடுத்தர நிலைக் கடன்களைக் கொடுத்தன. 1956இல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் சிறு தொழில்துறைக்குக் கடன்களைக் கொடுக்கத் தொடங்கியது. இத்தொழில்துறையில் கடனுதவியை ஒருங்கிணைக்கின்ற பொறுப்பு ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் சிறு தொழில்துறைக்குக் கடனுதவி செய்கின்ற பிரச்சினை மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் திருப்திகரமாகத் தீர்க்கப்பட வில்லை; சமீபகாலம் வரை நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள லேவாதேவிக்காரர்கள்தான் அதற்குக் கடனுதவியின் முக்கிய ஆதாரமாக இருந்தார்கள். குடிசைத் தொழில்களில் லேவாதேவிக்காரர்களின் நிலை குறிப்பிடத்தக்க அளவுக்கு பலமாக இருந்தது.

இப்பொழுது, சிறு தொழில்துறைக்கும் வங்கிகளுக்கும் முக்கியமாக, அரசுக் கடனுதவி முறையின் கட்டுக்கோப்பிற்குள் ஓரளவுக்கு நிலையான பிணைப்புகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

தேசிய சிறு தொழில்துறை கார்ப்பொரேஷன், மாநிலங்களில் இருக்கின்ற நிதிக் கார்ப்பொரேஷன்கள் சிறு தொழில்களுக்கு நிலையான மூலதன உதவியளிக்கின்றன. மாநில அரசாங்கங்களும் நேரடியாக நிதியுதவி அளிக்கின்றன. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, தொழில்துறை வளர்ச்சி பாங்க், வர்த்தக வங்கிகள் மற்றும் ரிசர்வ் பாங்க் நடப்பு மூலதனத்தை அளிக்கின்றன. ரிசர்வ் பாங்க் இந்தக் கடன்களுக்குக் காப்புறுதியளிக்கிறது.

சிறு தொழில்துறைக்குக் குறைந்த காலக் கடன்களை அளிப்பதில் 1969இல் நாட்டுடைமையாக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் பாத்திரம் இப்பொழுது அதிகரித்து வருகிறது. நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்பு அவை இத்துறையில் மிகக் குறைவான பாத்திரத்தையே வகித்தன. 1968இல் சிறு தொழில் நிறுவனங்களுக்கு

கொடுக்கப்பட்ட கடன்கள் 1.9 பில்லியன் ரூபாய்களுக்கு அதிகமல்ல, அதாவது தொழில்துறைக்குக் கொடுக்கப்பட்ட மொத்தக் கடன்களில் வெறும் 6% ஆக மட்டுமே இருந்தன. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு கடன்களின் அளவு தீவிரமாக அதிகரித்தது; 1979இல் இக்கடன்கள் 26.3 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமாக இருந்தன, அதாவது தொழில்துறைக்குக் கொடுக்கப்பட்ட மொத்தக் கடன்களில் சுமார் 11% ஆக இருந்தன. 1968இல் 39,000 சிறு தொழில் நிறுவனங்கள் மட்டுமே வர்த்தக வங்கிகளிலிருந்து கடன் வாங்கியிருந்தன; ஆனால் 1977இல் 4,86,000க்கும் அதிகமான சிறு தொழில் நிறுவனங்கள் கடன் வாங்கியிருந்தன.

ஆகவே சிறு தொழில்துறைக்குக் கடன் மற்றும் நிதியுதவியை விரிவுபடுத்துவது மொத்தப் போக்காக இருக்கிறது. எனினும் பெரும்பான்மையான கைவினைஞர்களும் கைத்தொழிலாளர்களும்—குறிப்பாக மக்கள் தொகையின் மிகவும் ஏழ்மையான பகுதிகளிலிருந்து வந்தவர்கள்—சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் வசிக்கின்றபடியால் வங்கிக் கடன் வசதிகளை அவர்கள் பெற முடியவில்லை.

ஆகவே கடன்களின் மொத்த அளவும் அவற்றின் அமைப்பும் மட்டுமல்லாமல் யார் கடன்களைப் பெறுகிறார்கள் என்பதும் முக்கியமானதாக இருக்கிறது; ஏனென்றால் கடன் மற்றும் நிதியுதவி இன்னும் பிரதானமாக சிறு பாக்டரித் தொழில் துறைக்குக் கொடுக்கப்படுகிறது; சிறு தொழில் துறையில் மிகவும் பெரிய பகுதியான கிராமப்

பகுதிகளில் உள்ள குடிசை மற்றும் கைத்தொழில்கள் துறைக்கு மிகவும் குறைவாகவே கொடுக்கப்படுகிறது.

மற்ெருரு துறையான வர்த்தகத் துறையில் அரசு நடவடிக்கைகள் சிறு தொழில்துறையின் வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவிப்பதில் மிகவும் முக்கியமாக இருக்கின்றன. சிறு தொழில்துறைக்கு மூலப்பொருள்களையும் கருவிகளையும் கொடுப்பதில் மட்டுமல்ல, அதன் உற்பத்திப் பொருள்களை வாங்குவதற்கும் இது பொருந்தும்.

சிறு உற்பத்தியாளர் தன்னுடைய சரக்குகளை விற்பனை செய்யும் பொழுது அதிகமான கஷ்டங்களைச் சந்திக்கிறார், போதுமான தரம் இல்லாதிருத்தல், சந்தை விலைகளைப் பற்றித் தகவல் இல்லாதிருத்தல், பெருந் தொழில்துறையின் போட்டி, கிட்டங்கி வசதி இல்லாமை மற்றும் கடைசியாக இடைத்தரகர்கள் மற்றும் லாபவேட்டைக்காரர்களை நம்பியிருத்தல் ஆகியன இக்கஷ்டங்களாகும். ''ஏராளமான கைவினைஞர்களும் கைத்தொழிலாளர்களும் தமக்கு அவசியமான மூலப்பொருள்களைக் கொடுப்பதற்கும் சரக்குகளை விற்பனை செய்வதற்கும் இடைத்தரகர்களைக் கணிசமான அளவுக்கு நம்பியிருக்கின்ற நிலை இன்னும் தொடர்கிறது; அவர்களுடைய லாபங்களில் பெரும் பகுதியை இடைத்தரகர்கள் ஒதுக்கிக்கொள்கிறார்கள்''* என்று ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

---

* *The Sixth Five Year Plan*, p. 194.

சிறு தொழில்துறைக்கு ஆதரவளிப்பதற்காக அரசு அத்துறையின் உற்பத்திப் பொருள்களை மொத்தமாக வாங்கிக் கொள்கிறது. அரசு 379 வகையான சரக்குகளை சிறு தொழில்துறையிலிருந்து மட்டுமே வாங்குகிறது; இன்னும் பல சரக்குகளுக்குப் பெருந் தொழில்துறையில் தயாரிக்கப்படுகின்ற அதே சரக்குகளின் விலையைக் காட்டிலும் 15% அதிகமாகக் கொடுத்து வாங்குகிறது. எனினும் இந்த நடவடிக்கைகள் இன்னும் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை. மூலப் பொருள்களை அளிப்பதற்கும் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் அரசு ஏஜன்சிகள் மூலமாகச் சரக்குகளை விற்பனை செய்வதற்கும் ஒருங்கிணைந்த அமைப்பை ஏற்படுத்த* ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தற்பொழுது சிறு தொழில்துறைக்கு மூலப் பொருள்களையும் கருவிகளையும் கொடுப்பதும் அதன் உற்பத்திப் பொருள்களை வாங்குவதும் இதற்காக விசேஷமாக நிறுவப்பட்ட தேசிய சிறு தொழில்துறை கார்ப்பொரேஷனால் செய்யப்படுகிறது. அந்நிய நாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்வதற்காக சிறு தொழில்துறைச் சரக்குகளை வாங்குவதில் சமீப வருடங்களில் அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது.

சிறு தொழில்துறையை நவீனப்படுத்துதல், அதன் பிரிவு அமைப்பை வகைவேறுபடுத்துதல், அதன் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட அரசுக்

---

* *Ibid.*

கொள்கை பொருளாதார அமைப்பு முழுவதின் செயல் திறனை உயர்த்துகின்ற மொத்த பொருளாதாரச் செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகவே அதன் நடவடிக்கைகளின் விளைவை அரசாங்கத்தின் மொத்த பொருளாதாரக் கொள்கையிலிருந்து பிரித்து ஆராய முடியாது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மொத்தப் பாதையின் மீது சிறு தொழில்துறையின் தாக்கம்—மற்ற எல்லாவற்றையும் காட்டிலும்—அது முதலீட்டுச் செல்வங்களைச் சிக்கனப் படுத்தி உழைப்புச் செல்வங்களைத் திரட்டுகிறது, அதாவது ஒரு பக்கத்தில் அது வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பகுதி நேர வேலையையும் அகற்றுவதற்கு உதவுகிறது, மறு பக்கத்தில் சரக்குகள் பற்றாக்குறையை ஒழிக்கிறது என்ற உண்மையிலிருந்து பிறப்பதாகும். ஆகவே இன்றைய கட்டத்தில் சிறு தொழில்துறையின் வளர்ச்சியின் மூலம் இந்தியப் பொருளாதாரத்தை விரிவாக வளர்ப்பது தவிர்க்க முடியாத அவசியமாகும். தேசியப் பொருளாதாரத்தின் கருத்து நிலையில் அது குறைந்த பயனைத் தரக் கூடியதல்ல, சில வரையறைகளுக்குள் பெருந் தொழில்துறையை ஒரு தரப்பாகச் சார்ந்திருப்பதைக் காட்டிலும் அது அதிகம் பயனளிப்பதாகும். இன்றுள்ள சூழ்நிலையில் மொத்த பொருளாதார அமைப்பின் அதிகபட்சப் பயனை உறுதிப்படுத்தக் கூடிய ஒரே சரியான வளர்ச்சிச் செயல்திட்டம் சிறு தொழில்துறைக்கும் பெருந் தொழில்துறைக்கும், பரந்த மற்றும் தீவிரமான வளர்ச்சிக் காரணிகளுக்கு இடையில் உசிதமான இணைப்பைக் கண்டுபிடிப்பதே.

அதே சமயத்தில் அரசின் பொருளாதார நடவடிக்கைகளை இதுவரை சாதிக்கப்பட்டிருக்கும் மூலதனத் திறன் மட்டம், உழைப்பின் உற்பத்தித் திறன், தேசியப் பொருளாதாரத்தில் துறைகளுக்கிடையில் பொருத்த விகிதங்களின் சரியான தன்மை ஆகிய சூசகங்களைக் கொண்டு மட்டும் மதிப்பிட்டு விட முடியாது. சமூகக் காரணிகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இக்கருத்துநிலையில் சிறு தொழில்துறையின் விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சி மற்றும் நவீனப்படுத்துதல், அதன் பிரிவு, தொழில் நுட்பவியல் மற்றும் சமூகச் சீரமைப்பு மிகவும் முக்கியமானவையாகும்.

எனினும் நாட்டின் சமூக-பொருளாதார முன்னேற்றம் சிறு தொழில்துறையின் முன்னேற்றத்தை மட்டுமே பொறுத்திருக்கிறது, தேசியச் சீரமைப்புக்கு அது ஒன்று தான் வழி என்று கருதுவது தவறாகும்.

பெருந் தொழில்துறைக்கு எதிரான முறையில் சிறு தொழில்துறைக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுப்பது பொருளாதாரத்தில் தீவிரமான பொருத்தமின்மைகளுக்கு வழி வகுக்கும்.

பெருந் தொழில்துறையைக் காட்டிலும் சிறு தொழில்துறைக்கு முன்னுரிமையளிப்பது, அதாவது தொழில்துறை உற்பத்திச் சக்திகளின் இன்றைய மட்டத்துக்குப் பொருந்துகின்ற, விஞ்ஞான, தொழில் நுட்பவியல் முன்னேற்றத்தினால் பலனடையக் கூடிய உற்பத்தி வடிவங்களின் வளர்ச்சிக்கு முன்னுரிமையளிக்க மறுப்பது பொரு

ளாதார வளர்ச்சியைத் தடுக்கும், பொருளா தாரத்தின் பின்தங்கிய அமைப்பைப் பாதுகாக் கும்.

பெரிய அளவிலான தொழில் உற்பத்தியின் மிகவும் வளர்ச்சியடைந்த வடிவங்கள் பின்னுல் தள்ளப்பட்டால் அது சிறிய அளவுத் தொழில் துறையின் வளர்ச்சிக்குக் கூடத் தொழில்நுட்ப வியல் மற்றும் பொருளாயத அடிப்படையைக் குறைக்கும், அது படிப்படியாக சீரமைக்கப்படு வதைத் தாமதப்படுத்தும், உழைப்பின் உற்பத்தித் திறனைக் குறைக்கும், தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் புனருற்பத்தி நிகழ்வுப் போக்கின் குணரீதியான வரையளவுகள் சீர்கெடுவதற்கு வழி வகுக்கும்.

ஆருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொருளா தார மற்றும் சமூக செயல்திட்டம் சிறு தொழில் துறைக்குக் காப்புவாத நடவடிக்கைகளைக் காட்டிலும் தொழில்நுட்ப மற்றும் அமைப்பு ரீதியான சீரமைப்பு மற்றும் தொழில்துறையின் ஒருங்கிணைவு நிகழ்வுப் போக்குகளை விரைவுபடுத் தும் அடிப்படையில் அதன் ஸ்திரமான வளர்ச் சியை உறுதிப்படுத்துகின்ற மாதிரிப் படிவங் களைத் தேடுவதையே அதிகமாக உத்தேசிக் கிறது.

இச்செயல்திட்டத்தின் பெரும்பகுதி இதற்கு முந்திய திட்டங்களில் ஏதாவதொரு வடிவத்தில் இடம் பெற்றிருந்தது. எனினும் அதிகமான பல புதிய கூறுகளும் சேர்க்கப்பட்டன. ''கிராமங் களில் பொருளாதார ஒப்பேறுந் தன்மையை உரு வாக்கக் கூடிய தொழில்மயமாக்கும் வடிவத்தை

நாட்டில் ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது''* என்று 1980 ஜூலையில் வெளியிடப்பட்ட தொழில்துறைக் கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் வெளிப்படையாக எடுத்துக் கூறுகிறது: ''ஒருங்கிணைந்த தொழில்துறை வளர்ச்சிக்கு எல்லா முயற்சிகளையும் செய்யும் பொழுதே தொழில்துறையில் பின்தங்கியவை என்று இனங்காணப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சில கேந்திரத் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி துணைத் தொழில் நிறுவனங்களையும் சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் இயன்ற அளவுக்கு பெருக்கி பொருளாதாரக் கூட்டாட்சிவாதக் கருத்தை ஊக்குவிப்பதற்கு உத்தேசிக்கப்படுகிறது.''**

அரசுத் துறையின் பெரிய அளவு தொழில் உற்பத்தியைக் கேந்திரமாக ஏற்படுத்துகின்ற ஒருங்கிணைப்புத் திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் உத்தேசிக்கப்படுகிறது என்பது இதன் அர்த்தமாகும். சிறிய அளவு உற்பத்தி—சிறப்பாக, அதன் சிறிய அளவு முதலாளித்துவ வடிவங்கள்—அரசுத் துறையின் மூலம் தொழில்துறை மூலதனப் புழக்கத்துக்குள் ஈடுபடுத்தப்படுவதற்குப் பொருளாதார அம்சம் மட்டுமல்ல, ஒரு அரசியல் அம்சமும் உண்டு. அரசுத் துறை மூலமாகத் தொழில்துறைப் பிரிவுகளுக்கு இடையில்

---

* *The Sixth Five Year Plan*, p. 190.

** *Ibid.*, pp. 190-91.

பிணைப்புகளை ஏற்படுத்துதல் அரசின் சமூக அடிப் படையை மிகப் பெரும் அளவுக்கு விரிவுபடுத்தி பலப்படுத்துகிறது, சிறு பண்ட உற்பத்தி மற்றும் சிறிய அளவு முதலாளித்துவ முன்முயற்சியை தேசிய நலன்களுக்கு அதிகச் சிறப்பான முறையில் உபயோகிக்கக் கூடிய நிலைமைகளைத் தோற்று விக்கிறது.

இம்மாதிரியை வெற்றிகரமாக அமுலாக்கினால் அரசுத் துறையின் குறியடையாளமான கூறுகள், குறிப்பாக, ஒரே சீரான, திட்டமிட்ட வளர்ச்சி தேசியப் பொருளாதாரத்தில் இன்னும் முக்கிய மான பாத்திரத்தை வகிக்கும். சிறிய அளவு உற் பத்தி நேரடியான அரசு முதலாளித்துவ ஒழுங்கு படுத்தலுக்கு உட்படுகின்ற பொழுது அது படிப் படியாக — பிரதானமாக, கூட்டுறவுக் கட்டத் தைக் கடந்து வருவதன் மூலம்—அரசுத் துறை அமைப்பின் ஒரு கூறாக முடியும்.

வளர்ச்சியின் இந்தத் திருப்பம் சிறு அளவு உற்பத்தியைப் பெரிய அளவு மற்றும் நடுத்தர அளவுத் தனியார் உற்பத்தியிலிருந்து பிரிக்க முடியும்; அது நாட்டில் முதலாளித்துவ உறவு களின் பரிணாமத்தின் மீது முக்கியமான விளைவைக் கொண்டிருக்கும்.

### 4. தனியார் தொழில்துறை மூலதனத்தின் வளர்ச்சியடைந்த வடிவங்கள் வலுப்படுதல்

சுதந்திரத்துக்குப் பிந்திய வருடங்களில் தேசிய மூலதனம் நாட்டின் பொருளாதாரத்தில் தன்னுடைய நிலைகளை பலப்படுத்திக் கொண்டது. உற்பத்தியை மத்தியப்படுத்துதலும் குவித்தலும்

அதிகரித்தன; ஏகபோகப் போக்குகள் மேலும் முன்னேற்றமடைந்தன.

ஒரு சிலரிடம் அதிகாரமும் செல்வமும் குவிவதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தைப் பற்றி அரசாங்கம் ஏராளமான அறிக்கைகளை வெளியிட்டது, ஆனால் பெரிய முதலாளி வர்க்கத்தினுடைய நிலை பலமடைவதும் ஏகபோகப் போக்குகள் வளர்ச்சியடைவதும் ஏற்கெனவே இருந்து கொண்டிருந்த ஏகபோகங்கள் வலுப்படுவதும் தொடர்ந்தன. கடந்த 10 வருடங்களில் தனியார் துறையின் வளர்ச்சி, பொருளாதார சக்தி குவிவதையும் ஏகபோகப் போக்குகள் தோன்றுவதையும் அனுமதிக்காமல் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எந்த வழியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற பிரச்சினையை முன்னால் கொண்டு வந்துவிட்டது என்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் வேகமாக வளர்ச்சியடைகின்ற பொருளாதாரத்தில் முதலாளி வர்க்கத்தில் அதிகமாகப் பணம் படைத்த பகுதியினர் தங்களுடைய நிலைகளை பலப்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாதது என்றும் அரசாங்க ஆவணங்கள் ஒத்துக் கொண்டிருந்தன. அரசியல் மேற்கட்டுமானம் இரண்டு பக்கங்களிலிருந்து—ஒரு பக்கத்தில் குட்டி முதலாளிகளிடமிருந்தும் மறு பக்கத்தில் பெருமுதலாளிகளிடமிருந்தும்—தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த பிரத்யேகமான நிலையை அரசாங்க ஆவணங்களிலிருந்த முரண்பாடுகள் பிரதிபலித்தன.

பொருளாதார வளர்ச்சிக்குரிய செயல் திட்டத்தை வரையறுக்கும் பொழுது, குறிப்பாக

இச்செயல்திட்டத்தை அமுலாக்கும் பொழுது அது சமரசத்தைத் தேடி முயன்றதற்கு இதுவே காரணம்.

அரசாங்கத்தின் காப்புவாதக் கொள்கையும் வரிக் கொள்கையும் மற்றும் அரசின் கடனுதவி அமைப்பின் வளர்ச்சியும் மற்றும் பல நடவடிக்கைகளும் தேசிய அளவில் பாக்டரி உற்பத்தியை நிறுவுவதிலும் அதன் வளர்ச்சியிலும் முக்கியமான பாத்திரத்தை வகித்தன.

இந்தியா சுதந்திரமடைந்த ஆரம்ப வருடங்களில் *(1949இல்)* அமைக்கப்பட்ட நிதிக் கமிஷன் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருந்த கேந்திரமான தொழில்களுக்கும் நவீனத் தொழில்களுக்கும் காப்புவரிப் பாதுகாப்புத் தர வேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டியது. இக்கமிஷனின் சிபாரிசுகளைப் பின்பற்றி 1952இல் இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு அவசியமான காப்புவரி விவகாரங்களை கவனித்துக் கொள்வதற்காக நிரந்தரக் காப்புவரிக் குழு நிறுவப்பட்டது. அதன் சிபாரிசின்படி அரசாங்கம் தொழில்துறையின் பல்வேறு பிரிவுகளுக்கு காப்புவரிப் பாதுகாப்புக் கொடுத்து அந்நியப் போட்டியிலிருந்து அவற்றைப் பாதுகாத்தது. தேசியத் தொழில்துறையின் பல பிரிவுகளின் வளர்ச்சிக்கு இது மிகவும் முக்கியமாக இருந்தது. பெரிய உற்பத்தியாளர்கள் இக்காப்புவரிக் கொள்கையை முதலில் பயன்படுத்திக் கொண்டார்கள்; உள்நாட்டுச் சந்தையில் ஆதிக்கம் பெறுவதற்கு அவர்களுக்கு மிகவும் அதிகமான வாய்ப்புகள் ஏற்பட்டன.

அரசாங்கத்தின் நிதிக் கொள்கை பெரிய மூல தனத்தின் நிலையை பலப்படுத்துவதற்கு உதவியது. புதிதாகத் தொடங்கப்பட்ட கம்பெனிகளுக்குப் பல்வேறு காலங்களுக்கு முழுமையாக வரி விலக்களிக்கப்பட்டது; பல கம்பெனிகள் இன்னும் பலவிதமான வரிச் சலுகைகளைப் பெற்றன. அவசியம் ஏற்படுகின்ற பொழுது, புதிய தொழில் நிறுவனங்களுக்கு தேய்மானச் செலவுகள் பாதியாகக் குறைக்கப்பட்டன, விஞ்ஞான ஆராய்ச்சிக்குச் செலவழிக்கின்ற தொகைக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இந்தியாவின் தொழில்துறை முதலாளி வர்க்கம் (பிரதானமாக, பெரிய மூலதனம்) மூலதனச் சந்தை மற்றும் வளர்ச்சி குன்றிய வங்கி அமைப்பின் பலவீனத்தை இந்த வழியில் அரசின் உதவியுடன் வெற்றி கொள்ள முடிந்தது.

சுதந்திரமடைந்த ஆரம்ப நாட்களிலிருந்து அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை தனியார் துறையின் நிலைகள் பலமடைவதை ஊக்குவித்தது, நாட்டுப் பொருளாதாரத்தின் காலனியாதிக்கக் கட்டமைப்பிலிருந்து தோன்றிய கஷ்டங்களை அது சமாளிப்பதற்கு உதவியது. தனியார் துறையின் லாபங்கள் வேகமாகப் பெருகின.

ஏற்கெனவே, 1950க்களின் பிந்திய பகுதியில் தனியார் பங்குக் கம்பெனிகளின் நிகர லாபங்கள் நாட்டின் தேசிய வருமானத்தில் 2% ஆக இருந்தன. தனியார் துறை அரசுக் கடன்கள், நேரடியாக அரசு பங்கெடுத்தல், வங்கிக் கடன்கள் மற்றும் அந்நிய உதவியை விரிவாகப் பயன்படுத்திக் கொண்டது.

இவையனைத்தும் தனியார் துறை முதலீடு களின் வேகமான வளர்ச்சியை ஊக்குவித்தன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் போது தொழில்துறையில் அதன் மொத்த முதலீடு 2.3 பில்லியன் ரூபாய்களாக இருந்தது. நடப்பு (ஆறுவது) ஐந்தாண்டுத் திட்டத்தில் தனியார் முதலீடுகள் 747.1 பில்லியன் ரூபாய் களாக, அல்லது மொத்த முதலீடுகளில் 47 சதவிகிதத்துக்குச் சற்றுக் கூடுதலாக அதிகரிக்கும். இதில் பெரும் பகுதி தொழில்துறையில் முதலீடு செய்யப்படும்.

மொத்தத் தொழில்துறை முதலாளி வர்க்கத் தின் நிலை பலமடைந்த பொழுது அதன் நடுப் பகுதியும் அதன் அதிகப் பணம் படைத்த பகுதியும் வேகமாக வளர்ச்சி அடைந்தன. அதனுடன் உற் பத்தி மற்றும் மூலதனக் குவிப்பும் அதிகரித்தது.

காலனியாட்சிக் காலத்தில் இந்தியாவில் நவீன பாக்டரித் தொழில் நன்கு வளர்ச்சி அடையா திருந்த பொழுது கூட, ஓரளவுக்கு அதிகமான உற்பத்திக் குவிப்பு இருந்தது. 1948ம் வருடப் புள்ளிவிவரங்களின்படி 1,000 தொழிலாளர் களுக்கும் அதிகமானவர்கள் வேலை செய்கின்ற பாக்டரிகள் மொத்த பாக்டரிகளின் எண்ணிக்கை யில் சுமார் 7% ஆக இருந்தன; மொத்த தொழி லாளர்களின் எண்ணிக்கையில் சுமார் 70% அவற் றில் வேலை செய்தார்கள்; பாக்டரித் தொழில் துறையின் மதிப்புச் சேர்க்கப்பட்ட உற்பத்தியில் 70%க்கு அதிகமாக அவை உற்பத்தி செய்தன. பாக்டரிகளை அவற்றில் வேலை செய்கின்ற தொழி லாளர்களது எண்ணிக்கைப்படி வரிசைப்படுத்

தாமல் அவற்றின் உற்பத்தி மூலதனத்துக்கேற்ப வரிசைப்படுத்தினுல் உற்பத்திக் குவிப்பு பற்றிய புள்ளிகள் இன்னும் அதிகமாகக் கூட இருக்கும். 1948ம் வருடப் புள்ளிவிவரங்களின்படி 2.5 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான உற்பத்தி மூலதனத்தை உடைமையாகக் கொண்டிருந்த பெரிய தொழில் நிறுவனங்கள் மொத்தத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் 9.1% ஆக இருந் தன; இந்தியாவின் பாக்டரித் தொழில்துறையில் மதிப்பு சேர்க்கப்பட்ட உற்பத்தியில் 90% அவை உற்பத்தி செய்தன. 10 முதல் 50 மில்லியன் ரூபாய்கள் மூலதனத்தைக் கொண்ட பெரிய நிறு வனங்கள் (மொத்த எண்ணிக்கையில் 1.3%) இந்த மதிப்பில் 30 சதவிகிதத்துக்கும் அதிகமாக உற் பத்தி செய்தன. இந்தியாவின் தொழில்துறையின் உற்பத்தியில் 60 சதவிகிதத்துக்கும் அதிகமான பங்கை 134 தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்தன.* இங்கே உற்பத்தியில் காணப்படுகின்ற அதிகமான குவிப்பு குறைவான வளர்ச்சியைக் கொண்ட தொழில்துறையின் காலனியாதிக்கக் கட்டமைப்பின் நேரடியான விளைவாக இருந்தது.

தொழில்துறையின் ஏதாவதொரு பிரிவைச் சேர்ந்த ஒரு சில பெரிய பாக்டரிகள் ஏகபோகங் களாக மாறத் தொடங்கின. உதாரணமாக, 1950-51இல் தேனிரும்பு மற்றும் அழுத்தப்பட்ட எஃகு முழுவதையும் மூன்று தொழிற்சாலைகள் உற்பத்தி செய்தன, இரண்டு பாக்டரிகள் மொத்த

* S. R. Mohnot, *Concentration of Economic Power in India*, Allahabad, 1962, p. 117.

அலுமினியத்தையும், இரண்டு பாக்டரிகள் எல்லாக் கார்களேயும் ஒரு பாக்டரி எல்லா ரயில் வண்டிகளேயும் உற்பத்தி செய்தன. சோடா, சைக்கிள் வண்டிகள், கப்பல்கள், பெட்ரோலியப் பொருள்கள், சிமெண்ட் மற்றும் டீசல் என்ஜின்கள் உற்பத்தியிலும் அநேகமாக இதே மாதிரியான நிலைமைதான் இருந்தது. குறைவான வளர்ச்சியடைந்த கன இயந்திரத் தொழில் துறையில் உற்பத்திக் குவிப்பு அதிகமாகவும் ஒப்பீட்டளவில் நன்கு வளர்ச்சியடைந்த நுகர்வுச் சரக்குகள் துறையில் உற்பத்திக் குவிப்பு குறைவாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். பெரிய பாக்டரிகள் நெசவாலைத் துறையில் உற்பத்தித் தகுதியில் 16 சதவிகிதத்தைக் கொண்டிருந்தன; சணல் தொழிலில்—15%, சர்க்கரைத் தொழிலில்—30%, சோப் தயாரிப்பில்—39%, காலணிகள்—74%, காகிதம்—66% மற்றும் பெயிண்ட், வார்னிஷ்—50%. உற்பத்திக் குவிப்பின் அளவிலுள்ள இந்த வேறுபாடு இந்தியாவில் முதலாளித்துவத் தொழில்துறையின் வளர்ச்சிக்கு அடிப்படை மிகவும் குறுகலாக இருப்பதை சந்தேகத்துக்கு இடமில்லாதபடி எடுத்துக் காட்டுகிறது.

காலனியாதிக்கம் முதலாளித்துவ வளர்ச்சியை அதிகமாகக் கட்டுப்படுத்தாத பிரிவுகளில், முதலாளித்துவம் ஓரளவுக்கு வேகமாக வளர்ச்சியடையக் கூடிய பிரிவுகளில் உற்பத்திக் குவிப்பு மட்டம் குறைவாகவே இருந்தது.

இதற்கு எதிர்மாறான முறையில், காலனியாதிக்கம் தடையாக இருந்த கனரகத் தொழில் துறையில் சில பெரிய தொழில் நிறுவனங்கள்

தோன்றின, அவற்றினுல் அந்நியப் போட்டியை எதிர்த்துச் சமாளிக்கக் கூட முடிந்தது. அவை ஏதாவதொரு பண்டத்தை உற்பத்தி செய்கின்ற ஏகபோகங்களாக வளர்ச்சியடைந்தன. அந்தத் துறையில் உற்பத்திக் குவிப்பு மிகவும் அதிகமாக இருந்தாலும் தேசிய ரீதியில் உற்பத்தியின் அளவு மிகவும் சொற்பமாகவே இருந்தது.

சுதந்திரத்துக்குப் பிந்திய முதல் ஒன்பது வருடங்களின் போது *(1947—1956)* இந்த மொத்தச் சித்திரம் அநேகமாக மாறவில்லை. பெரிய கம்பெனிகளின் பங்கு ஒரு சில தொழில் துறைகளில் மட்டும்தான் குறைந்தது (குறிப்பாக, பெட்ரோலியப் பொருள்கள், சைக்கிள் வண்டி, சிமெண்ட் மற்றும் டீசல் எஞ்சின்களை உற்பத்தி செய்யும் துறைகள்).

சுதந்திரமடைந்த ஆரம்ப வருடங்களில் தொழில்துறையில் மூலதன முதலீடு ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்தது; பழைய உற்பத்தித் துறைகளில் மட்டுமே அதன் வளர்ச்சி ஏற்பட்டது, புதியவை மெதுவாகத்தான் வளர்ச்சியடைந்தன. அதே சமயத்தில் உள்நாட்டுச் சந்தையின் குறுகிய தன்மையும் அதன் மெதுவான வளர்ச்சியும் இந்திய மூலதனம் நெடுங்காலத்துக்கு முன்னரே வேரூன்றி நிர்வாகம் செய்த தொழில்துறையின் முக்கிய பிரிவுகளில் புதிய தொழில் நிறுவனங்கள் ஏற்படுவதைத் தடுத்தன. அவற்றில் உற்பத்திக் குவிப்பு பழைய மட்டத்திலேயே இருந்தது. புதிய தொழில் துறைகளில் (பெட்ரோலியப் பொருள்கள், எஞ்ஜினீயரிங் மற்றும் சில) அவற்றின் உற்பத்திப் பொருள்

களுக்குத் தேவை அதிகரித்த பொழுது, அவற்றின் உற்பத்தியில் அந்நிய மூலதனத்தின் பங்கு குறைந்த பொழுது புதிய கம்பெனிகள் தோன்றின. தேசிய மூலதன முதலீடு விரிவடைந்தது, இத்தொழில் துறைகளில் வளர்ச்சிக் குறைவு அதிகமாக இருந்ததை எடுத்துக்காட்டிய தொடக்க நிலையில் உற்பத்திக் குவிப்பின் உயர்ந்த மட்டம் குறையத் தொடங்கியது. இப்போக்கு இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எனினும் மொத்தத்தில் உற்பத்திக் குவிப்பு மட்டம் இந்தியாவில் அதிகமாகவே இருக்கிறது; தொழில்துறை மூலதனத்தின் குவிப்பு மற்றும் மத்தியப்படுத்தலை ஒழுங்குபடுத்துகின்ற முதலாளித்துவ உற்பத்தி முறை விதிகளின் தாக்கத்தினல் அது இன்னும் அதிகரிக்கக் கூடும்.

மூலதனக் குவிப்பும் பெரிய முதலாளி வர்க்கம் மற்றும் ஏகபோக முதலாளி வர்க்கம் தொழில் துறையிலும் பொருளாதாரம் முழுவதிலும் வகிக்கும் ஆதிக்கம் விரிவடைவதும் இந்தியாவில் யதார்த்தமாக இருக்கின்றன என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அதிகமான மூலதனக் குவிப்பு—சிறப்பாக மிகப் பெரிய கம்பெனிகளின் கோஷ்டியில்—இந்தியாவுக்குக் குறியடையாளமாக இருக்கிறது.

இந்திய முதலாளி வர்க்கத்தின் ஏகபோகப் பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு சில பெரிய தொழில்துறை-நிதி மூலதன கோஷ்டிகளிடம் பெரும்பான்மையான பங்குகள் குவிந்திருக்கின்றன. 1951இல் 20 இந்திய ஏகபோக கோஷ்டிகள் 2.4 பில்லியன் ரூபாய்கள் மூலதனத்தைக்

கொண்ட 483 கம்பெனிகளில் அதிகாரம் வகித்தன. 1969இல் அவற்றின் பங்குகள் 25 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்தன, 1976க்குள் இப்பங்குகள் சுமார் இரண்டு மடங்காக வளர்ச்சியடைந்து 45 பில்லியன் ரூபாய்களாகப் பெருகிவிட்டன.*

டாடா, பிர்லா, சிங்கானியா, தாபர், கிர்லோஸ்கர், பாங்கூர் மற்றும் இவற்றைப் போன்ற இதர ஏகபோகங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேகமாக வளர்ச்சியடைந்தன. சுதந்திரத்துக்குப் பிந்திய வருடங்களில்—அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்த போதிலும்—இவை தேசியப் பொருளாதாரத்தில் தமது நிலைகளைக் கணிசமாக பலப்படுத்திக் கொண்டன. பிர்லா கோஷ்டியின் உடைமைகள் 1966/67இல் 4.5 பில்லியன் ரூபாய்களாக இருந்ததிலிருந்து 1975/76இல் 10.6 பில்லியன் ரூபாய்களாகப் பெருகிவிட்டன. 1976இல் இக்கம்பெனிகளின் மொத்த லாபம் 1.3 பில்லியன் ரூபாய்களாகும். இதே பத்தாண்டுகளில் டாடா கம்பெனியின் உடைமைகள் 5.2 பில்லியன் ரூபாய்களிலிருந்து 9.7 பில்லியன் ரூபாய்களாகப் பெருகின. இக்கம்பெனியின் மொத்த லாபம் 1 பில்லியன் ரூபாய்களாகும். மபத்லால் கம்பெனியின் உடைமைகள் இதே பத்தாண்டுகளில் 1 பில்லியனிலிருந்து 2.8 பில்லியன் ரூபாய்களாக, சுமார் மூன்று மடங்கு அதிகரித்தன.** மற்ற

---

* *The Economic Times*, Bombay, February 25, 1977, p. 1.

** *Ibid.*

பெரிய கம்பெனிகளிலும் இதே மாதிரியான நிலைமைதான் இருந்தது.

இந்தியாவில் முதலாளித்துவ வளர்ச்சி ஏற்றத் தாழ்வாகவும் முரண்பாடாகவும் ஏற்பட்ட படியால் வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கத்தின் உருவாக்கம் அதற்குள்ளே இருக்கின்ற முரணியல்பை அதிகப்படுத்துகிறது; பல முக்கியமான பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளில் முதலாளி வர்க்கத்தின் வெவ்வேறு பகுதிகளின் போட்டியைத் தீவிரப்படுத்துகிறது. சுதந்திரத்துக்குப் பிந்திய வருடங்களில் வேகமாக நடைபெற்ற மூலதனக்குவிப்பு ஏகபோக கோஷ்டிகளின் நிலையை பலப்படுத்தியது, அவற்றின் அதிகாரத்தை விரிவுபடுத்தியது, புதிய ஏகபோகங்கள் தோன்றுவதற்குரிய நிலைமைகளைப் படைத்தது. அதே சமயத்தில் பழைய ஏகபோகங்களின் மூலதனத்தில் சில அமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டன, அவை தமது பங்குக் கம்பெனிகளின் மீது அதிகாரம் செலுத்துவதற்குப் புதிய வடிவங்களை நிறுவின. தொழில்துறை மூலதனத்தின் பங்கின் வளர்ச்சியும் அதன் நிலை பலமடைவதும் ஏகபோகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் சமமாக இல்லாமல் நடைபெற்றன. தொழில்துறை மூலதன உருவாக்கம் அரசுத் துறையில் வேகமாக நடைபெற்றது. ஆனால் நாட்டில் பொருளாதாரப் புனரமைப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது ஏகபோக மூலதனத்தினுடைய அமைப்பின் மீது தாக்கத்தை ஏற்படுத்தாமலிருக்க முடியவில்லை.

சுதந்திரத்துக்குப் பிந்திய வருடங்களில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி வர்த்தக மூலதனம் தொழில்துறை மூலதனமாக மாற்றமடைவதைத் துரிதப்படுத்தியது. முதலீட்டுக் கம்பெனிகள் ஏகபோக கோஷ்டிகளிடம் முன்னைக் காட்டிலும் பெரிய பாத்திரத்தை வகிக்கத் தொடங்கின.

இந்தியாவின் மிகப் பெரிய ஏகபோக கோஷ்டிகள், சம்பந்தப்பட்ட கம்பெனிகளின் வர்த்தக மற்றும் கடன் நிர்வாக அமைப்பின் மத்தியப் படுத்தப்பட்ட வடிவமாக மட்டும் இனியும் இருக்கவில்லை. தொழில்துறை அவற்றின் நடவடிக்கையின் முக்கிய துறையாக ஆயிற்று. தொழில்துறை மூலதனப் புனருற்பத்தி அவற்றின் வாழ்க்கையின் ஜீவனுயிற்று. மூலதனத்தின் மத்தியப்படுத்தலும் குவிப்பும் வளர்ச்சியடைந்து அது தற்பொழுது ஏகபோக கோஷ்டிகளுக்குள் மூலதனத்தின் அங்கக அமைப்பின் வளர்ச்சியுடன் தவிர்க்க முடியாதபடி இணைக்கப்பட்டு விட்டது; ஏகபோக கோஷ்டிகளின் அதிகரித்த உடைமைகள் அவற்றின் நிர்வாகத்திலிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்ததைப் பிரதிபலித்ததைக் காட்டிலும் உற்பத்திக் குவிப்பையே மென்மேலும் அதிகமாகப் பிரதிபலித்தன. பிர்லா மற்றும் மபத்லால் கோஷ்டிகளில் இதைக் குறியடையாளமாகக் காண முடியும். ஒரு கோஷ்டிக்குள் தொழில்துறைக் கம்பெனிகளின் முக்கியத்துவம் வளர்ச்சியடைந்து தீர்மானகரமான நிலையை எட்டியபொழுது பல்வேறு முதலீட்டுக் கம்பெனிகளின் பாத்திரமும் செல்வாக்கும் அதிகரித்தன. ஆகவே இந்த கோஷ்டிகள் துணைக் கம்பெனிகளை நிர்

வகிப்பதற்கும் சுரண்டுவதற்கும் பயன்படுத்திய பழைய வர்த்தக-லேவாதேவி முறைகளைச் சிறிது சிறிதாகக் கைவிட்டன.

ஆகவே இந்தியாவின் தேசியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த அமைப்பு மாற்றங்கள் காலனியாட்சிச் சகாப்தத்தில் உருவாக்கப்பட்டிருந்த மூலதன அமைப்பின் பாரம்பரிய வடிவங்களின் தன்மையையும் மாற்றியமைத்தன. தொழிலமைப்பின் மேல்தட்டுகளின் வளர்ச்சியில் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளின் குறியடையாளமான வளர்ச்சிப் படிவத்தை இந்தியா மென்மேலும் அதிகமாகப் பின்பற்றி வருகிறது என்பது தெளிவு. ஆனால் இந்தியாவில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் உருவாக்கம் இன்னும் முடிந்து விடவில்லை; பல வடிவங்களுடைய பொருளாதாரத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி சிக்கலான அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. முதலாளித்துவம் ஏற்றத்தாழ்வான முறையில் வளர்ச்சியடைகின்றபடியால் வர்த்தக மற்றும் லேவாதேவி துறைகளிலிருந்து தொழில்துறைக்கு மூலதனத்தை மாற்றுவதும் தொழில்துறை மூலதனத்தின் உருவாக்கமும் (மூலதனக் குவிப்பின் தொடக்க நிலைக் கட்டத்தின் குறியடையாளமான கூறுகள்) நிதி மூலதனம் தோற்றமளிக்கின்ற அதே சமயத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கடன்துறையில் வங்கிகள் அல்லது தொழில்துறையில் ஏகபோக கோஷ்டிகளின் முழுமையான ஆதிக்கத்தை உறுதிப்படுத்துகின்ற அளவுக்கு இந்தியாவில் முதலாளித்துவம் இன்னும் போதிய வளர்ச்சி அடைய



19–775

வில்லே. ஆனல் அத்தகைய ஏகபோகம் உருவாக் கப்பட்டு வருகிறது; நிதி மூலதனத்தின் மேல்நிலே வடிவங்கள் தோன்றுவதற்குரிய நிலேமைகளே அது உருவாக்குகிறது.

முதலாளி வர்க்கத்தின் மேல்தட்டினர் சில சமயங்களில், சில நிலேமைகளில் பொருளாதார வளர்ச்சிச் செயல்திட்டம், உள்நாட்டுக் கொள்கை ஆகியவை குறித்து எந்தப் பாதையைத் தேர்ந் தெடுப்பது என்பது பற்றி தாக்கம் செலுத்த முடியும். இந்தியாவில் ஜனநாயக சக்திகள் எதிர்த்தாலும், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் ஆட்சி புரிகின்ற கோஷ்டியாக ஒன்றுசேருகின்ற போக்கு நிலவு கிறது, இது சில சமயங்களில் பலமும் அடை கிறது. இதன் முக்கியத்துவமும் செல்வாக்கும் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

## அத்தியாயம் ஆறு
## உலகப் பொருளாதார உறவுகளின் அமைப்பில் இந்தியாவின் இடம்

காலனியாதிக்கக் கட்டத்தின் போது இந்தியா சுதந்திரமாக வளர்ச்சியடைவதற்கு அநேகமாக எந்த வாய்ப்புமே இல்லாதிருந்தது. காலனி நாட்டின் மீது ஏற்பட்டிருந்த ஏகாதிபத்தியப் பொருளாதார மற்றும் அரசியல் ஆதிக்கம் அதன் மொத்த வளர்ச்சிப் போக்கையும் நிர்ணயித்தது; நாட்டின் உள்ளீடான சமூக-பொருளாதாரக்

கட்டமைப்பை மட்டுமல்லாமல் உலகப் பொருளாதாரத்தில் நாட்டின் இடத்தையும் நிர்ணயித்தது.

காலனியாதிக்க சகாப்தத்தில் நிலவிய சர்வதேச உழைப்புப் பிரிவினை உலகப் பொருளாதாரத்தின் புறநிலையான அவசியங்களினால் ஏற்படவில்லை, ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் விளைவாக ஏற்பட்டது. ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய தாய் நாட்டின் அதிகமான வளர்ச்சியடைந்த, முதிர்ச்சியுற்ற பொருளாதாரத்துக்குத் தகுந்தவாறு காலனிகளின் தேசியப் பொருளாதாரத்தைத் தகவமைத்துக் கொண்டனர்; அவ்வாறு செய்கின்ற பொழுது அதை உருச்சிதைத்தனர்; காலனி மற்றும் சார்புநிலை நாடுகளின் புனருற்பத்தி நிகழ்வுப் போக்கின் திசை வழி, வளர்ச்சி விகிதம் மற்றும் அளவுகளையும் உற்பத்திச் சக்திகளின் தன்மையையும் அவற்றின் வளர்ச்சியின் சமூக-பொருளாதார மாதிரியையும் முன் நிர்ணயம் செய்தனர்.

இன்றைய உலகத்தில் ஒரு நாட்டின் சமூகப் புனருற்பத்தியின் செயல்திறன் சர்வதேச உழைப்புப் பிரிவினையில், உலக உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையில் அதன் பங்கெடுத்தலின் அளவு மற்றும் தன்மையை மென்மேலும் சார்ந்திருக்கிறது.

இன்று எந்த நாடும்—மிகவும் பெரிய, மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகூட—முற்றிலும் ''திறந்த'' அல்லது முற்றிலும் ''மூடப்பட்ட'' அமைப்பாக இருக்க முடியாது, அதாவது தன்னுடைய பொருளாதாரத்தை உள்நாட்டுச் சந்தைக்கு மட்டும் அல்லது அந்நியச் சந்தைக்கு மட்டுமே முடுக்கிவிட முடியாது. உலகப் பொருளா

தார வளர்ச்சியின் பொதுவான போக்கு சர்வ தேச உழைப்புப் பிரிவினையை அதிகப்படுத்துவதை, மூலதனம் மற்றும் சரக்குகளின் சர்வதேசப் பாய்ச்சல் உலக உற்பத்தியைக் காட்டிலும் அதிக மான வேகத்தில் நடைபெறுவதை நோக்கி இருக்கிறது.

வளர்முக நாடுகளுக்கு அந்நியப் பொருளாதாரக் காரணிகள் விசேஷமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன; ஏனென்றால் அங்கே இயந்திரங்கள், தொழில்நுட்பவியல், தொழில் துறை மூலப்பொருள்களின் இறக்குமதி இல்லாமல் விரிவாக்கப் புனருற்பத்தி நடைபெற முடியாது. மேலும், இந்தியா உள்பட பெரும்பான்மையான வளர்முக நாடுகள் பொருளாதார வளர்ச்சியின் தேசிய மற்றும் சர்வதேசியக் காரணிகளை அறிவு பூர்வமான முறையில் ஒருங்கிணைத்து மொத்த தேசியப் பொருளாதார அமைப்பை உருவாக்குவதற்குப் போதுமான அளவுக்குப் பெரிய உள் நாட்டுச் சந்தையைக் கொண்டிருக்கவில்லை.

காலனியாதிக்க அடிமை முறையின் அரசியல் அமைப்பு வீழ்ச்சியடைந்து விட்டது, அதன் பொருளாதார அடிப்படைகள் தகர்ந்து விட்டன என்றாலும் முதலாளித்துவப் பொருளாதாரக் கட்டுக்கோப்பிற்குள் சர்வதேசப் பொருளாதாரப் பிணைப்புகளின் சென்ற காலத்திய வடிவங்கள் வளர்முக நாடுகளில் இன்னும் நீடிக்கின்றன.

முதலாளித்துவ அமைப்பின் சர்வதேச உழைப்புப் பிரிவினை—அதன் முக்கியமான கோட்பாடுகள் காலனியாதிக்க சகாப்தத்தில் உருவாக்கப்பட்டவை—வளர்முக நாடுகளைச் சுரண்டு

வதையும் ஆதிக்கம் செலுத்துவதையும் விரிவு படுத்த வேண்டும், பலப்படுத்த வேண்டும் என்ற ஏகாதிபத்தியவாதிகளின் விருப்பத்துடன் தவிர்க்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருக்கின்றது. விடுதலையடைந்த நாடுகளின் சமூக-பொருளாதார மாற்றத்தின் புறநிலையான தேவைகளுக்கு இது எதிராக நிற்கின்றது. அந்நியப் பிணைப்புகளை பொருளாதார வளர்ச்சிக் காரணியாக ஆக்குகின்ற வகையில் சர்வதேசப் பொருளாதார வளர்ச்சிப் பொறியமைவை மாற்றுகின்ற பிரச்சினையை அது முன்னணிக்குக் கொண்டு வருகின்றது.

இந்தியாவில் புனருற்பத்தியின் தன்மை, பொருளாதார வளர்ச்சியின் விலை மற்றும் இயற்கையான அளவுகள் மீது உலக முதலாளித்துவப் பொருளாதாரம் கணிசமான தாக்கத்தைச் செலுத்துகிறது. இத்தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பொறியமைவு சிக்கலானது, அதன் குண ரீதியான மற்றும் அளவு ரீதியான அம்சங்களை எப்பொழுதுமே சரியாக மதிப்பிட முடியாது. எனினும் ஒரு நீண்ட காலத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய பகுப்பாய்விலிருந்து சிற்சில நிலையான போக்குகளையும் பிணைப்புகளையும் திசைகளையும் சுட்டிக்காட்ட இயலும்.

உலகப் பொருளாதார இணைப்புகளின் அமைப்பில் இந்தியா வகிக்கின்ற பாத்திரம் முதலாவதாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மேல் அந்நியக் காரணிகள் கொண்டிருக்கின்ற தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது; இது உலகப் பொருளாதாரத்தைச் சர்வதேசப்படுத்துகின்ற போக்குடன் இணைக்கின்ற புறநிலையான நிகழ்வுப் போக்கு எனலாம்.

## 1. இந்தியப் பொருளாதாரத்தில் அந்நிய மூலதனம்

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இந்தியாவின் நிலை பிரதானமாக, மூலதனம் மற்றும் சரக்குகளின் சர்வதேசப் போக்குவரத்தில் இந்தியாவின் இடத்தின் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது.

அந்நிய மூலதனத்தின் போக்குவரத்து உபரி மதிப்பின் உற்பத்தியுடனும் அதை ஒதுக்கீடு செய்வதுடனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இணைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வளர்முக நாட்டுக்குள் அந்நிய மூலதனம் வருகிறதென்றால் லாபங்களும் வட்டியும் நாட்டிலிருந்து அனுப்பப்படுகின்றன என்பது தவிர்க்க முடியாத விளைவாகும். வெளியே அனுப்பப்படுகின்ற லாபங்களும் வட்டியும் பெரும்பாலும் உள்ளே வருகின்ற மூலதனத்தைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கும். ஆகவே மூலதனம் உள்ளே வருவது விடுதலையடைந்த நாட்டுக்குள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு உதவிய போதிலும் அதே சமயத்தில் அது சுரண்டல் களத்தை விரிவுபடுத்துகிறது, இந்தச் சுரண்டலைத் தீவிரப்படுத்துகிறது. உலகப் பொருளாதார வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் சுரண்டலின் களமும் தீவிரமும் தமக்குரிய குண ரீதியான கூறுகளையும் அளவு ரீதியான வரையறைகளையும் கொண்டிருக்கின்றன.

ஆரம்பக் கட்டங்களில், தொடக்க நிலையான மூலதனக் குவிப்பின் போது காலனி முறைச் சுரண்

டல் மூலதன ஏற்றுமதியுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை, அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் வர்த்தகத்துடனும் இராணுவ ரீதியான கொள்ளையுடனும் இணைக்கப்பட்டிருந்தது. இதற்கு இந்தியா தகுந்த ஒரு உதாரணமாகும். தொழில்துறை முதலாளித்துவக் கட்டத்தில் காலனி நாடுகள் அவற்றை அடிமைப்படுத்திக் கொண்ட நாடுகளின் சரக்குகளுக்குச் சந்தையாகவும் மூலப்பொருள்களை சப்ளை செய்கின்ற இடமாகவும் மாற்றப்பட்டன. அந்த சமயத்தில்தான் காலனியாதிக்கச் சுரண்டல் இயந்திரம் உருவாக்கப்பட்டது; ஆனால் மூலதன ஏற்றுமதி இன்னும் பெரிய அளவுக்குப் பாத்திரத்தை வகிக்கவில்லை.

முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ச்சியடைந்து ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் பெரிய நாடுகளில் தன்னை நிறுவிக் கொண்ட பொழுது சர்வதேச மூலதனப் போக்குவரத்து உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் செயல்முறையில் முக்கியமான கூறுகளில் ஒன்று ஆயிற்று. ஆனால் ஏகாதிபத்தியக் கட்டத்தில்தான் மூலதன ஏற்றுமதி காலனி மற்றும் சார்புநிலை நாடுகளைச் சுரண்டுவதில் முக்கியமான, தலைமையான வடிவமாக, ஏகாதிபத்தியத்தின் தூண்களில் ஒன்றாக மாறியது.

இன்றும் கூட மூலதன ஏற்றுமதி ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தில் தலைமையான இடத்தை வகிக்கிறது; ஆனால் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் கணிசமான அமைப்பு மாற்றங்களினால் மூலதன ஏற்றுமதி பலமாக பாதிக்கப்படுகிறது. வளர்முக நாடுகளின் அரசி

யல் மற்றும் பொருளாதார சுதந்திரம் வலுப்படுவதும், அவற்றின் உற்பத்திச் சக்திகளின் சமூக அமைப்பின் வளர்ச்சியும் மாற்றங்களும் மூலதன ஏற்றுமதியின் இயக்கியலையும் அமைப்பையும் கணிசமாக பாதிக்கின்றன.

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு வளர்முக நாடுகளுக்கு மூலதன ஏற்றுமதியின் இயக்கியல் மற்றும் அமைப்பில் இரண்டு கட்டங்களைத் தெளிவாக வரையறுக்க முடியும்: முதல் கட்டம் 1940க்களின் நடுப்பகுதியிலிருந்து 1960க்களின் நடுப்பகுதி வரை இருந்தது; இரண்டாவது கட்டம் 1960க்களின் நடுப்பகுதியிலிருந்து இன்று வரை. உலக யுத்தத்துக்குப் பிந்திய இரண்டு பத்தாண்டுகள் முழுவதும் வளர்முக நாடுகளுக்குத் தனியார் மூலதனத்தின் பாய்ச்சல் மெதுவாகத்தான் அதிகரித்தது, சில வருடங்களில் அது குறையவும் செய்தது.

முதலாளித்துவ நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளுக்கு வந்த நீண்ட கால மூலதனம், நீண்ட காலக் கடன்கள், மானியங்கள், உதவித் தொகைகளின் வடிவத்தில் வந்த அரசாங்க ''உதவி'' ஆகியவற்றின் மொத்தத் தொகையில் தனிமுதலாகவும் ஒப்புநிலையாகவும் அரசு மூலதனமே முக்கியமாக இருந்தது. தனியார் முதலீடுகள் குறைந்தது அரசின் ''உதவி'' அதிகரிப்பின் மூலம் ஈடுசெய்யப்பட்டது, அது மூலதனத்தின் சர்வதேசப் போக்குவரத்தில் மென்மேலும் சுறுசுறுப்பாகப் பங்கெடுக்கின்ற சக்தியாக ஆயிற்று. தனியார் மூலதனம் வருவது அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களால் குறைந்தது: முந்திய காலனி

நாடுகளின் மக்களினங்கள் தமது தேசிய விடுதலைக்காக நடத்திய போராட்டம் ஓங்கிய பொழுது முதலீடு செய்பவர்கள் தமது மூலதனத்தின் எதிர்காலத்தைப் பற்றி அச்சமடைந்தார்கள் என்பதும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் புதிய விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் முன்னேற்றங்களின் விளைவாக முதலீடு செய்வதற்கு வாய்ப்புகள் அதிகரித்தன என்பதும் இக்காரணங்களாகும்.

1960க்களின் நடுப்பகுதியிலிருந்து வளர்முக நாடுகளில் அந்நியத் தனியார் முதலீடு வளர்ச்சியடையத் தொடங்கியது; ஏனென்றால் இந்நாடுகள் பலவற்றில் அரசியல் நிலைமை ஸ்திரமடைந்தது, அந்நிய மூலதனத்தின் பால் அவற்றின் அணுகுமுறையும் தெளிவாயிற்று. மேலும், அதற்குள்ளாகத் தொழில்துறையில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்நாட்டு மூலதனச் சந்தையில் நிறைசெறிவு நிலை ஏற்பட்டதால் முதலீடு செய்வதற்கு வாய்ப்புக் குறைந்தது. வளர்முக நாடுகளில் சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்கள், பொருளாதார உள்ளமைப்பின் உருவாக்கம், தேசிய நிபுணர்களின் திறமைப் பெருக்கம், முடிவாக உள்நாட்டுச் சந்தை விரிவடைதல் மற்றும் உள்நாட்டுத் தேவையின் அமைப்பிலேற்பட்ட மாற்றம் ஆகியவற்றின் விளைவாக முதலீட்டு நிலைமை முன்னேற்றமடைந்தது. இவையனைத்தும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலிருந்து மூலதனம் தீவிரமாக வருவதை ஊக்குவித்தன. உலக புறச்சூழல் நெருக்கடி, மூலப்பொருள் மற்றும் சக்திப் பிரச்சினைகள்



20–775

தீவிரமடைந்தது வளர்முக நாடுகளுக்கு மூலதன ஏற்றுமதியைத் தீவிரப்படுத்தின.

இந்தப் போக்குகள் அனைத்துமே இந்தியாவில் பிரதிபலிக்கப்பட்டன. சுதந்திரமடைந்த முதல் நாட்களிலிருந்தே இந்திய அரசாங்கம் அந்நிய மூலதனத்தைத் தனியார் முதலீடுகள் மற்றும் அரசுக் கடன்களின் வடிவத்தில் ஈர்ப்பதன் அவசியத்தை உணர்ந்திருந்தது. ஏனென்றால் நாட்டில் மூலதனக் குவிப்பு மட்டம் மிகவும் கீழாக இருந்தது; விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான விஞ்ஞான-தொழில் நுட்பவியல் அறிவும் நவீனத் தொழில்நுட்பவியலும் அங்கே இல்லாதிருந்தன.

அடுத்த முப்பதாண்டுகளில் அந்நிய முதலீடுகளைப் பற்றி இந்தியாவின் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் நடைமுறையில் மாறவில்லை. ஆனால் நாட்டில் அந்நிய மூலதனத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகின்ற பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன (1951, 1969 மற்றும் 1973ம் வருடச் சட்டங்கள்).

1948க்கும் 1961க்கும் இடையில் அந்நிய நாடுகளிலிருந்து வந்த தனியார் மூலதனம் 1.2 பில்லியன் ரூபாய்கள் மட்டுமே. சர்வதேச மூலதனப் பாய்ச்சலின் திசை மாறியதுடன் இது முற்றிலும் பொருந்துவதே. அந்த சமயத்திலும் அதற்குப் பிறகும் அந்நியக் கம்பெனிகளின் உடைமைகளின் வளர்ச்சி அந்நிய மூலதனம் நாட்டுக்குள் வந்ததன் மூலமாக ஏற்படவில்லை; இந்தியாவின் நிதி வளத்தை (அரசு வளங்கள் உள்பட) இந்தியர்களிடமிருந்து கூட்டுப்பங்குகள்,

கடன்மதிப்பு, கடன்களின் வடிவத்தில் ஈர்த்ததன் மூலமே வளர்ச்சியடைந்தன.

புதிதாக ஏற்பட்ட அந்நியத் துணைக் கம்பெனிகள் மற்றும் இணைக் கம்பெனிகளைப் பற்றிய புள்ளிவிவரங்கள் புதிய அந்நிய மூலதன வருகை விகிதம் குறைவாக இருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. 1974 இல் சுமார் 550 அந்நியத் துணைக் கம்பெனிகள் இந்தியாவில் இயங்கின; அவை பின்வரும் நாடுகளைச் சேர்ந்தவை: பிரிட்டன்—320, அமெரிக்கா—88, ஜப்பான்—17, மேற்கு ஜெர்மனி—12, ஸ்விட்சர்லாந்து—11, பிரான்ஸ்—8, ஹாலந்து—5. 1978க்குள் அவற்றின் எண்ணிக்கை 320 ஆகக் குறைந்து விட்டது; பிரிட்டிஷ் கம்பெனிகள்—100, அமெரிக்கக் கம்பெனிகள்—24, மேற்கு ஜெர்மானியக் கம்பெனிகள்—7, ஸ்விட்சர்லாந்துக் கம்பெனிகள்—6, ஜப்பானியக் கம்பெனிகள் — 4 ஆகிய எண்ணிக்கைகளில் குறைந்து விட்டன. சர்வதேசக் கார்ப்பொரேஷன்களின் துணைக் கம்பெனிகளில் பெரும்பான்மையான 217 கம்பெனிகள் தொழில்துறை, போக்குவரத்து, நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருந்தன.

1969 மற்றும் 1979க்கு இடையில், பாதி மூலதனத்துக்கும் அதிகமான பங்கு அந்நிய முதலீட்டுக்காரர்களிடமிருந்த இணைக் கம்பெனிகளின் எண்ணிக்கை 233இலிருந்து 125 ஆகக் குறைந்தது.

சர்வதேச ஏகபோகங்களின் துணைக் கம்பெனிகளில் 46 இந்தியாவில் இயங்கிக் கொண்டிருந்தன; இவற்றில் 28 கம்பெனிகள் 1950க்கு முன்னர் பதிவு செய்யப்பட்டவை; மற்றும் 12 கம்பெனி

கள் அந்த அடிப்படையில் அமைக்கப்பட்டவை. 1950 மற்றும் 1975க்கு இடையில் இந்தியாவில் ஆறு அந்நியத் துணைக் கம்பெனிகள்தான் நிறுவப் பட்டன.*

1960க்களின் நடுப்பகுதியில் அந்நியத் தனியார் முதலீடுகளின் பெயரளவிலான தொகை 9.4 பில்லியன் ரூபாய்களாக இருந்தது. 1960க்களின் இரண்டாம் பாதியில் அந்நிய முதலீடுகள் வேகமாக வரத் தொடங்கின. 1978-79க்குள் அவை இரண்டு மடங்காகப் பெருகி 24 பில்லியன் ரூபாய்கள் (பணவீக்கத்தின் விளைவாக ரூபாயின் மதிப்புக் குறைந்ததைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல்) அளவை எட்டின. இம்மூலதனத்தின் பெரும்பகுதி தொழில்துறை மற்றும் வர்த்தக நிறுவனங்களிலும் முதலீடு செய்யப் பட்டது; சிறு பகுதி வங்கிகளிலும் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளிலும் முதலீடு செய்யப்பட்டது. ஆகவே 1948 மற்றும் 1978-79க்கு இடையில் அந்நியத் தனியார் முதலீடுகளின் பெயரளவிலான மொத்தத் தொகை 8 மடங்கு அதிகரித்தது. ரூபாய் மதிப்புக் குறைந்தபடியால் உண்மையான வளர்ச்சி குறைவாகத்தான் இருந்தது. நேரடியான முதலீடுகளில் 73% அந்நிய மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்த கம்பெனிகளில் செய்யப் பட்டது; 26.5% அந்நியக் கம்பெனிகளின் துணைக் கம்பெனிகளில் செய்யப்பட்டது.

1970க்களில் பெருந் தொழில்துறையில்

---

* *Mainstream*, V. XVIII, № 26, New Delhi, February 23, 1980, p. 33.

செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்த அளவில் அந்நிய மூலதனம் 25% ஆக அல்லது 1948இல் இருந்ததை விட பாதியளவாக இருந்தது.

அந்நிய மூலதன முதலீடுகளின் பிரிவுக் கட்ட மைப்பிலும் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன; இவை நாட்டின் பொருளாதார நிலைமையையும் —உற்பத்திச் சக்திகளின் புதிய அமைப்பு அங்கே ஏற்பட்டிருந்தது — விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் புரட்சியின் தாக்கத்தில் மூலதன ஏற்றுமதியின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை யும் பிரதிபலித்தன.

காலனியாதிக்கக் காலத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது பழைய காலனி துறைகளில் செய்யப் பட்டிருந்த முதலீடுகளின் தனிமுதலான அளவு குறைந்து புதிய தொழில் துறைகளில் முதலீடு அதிகரித்தது. கன இயந்திரத் தொழில் துறை உள்பட தொழில்துறை உற்பத்தியில் அதிகமான மூலதனம் முதலீடு செய்யப்பட்டது. மொத்தத் தில் அந்நிய மூலதனம் உள்நாட்டுச் சந்தை யின் வளர்ச்சியை அதிகமாக ஒட்டியிருந்தது (முந்திய பத்தாண்டுகளின் போது நேரடியான அந்நிய முதலீட்டில் 90%க்கும் அதிகமாக தயாரிப்புத் தொழில் துறையில் முதலீடு செய்யப் பட்டது).

அந்நிய முதலீட்டாளர்களுக்கு இடையிலிருந்த சமநிலையும் மாறியது. 1974இல் இந்தியாவில் மொத்த அந்நியத் தனியார் முதலீடுகளில் பிரிட் டிஷ் தனியார் முதலீடுகள் 35% ஆக மட்டுமே இருந்தன; அமெரிக்கா தன்னுடைய பங்கை 27% அதிகரித்திருந்தது; மேற்கு ஜெர்மனியின் பங்கு

9.3% ஆகவும் இத்தாலியின் பங்கு 4.3% ஆகவும் இருந்தன.*

அந்நிய முதலீடுகளின் பிரிவு அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அரசுத் துறை மற்றும் தேசிய மூலதனத்தின் நிலைகள் பலமடைந்திருந்தாலும் இந்தியா இன்னும் ஏகாதிபத்தியத்தால் சுரண்டப்படுகின்ற நாடாகவே இருக்கிறது; நாட்டில் படைக்கப்படுகின்ற உபரி மதிப்பில் கணிசமான பகுதியை லாபங்களாகவும் கடன்களுக்கு வட்டியாகவும் வெளியே அனுப்பும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது. அந்நிய மூலதனத்தின் நோக்கங்களும் அதன் புனருற்பத்தியின் அளவும் பெரும்பாலும் மாறுத படியே இருக்கின்றன.

தனியார் அந்நிய முதலீடுகள் தயாரிப்புத் தொழில் துறைக்கு மாற்றப்பட்டதன் விளைவாக தேசியச் சந்தையுடனும் இந்தியாவின் புனருற்பத்தி நிகழ்வுப் போக்குடனும் அவற்றின் பிணைப்புகள்—மற்ற வளர்முக நாடுகளைப் போலவே—பலமடைந்தன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்நிய முதலீடுகளில் பெரும்பகுதி முன் போலவே குறிப்பிட்ட துறைகளில் மட்டுமே முதலீடு செய்யப்பட்டது. தயாரிப்புத் தொழில் துறையில்கூட (சுரங்கத் தொழிலைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை) குறைவான எண்ணிக்கையில் சில பிரிவுகள் மட்டுமே, அதாவது, பிரதானமாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் பொருள்

---

* *Reserve Bank of India Bulletin*, Bombay, March 1978, p. 175.

களை உற்பத்தி செய்கின்ற பிரிவுகள் மட்டுமே வளர்க்கப்படுகின்றன. அந்நிய மூலதனத்தின் லாபத்தில் பெரும் பகுதி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு மாற்றப்படுகிறது. இப்பகுதி ஏற்றுமதி செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பைக் காட்டிலும் கணிசமான அளவுக்கு அதிகமாக இருக்கிறது.

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களும் சர்வதேசக் கார்ப்பொரேஷன்களும் இன்று வளர்முக நாடுகளின் தொழில்துறை உற்பத்தியில் சுமார் 20% மற்றும் ஏற்றுமதியில் 40% தமது நிர்வாகத்தில் வைத்திருக்கின்றன. இவை இந்தியாவிலும் மற்றும் இதர வளர்முக நாடுகளிலும் தனியார் அந்நிய மூலதனத்தின் நிலையை நிர்ணயிக்கின்ற முக்கியமான காரணியாக இருக்கின்றன. இந்த ஏகபோகங்கள் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது அந்நிய முதலீடுகளின் கட்டமைப்பின் மீதும் வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தில் அவற்றின் பாத்திரத்தின் மீதும் மிக அதிகமான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது. ஒரு சர்வதேச ஏகபோகக் கார்ப்பொரேஷனுக்குச் சொந்தமான தனித் தொழில் நிறுவனங்களும் உற்பத்தி இணையங்களும் வெளிநாடுகளில் நிறுவப்பட்டிருந்த போதிலும் அவை அந்த சர்வதேச ஏகபோகத்தின் ஒரு பகுதியே. அவை எந்த நாட்டிலிருந்தாலும் தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அந்த ஏகபோகத்துக்குச் சொந்தமான மற்ற நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, நிறுவப்பட்டிருக்கின்ற நாட்டின் பொருளாதார அமைப்புடன் அல்ல.

ஆகவே ஏகபோகங்களின் இத்துணைக் கம்பெனி கள் வளர்முக நாடுகளில் பாரம்பரிய அடிப்படை யின் மீது ஒரு வகையான மேற்கட்டுமானமாக இருக்கின்றன. அவை மூலப்பொருள்களையும் நிதி வளங்களையும் மிகச் சிறந்த தொழிற் திறனுடைய தொழிலாளர்களையும் தேசிய உற்பத்தித் துறை யிலிருந்து பறித்துக் கொள்வதால் இந்த அடிப் படையைப் பாதுகாக்க முற்படுகின்றனவே தவிர, அதை மாற்றுவதில்லை.

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் கடந்த பத்தாண்டுகளில் வளர்முக நாடுகளிலிருந்து லாபங்களாக மட்டும் சுமார் 80 பில்லியன் டாலர்களை வெளியே அனுப்பியிருக்கின்றன. உலகத்தின் இப்பகுதியில் அவை செய்திருக்கும் மொத்த முதலீடுகளுக்கு இத்தொகை ஏறக் குறைய சமமாக இருக்கிறது. தனியார் முதலீடு களுக்குக் கிடைத்த லாபங்களின் வடிவத்தில் மாற்றப்பட்ட தொகை மேற்கு நாடுகள் இந்த வளர்முக நாடுகளுக்குக் கொடுத்த அரசு ''உதவி யின்'' அளவைக் காட்டிலும் அதிகமாகும். புதிய தொழில்நுட்பவியலைப் பெறுவதற்கு வளர்முக நாடுகள் செலுத்திய தொகைகளையும் இங்கே சேர்த்துக்கொள்ள வேண்டும். இவை வருடத் துக்கு 3—5 பில்லியன் டாலர்களாக இருந் தன.

வளர்முக நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற நிதி நட்டத்தைப் பற்றி மிகவும் உத்தேசமான மதிப்பீட்டையே மேலே தந்திருக்கிறோம். அந்த நாடுகள் தமது தேசியப் பொருளாதாரத்தைப் புனரமைக்கின்ற செலவுகளுக்காக அந்நிய மூல

தனத்தை கவர்ந்திழுக்க முயற்சிப்பதால் இத்தகைய இழப்புகள் ஏற்படுகின்றன.

அந்நிய மூலதனத்தைப் பொறுத்த வரை இந்தியாவின் உழைக்கும் மக்களால் படைக்கப்பட்ட உபரி மதிப்பில் கணிசமான பகுதியை விழுங்குவதற்கு அது தன்னுடைய பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் வசதிகளை உபயோகிக்கிறது. 1971-72இல் அந்நியக் கம்பெனிகளின் லாபங்கள் 1.7 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமாக இருந்தன, 1978-79க்குள் அவை 2.5 பில்லியன் ரூபாய்களுக்கும் கூடுதலாக அதிகரித்தன, அதாவது $1/_2$ மடங்கு அதிகரித்தன. 1969-70க்கும் 1976-77க்கும் இடையில் இந்தியாவில் இயங்கிக் கொண்டிருந்த அந்நியக் கம்பெனிகள் அனுப்பிய தொகை 722.6 மில்லியன் ரூபாய்களிலிருந்து 1.2 பில்லியனாக உயர்ந்தது.

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் மிகவும் தீவிரமான உழைப்பை அவசியமாக்குகின்ற, வாழ்க்கைச் சூழலுக்குத் தீங்கான நடவடிக்கைகளை வளர்முக நாடுகளில் நிறுவுகின்ற விதத்தில் தம்முடைய தொழில்நுட்ப அமைப்பைப் பிரித்துக் கொள்கின்றன. இம்முறையின் மூலம் அவை உற்பத்திச் செலவுகளைக் குறைக்க முடியும் (வளர்முக நாடுகளில் உழைப்பு மலிவாகக் கிடைக்கிறது), தங்களுடைய மூலதனங்களுக்கு லாபத்தை அதிகப்படுத்த முடியும். அந்நிய மூலதனத்துக்குச் சொந்தமான அல்லது அதனால் நிர்வகிக்கப்படுகின்ற கம்பெனிகளில் ஒரு இந்தியத் தொழிலாளியின் சராசரிக் கூலி அதே போன்ற கம்பெனியில் அமெரிக்கத் தொழிலாளியின் வருமானத்தில்

சுமார் 10% ஆக மட்டுமே இருக்கிறது என்று அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் சுட்டிக் காட்டுகிறது.

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் நடவடிக்கைகளின் மூலம் ஒரு விசேஷ ரகமான சர்வ தேச உழைப்புப் பிரிவினை ஏற்பட்டிருக்கிறது. வளர்முக நாடுகள் தேசியப் புனரமைப்பையும் பொருளாதார சுதந்திரத்தையும் சாதிப்பதற்குப் பின்பற்றுகின்ற பாதையில் முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் விசேஷமான தடையாக இது பயன்படுகின்றது.

இந்தியா தன்னுடைய தேசிய வளர்ச்சியின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் அந்நிய மூலதனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் சட்டங்களை இயற்றியுள்ளது. முதலாவதாகவும் முதன்மையாகவும் அரசுத் துறை இந்த விரிவாக்கத்தை எதிர்க்கின்ற பொருளாதாரத் தடையாக இயங்குகிறது; ஏனென்றால் அது தேசியப் பொருளாதாரத்தில் கேந்திரமான துறைகளில் ஆதிக்கம் செலுத்துகிறது. தனியார் தேசிய மூலதனம் என்ற வளரும் சக்தியை ஒருவர் அலட்சியம் செய்ய முடியாது. அது உள்நாட்டுச் சந்தையில் தன்னுடைய நிலைகளை ஒழுங்குபடுத்தி, பலப்படுத்திக்கொள்வது அந்நிய மூலதன முதலீட்டின் அமைப்பு மற்றும் முதலீட்டுத் திசையின் மீது அதிகமான தாக்கம் செலுத்துகின்றது. இந்தியா அந்நிய மூலதனத்தை முற்றிலும் விலக்கிவிட முடியாது; ஏனென்றால் அதன் தேசியப் பொருளாதாரத்துக்குக் கூடுதலான நிதிகளும் புதிய தொழில்நுட்பவியலும் அவசியமாகும்.

அதே சமயத்தில் தனியார் தேசிய மூலதனத்தின் —சிறப்பாக, அதன் ஏகபோக கோஷ்டிகளின் — வளர்ச்சி மூலதனத்தை சர்வதேசமயமாக்கு கின்ற பொது நிகழ்வுப் போக்கினுள் இந்தியாவைத் தவிர்க்க முடியாதபடி இழுக்கிறது.

இச்சூழ்நிலையில் பொருளாதார வளர்ச்சியின் மொத்த செயல்திட்டத்தை நிர்ணயிக்கின்ற சுறு சுறுப்பான அரசுக் கொள்கை அந்நிய முதலீட்டை முதலாவதாகவும் முதன்மையாகவும் நாட்டின் தொழில்நுட்பவியல் முன்னேற்றம் மற்றும் உற் பத்திச் சக்திகளின் வளர்ச்சி என்ற துறைகளுக் குள் செலுத்துவதாகவே இருக்க வேண்டும். நாட் டிலுள்ள அந்நியக் கம்பெனிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது, அதிகமான கூட்டுக் கம் பெனிகள் அமைக்கப்படுகின்றன, தொழில்நுட்ப வியல் ஒத்துழைப்பு குறித்து நீண்ட கால உடன் பாடுகள் அதிகமாகக் கையெழுத்திடப்படுகின்றன.

1980ம் வருடத் தொழில்துறைக் கொள்கை யின்படி தனியார் இந்தியக் கம்பெனிகளுக்கும் அந்நியக் கம்பெனிகளுக்கும் இடையில் தொழில் நுட்ப உடன்பாடுகளுக்குரிய நடைமுறை கணிச மான அளவுக்கு எளிமைப்படுத்தப்பட்டது. அந்நியக் கம்பெனிகள் தமது ஆதிக்கத்தை ஏற் படுத்திக் கொள்ளக் கூடிய, தேசிய மூலதனத்தைக் கீழ்ப்படுத்தக் கூடிய வாய்ப்புகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்பட்டன. உதாரணமாக, ஒரு கம் பெனி தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்து உடன் படிக்கை செய்யுமானல் அக்கம்பெனி தன்னுடைய பங்குகளை அந்நியக் கம்பெனிக்கு விற்பனை செய்வது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருக்

கிறது. அது மூலதனத்தில் முற்றிலும் இந்திய மயமாக இருக்க வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் அவசியங்களுக்குத் தக்க முறையில் உற்பத்திப் பொருள் இருக்க வேண்டும். இந்தியத் தரப்பினர் கொடுக்கும் பணம் அந்த உற்பத்திப் பொருளின் விற்பனை விலையில் 5 சதவிகிதத்துக்கு அதிகமாக இருக்கக் கூடாது.

இந்தியாவும் மற்ற வளர்முக நாடுகளும் அரசியல் சுதந்திரமடைந்த பொழுது ஏகாதிபத்திய ஏகபோகங்கள் அவற்றின் தேசியப் பொருளாதாரத்தின் மீது தாக்கம் செலுத்துகின்ற வாய்ப்புகள் குறைக்கப்பட்டன. விடுதலையடைந்த மற்ற பல நாடுகளைப் போல இந்தியாவும் அந்நிய மூலதனத்தின் விஸ்தரிப்பிலிருந்து தேசியப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கின்ற முனைப்பான கொள்கையைப் பின்பற்றியது; அதில் பெரிய அளவுக்கு வெற்றியும் அடைந்தது.

ஆனால் ஏகாதிபத்திய அரசியல் ஆதிக்கத்தை ஒழித்துவிட்டால் அது பொருளாதார விடுதலைக்கு உத்தரவாதமல்ல. ஒவ்வொரு உறுப்பினருக்கும் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்துகின்ற உலகப் பொருளாதார உறவுகளின் ஜனநாயக அமைப்பை நிறுவுவதற்கு முன்பு ஏகாதிபத்திய ஏகபோகங்களின் விஸ்தரிப்பை எதிர்த்துப் பல வருடகாலம் தீவிரமாகப் போராட வேண்டும்; கடந்த காலத்திலிருந்து பாரம்பரியமாகப் பெற்றிருக்கின்ற உலகப் பொருளாதாரப் பிணைப்புகளைப் புனரமைப்பதற்குத் தீவிரமாகப் பாடுபட வேண்டும்.

ஆனால் இன்றைய நிலைமைகளில் கூட அந்நிய

மூலதனத்தை தேசியப் பொருளாதாரத்தின் நலன் களுக்கு உச்ச அளவில் உபயோகிப்பது முற்றிலும் சாத்தியமே. அது தேசிய அரசு செய்ய வேண்டிய வேலை. ஏனென்றால் அந்நிய மூலதனத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடியதும், இயற்கை மற்றும் உழைப்பு வளங்களைச் சுரண்டு வதன் வீச்சையும் அளவையும் குறைக்கக் கூடியதும் அதுவே; கடைசியாக, அந்நிய மூலதனத்தை விலங்கிடுகின்ற அல்லது சமத்துவமளிக்காத நிபந்தனைகளின் பேரில் சமீப எதிர்காலத்தில் கவர்ந்திழுக்க வேண்டிய அவசியமில்லாத அளவில் மூலதனக் குவிப்புக்கு உள்நாட்டு ஆதாரங்களைத் திரட்டக் கூடியதும் அதுவே.

தனியார் மூலதனப் போக்குவரத்தைப் போலல் லாமல், அரசு மூலதனம் உற்பத்தியுடனும் உபரி மதிப்பை ஒதுக்கீடு செய்வதுடனும் நேரடியாக இணைக்கப்படவில்லை. அரசு மூலதனத்தின் பெரும் பகுதி இப்பொழுது கடன்கள், கடன் வசதிகள் மற்றும் உதவித் தொகைகளின் வடிவத்தில் வளர் முக நாடுகளுக்குள் செலுத்தப்படுகின்றது. மேலும் மூலதன மதிப்பின் போக்குவரத்து, அதற்கு எதிர்த் திசையில் நடைபெறுகின்ற கடன்கள் மற்றும் வட்டித் தொகைகள் திருப்பிக் கொடுத்தல் ஆகிய வற்றின் சமநிலை இதுவரை வளர்முக நாடுகளுக்கு சாதகமான முறையில்தான் அமுத்தப்பட்டிருக் கிறது. அதன் மூலம் தனியார் மூலதன நட வடிக்கைகளினால் இந்நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் இழப்புக்களும் கூட ஓரளவுக்கு ஈடு செய்யப்படு கின்றன.

அரசு மூலதனத்தின் புனருற்பத்தியின் நோக்

கங்கள் மற்றும் வரையறைகளின்—அதன் உபயோகம் தேசிய அரசினுல் கட்டுப்படுத்தப்படுகின்ற பொழுது—ஓரளவுக்கு விரிவான பரப்பு மற்றும் இயங்கும் தன்மையைக் கருத்தில் கொண்டு, அதன் பிரிவுக் கட்டமைப்பு வளர்முக நாடுகளின் உள்நாட்டுத் தேவைகளை அதிக முழுமையாகப் பூர்த்தி செய்கிறது.

ஆனுல் அரசு மூலதனப் பாய்ச்சலைக் கட்டுப்படுத்தக் கூடாது அல்லது அந்நிய அரசுக் கடன்களின் சுமை முடிவில்லாதபடி வளர்ச்சியடைய அனுமதிக்க வேண்டும் என்று இங்கே கூறப்படவில்லை. இந்த இரண்டு காரணிகளும் கடன் கொடுத்த நாடுகள் மற்றும் கடன் வாங்கியவர்களின் அரசியல் திசையமைவினுல் மட்டுமல்லாமல், எல்லாவற்றுக்கும் மேலாக, உலகப் புனருற்பத்தி நிகழ்வுப் போக்கின் பொது நிலைமைகளினுலும், அதன் இறுதி விளைவுகளினுலும்—சிறப்பாக, தனியார் அந்நிய மூலதனத்தின் புனருற்பத்தியுடன் அதன் உறவினுலும் வழங்கீடுகளின் சமநிலையின் நிலைமையினுலும் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே அரசுக் கடன்கள் வழங்கப்படுகின்ற அளவும் நிபந்தனைகளும் மிகவும் தாராளமாக இருந்தாலும் வளர்முக நாடுகளின் மெய்யான தேவைகளுக்கு அவை பொருந்துவதாகச் சிறிதும் சொல்ல முடியாது, மேலும் அவை திருப்பிக் கொடுக்கின்ற பிரச்சினைகளையும் தம்முடன் கொண்டு வருகின்றன.

முதலாளித்துவ நாடுகளிலிருந்து வருகின்ற அரசு மூலதனத்தின் முக்கியத்துவத்தை அளவு ரீதியாக மட்டுமே மதிப்பிட்டு விட முடியாது.

முதலாளித்துவச் சுரண்டல் பொறியமைவில் அதன் பாத்திரம் நாணயம் அல்லது வேறு அலகுகளில், நாடுகளின் ஒரு கோஷ்டியிலிருந்து மற்ருெரு கோஷ்டிக்கு மதிப்பின் இயக்கத்துடன் பொருந்தவில்லை.

விஞ்ஞான-தொழில்நுட்பவியல் புரட்சி தொழில்துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளின் உற்பத்திச் சக்திகளைப் புதிய மற்றும் உயர்வான மட்டத்துக்கு உயர்த்தினுலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகள் மீது அது எத்தகைய விளைவையும் கொண்டிருக்கவில்லை. ஆகவே இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த நாடுகளில் மூலதனத்தைப் பயன்படுத்தும் நிபந்தனைகளின் சமமற்ற தன்மை மிகவும் குறிப்பாக இருந்தது. சமூக மூலதனத்தின் குறைவான அங்கக அமைப்பு, எத்தகைய முதலீட்டினுலும் பாதிக்கப்படாத பாரம்பரியப் பிரிவு ஒன்று பொருளாதாரத்தில் இருந்தது, குறைவான வளர்ச்சியடைந்த உள்ளமைப்பு, குறுகலான உள்நாட்டுச் சந்தை மற்றும் தேர்ச்சியுடைய தொழிலாளர்கள் பற்ருக்குறை—தொழில்துறை உற்பத்தியை அமைப்பு ரீதியாக்கும் பொழுது அந்நிய மூலதனங்களை அதிகப் பயனுள்ள முறையில் உபயோகிப்பதை உறுதிப் படுத்தக்கூடிய கூடுதலான செலவை இவையனைத்தும் அவசியமாக்கின.

சோஷலிஸ்ட் அல்லாத நாடுகளிலிருந்து அரசு நிதி வளங்களை மிகவும் அதிகமான அளவில் பெறுகின்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்ருகும். இவை நீண்ட காலக் கடன்கள், உதவித் தொகைகள், விவசாயப் பொருள்கள், காப்புரிமைகள் மற்றும்

உரிமை வழங்கீடுகள் விற்பனை உள்பட தொழில் நுட்பத் தகவல் என்ற வடிவத்தில் கிடைக்கின்றன. பெரும் பகுதி (எல்லா வளங்களிலும் 90 சதவிகிதத்துக்கு மேல்) நீண்ட காலக் கடன்களின் வடிவத்தில் வருகிறது. 1950 மற்றும் 1979க்கு இடையில் இந்தியா 186.8 பில்லியன் ரூபாய்களுக்கு அதிகமான கடன்கள், உதவித் தொகைகள், உணவு உதவி ஆகியனவற்றைப் பெற்றிருக்கிறது.* நாட்டின் அந்நியக் கடன்களில் 67% அமெரிக்காவிலிருந்தும் அதன் ஆதிக்கத்திலுள்ள சர்வதேச ஸ்தாபனங்களிலிருந்தும் வாங்கப்பட்டிருக்கின்றன. சுமார் 12% பிரிட்டனிடமிருந்தும் சுமார் 10% மேற்கு ஜெர்மனியிலிருந்தும் வாங்கப்பட்டிருக்கின்றன. இன்று இந்தியாவின் அந்நியக் கடன்கள் அதன் தேசிய வருமானத்தில் (நடப்பு விலைகளில்) $^1/_4$ பங்குக்கும் அதிகமாகும்; 1950-51 முதல் 1978-79 முடிய திருப்பிக் கொடுப்பதற்கும் வட்டிக்கும் 78.5 பில்லியன் ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. 1980-81இல் இந்தியா தன் கடன்களைத் திருப்பிக் கொடுக்கின்ற வகையில் சுமார் 5.2 பில்லியன் ரூபாய்களைச் செலவழித்தது.** கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் தொகைகள் அதிகரிக்கின்றபொழுது பொருளாதார வளர்ச்சிக்குக் குறைவான தொகையே மிஞ்சுகிறது, அந்தத் தொகை

---

* *Economic Survey, 1979-80*, New Delhi, 1980.

** அ. ஏ. கிரஞேவ்ஸ்கி, **அந்நிய நிதி வளங்களும் இந்தியாவின் பொருளாதார சுதந்திரமும்,** நெளகா பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 139 (ருஷ்ய மொழியில்).

யிலும் பெரும்பகுதி வழங்கீடுகளின் பற்றுக் குறையைச் சரி செய்வதற்குப் பயன்படுகிறது. 1978-79இல் இந்த வழங்கீடுகள் உபயோகிக்கப் பட்ட வளங்களில் 62 சதவிகிதத்துக்கும் அதிக மாக இருந்தன.*

முதலாளித்துவ நாடுகளிலிருந்து பெறுகின்ற ''வளர்ச்சிக்கான அரசு உதவிக்கு'' இந்தியா அதிகமான விலையைத் தர வேண்டியிருக்கிறது என் பதை இந்த விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதற்குக் கிடைத்த அந்நிய உதவிகளில் சுமாராகப் பாதியளவை கடன்களைத் திருப்பிக் கொடுப் பதற்கும் வட்டிக்காகவும் செலவிட்டது. நாட்டுச் செல்வம் இம்முறையில் வெளியே செல்வது ஏற்று மதியின் மூலம் கிடைக்கின்ற வருமானங்களைக் குறைக்கிறது, நாட்டின் அந்நியச் செலாவணி இருப்புக்களின் மீது தீங்கான விளைவைக் கொண் டிருக்கிறது.

இந்தியா முதலாளித்துவ நாடுகளிடமிருந்து அந்நியக் கடன்கள் மற்றும் கடன் வசதிகளைப் பெறுவதன் மூலம் தன்னுடைய அவசரமான பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்வது அதற்குப் பொருளாதார நெருக்கடிகளை—அரசியல் நெருக் கடிகளையும் கூட—ஏற்படுத்தும். இந்த நெருக்கடி கள் காலப் போக்கில் தீவிரமடையும். கடன் சுமை மூலதனக் குவிப்பு வேகத்தையும் உள்நாட்டு வளங்களைச் சிறப்பான முறையில் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதையும் கணிசமாக பாதிக்கிறது.

---

* *Economic Survey, 1978-79*, New Delhi, 1979.

அந்நியக் கடன்களை நம்பியிருப்பது நாடு வளர்ச்சி யடைவதை மிக மோசமான முறையில் தாமதப் படுத்தும் என்று பிரபல இந்தியப் பொருளிய லாளரான கே. என். ராஜ் எச்சரித்திருக்கிறார். இதைப் பற்றிக் கருத்து மாறுபாட்டுக்கு இட மில்லை. அந்நிய உதவி வளர்ச்சியைத் தாமதப் படுத்தக் கூடிய விளைவைக் கொண்டிருப்பதால், பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களுக் காக இந்தியா விழிப்புடன் இருக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று அவர் கூறினர்.

எவ்வளவு கடன் வாங்கலாம் என்பதற்கு திருப்பிச் செலுத்தும் குணகம் என்ற அங்கீகரிக்கப் பட்ட குறியீட்டெண் இருக்கிறது; கடன் வழங்கீடு களின் அளவுக்கும் ஏற்றுமதி வருமானங்களுக்கும் உள்ள விகிதமே இந்த எண். அது 15—20%க்கு அதிகமாக இருந்தால் ஆபத்தான நிலைமையைக் குறிக்கிறது என்று பல பொருளியலாளர்கள் கருதுகிறார்கள்; ஏனென்றால் அப்பொழுது கடன் பொருளாதாரத்தின் இயக்கியலில் எதிர்மறை யான காரணியாக இருக்கும். 1971-72க்கும் 1978-79க்கும் இடையில் திருப்பிச் செலுத்தும் குணகம் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத் தில் 27 சதவிகிதத்துக்கும் 1978-79இல் 15.4 சதவிகிதத்துக்கும் இடையில் ஊசலாடியது.*

1978-79இல் அந்நியக் கடன் வழங்கீடுகள் தேசிய வருமானத்தில் சுமார் 2% ஆக இருந்தன; இந்தியாவின் தனி நபர் தேசிய வருமானத்தை

---

* *The Sixth Five Year Plan*, p. 6.

நினைவில் கொண்டால் இது மிகவும் அதிகமானதே. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதில் அந்நியக் கடன்களின் பங்கு 4.9% ஆக இருந்தது, மூன்ருவது திட்ட காலத்தில் அது 37% ஆக அதிகரித்தது, ஐந்தாவது திட்ட காலத்தில் அது 12.8% ஆக இருந்தது.*

விடுதலையடைந்த மற்ற நாடுகளைப் போலவே இந்தியாவும் தன்னுடைய தேசியப் பொருளாதாரத்தை வளர்ப்பதில் பல கஷ்டங்களைச் சமாளித்து வருகிறது, உலகப் பொருளாதாரத்துடன் ஒத்துழைப்பதில் வெற்றிகளை அடைகிறது. இன்று வளர்முக நாடுகளின் பொருளாதார சுதந்திரம் அதிகரித்து வருகிறது, அவை உலகப் பரிவர்த்தனையில் சமமான அந்தஸ்துக்காகப் போராடுகின்றன. இது முதலாளித்துவ மேற்கு நாடுகளின் பொருளாதாரச் செயல்திட்டத்துக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. இப்பிரச்சினைகள் முதலாவதாகவும் முதன்மையாகவும் மூலதன ஏற்றுமதி மற்றும் அதன் கைவரப்பெறுதல் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. உலகப் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்டிருக்கும் முற்போக்கான மாற்றங்களினுல் ஏற்பட்டுள்ள இப்புதிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முதலாளித்துவ நாடுகள் அரசு மூலதன ஏற்றுமதியின் வடிவங்களையும் நிபந்தனைகளையும் மாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளன.

வழங்கீடுகளின் சுமை அதிகரிப்பதும் தேசியப் பொருளாதாரங்களின் மீது அவை கொடிய

* *Ibid.*

விளைவைக் கொண்டிருப்பதும் முதலாளித்துவ நாடுகள் தமது சொந்தப் பொருளாதாரக் கடமைகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதை மிகவும் கடினமாக்குகின்றன. ஒரு ஓட்டாண்டி நாடு அரசியல் கூட்டாளியாகவோ அல்லது லாபத்தின் தோற்றுவாயாகவோ இருக்க முடியாது. மூலதனத்தை முதலீடு செய்யவோ அல்லது சரக்குகளை ஏற்றுமதி செய்யவோ அது லாபகரமான இடமாக இருக்காது. ஆகவே அரசு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதில் தோன்றியிருக்கும் நெருக்கடியைத் தீர்க்க முயற்சி செய்யப்படுகிறது. ஆனால் இந்த நெருக்கடிக்கு முதலாளித்துவ நாடுகளே பொறுப்பாகும்.

வளர்ந்துவரும் கடன் சுமை கடன்களுக்கு மறு கால அட்டவணைகளைத் தயாரிக்கின்ற பிரச்சினையையும் கடன்களைத் தீர்ப்பதற்காக ஒப்பீட்டளவில் சாதகமான நிபந்தனைகளின் பேரில் மறு கடன் வசதிகளை ஏற்படுத்துவதையும் முன்னால் கொண்டுவந்திருக்கிறது. ஆனால் மறு கடன் வசதி முறை கடன்களை ரத்துச் செய்வதில்லை, அவற்றைத் தீர்ப்பதற்கு இன்னும் கூடுதலான காலத்தை மட்டுமே தருகிறது. ஒரு வளர்முக நாடு நிதி விவகாரங்களில் முதலாளித்துவ நாடுகளைச் சார்ந்திருப்பது இதன் மூலம் நீடிக்கப்படுகிறது.

வளர்முக நாடுகளை உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிற்குள் வைத்திருப்பது முதலாளித்துவ நாடுகளின் முக்கிய நோக்கமாகும். இந்த முக்கிய நோக்கத்தைச் சாதிப்பதற்கு அவை மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் இதற்குக்

கீழ்ப்படுத்துகின்றன. அவை பல உதாரணங்களில் அரசுக் கடன்கள் மற்றும் கடன் வசதிகளுக்கு வர்த்தக ரீதியான அணுகுமுறையைக் கைவிட்டிருக்கின்றன. இன்றைய நிலைமைகளில் முதலாளித்துவம் தனியார் மற்றும் அரசு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதை அடிப்படையாகக் கொண்டு ஒரே சமயத்தில் சந்தைகளை விஸ்தரிப்பதையும் முந்திய காலனிகளைச் சுரண்டுவதை அதிகப்படுத்துவதையும் செய்ய முடியாது. இதனுடன் தேசிய முதலாளித்துவத்தின் பலம் வளர்ந்து கொண்டிருப்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அது தனக்கு மிகவும் லாபகரமான நிலைமைகளைத் தேடுகிறது; நாட்டில் படைக்கப்படுகின்ற உபரி மதிப்பில் பெரும்பகுதியை தானே கைப்பற்றப் பாடுபடுகிறது. இவையனைத்தின் காரணமாகவும் பொருளாதார வளர்ச்சிக்குப் புதிதாகத் தரப்படுகின்ற அரசு உதவியின் நிபந்தனைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. வட்டி விகிதம் குறைவாக இருக்கிறது, கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு அதிகமான அவகாசம் தரப்படுகிறது, கடன்கள் மற்றும் கடன் வசதிகளில் ஒரு பகுதியை தேசிய நாணயத்தில் திருப்பித் தரலாம்.

ஏகாதிபத்தியவாதிகள் சுரண்டுகின்ற, அடிமைப் படுத்துகின்ற முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கவும் முதலாளித்துவப் பொருளாதாரப் பிரதேசத்தை அப்படியே வைத்திருக்கவும் அல்லது விஸ்தரிக்கவும் விரும்புவதால் அவர்கள் சில உதாரணங்களில் தங்களுடைய ஒடுக்குமுறை மற்றும் கொள்ளையடிக்கின்ற பழைய முறைகளைக் கைவிடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர்.

மூலதன முதலீட்டுக்கும் மூலப்பொருள் வேட்டைக்கும் ஏகாதிபத்திய அரசுகள் தமக்குள்ளாகவே போட்டியிட்டுக் கொள்கின்றன. சமீப வருடங்களில் சக்தி மற்றும் மூலப்பொருள்கள் நெருக்கடி ஏற்பட்டதன் விளைவாக இப்போட்டி தீவிரமடைந்திருக்கிறது. வளர்முக நாடுகள் அந்நிய அரசுக் கடன்களைப் பெறக்கூடிய பொது வான நிபந்தனைகளை மாற்றுகின்ற இந்த நிகழ்வுப் போக்கில் இந்தப் போட்டி முக்கியமான பங்கு வகிக்கிறது என்பதில் சந்தேகம் ஏற்பட முடியாது.

ஆனால் பொருளாதார உதவி என்று சொல்லப் படுவதன் நிபந்தனைகள் மாற்றமடைவதால் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் பொருளாதார ரீதியில் நஷ்டமடைய நேரிடும் என்பது அர்த்தமல்ல. ஏகாதிபத்தியவாதிகள் அதிகமான வட்டி விகிதங்களில் கொடுத்த பழைய கடன்களும் கடன் வசதிகளும் இன்னும் கணிசமாக இருப்பதை அவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும்; மேலும் மொத்த உதவித் தொகையில் நிதி மானியங்களையும் உதவித் தொகைகளையும் குறைத்துக் கடன் நிதித் தொகைகளில் தம் முடைய பங்கை அதிகப்படுத்துகின்ற வாய்ப்புகளும் உண்டு. உதாரணமாக மேற்கு ஜெர்மனி கொடுத்திருக்கும் கடன்களில் பெரும்பகுதிக்கு வருடாந்தர வட்டி விகிதம் 3-6%, ஆஸ்திரியா மற்றும் பிரிட்டன் 5.5-6%, கனடா மற்றும் இத்தாலி—6%, பிரான்ஸ்—6.9% வரை, ஜப்பான்—5-6%, அமெரிக்கா—5% வரை.*

---

* *Commerce*, Bombay, September 19, 1964, p. 494.

5% வட்டிக்குக் கொடுக்கப்பட்ட எல்லாக் கடன்களிலுமே 20 வருடங்களில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய அசல் இரண்டு மடங்காக அதிகரித்து விடும் என்பது சாதாரணக் கணக்காகும். முதலாளித்துவ நாடுகள் கொடுத்திருக்கும் கடன்களுக்குச் சராசரி வட்டி 5%க்கு அதிகமாகவே இருப்பதால் அவற்றிற்கு மிக அதிகமான லாபம் கிடைப்பது உறுதியாகிறது; உதவித் தொகைகள், மானியங்கள் உள்பட எல்லா அந்நியக் கடன்களும் பொருளாதார ரீதியில் நிச்சயமாக லாபமளிக்கின்றன.

முதலாளித்துவ நாடுகள் கடன் மற்றும் நிதியுதவி அளிக்கும் பொழுது சில சமூக-அரசியல் நோக்கங்களைப் பின்பற்றுகின்றன. ஏகாதிபத்தியப் போராட்டம் தீவிரமடைந்திருப்பதால் வங்கியாளர்கள் மற்றும் இராஜியவாதிகளின் முயற்சிகளை ஒருங்கிணைப்பது அவசியமாக இருக்கிறது. இந்தப் போராட்டத்தில் அரசுக் கடன்கள் சக்திமிக்க ஆயுதமாக உபயோகிக்கப்படுகின்றன. அரசு மூலதன ஏற்றுமதியில் வர்த்தக அம்சம் ஒரு போதும் முக்கியமானதாக இருக்கவில்லை. கடன்களுக்கும் கடன் வசதிகளுக்கும் எப்பொழுதுமே அரசியல் உள்நோக்கங்கள் இருந்தன. பொருளாதார வழிகளைப் பின்பற்றி இறுதியான அரசியல் நோக்கங்களைச் சாதிக்க வேண்டியிருந்தபடியால் கடன்கள் மற்றும் கடன் வசதிகளைத் தருகின்ற கொள்கையை அமுல்நடத்துகின்ற பொழுது புறநிலையான முரண்பாடுகள் தோன்றின. இந்தியாவுக்குக் கிடைத்த அந்நிய உதவிகளில் கணிசமான பகுதி அரசுத் துறைக்குள் செலுத்தப்பட்டது,

அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அந்நிய மூலதனம் விரும்பாத போக்குகளை ஊக்குவித்தது. தொடக்க நிலையில்தான் அந்நிய உதவிகளில் மிகப் பெரிய பகுதி இந்தியாவின் உள்ளமைப்புக்குள் செலுத்தப்பட்டது. அதன் பிறகு இவ்வுதவிகள் தொழில் நிறுவனங்களைக் கட்டுவதற்கு மென்மேலும் அதிகமான முறையில் உபயோகிக்கப் பட்டன.

ஆரம்பத்தில் முதலாளித்துவ நாடுகள் இந்தியாவின் அரசுத் துறைக்கு ஆதரவு கொடுப்பதற்குச் சிறிதும் விரும்பவில்லை. ஏனென்றால் இந்தியா பொருளாதார சுதந்திரம் அடைவதைத் தாமதப் படுத்த அவை முயற்சி செய்தன. உதாரணமாக, அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை பொக்காரோவில் அரசுத் துறையில் உலோகத் தொழிற் சாலையை நிர்மாணிப்பதற்கு உதவி செய்ய மறுத்தது, அத்தொழிற்சாலை நாட்டில் சோஷலிசம் பரவுவதை ஊக்குவிக்கும் என்று காரணம் காட்டியது. அரசுத் துறை குறித்து இத்தகைய எதிர் மறையான அணுகுமுறை படிப்படியாக மறைந்து ஓரளவுக்குச் சாதகமான அணுகுமுறை ஏற் பட்டது. வளர்முக நாடுகளுக்குப் பொருளாதார உதவியைக் குறைத்தால் அந்த நாடுகளின் பொருளாதாரத்திலும் கொள்கைகளிலும் மறைமுகமான, ஆனால் ஆணித்தரமான தாக்கத்தைச் செலுத்துகின்ற வாய்ப்பை இழக்க நேரிடும் என்பதை ஏகாதிபத்தியவாதிகள் உணர்ந்தார்கள்.

இந்தியாவின் பொருளாதாரத் திட்டங்களுக்கு அவசியமான நிதிகளில் அந்நிய அரசுக் கடனுதவி முக்கியமான பகுதியாக இருக்கிறது; திட்டத்தில்

பங்கெடுப்பது திட்டத்தை அமுலாக்குவதிலும் அதன் திசைவழியிலும் தாக்கம் செலுத்துகின்ற கூறுக மாறுகிறது. ஆகவே நான்காவது மற்றும் ஐந்தாவது திட்டங்களின் மொத்த முதலீடுகளில் அந்நிய உதவி முறையே 7% மற்றும் 9% ஆக இருந்தது

''நவீனமான தனியார் தொழில் முன்முயற்சி வளர்ச்சியடையக்கூடிய கட்டுக்கோப்பு ஆரம்பத்தில் அரசாங்கத்தின் முயற்சியினுலும் முன்முயற்சியினுலுமே பெரிய அளவுக்குத் தோற்றுவிக்கப்பட வேண்டும்''* என்று வால்ட் ரோஸ்டோவ் தன்னுடைய கட்டுரைகளில் ஒன்றில் எழுதியிருக்கிருர்.

ஆகவே அந்நிய மூலதனம் அரசுத் துறையின் வளர்ச்சித் திசையை நிர்ணயிப்பதற்கும் தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய உசிதமான நிலைமைகளை உருவாக்குவதற்கும் இந்த வழியைப் பின்பற்றுகிறது.

முதலாளித்துவ நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பண்டங்களின் விலைகளின் இயக்கியலையும் அங்கிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பண்டங்களின் விலைகளின் இயக்கியலையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வெளிநாடுகளில் வளர்முக நாடுகளின் பொருளாதார நிலைகள் சீர்கேடடைந்து கொண்டிருக்கின்றன என்பது புலப்படும் (இது எண்ணெய் ஏற்றுமதி செய்கின்ற குறைவான எண்ணிக்கையுள்ள நாடுகளுக்குப் பொருந்தாது).

முதலாளித்துவச் சந்தையின் எதிர்மறையான விளைவுகள் தன்னுடைய பொருளாதாரத்திலிருக்

---

* Herbert Feis, *Foreign Aid and Foreign Policy*, Macmillan & Co. Ltd., London, 1964, p.145.

கும் பின்தங்கிய விலை மற்றும் உற்பத்தி அமைப்புகளை நவீனப்படுத்த முடியாமல் இந்தியாவைத் தடுக்கின்றன; வறுமையை அகற்றி வேலை வாய்ப்புகளைப் பெருக்குகின்ற நிகழ்வுப் போக்கைத் தாமதப் படுத்துகின்றன.

முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்துடன் நாட்டின் பொருளாதாரப் பிணைப்புகளின் தன்மை—அது ஏகபோகங்களுக்கு உட்படுகின்ற பாரம்பரிய வடிவங்களை அநேகமாகப் பாதுகாக்கிறது—விலை உருவாக்கம் மற்றும் சர்வதேச கடன் வசதிகளின் பிரத்யேகமான கூறுகள், நாணய நெருக்கடிகளின் விளைவு—இவையனைத்தும் அந்நிய உதவிகளுக்குத் தரப்படுகின்ற ''விலையை'' மிகவும் அதிகமாக உயர்த்துகின்றன, உற்பத்திச் செலவை அதிகப்படுத்துகின்றன, நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைத் தாமதப் படுத்துகின்றன.

இந்தியாவின் ஏற்றுமதி அமைப்பு மாறிவருகிறது, அதில் புதிய பண்டங்களின் பங்கு அதிகரிக்கிறது; ஆனால் அதற்கேற்பப் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கவில்லை. ஆனால் இப்பண்டங்களின் உற்பத்திச் செலவுகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. ஏனென்றால் ஏற்றுமதித் துறையைச் சேர்ந்த தொழில்கள், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களையும் மூலப்பொருள்களையும் அதிகமாகப் பயன்படுத்துகின்றன. இதன் விளைவாக தேசியப் பொருளாதாரத்துக்கும் உலகச் சந்தைக்கும் இடையில் தலைகீழான பிணைப்பு ஏற்படுகிறது: மிகவும் வளர்ச்சியடைந்த தொழில் துறைகளில் கூட அவற்றின் போட்டித் தன்மையை

இறக்குமதி செய்யப்பட்ட பகுதியின் விலை நிர்ணயிக்கிறது. ஏற்றுமதிகள் மேலும் அதிகரிப்பதற்கும் உலகப் பொருளாதார உறவுகளில் சம அந்தஸ்தைக் கொண்ட பங்காளி என்ற முறையில் நாடு பங்கெடுப்பதற்கும் இத்துறைகள் இன்றியமையாதவையாகும். மேலும் இந்த நிலைமை ஏற்றுமதி உதவித் தொகைகளைத் தொடர்ச்சியாக அதிகரிப்பதை அவசியமாக்குகிறது. இது தேசியப் பொருளாதாரத்தின் மற்ற துறைகளின் வளர்ச்சிக்கு நிதி வளங்கள் கிடைப்பதைக் குறைக்கிறது. ஆகவே இந்தியாவும் மற்ற வளர்முக நாடுகளும் சிக்கலான பல பிரச்சினைகளைத் தீர்த்து ஏற்றுமதிக்காக நடைபெறுகின்ற தொழில்களுக்கும் உள்நாட்டு உற்பத்திக்கும் இடையில் நிதி வளங்களின் உசிதமான, அறிவு பூர்வமான வினியோகத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்; அதுவே உலகப் பரிவர்த்தனைகளில் நாடு பொருளாதார வலிமையுடன் பங்கெடுப்பதை உறுதிப்படுத்தும்.

## 2. சோவியத் யூனியனுடனும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளுடனும் பொருளாதார ஒத்துழைப்பு

சோஷலிஸ்ட் நாடுகளுடன் இந்தியாவின் ஒத்துழைப்பு அடிமைத்தனம் மற்றும் சுரண்டலின் பழைய வடிவங்களின் சுமையை அகற்றுவதற்கும் மேற்கத்திய அரசுகளின் புதிய காலனியாதிக்கக் கொள்கைக்கு எதிராக வலிமையான தடைச் சுவர்களை அமைப்பதற்கும் உதவி செய்கிறது. சோஷலிஸ்ட் நாடுகளைச் சார்ந்திருப்பதன் மூலம்

இந்தியா தன்னுடைய செல்வவளங்களை அதிகமான சுறுசுறுப்புடன் திரட்ட முடிகிறது, முதலாளித்துவ நாடுகளின்''உதவியைத்'' தன்னுடைய தேசிய நலன்களுக்காக இன்னும் விரிவான முறையில் உபயோகித்துக் கொள்ள முடிகிறது.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கின்ற ஒத்துழைப்பில் அந்நிய வர்த்தகம், நீண்ட காலக் கடன் வசதிகள், உற்பத்தியில் தனித்தேர்ச்சி மற்றும் ஒத்துழைப்பு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறை, தேசியப் பொருளாதாரத்தின் முக்கிய பிரிவுகளுக்கும், விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையங்களுக்கும் அவசியமான ஊழியர்களுக்குப் பயிற்சி தருதல் ஆகிய துறைகள் அடங்கியிருக்கின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளின் அந்நியப் பொருளாதாரக் கொள்கை இந்தியாவுடன் நடைபெறும் வர்த்தகத்தைப் படிப்படியாக விஸ்தரிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அவை இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான சரக்குகளை (தொழில்துறை இயந்திரங்கள், அழுத்தப்பட்ட இரும்பு உலோகங்கள் முதலியன) கொடுக்கின்றன. அந்நிய வர்த்தக உறவுகள் நீண்ட கால ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; இந்தியாவின் பாரம்பரிய மற்றும் நவீன ஏற்றுமதிச் சரக்குகளுக்கு நிலையான சந்தையை அவை உத்தரவாதம் செய்கின்றன.

சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையில் வர்த்தகம் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. 1953இல் முதல் ஐந்து

வருட வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு வர்த்தக உறவுகள் தொடங்கின. 1976—1980ம் வருடங்களுக்குரிய ஐந்தாவது ஐந்து வருட ஒப்பந்தம் 1976இல் கையெழுத்திடப்பட்டது. 1951-52க்கும் 1978-79க்கும் இடையில் இரு நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தகம் 24 மடங்குக்கும் கூடுதலாக அதிகரித்தது, 11 பில் லியன் ரூபாய்கள் அளவை எட்டியது. இந்தியா வின் மொத்த ஏற்றுமதிகளில் 13% சோவியத் யூனியனுக்கு அனுப்பப்படுகிறது, மொத்த இறக்கு மதிகளில் 10% சோவியத் யூனியனிடமிருந்து வாங்கப்படுகிறது.

சோவியத் யூனியன் இந்தியாவுக்கு எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருள்கள், இரும்பு அல்லாத உலோகங்கள், சிமெண்ட், செயற்கை உரங்கள், நிர்மாணத் திட்டங்களுக்குரிய இயந் திரங்கள் ஆகியவற்றைத் தருகிறது. சோவியத்- இந்திய வர்த்தக உறவுகளின் வெற்றிகரமான வளர்ச்சி இந்தியாவின் ஏற்றுமதிகளை வகைவேறு படுத்தவும் நாடு முதலாளித்துவச் சந்தையை நம்பியிருப்பதைக் குறைப்பதற்கும் உதவி செய் திருக்கிறது.

இந்தியா நெடுங்காலமாக ஏற்றுமதி செய்து கொண்டிருக்கும் சரக்குகளான தேயிலை, காப்பி, புகையிலை, கம்பளங்கள், வாசனைத் திரவியங்கள், சணல், தோல் முதலியவை தவிர எஞ்சினியரிங் பொருள்கள், மின் கருவிகள், பொறியியற் கருவி கள், கைத்தொழிற் பொருள்கள், பந்தய விளை யாட்டுப் பொருள்கள் ஆகியவற்றை சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்கிறது.

வெவ்வேறு சமூக-பொருளாதார அமைப்பு களைக் கொண்டிருக்கின்ற நாடுகள் பரஸ்பர மரியாதை, சமத்துவம், பரஸ்பர உதவி ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் தமது உறவு களை நிறுவினுல் எவ்வளவு சாதிக்க முடியும் என் பதை இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் பலன்மிகுந்த வர்த்தக வளர்ச்சி சிறப்பான முறையில் எடுத்துக் காட்டுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையில் **1971** ஆகஸ்டில் கையெழுத்திடப்பட்ட **20** வருட சமாதானம், நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் சோவியத்-இந்திய உறவுகளில் ஒரு மைல்கல்லாக இருக்கிறது. இந்தியாவுக்கும் சோவியத் யூனிய னுக்கும் இடையில் பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் துறைகளில் சர் வாம்ச ஒத்துழைப்பு சமத்துவம் மற்றும் பரஸ் பர நன்மை என்ற அடிப்படையில் விரிவுபடுத்தப் பட்டு பலமடைய வேண்டும் என்று இந்த ஒப்பந் தம் வலியுறுத்தியது. இந்த ஒப்பந்தத்தின் கோட் பாடுகள் **1973** நவம்பரில் கையெழுத்திடப்பட்ட சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடை யில் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை மேலும் வளர்ப்பதற்குரிய உடன்பாட்டில் இன்னும் அதிகமாக வளர்த்துச் செல்லப்பட்டன. இரண்டு ஆவணங்களுமே அரசுரிமையையும் பிர தேச ஒருமைப்பாட்டையும் பரஸ்பரம் மதித்தல், அவரவர் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடா திருத்தல், சமத்துவம் மற்றும் பரஸ்பர நன்மை

என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் நிறுவப் பட்டிருக்கின்றன.

சோவியத் யூனியனும் இந்தியாவும் முக்கிய மான சர்வதேசப் பிரச்சினைகளில் தங்களுடைய கருத்தொற்றுமையை அல்லது ஒரே மாதிரிக் கருத்துக்களைக் கொண்டிருப்பதை எப்பொழுதும் வற்புறுத்தின. அவை பதட்டத் தணிவை ஆழப் படுத்தும்படியும் ஆயுதப் போட்டியை எதிர்க்கும் படியும் அறைகூவின; கருத்து வேறுபாடான எல்லாப் பிரச்சினைகளையும் சமாதான பூர்வமான வழிகளில் தீர்க்க வேண்டுமென்று வலியுறுத் தின. இந்திய-சோவியத் அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவதையும் ஆழப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட பல முக்கியமான ஆவணங்கள் கையெழுத்திடப் பட்டன. பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வியல் ஒத்துழைப்பு உடன்பாடு, 1981—1985ம் வருடங்களுக்குரிய வர்த்தக உடன்பாடு, 1981—1982ம் வருடங்களில் கலாச்சாரம், விஞ்ஞானம் மற்றும் கல்வித் துறைகளில் பரிவர்த்தனைச் செயல் திட்டம், சினிமா படப் பிடிப்புத் துறையில் ஒத் துழைப்பு உடன்பாடு முதலியன இந்த ஆவணங் களாகும்.

சோவியத்-இந்தியப் பொருளாதார ஒத்து ழைப்பு இந்தியாவின் பொருளாதார ஆற்றல் வளத்தை பலப்படுத்தி நாட்டின் மிகத் தீவிரமான பொருளாதார மற்றும் சமுதாயப் பிரச்சினை களில் ஒன்றான வேலையில்லாமையைத் தீர்ப் பதற்கு உதவி செய்வது மட்டுமல்லாமல் சர்வ தேச உழைப்புப் பிரிவினையில் முற்றிலும் ஒரு

புதிய அமைப்புக்கு அடிப்படைகளையும் அமைக்கிறது. இந்தியாவும் மற்ற வளர்முக நாடுகளும் தமது உள்நாட்டு வளர்ச்சியிலுள்ள நெருக்கடிகளை எதிர்த்து வெற்றி பெறுவதற்கும் உலகப் பொருளாதாரத்தில் தமது பாத்திரத்தை மாற்றுவதற்கும் இந்த அமைப்பு முக்கியமான கூருக உதவி செய்கிறது. வளர்முக நாடுகளில் வாழ்கின்ற உலக மக்கள் தொகையில் மிகப் பெரும் பகுதியினரை அடிமைப்படுத்தி தம்மைச் சார்ந்திருக்கும் நிலைமைகளைத் தொடர்ந்து தோற்றுவிக்கின்ற உலக முதலாளித்துவத்தின் பொருளாதாரப் பிணைப்புகளை தீவிரமாக மாற்றியமைப்பதற்கு உதவுகிறது.



